PUBLIC LIBRARY
JAFFNA



# திக்கம்

# நாதம்

திக்கம் மத்திய சன சமூக நிலையம்
1957
ஓங்குக ஒற்றுமை



பொதுசன நூலகம்

# திக்கம் நாதம்

திக்கம் மத்திய சனசமூக நிலையம்

**Thickam Central Community Centre**

பதிவு எண் - J/VC/13/CC/461

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | திக்கம் நாதம் |
| ஆண்டு | : | 2014 |
| வெளியீடு | : | திக்கம் நாதம் மலர்க்குழு, (2014)<br>திக்கம் மத்திய சனசமூக நிலையம்,<br>திக்கம்<br>அல்வாய். |
| தொலைபேசி | : | 021 226 4440 |
| அச்சுப் பதிப்பு | : | அன்றா பிறிண்டேர்ஸ்<br>021 221 7279 |
| பிரதிகள் | : | 250 |
| பக்கங்கள் | : | 162 பக்கங்கள் |
| மலர்க்குழு | : | திரு.வே. விசுவலிங்கம்<br>திரு.த. சிந்துயன்<br>திரு. ந. பிரியதர்சன்<br>திரு. கு. நவநீதன்<br>திரு.கு. தினேஷ் |


திக்கம் நாதம் என்னும் வரலாற்று ஆவணத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.

மலர்க்குழு
- திக்கம் மத்திய சனசமூக நிலையம்

# பொருளடக்கம்


i. தமிழ்த் தெய்வ வணக்கம்

ii. தமிழ் மொழி வாழ்த்து

iii. நோக்கக்கூற்றும், பணிக்கூற்றும்

iv. நிலையக்கீதம்

**ஆசிச் செய்திகள்**

1. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமியின் ஆசிச்செய்தி
2. திக்கம் மடத்துவாசல் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர் அவர்களின் ஆசிச் செய்தி
3. திக்கம் துளாயிற் பிள்ளையார், திக்கம் நாச்சிமார் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சி. சிவபாலக் குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி
4. சக்கோட்டை புனித சவேரியார் ஆலய பங்குத் தந்தை அருட்திரு நிரூபன் நிஷானந் அவர்களின் ஆசிச் செய்தி

**வாழ்த்துச் செய்திகள்**

5. வடக்கு மாகாண முதலமைச்சர் உயர்திரு க.வி. விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி
6. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு சுந்தரம் அருமை நாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி
7. பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உயர்திரு பூ.சஞ்சீவன் அவர்களின் வாழ்த்துச் செய்தி
8. வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் உயர்திரு இ.த. ஜெயசீலன் அவர்களின் வாழ்த்துச் செய்தி
9. பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருவாட்டி பரமேஸ்வரி யோகராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி
10. திக்கம் மத்திய சனசமூக நிலைய காப்பாளர் உயர்திரு. க. பிறைசூடி அவர்களின் வாழ்த்துச் செய்தி
11. திக்கம் மத்திய சனசமூக நிலைய காப்பாளர் உயர்திரு. சி. கணேசமூர்த்தி அவர்களின் வாழ்த்துச் செய்தி
12. திக்கம் மத்திய சனசமூக நிலைய காப்பாளர் உயர்திரு. க.யோகானந்தன் அவர்களின் வாழ்த்துச் செய்தி
13. திக்கம் நலன்புரிச் சங்கம் கனடா நிர்வாகத்தின் வாழ்த்துச் செய்தி

14. திக்கம் நலன்புரிச் சங்கம் சுவிட்ஸிலாந்து நிர்வாகத்தின் வாழ்த்துச் செய்தி
15. இலண்டன் வாழ் திக்கம் மக்களின் வாழ்த்துச் செய்தி
16. பிரான்ஸ் வாழ் திக்கம் மக்களின் வாழ்த்துச் செய்தி
17. பதிப்புரை – திரு. க. சுதேஸ்
18. மலரைப்பற்றி – திரு. கு. தினேஸ்

**கிராமம் பற்றி........**

19. தெய்வீக மணங்கமழும் எமது கிராமம் – திருமதி. கணேசலிங்கம் தவமணிதேவி
20. திக்கமும் அதன் தனித்துவ பண்பும் – திருமதி. இந்திராணி ஸ்ரீரங்கன்
21. வரலாற்று ஆவணம் பற்றிய கவிதை – திருமதி. தவமணிதேவி கணேசலிங்கம்

**பொது அமைப்புக்களின் வரலாறு**

22. திக்கம் மத்திய சனசமூக நிலைய வரலாறு – நிர்வாகம் மத்திய சனசமூக நிலையம் – 2014
23. திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக வரலாறு – திரு. இ.ராஜசீலன்
24. யா/ திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய வரலாறு – அதிபர், திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்
25. திக்கம் பாலர் பாடசாலை வரலாறு – திருமதி. இந்திராணி ஸ்ரீரங்கன்
26. திக்கம் கிராம அபிவிருத்திச் சங்க வரலாறு – நிர்வாகம், திக்கம் கிராம அபிவிருத்திச் சங்கம்
27. அல்வாய் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க வரலாறு – செல்வி ஸ்ரீகௌரி சிவலிங்கம்
28. அல்வாய் வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வரலாறு – திருமதி. யோகாம்பிகை ஸ்ரீஸ்கந்தராஜா
29. அல்வாய் மேற்கு விவசாய அமைப்பு வரலாறு – திரு. வே. செந்தில்வேல்
30. அல்வாய் வடமேற்கு விவசாய அமைப்பு வரலாறு – திரு. சு. மகேஸ்வரன்
31. திக்கம் மானாண்டிச் சந்தையின் வரலாறு – திருமதி. ஸ்ரீ வடிவாம்பிகை சிவராசா

**கல்வியியலாளரின் ஆக்கங்கள்**

32. இலங்கையின் கல்வியின் புதிய போக்கு – திரு. சி. சிவராசா
33. இலங்கை நிர்வாக சேவை – திரு. வே. விசுவலிங்கம்
34. கிராம அபிவிருத்தியில் மனித வளத்தின் பங்களிப்பு – திருமதி. சாந்தகுமாரி மகேந்திரம்
35. வெங்காயம் – திரு.பொ.ஆழ்வாப்பிள்ளை
36. பனைவளம் – திரு.மு.செ. சரவணபவ
37. இலங்கை கடல் வளம் – திரு.ஜெ.சுதாகரன்
38. திக்கம் கிராமத்தின் பொருளாதார மேம்பாடும் வங்கிகளின் பங்கும் – திருமதி. தவமணிதேவி கணேசலிங்கம்
39. நீதிமன்ற வழக்குகள் – திரு. சபா. ரவீந்திரன்
40. சலரோகம் – திரு. ச. விதுரன்
41. யாதும் ஊரே யாவரும் கேளிர் – திரு. வே. ஞானசம்பந்தன்
42. பாரம்பரியக் கலைகள் – திருமதி . ஸ்ரீவடிவாம்பிகை சிவராசா

# தமிழ்த் தெய்வ வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராகும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமதில்
தக்க சிறு பிறை நுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் தடைக்கிலுமோர்
எல்லையறு பரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரரத்துதி தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே

**– பேராசிரியர் மனோன்மணியம்**
**– பெ. சுந்தரம்பிள்ளை**

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஊழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானமறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே!

# Vision
## தூரநோக்கு

புரிந்துணர்வுடன் வாழும் பண்பும்
தன்னார்வமும் உயரிய
ஒழுக்கமும் கொண்ட சமூகத்தை
உருவாக்குதல்

# Mission
## பணிநோக்கு

மானிட ஆக்கமும் உள்ளகத்
தூய்மையும் நீதியோடு கூடிய
வாழும் பண்பும் கொண்ட
தன்னார்வமிகு சமூகத்தை
உருவாக்கும் அர்ப்பணிப்புடனும்
கடமையுணர்வுடனும்
ஒன்றிணைதல்

## திக்கம் மத்திய சனசமூக நிலைய கீதம்

இராகம் : நாட்டை தாளம்: ஆதி

வளர்க! திக்கம் மத்திய நிலையம் வளர்க!
வாழ்க! வாழ்க! சனசமூகம் வாழ்க!

**அனுபல்லவி**

ஆனைமுக னருள் செய எழிலுடன் திகழ்வாய்
அனைவரும் மகிழ்ச்சி பொங்க சிறப்புகள் தந்தாய்

**சரணம்**

திக்க முன்னேற்றமே தமதேற்ற மாமென்
அறிவுடை இளைஞர் திடமுடன் எண்ணினர்
கண்டனர் சங்க மமைத்தார் மாபெரும் செயற்பட்டார்
கண்டனர் கனவு கனவு நனவாக வளர்க!

தாகம் தணிக்க நாளும்தேடி அலைந்தோர்க்கு
சமூக நிலையமருகே நன்னீரளிக்கும் குளாய்க்கிணறு
ஞானமும் கல்வியும் அறிவுக்கு விருந்தாகும் நூலகத்தில்
மாணவரும் மற்றோரும் நயந்து பயன்பெறுவர் வளர்க!

சைவமும் தமிழும் எம்மிருகண்களா மெனக்கருதி
கலைமகள் பூசை பண்ணொன்றிய பாடலுடன் நூலகத்தில் நிகழ்த்தி
சிறாரிடையே பண்ணிசை, கோலம், பேச்சு, போட்டிகள் நடாத்தியும்
பரிசளிப்புவிழா கோலாகலமாக ஆண்டுதோறும் நிகழும் வளர்க!

உவகை கவர்ந்த புகழுடை கிரிக்கெற் உதைபந்தாட்டம்
அவ்விளை யாட்டுகளை சிறந்த திக்க மைதானத்தில் பயின்றார்
கழகங்களிடையே தலைசிறந்த போட்டிகள் நிகழும்
வெற்றிப்பாதையில் வீறு நடைபோடும் கழகம் விருதுபெறும் வளர்க!

மக்கள் தம்சேவை குன்றாது நிறைவு செயும் பொருட்டு
தருமத்தின் சின்னமாம் பல்நோக்கு சங்கம்முன்
நாற்றிசையு மிருந்து வந்து ஏற்றமுடன் கூடுவர்
அக்'காட்சி போக்குவரவு செய்வோர்க்கு குன்றா இன்பமளிக்கும் வளர்க!

சந்தியினருகே பனஞ்சோலை நடுவே யமைந்துள மதில் சூழ்ந்த மேல்மாடம்
சிறார்கற்கவும் மணவாழ்வு மேற்கொள்ளும் முக்கிய தேவைகள் நிறைவு செய்யவும்
ஐங்கர னருள்செய புகழுடன் துலங்கும் கண்கொள்ளாக்காட்சி
போக்குவரவு செய்வோர் கண்களுக்கு சிறந்த விருந்தளிக்கும் மாட்சி வளர்க!

**ஆக்கம்: அமரர் ஆ.பொன்னையா**
இளைப்பாறிய அதிபர்
திக்கம், அல்வாய்

# அருளாசிச் செய்தி

சமூகம்சார் சிந்தனையாளர்களுக்கு :-

இன்று திக்கம் சனசமூக நிலையம் தன்னுடைய பணிகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். மக்களின் பணியே தன்பணியாக கருதும் சனசமூக நிலையம் பல்லாண்டுகாலம் பணியாற்றி தலைநிமிர்ந்து நிற்கும் சனசமூக நிலையம். திக்கம் எனும் புனிதப்பிரதேசத்தில் கல்வியாளர்களும் சிந்தனையாளர்களும், திக்கம் செல்லையா எனும் கல்வியாளனைக் கொண்ட பிரதேசத்தில் மத்திய சனசமூக நிலைய மாக இருந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி வளர்ச்சியடைந்துள்ளமை அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகிறது. இவர்கள் இது போல சமூக சமயப்பணியாற்றி மென் மேலும் வளர்ச்சி யடைய இறைவனுடைய ஆசி கிடைப்பதாக !

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த**
**பரமாச்சாரிய ஸ்வாமிகள்**
நல்லை திருஞான சம்பந்தர் ஆதினம்
நல்லூர், யாழ்ப்பாணம்.

**திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரால் வெளியிடப்படும் "திக்கம் நாதம்" கிராம வரலாற்று ஆவணநூல் வெளியீட்டை முன்னிட்டு வழங்கப்படும் ஆசிச்செய்தி.**

## உயரிய சிந்தனையின் அழகுறு செயல் வடிவம்

வரலாறு என்பது மிக இனிமையானதும் மகிழ்வானதுமான சுகானுபவமாகும். "எந்தையும் தாயும் கொஞ்சிக் குலாவிய" எனும் பாரதியார் கவிவடிவத்தினூடாக வரலாற்றின் மீள் நினைவுகள் எவ்வளவு தூரம் இன்பமயமானவை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு குழுமத்தின் வரலாற்றுப்பதிவுகள் பண்பாடு, மொழி, இன, எதிர்கால வாழ்விற்கான திட்டமிடல் என எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைகிறது. மனிதன் தவறிழைப்பவன். அத்தவறை தவிர்ப் பதற்கு வரலாற்றுப்பதிவுகள் ஒத்தாசையாக இருக்கின்றன.

அழகிய கடலோரக்கிராமமாக இருந்தாலும் வேளாண்மைத் தொழிலால் சிறப்படைந்துள்ள திக்கம் கிராமத்தின் தொன்மையையும், மாற்றங்கள், முன்னேற்றங்கள் எழுச்சி,மக்களின் ஒத்திசைவு என்பவற்றையெல்லாம் திக்கம் நாதம் எனும் வரலாற்றுப் பெட்டகம் எமக்கு அழகுற எடுத்தியம்புகிறது. கிராமத்தின் பாரம்பரியம், படிமுறை வளர்ச்சி, ஏற்பட்ட இடர்கள் தடைகளைத் தாண்டுவதற்கான சாதுரிய முயற்சிகள், கிராமத்தின் ஒற்றுமை பேணப்படல் என எல்லா விடயங்களையும் ஆழமாக பதிவு செய்துள்ளமை பாராட்டத்தக்கது. திக்கம் கிராமத்தை அழகுற அணிசெய்யும் கிழக்கு, மத்தி, மேற்கில் அமைந்துள்ள துளாய்ப்பிள்ளையார், மடத்துவாசல் பிள்ளையார் நீர்வளைப்பிள்ளையார் ஆலயங்கள் இத்துடன் அணி செய்ஆலயங்களான கிராமிய கடவுளரான வைரவர் நாச்சியார் ஆலயங்கள், திக்கம் மத்தியில் அமைந்து அறிவொளி பரப்பும் சனசமூகநிலையம், அழகுற அமைந்த கல்யாண மண்டபம், திக்கத்தின் கல்விக்கூடமான சித்திவிநாயகர் வித்தியாசாலை, பாலர் பாடசாலை, சமூகத்தின் ஒழுங்கமைப்பு, வழிகாட்டுதல் ஆகியவற்றிற்காக பல்வகைச்சங்க அமைப்புக்களின் தோற்றம் இயங்குநிலை என வரலாற்றின் பல அம்சங்களும் அழகுற தொகுக்கப்பட்டு காலம் காலமாக காக்கப்படவேண்டிய பொக்கிஷமாக விளங்கும் நூல் "திக்கம் நாதம்" ஆகும்.

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரின் பகீரத உழைப்பால் வெளிவரும் இவ் வரலாற றுப்பெட்டகம் காலம் காலமாக காக்கப்பட வேண்டியதுடன் இதனை வெளியிட்ட திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினர் ஜென்ம ஜென்மங்களாக நன்றியுடன் நினைக்கப்பட வேண்டியவர்கள்.

இந்நூல் வெளிவர அயராது உழைத்த அனைவருக்கும் திக்கம் கிராமமக்களுக்கும் விநாயகப்பெருமான் அருள் ஆசீர்வாதம் என்றும் கிட்டுவதுடன் அவர்களின் பணி சிறப்புற வாழ்த்தி நிற்கின்றோம்.

லோகா சமஸ்த சுசினோ பவந்து

**சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர் (B.B.A)**
(பிரதமகுரு, திக்கம் மடத்துவாசல் சித்திவிநாயகர் தேவஸ்தானம்)

## நாச்சிமார் கோவில், திக்கம் துளாய் பிள்ளையார் கோவில் ஆலய பிரதம குரு வழங்கிய

## ஆசிச்செய்தி.

திக்கம் மத்திய நூலகத்தினரால் எமது கிராமத்தின் வரலாறு உள்ளடங்கிய “திக்கம் நாதம்” என்னும் நூலை வெளியிட்டமையையிட்டு நாம் யாவரும் பெருமிதம் அடைகின்றோம்.

கடந்த ஐம்பது வருடகாலமாக எத்தனையோ, தடைகள், துன்பங்கள், துயரங்கள் கடந்து இன்று ஆலவிருட்சம் போன்று பல கிளைகள் விழுது விட்டு இன்று சிறந்த நூலக தரத்தில் இருப்பது எமது நூலகமேயாகும்.

எமது நூலக வளர்ச்சிக்காக அன்று வித்திட்ட திரு.கதிர்காமத்தம்பி தங்கராசா, திரு. ஆறுமுகம், பரஞ்சோதி , திரு.ஆழ்வாப்பிள்ளை. பொன்னையா, கந்தையா.கணபதிப்பிள்ளை, திரு.பெரியதம்பி, இராசரத்தினம்,திரு.சிதம்பரப்பிள்ளை, மாணிக்கம்,திரு.வல்லிபுரம் கதிர்காமத்தம்பி ஆகியோர் எமது கிராமத்தின் முன்னேற்றத்துக்காக சிந்திய வியர்வை தான் இன்று மத்திய நூலகமாகும்.

அவர்கள் வழியில் பின்தொடர்ந்து எமது இளைஞர்கள் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதைபோன்று எதிர்வரும் காலங்களிலும் வருங்கால இளைஞரும் செயற்பட வேண்டும். நூலகங்களுக்கு எடுத்துக்காட்டாக எமது நூலகம் விளங்க வேண்டும் என தெரி வித்துக் கொண்டு யாவருக்கும் எனது நல்லாசியும் இறையருளும் கிடைக்க பிரார்த்தனை செய்கின்றோம்.

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**பிரம்மஸ்ரீ சி. சிவபாலக்குருக்கள்**
(திக்கம்)

# ஆசிச்செய்தி

வாழ்ந்து மறைந்திட்ட திக்கம் மண்ணின் மூதாதையர் 1957ம் ஆண்டு விதைத்த அறிவியல் முதுசமாக திக்கம் மத்திய சனசமூக நிலையம் மலர்ந்துள்ளது என்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன். அறிவுத்தேடலின் இவ் எண்ணக்கருவை நூல் நிலையங்களாக தொடக்கத்தில் பல இடங்களில் கொட்டில்களாக ஆரம்பித்து பின்னர் மத்திய சனசமூக நிலையமாக உருவெடுத்து இன்று இம்மக்களின் அறிவுத்தேடலின் பெரும் மையமாக இது திகழ்கின்றது. இந்நிலையத்தின் பல்வேறுபட்ட உருவாக்கம் எம் மக்களிற்கு பல நல்ல சேவையாற்றுகின்ற கல்விமான்களையும் உயர் குடிமக்களையும் உருவாக்கியிருக்கின்றது. இன்றும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது இந்நிலையத்தின் பரந்துபட்ட சேவை கல்வித்துறையில் மட்டுமல்ல ஏனைய துறையிலும் பல மாற்றங்களை மாணவ சமுதாயத்திற்கும் ஏனையவர்களிற்கும் ஏற்படுத்தி ஒரு முழுமனித விடுதலை கொண்ட ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கிக்கொண்டிருப்பது கண்கூடு.

இந்நிலையில் "திக்கம் நாதம்" எனும் நூலை வெளியிடும் இவர்களிற்கு இறையாசீரைக் கூறி நிற்கின்றேன். ஒரு ஆலமரத்தின் பெருவிருட்சம் ஒரு சிறிய நுண்ணிய விதையினுள் அடங்கியிருப்பது போல் திக்கம் மத்திய சனசமூக நிலையமும் திக்கம் நாதம் என்னும் நூலும் தன்னகத்தே கொண்டிருக்கின்ற ஆற்றல்களையும் திறமைகளையும் சேவை மனப் பான்மைகளையும் முழுமூச்சாகவும் வீச்சாகவுங் கொண்டு தன் பெரு விருட்சமாக பரிணா மிக்க ஆசிக்கின்றேன். இந்த சமூகத்திற்கும் எம் மண்ணிற்கும் எம் இனத்தின் முழுமையான தெளிவான பார்வைக்கும் வளர்ச்சிக்கும் இந்நூலும் நிலையமும் பெரும் பங்காற்ற வேண்டும் என்று ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்திரு.தா.நிருபன் நிஷானந்**
பங்குத்தந்தை
புனித சவேரியார் ஆலயம்
சக்கோட்டை.

## வாழ்த்துச் செய்தி

எமது முன்னோர்கள் தத்தமது கிராமங்களின் மேம்பாட்டிற்காக பல சனசமூக நிலையங்களை கொட்டில்களிலும், சிறிய அறைகளிலும் ஆரம்பித்து வைத்தது மட்டுமன்றி அவற்றின் மூலம் நூல் நிலையங்களையும் அமைத்து சமூக முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்தனர். அந்த வகையில் 1950களில் திக்கம் பகுதியில் உருவாக்கப்பட்ட மத்திய சனசமூக நிலையமானது ஊர்ப்பிரமுகர்களின் ஒழுங்கான வழிநடத்தலின் கீழ் படிப்படியாக வளர்ச்சிபெற்று தனக்கென ஒரு நிரந்தர கட்டடத்தை பெற்றுக்கொண்டதுடன் கல்விச்சேவை, நூலகசேவை, பாலர் பாடசாலை, குடிதண்ணீர் வழங்கல், இறுதி ஊர்வல மைய வண்டிச்சேவை, வாடகைச்சேவை, தொலைத்தொடர்புச்சேவை என விரிந்து செல்லும் பல சேவைகளை திக்கம் வாழ் மக்களுக்கு அமைத்துக்கொடுத்துள்ளது. அது மட்டுமன்றி பாடசாலை சிறார்களை ஊக்குவிப்பதற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டு வருவது, மற்றும் பேச்சுப்போட்டிகள், பண்ணிசை, கோலம் போடுதல், மாலை கட்டுதல், எழுத்துப் பரீட்சை, பாவோதல் போன்ற போட்டிகளை நடாத்துதல் போன்றவற்றால் மாணவர்களுக்கு பல வழிகளிலும் உதவி புரிந்து வருவது பாராட்டுக்குரியது.

கொடையாளர்கள், புலம்பெயர்ந்தவர்கள், மற்றும் கனவான்களின் அன்பளிப்பின் கீழ் கலாச்சார மண்டபம், கூட்டுறவுக்கடை, வாசிகசாலை, உப அஞ்சல் அலுவலகம், கிராம அலுவலகம், குடும்ப நல உத்தியோகத்தர்கள் அலுவலகம், திக்கம் கமக்காரர் அமைப்பு என விரிந்து செல்லுகின்ற பல்வேறு அமைப்புக்களையும் சிறப்புடன் நடத்திவருவது போற்றுதலுக்குரியது. அவர்களின் மக்கட் சேவை இனிதே தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி .

அன்புடன்
**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்,
வடமாகாணசபை,
யாழ்ப்பாணம்.

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரால் "திக்கம் நாதம்" என்னும் நூல் வெளியிடப் படுவதையொட்டி வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திக்கம் கிராம மக்களின் மேம்பாட்டிற்காக ஆரம்பத்திலிருந்து இந்த சனசமூக நிலையம் முன்னின்று செயற்படுவதை அவர்களது வரலாறுகளிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. 1957 ஆம் ஆண்டு கிடுகினால் வேயப்பட்ட கொட்டகையில் இம்மத்திய சனசமூக நிலையம் தனது பணியை ஆரம்பித்தது. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் அவ்வூர் மக்களின் பாரிய பங்களிப்புகள் ஆகியவற்றால் படிப்படியாக வளர்ச்சியடைந்து கம்பீர மான கட்டடத்தில் மிளிர்கின்றமை பாராட்டுக்குரியதொன்றாகும்.

இக்கிராம மக்கள் தமது அன்றாட தேவைகளை ஒரே இடத்தில் இலகுவில் பூர்த்தி செய்வதற் கேதுவாக தனது கட்டடத்தொகுதியில் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அலுவலகங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் போன்றவை இயங்குவதற்கு இடம் ஒதுக்கி இயங்க வைத்துள்ள பெருமை இந்நிலையத்தையே சாரும். மேலும் இந்நிலையக் கட்டடத்தில் மக்களின் பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த கவனத்துடன் செயற்படுவதும் வரவேற்கத்தக்க விடயம் ஆகும்.

இனிவருங்காலங்களில் இந்நிலையம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து மக்களுக்கு அளப் பரிய சேவைகளை வழங்கவும் "திக்கம் நாதம்" நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**

அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர்,

யாழ்ப்பாண மாவட்டம்.

# பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவரின் வாழ்த்துச்செய்தி

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரால் வெளியிடப்படும் "திக்கம் நாதம்" என்னும் நூல் சிறப்புற திகழ வாழ்த்துவதுடன், இச்சனசமூக நிலையமானது வடமராட்சி மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், திக்கம் வாழ்மக்களுக்கு வரப்பிரசாதமாகவும் திகழுவதுடன் பருத்தித்துறை பிரதேச சபையின் சிகரமாகவும் காட்சியளிக்கின்ற இந்நிலையமானது உள்ளூராட்சி மன்றத்தின் நெறிமுறையை தன்னகத்தே கொண்டும் , ஊர் பெரியவர்களின் நன்கொடை மூலம் பெறப்பட்ட காணிகளில் , மக்களின் நன்கொடை மூலமும், அரசஅதிபரின் ஆலோசனையின் பெயரால் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன்

1. திக்கம் பாலர் பாடசாலை
2. திக்கம் கிராம அபிவிருத்திச்சங்கம்
3. திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்
4. திக்கம் இந்து கலாமன்றம்
5. திக்கம் கமக்காரர் அமைப்பு
6. திக்கம் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்

என பல்வேறுபட்ட கிராமிய சங்கங்களை ஒன்றிணைத்து நற்சேவைகளை மக்களுக்கு நல்கிவருகிறது. அத்துடன் இந்நிலையம் அந்தியகால சேவையான மையவண்டிச்சேவையையும் மேற்கொள்கிறது. அப்பகுதி மக்களின் இறுதிக்கிரியை செய்யும் திக்கம் மயானம் 1985ம் ஆண்டு கண்ணிவெடித் தாக்குதலால் முழுமையாக சேதமடைந்து மீள் நிர்மாணம் செய்யப்பட்டது. மீண்டும் 2004ம் ஆண்டு சுனாமிப்பேரலையால் முற்றாக அழிவடைந்த திக்கம் மயானத்தை புதுப்பொலிவுடன் புனரமைத்த பெருமை திக்கம் மக்களையும் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தையும் சார்ந்ததாகும். திக்கம் வாழ்மக்களின் பெருமுயற்சியாலும், பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியுதவியாலும் பொதுத்தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியாலும் அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தில் மக்களின் சேவையினைக் கருத்திற்கொண்டு உபஅஞ்சல் அலுவலகம், கிராம அலுவலகம்,ஆரம்ப சுகாதார நிலையம், குடும்ப நல உத்தியோகத்தர் அலுவலகம், சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம், கிராம அபிவிருத்திச்சங்க அலுவலகம் ஆகிய அலுவலகங்களை தன்னகத்தே கொண்ட திக்கம் கிராமமானது மக்களின் அன்றாட தேவையினை இலகுபடுத்துவதுடன் மேலும் இச்சனசமூக நிலையத்தின் ஆலோசனையுடன் என்னால் நெல்சிப் திட்டத்தில் மக்களின் உச்ச தேவையை நிறைவேற்றும் பொருட்டு மானாண்டி சந்தையினை எமது பருத்தித்துறைப் பிரதேசசபை, மக்களின் பாவனைக்கு விட காத்திருக்கிறது. அத்தோடு அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களான இராசலிங்கம், துரைரட்ணம் போன்

றோர் விளையாட்டு வீரர்களை உருவாக்கும்முகமாக விளையாட்டு மைதானம் அமைக்கப்பெற்றதன் விளைவாக வடமராட்சி பிரதேச செயலர் பிரிவில் பல விளையாட்டு வீரர்களை இனங்காட்டி வருகின்றது. அத்துடன் திக்கம் சனசமூக நிலையத்தினால் ஆண்டு தோறும் விளையாட்டுப்போட்டிகள் நடாத்தி வருகின்றமை சிறப்புக்குரிய விடயமே.

இளைஞர்களையும் பெரியவர்களையும் ஒன்றிணைத்து பல இடர்களுக்கு மத்தியிலும் தனது சேவைகளை நடாத்திவருவது பாராட்டத்தக்க விடயமாகும். உள்ளூராட்சி தத்துவமான "கருவறையில் இருந்து கல்லறைவரை" என்னும் மகுடவாக்கியத்திற்கு இணங்க தனது சேவையினை ஆற்றிவரும் திக்கம் மத்திய சனசமூக நிலையம், திக்கம் கிராம மக்களுக்கு மட்டுமல்லாமல் பருத்தித்துறை பிரதேச சபைக்கும் வடமராட்சியிலும் யாழ்மாவட்டத்திலும் , வடமாகாணத்திலும் ஏன் இலங்கையிலும் புகழுடன் திகழ்ந்து இந்நூல் விளங்குவதுடன் பல கிராமங்களுக்கு முன்னுதாரணமாகவும் அமையவேண்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**பூ.சஞ்சீவன்**
தவிசாளர்
பருத்தித்துறை பிரதேசபை.

# வாழ்த்துச்செய்தி

வடமராட்சி வடக்கு பிரதேசத்தின் திக்கம் கிராமம் தனது அமைப்புக்களையும் வரலாறு களையும் உள்ளடக்கி "திக்கம் நாதம்" என்னும் சிறப்பு மலரொன்றினை வெளியிடுவது மகிழ்ச் சிக்குரியது.

"திக்கம் நாதம்" மலர் தனது கிராமத்தின் துறைசார்ந்த 12 வல்லுநர்களின் ஆக்கங்களை தாங்கி வருவது பெருமகிழ்ச்சிக்குரியது. இக்கிராமத்தின் கலாசாரமண்டபம் பல நிகழ்வுகளை நடாத்துவதற்கு ஏதுவாக உள்ளமை போற்றுதற்குரியது. மேலும் கலாசார மண்டபம், வாசிகசாலை, விளையாட்டுக் கழகம், விவசாய அமைப்பு, கமத்தொழில் அமைப்பு, சுகாதார சேவை நிலையம்,கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் போன்ற அமைப்புக்களின் வரலாறுகளையும் இந்நூல் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது. ஒரு பிரதேச அல்லது கிராம மக்களின் நலன்களை பேணுகின்ற, அவர் களை ஒன்றுபடுத்துகின்ற, அவர்களின் ஆற்றல்களுக்கு கௌரவம் வழங்குகின்ற, அவர்களின் கலை கலாசாரங்களை மேம்படுத்தும்முகமாக இவ்வாறான மலர்கள் வெளிவருவது மகிழ்ச் சிக்குரியது. இன்றைய நவீன நாகரீக காலமாற்றத்தின் பின்னரும் கூட இப்படியான மலர்கள் மலர்வது கிராமத்தின் பெருமையை பறைசாற்றுகின்றது. இம்மலர் இத்தகைய அமைப்புகளின் தகவல்களை தாங்கி வரும், வரலாற்றைச்சொல்லி நிற்கும் ஆவணமாக திகழ என் வாழ்த்துக் களையும் ஆசிகளையும் வழங்கி பணிகின்றேன்.

**இ.த. ஜெயசீலன்,**
பிரதேச செயலாளர்,
பருத்தித்துறை.

# சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி

அல்வாய் மேற்கு (J/396), அல்வாய் வடமேற்கு (J/397) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளின் பெரும் பகுதியை கொண்டதான திக்கம் கிராமத்தின் மக்கள் பங்குபற்றுதலினால் மக்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட திக்கம் மத்திய சனசமூக நிலையம் திக்கம் கிராமத்தின் சமூக காப்பகமாக மிளிர்கின்றதென்றால் அது மிகையாகாது. ஏனைய சமூக அமைப்புகளுக்கு (சனசமூக நிலையங்களுக்கு) முன்மாதிரியாக விளங்குகின்ற இச்சனசமூக நிலையத்தின் விரிந்து செல்லும் சேவைக்கு மேலும் வலுவூட்டுவதாக திக்கம் கிராமத்தை சார்ந்த கல்வி, கலை, கலாசாரம், புவியியல், பொருளாதாரம், விவசாயம், விளையாட்டு, சமூக அமைப்புக்கள், , வீதிகள், மின்சாரம் போன்ற பல்வேறு துறைகளோடு கொண்டு வரலாறுகளையும் உள்ளடக்கி ஒருங்கே ஆவணப்படுத்தி "திக்கம் நாதம்" என்னும் கிராம மலர் ஒன்றினை வெளியிட முன்வந்திருக்கும் திக்கம் மத்திய சனசமூக நிலைய நிர்வாகத்தினரையும், இம்மலர் ஏற்பாட்டுக் குழுவினரையும், திக்கம் சார் வெளிநாட்டு உறவுகளையும் பாராட்டுகின்றேன். காலத்தின் ஒரு தேவையை உணர்ந்த இந்தமலர் வெளியீட்டு முயற்சி இக்கிராமத்தின் சமூக அபிவிருத்திச் சிந்தனையாளர்களினாலும் மற்றும் சமூக வரலாற்று ஆய்வாளர்களினாலும் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்படும்

ஒரு பிரதேசத்தின் வாழ்வும் வளமும் அப்பிரதேசத்தின் இருப்பினை உணர்ந்து கொண்டு அதற்கமைய எதிர்காலத்திட்டங்களை வகுப்பது ஒரு சமூகத்திடமே தங்கியுள்ளது. அந்த வகையில் "திக்கம் நாதம்" மலர் வெளியிடும் சனசமூக நிலையம் அதனோடு இணைந்து இப்புனித பணியை நிறைவேற்ற முன்னிற்கும் சமூக சிந்தனையாளர்களும், பெரியவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஒரு கிராமத்தின் சகல அம்சங்களையும் வரலாறாக ஒரு மலரில் ஆவணப்படுத்த முன்மாதி ரியாக இந்த மலர் அமைய வேண்டுமென விரும்புகின்றேன். திக்கம் மத்திய சனசமூக நிலையம் இந்த மலரை வெளியிடுவதற்கு ஆர்வத்துடன் முயன்றுள்ளது என்பதை அறியும்போது மகிழ்ச்சி யடைகின்றேன். சமூக அபிவிருத்தித்துறையில் ஆற்றலும், அனுபவமும் விருப்பமும் விடா முயற்சியும் கொண்ட திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் "திக்கம் நாதம்" என்ற இம்மல ரானது ஏனைய சனசமூக நிலையங்களுக்கும் இவ்வாறான கிராம வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்துவதற்கு ஒரு முன்னோடியாக அமையுமென நம்புகின்றேன்.

உலகில் நாளுக்கு நாள் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ந்து கொண்டு போகின்ற உலகமயமாதலான இக்கால கட்டத்தில் பொதுச்சேவையில் ஈடுபட விருப்பமின்மையும், நேரவசதி யின்மையும் கொண்ட சமூக கலாசாரத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலைய செயற்பாடுகள் ஏனைய சனசமூக நிலையங்களுக்கு வித்தாகவும், முத்தாகவும் அமையவும், இச்சனசமூக நிலையத்தின் சேவைகள் சமூகத்தில் நிலைத்து நிற்கவும் எனது நல்லாசிகளுடன் இறைவனை வேண்டுகின்றேன்.

"ஓங்குக ஒற்றுமை
உயர்க சமுதாயம்"

**திருமதி. பரமேஸ்வரி யோகராசா,**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

# வாழ்த்து செய்தி

நமது கிராம மக்களின் சிறப்பான எதிர்கால வாழ்வுக்காகவும் அவர்களின் எதிர்காலத்தில் வரும் சந்ததியினர் நமது கிராமத்தின் சரித்திரத்தை எளிதில் அறிந்துகொள்ளவும் உங்கள் முயற்சி சிறப்பாக அமையும்.

எங்கள் திக்கம் கிராமத்தின் ஆரம்பகால வரலாற்றுக் குறிப்புகளை, வரைப்படங்களை சிரமம் பாராது தொகுத்து கொடுத்து உதவியவர்களுக்கும் எனது உள்ளார்ந்த பாராட்டையும் தெரிவிக்கின்றேன்.

இந்தப் புத்தக வெளியீட்டை வாசிக்கும் எங்கள் வருங்கால சந்ததியினருக்கு மேலும் ஆய்விற்கும் புதிய தகவல்களைத் திரட்ட பயனளிக்கும். அத்துடன் கிராமத்தின் சரித்திரம் பிற்காலத்தில் விரிவுபடுத்த இந்த முயற்சி உறுதுணையாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏன் எங்கள் பழக்க வழக்கங்களும் பழைய முறைகளும் அழியாமல் காக்கப்படும், புலம்பெயர்ந்து வாழும் எங்கள் கிராம மக்களுக்கும் அவர்கள் சந்ததிகளுக்கும் அவர்கள் வேர்களை அறிந்து கொள்ள உறுதுணையாக இருக்கும்.

வடமாகாணத்தின் திலகமாகவும், ஒரு முன்னோடிக் கிராமமாகவும் உருவாக ஆக்கமும் ஊக்கமும் அளித்த திக்கம் மத்திய சனசமூக நிலைய நிர்வாகிகளின் முயற்சிக்கு எனது அன்பான வாழ்த்துக்களுடன் இதயம் கனிந்த நன்றியறிதலை இங்கு மகிழ்ச்சியுடன் பதிக்கின்றேன்.

வாழ்த்துக்களுடன்<br>
**க. பிறைசூடி**<br>
(இந்தியா)<br>
காப்பாளர்,<br>
திக்கம் மத்திய சனசமூக நிலையம்

# திக்கம் மத்திய சனசமூக காப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திக்கம் நாதம் என்னும் அழகிய பெயரைக் கொண்ட இந்நூல் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரின் பெரும் முயற்சியால் வெளியிடப்படுகின்றது. சமீபகாலமாக திக்கம் மத்திய சனசமூக நிலைய நிர்வாகம் எமது கிராமத்தின் அபிவிருத்திக்காக பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை திட்டமிட்டு, அவற்றை திக்கம் மக்களின் உதவியுடனும், உள்ளூர் நிறுவனங்களிடமிருந்தும் வெளிநாடுகளில் வாழும் திக்கம் மக்களிடமிருந்தும் கிடைக்கும் நிதியுதவிகளுடனும் திறம்படசெயல்படுத்தி வருகின்றனர். இவர்களின் முற்போக்குச் சிந்தனைகளும் அயராத உழைப்பும் மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இத்தகைய முயற்சிகளில் ஒன்றுதான் தற்போது வெளியிடப்படும் திக்கம் நாதம் என்னும் இந் நூலாகும். இந்நூலில் இடம்பெற்றிருக்கும் கட்டுரைகள் யாவும் சம்பந்தப்பட்ட துறைகளில் அறிவும் அனுபவமும் ஈடுபாடும் உள்ள பலரின் முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். இவை காலத்தால் அளிக்க முடியாத திக்கத்தின் வரலாறுகளை படம்பிடித்து காட்டுவது போல் அமைந்துள்ளது.

இந்த நூல் திக்கத்தில் வாழும் மக்களுக்கு மாத்திரமன்றி வெளிநாடுகளில் வாழும் எமது திக்கம் மக்களுக்கும் அவர்களின் எதிர்கால சந்ததியினருக்கும் எமது கிராமத்தின் வரலாறுகளை படம்பிடித்து காட்டக்கூடியதாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.

இத்தகைய மகிமை வாய்ந்த ஒரு நூலை எமக்கு வடிவமைத்து தந்தமைக்கு உதவியாக இருந்த அனைவருக்கும், அதனை வெளியிடுவதற்கு ஊக்கமளித்த திக்கம் சனசமூக நிலைய நிர்வாக சபையினருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள் கின்றேன்.

**திரு. சி. கணேசமூர்த்தி**
காப்பாளர் ,
திக்கம் மத்திய சனசமூக நிலையம்,
கனடா.

## வாழ்த்துச் செய்தி

"நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்
பண்பு பாராட்டும் உலகு"

நாம் எப்பொழுதும் நல்ல செயல்களையும் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்தலையும், எந்த செயலைச் செய்தாலும் மற்றவர்களுக்கும் பயனுள்ளதாகச் செய்தால், நம்மை சிறந்த பண்புடையவராக இந்த உலகம் மதித்து பாராட்டும்.

மேற்குறிப்பிட்ட பண்பினையுடைய திக்கம் நூல் நிலைய நிர்வாகத்தினர் முன்னெடுக்கும் "திக்கம் நாதம்" இதழ் மலர்வதற்கு நூல் நிலைய காப்பாளர்களில் ஒருவர் என்ற ரீதியில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

மற்றவர்களுக்காக ஓர் துரும்பை தூக்கிப்போட்டாலும் பற்றுச்சீட்டை அனுப்பிவைக்கும் இந்த சம உரிமையற்ற உலகத்தில் இவர்களின் தன்னலமில்லாத முயற்சிக்கு எனது வாழ்த்துக் களையும், நன்றிகளையும் எனது மனம்கனிந்த மரியாதையையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் மதிப்புடன்
**உயர்திரு. க.யோகானந்தன்**
(சுவிஸ்)
காப்பாளர்
திக்கம் மத்திய சனசமூக நிலையம்

# திக்கம் கனடா நலன்புரிச் சங்கத்தின்
# வாழ்த்துச் செய்தி

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் முயற்சிகளில் திக்கம் நாதம் எனும் இந்நூல் திக்கம் மக்களுக்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். இதனால் கிடைக்கப்போகும் பலன் காலத்தாலும் இடத்தாலும் அளவிடமுடியாததொன்றாக இருக்குமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்நூலில் இடம்பெற்றிருக்கும் ஒவ்வொரு கட்டுரைகளும் அத்துறைகளில் ஈடுபாடும் அறிவுத்திறனும் கொண்ட ஆசிரியர்களால் வரையப்பட்டுள்ளன. அவர்கள் மிகவும் சிரமப்பட்டு கட்டுரைகளுக்குத் தேவையான புள்ளிவிபரங்களைச் சேகரித்து அவற்றிலுள்ள உண்மைகளை ஆராய்ந்து இக்கட்டுரைகளை திறம்பட வரைந்துள்ளார்கள்.

இந்நூல் திக்கத்தில் வாழ்கின்ற திக்கம் மக்களுக்கு மாத்திரமின்றி வெளிநாடுகளில் வாழ்கின்ற திக்கம் மக்களுக்கும் அவர்களின் எதிர்கால சந்ததியினருக்கும் எமது கிராமத்தைப் பற்றிய வரலாறுகளை அறியத்தரக்கூடிய ஒரு கைநூலாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

இம்முயற்சிக்கு திக்கம் மத்திய சனசமூகநிலைய நிர்வாகத்துடன் எம்மக்களில் பலரும் சேர்ந்து உழைத்துள்ளார்கள். ஆதலால் இதற்காக ஒத்துழைத்தவர்கள் இந்நூலை புத்தக வடிவமாக வெளியீடு செய்ய உதவியவர்கள் அனைவருக்கும் கனடா திக்கம் நலன்புரிச்சங்க அங்கத்தவர்களாகிய நாம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் சொல்வதுடன் இவ்வெளியீட்டு வைபவம் சிறப்புற நடைபெற வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

**கனடா திக்கம் நலன்புரிச் சங்கம்**

# திக்கம் நலன்புரிச்சங்கம் – சுவிஸின் வாழ்த்துச் செய்தி

திக்கம் மத்திய சனசமூகத்தினூடாக முதன்முதலாக வெளியிடப்படும் “திக்கம் நாதம்” எனும் இச்சிறப்பு மலருக்கு சுவிஸ் வாழ் மக்கள் சார்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் “சுவிஸ் நலன் புரிச்சங்கம் பெருமகிழ்ச்சியடைகின்றது.

நாம் அறிந்தமட்டில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இடையிடையே ஏற்பட்ட இடப் பெயர்வுகள் இன்னல்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் அன்றுமுதல் இன்றுவரையான காலப் பகுதியில் எத்துயர்பட்டாலும் எமது சேவையினைத் தொடருவோம் எனும் தற்றுணிவுடன் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் திக்கம் மத்திய சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கும், வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது நலன்புரி உறவுகளுக்கும் இன்னும் நேரடியா கவே உதவி வரும் எம்மூர் மக்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் “திக்கம் நாதம்” என்ற இந் நூலின் மூலமாக அறிந்து பெருமைகொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

எமது கிராமத்தையும், கிராம மக்களையும் மென்மேலும் மேம்படச் செய்யும் இவ்வாறான முயற்சிகளை திக்கம் மத்திய சனசமூக நிலையம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கான ஒத்துழைப்புக்களை நாம் வழங்குவோம் என்று தெரிவிப்பதில் சுவிஸ் வாழ் திக்கம் மக்களாகிய நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். “ஓங்குக ஒற்றுமை” எனும் மகுடவாசகத்திற்கு அமைய அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் ஒற்றுமையுடனும் திக்கம் மக்களை ஒன்றிணைத்து திக்கம் மத்திய சனசமூக நிலையம் என்றென்றும் செயற்படும் என்ற அசைக்கமுடியாத நம்பிக் கையுடன் “திக்கம் நாதம்” என்ற இந்த ஆவணப்படுத்தும் செயற்பாட்டிற்கு உதவிய அனைவ ரையும் வாழ்த்துவதுடன் எதிர்வரும் காலத்திலும் பல சாதனைகளைப் படைத்து எமது கிராமத்தை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல இந்நூல் வழிவகுக்கும் என்று கூறி, இந்நூல் சிறப்புற நல்வாழ்த் துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திக்கம் நலன்புரிச்சங்கம் - சுவிஸ்**

## வாழ்த்துச் செய்தி

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் இன்னுமொரு வரலாற்று நிகழ்வு “திக்கம் நாதம்” எனும் நூல்வெளியீடு ஆகும். கடந்த கால எமது கிராமத்தின் வரலாற்று நிகழ்வுகளை எமது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்வது வரவேற்கத்தக்கது ஆகும். இந்நூலில் எமது கிராமம் சார்ந்த அனைத்து வரலாற்று நிகழ்வுகள் அடங்கியுள்ளது. இந்நூல் காலம் காலமாக ஒரு வரலாற்று ஆவணமாக பேணப்பட வேண்டியது எமது கடமையாகும். இந்நூல் வெளியீட்டுக்கு உழைத்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தா கட்டும்.

இவர்களது பணி மென்மேலும் தொடர எல்லாம்வல்ல மடத்துவாசல் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

**இலண்டன் வாழ் திக்கம் மக்கள்**

## வாழ்த்துச் செய்தி

எமது கிராமம் சார்ந்த வரலாற்று நிகழ்வுகள், பொது அமைப்பு களின் வரலாறுகள் போன்றவற்றுக்கு எழுத்து வடிவில் ஒரு ஆதாரம் இல்லை. இக்குறையினை நீக்குவதற்கு திக்கம் மத்திய சனசமூக நிலையமானது "திக்கம் நாதம்" எனும் வரலாற்று பெட்டகத்தை வெளியீடு செய்வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்நூலில் எமது கிராமத்தில் காணப்படுகின்ற பொது அமைப்புகளின் வரலாறுகள், பொது நிகழ்வுகள் பற்றி மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அத்துடன் எமது கிராமத்தைச் சேர்ந்த பன்னிரண்டு துறைசார் நிபுணர்களின் கட்டுரைகளும் அடங்கியுள்ளது.

இவ்வரலாற்று ஆவணமானது சகல விடயங்களும் அடங்கிய ஒரு நூலாக வருவதையிட்டு நாம் பெருமை கொள்ளுகின்றோம்.

எதிர்வரும் காலங்களிலும் இந்நூலின் தொடர்ச்சிகள் வெளிவர எல்லாம்வல்ல இறைவன் துணைபுரியவேண்டும். இம்மலர் வெளிவர உழைத்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அனைவருக்கும் மடத்துவாசல் பிள்ளையார் துணைபுரிய வேண்டுகின்றோம்.

**பிரான்ஸ் வாழ் திக்கம் மக்கள்.**

## பதிப்புரை

ஓங்குக ஒற்றுமை என்ற மகுட வாசகத்தை தன்னுடைய மூச்சாக கொண்டு சமூக சேவையாற்றி வரும் திக்கம் மத்திய சனசமூகத்தின் வெளியீடான " திக்கம் நாதம்" எனும் வரலாற்று பெட்டகத்தின் வரவு கண்டு மகிழ்வடைகின்றேன். இதுவரை காலமும் திக்கம் கிராமத்துக்கென்று வரலாற்று ஆவணம் இல்லை என்ற குறைபாடு திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினுடைய அயராத முயற்சியின் பயனாக இன்று நிவர்த்தி செய்யப்படுகின்றது.

"திக்கம் நாதம்" என்னும் வரலாற்று ஆவணமானது திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினுடைய வரலாறு, திக்கம் கிராமத்தினுடைய வரலாறு, திக்கம் மாணாண்டிச் சந்தையின் வரலாறு, , பொது அமைப்புக்களின் வரலாறு மற்றும் எமது கிராமத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழுகின்ற விவசாயம், கல்வி மற்றும் விளையாட்டு, நிருவாகம், மருத்துவம், பனைவளம், சமயம், கடல்வளம், சட்டம் போன்ற பல்வேறுபட்ட ஆக்கங்களையும் சுமந்து வருகின்றது.

"திக்கம் நாதம்" எனும் வரலாற்று பெட்டகமானது திக்கம் கிராமத்தினது வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்கு சிறப்பாக விதைக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. எனவே இந்நூல் சிறப்பாக வெளிவருவதற்கு அயராது உழைத்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அந்தவகையில் திக்கம் மத்திய சனசமூக நிலைய நிர்வாகிகள், அங்கத்தவர்கள், புலம்பெயர்வாழ் உறவுகள், கல்விமான்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் "திக்கம் நாதம்" என்னும் நூலானது திக்கம் கிராமத்தினுடைய வரலாற்றினை எங்கும் மணம் பரப்ப திக்கம் மடத்துவாசல் பிள்ளையாரை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**திரு.க.சுதேஸ்**
(தலைவர்,
திக்கம் மத்திய சனசமூக நிலையம்)

# மலராசிரியரின் எண்ணத்தில் இருந்து

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வணக்கம், நேசத்திற்கு உரியவர்களே !

“திக்கம் நாதம்” என்ற நூல் வழியாயும் எனது உறவு இழை தொடர்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். காலவெளியில் இது நமது நேரம் என நினைக்கும் போது நாம் வாழும் இந்த சமூகத்திற்கு என்ன செய்தோம் என்ற கேள்வியும் நம்முள் எழுவது தவிர்க்கமுடியாதது. ஆயினும் திக்கம் என்று அழைக்கப்படும் சொர்க்கமாயிருக்கின்ற எமது சொந்த ஊர் இன்று ஊர் கடந்து எல்லைகள் வியாபித்து மற்றவர்களால் பேசப்படும் பொருளாதல் என்பது வெறுமனே இலகுவாக நடந்துவிட்ட காரியமல்ல. இந்த அத்தியாயங்களுக்குள் சிந்திக் கிடக்கின்ற இரத்தமும் வியர்வைத்துளிகளின் வீரியத்தின் வெளிப்பாடே இன்றைய ஏற்றமும் தோற்றமும். இது எமது சுயபுராணம் அல்ல, ஆற்றிய கடமைகளின் அறுவடை போன்றது.

திக்கம் நாதத்தை ஒரு பல்துறைசார் பார்வைகளுக்கு உரியதாக மலர்த்தி விட நோக்கம் கொண்டதன் அடிப்படை திக்கம் இன்று பலதுறைகளிலும் கால் பதித்திருப்பதே. இதற்கு அத்தி பாரமாக செயற்பட்டது திக்கம் மத்திய சனசமூக நிலையம் என்றால் மிகையாகாது. ஆரம்பத்தில் பல இடங்களில் கொட்டில்களாக இயங்கி வந்த வாசிகசாலைகளை ஒன்றிணைத்து திக்கம் மத்திய சனசமூக நிலையத்தை உருவாக்கிய அனைத்து பெரியவர்களையும் நினைவு கூருவது நமது தலையாய கடமையாகும். ஒரு கிராமத்தில் சனசமூக நிலையத்தின் தேவை. அதன் வளர்ச்சி பங்கு என்பவற்றை எமது திக்கம் கிராமம் அனுபவ ரீதியாக உணர்ந்த கிராமம். திக்கம் மத்திய சனசமூக நிலையம் என்பது ஒன்றுகூடி பத்திரிகைகள் வாசித்து பொழுதுபோக்கி கலையும் இடமாக வளர்ந்து வரவில்லை. அது ஒரு திக்கம் என்ற ஊரின் குட்டி அரசாங்கமாக நிர்வாக மையமாக இருந்து வருகின்றது.

திக்கம் மத்திய சனசமூக நிலையமும் திக்கம் கிராமத்தில் இயங்கி வருகின்ற பொது அமைப்புக்களும், புலம்பெயர் நலன்புரிச்சங்க அமைப்புகளும், ஆக்கபூர்வமான பணிகளில் கைகொடுத்து திக்கம் என்ற கிராமத்தின் நற்பெயருக்கு பலமாகி நிற்பதால் திக்கம் மத்திய சனசமூக நிலையம் பெருமையுடன் “திக்கம் நாதம்” என்ற நூலினை வெளியிடுகின்றது. இந்நூலில் வரலாற்று ஆவணமாக எமது கிராமத்திலுள்ள சனசமூக நிலையம், பாடசாலைகள், கிராமபொது அமைப்புகள், , விளையாட்டுக் கழகம், மகளிர் அமைப்புகள் போன்ற வற்றின் வரலாறுகளை ஆவணப்படுத்தும் நோக்கோடு இம்மலரை வெளியிடுகின்றோம். இம்மலரை முழுமையாக தரிசிப்பவர்களுக்கு பின்னே திரண்டு பயணிக்கும் வியாபத்தை அறிந்து கொள்ளமுடியும்.

"ஓங்குக ஒற்றுமை" எனும் மகுடவாசகத்துடன் நடைபோடும் எமது நிலையம் நாம் பிறந்த ஊருக்கும் நாம் பிறந்த மண்ணுக்கும் திக்கம் நாதத்துடனூடாகவும் ஒரு வரலாற்று தடத்தை விட்டுச்செல்வதாக பூரிக்கிறோம். திக்கம் கிராமத்தில் எவையேனும் அழகாக, பொலிவாக பெருமைப்படுவதாக ஆச்சரியப்படுவதாக உங்களுக்கு தோன்றின் அவையாவும் எண்ணற்ற கருணையுள்ளமும் சமூகநோக்கும் உடைய மனிதர்களின் வியர்வைத் துளிகளின் மறுவடிவமே. இந்நூலில் இயன்றவரை எமது கிராமத்தின் நாடித்துடிப்பை உங்கள் இதயத்துடிப்புக்களோடு கலந்துவிட முயன்றிருக்கின்றோம் என்பதையிட்டு பெருமை யடைகின்றேன். "திக்கம் நாதம்" என்ற நூல் உருவாக்கத்திற்கு உழைத்த திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினருக்கும், பொது அமைப்புக்களின் வரலாறுகளை தந்து தவிய நிர்வாகத்தினருக்கும் துறைசார்ந்த ஆக்கங்களை தந்துதவியோருக்கும், வாழ்த்துச் செய்தியினை வழங்கியவர்களுக்கும், விளம்பர அனுசரணை வழங்கிய நிறுவனங்களுக்கும், இம்மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த "அன்றா பிறிண்டேர்ஸ்" நிறுவனத்தினருக்கும் ஏனை யவர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கு.தினேஸ்**
மலராசிரியரும், நிர்வாகசபை உறுப்பினரும்

# தெய்வீக மணங்கமழும் எமது கிராமம் அன்றும் இன்றும்

நாம் வாழுகின்ற ஊரைப்பற்றிய வரலாற்று நிகழ்வுகளை வருங்கால சந்ததியினரும் அறிந்து கொள்ளும் பொருட்டு அவற்றை ஆவணப்படுத்த வேண்டியது நமது தலையாய கடமையாகும். ஏனெனில் இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறுகள் ஆகும்.

கடல்வளம், புவிவளம், பனைவளம் என்று இயற்கை வளங்கள் பலவும் கொண்டது நம்மூராகும். கடலோரம் வீசிவரும் தென்றல், தோட்டவெளியெங்கும் பரவிவரும் பயிர்களின் சுகந்தம் இவைதான் நமது கிராமத்தின் அடையாளம் - பருத்தித்துறை, பொன்னாலை வீதியில் வியாபாரி மூலைக்கும் பொலிகண்டிக்கும் இடையே காணப்படும் சந்திதான் எமது கிராமத்தின் பிரதான நுழைவாயில் ஆகிய 'திக்கம் சந்தி' எனப்படுகிறது.

இச்சந்தியிலிருந்து கடற்கரைக்காட்சியினை இரசித்துக்கொண்டு பாதையூடாக தெற்கு நோக்கி வரும்போது எமது கிராமத்தின் அழகைக் கண்டுகளிக்கலாம்.

**எமது கிராமத்தின் பெயர் உருவான விதம்:**

- 1796ம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்த ஆங்கிலேயரால் இப்பெயர் இடப்பட்டது. இச்சொல் தமிழில் இல்லை. இதன் தமிழ் விரிவாக்கத்தை ஆராயுமிடத்து, திக்+கமம் (Thick+Kamam) அடர்த்தியான கமம் செய்யும் ஊர் என்று ஓரளவுக்கு பொருள் கொள்ளலாம். அதில் உண்மையும் உண்டு. இது காலப்போக்கில் மருவி 'திக்கம்' என்று வழங்கப்பட்டிருக்கலாம்.

- இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர் வடமராட்சியில் ஒரு சீனித்தொழிற்சாலை அமைக்க விரும்பி 1848ஆம் ஆண்டு எமது கிராமத்துக்கு மேற்புற எல்லையில்

ஒரு காணியை தேர்ந்தெடுத்தார்கள். அக்காணியில் அதிகமான வேப்பமரங்கள் அடர்ந்து வளர்ந்து காணப்பட்டன. அந்த வேப்ப மரங்களிலிருந்து மினுமினுப்பான பிசின் வடிந்து கொண்டிருந்தமையைக் கண்ட ஆங்கிலேயர்கள் அதிலிருந்து என்னென்ன பொருட்களை உற்பத்தி செய்யலாம் என்ற ஆய்வில் ஈடுபட்டார்களாம். அந்தப்பிசினை தங்களுடைய கைகளினால் தொட்டுப்பார்த்தபோது அவர்களின் விரல்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டனவாம். அதனால் அவர்கள் அப்பிசினை திக்+கம் (Thick+Gum) என்று கூறி ஆச்சரியப்பட்டார்களாம். 'கடும்பசை' என்ற பொருளில் அவர்கள் கூறிய சொல் நாளடைவில் 'திக்கம்' என்று மருவி இப்பெயர் வந்திருக்கலாம்.

- ஆங்கிலேயர்கள் இங்கே பனம்பழத்தினால் செய்யப்பட்ட பனாட்டினை உண்ணும்போது அது அவர்களின் வாயில் ஒட்டிக்கொண்டது. அதனை அவர்கள் திக்+கம் (Thick+Gum) என்று கூறினார்களாம். அதிலிருந்து எமது கிராமத்துக்கு 'திக்கம்' என பெயர் வழங்கப்பட்டு வந்திருக்கலாம்.

எமது கிராமமானது திக்கற்றதாக இருக்காமல் திக்கெட்டும் புகழ்பரப்பி ஒரு முன்மாதிரிக் கிராமமாக முதன்மையான இடத்தைப்பெற்றுள்ளது.

**அமைவிடம் :-**

எமது கிராமம் அதன் வடக்கு எல்லையாக பாக்கு நீரிணையையும் தெற்கு, மேற்கு, கிழக்கு எல்லைகளாக முறையே தேவரையாளி, பொலிகண்டி, மாறம்புலம் ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ளது. எமது கிராமமானது வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலக பிரிவுக்குள் அல்வாய் மேற்கு (J/396),அல்வாய் வடமேற்கு (J/397) ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ளது. முன்பு அல்வாய் மேற்கு என்ற ஒரு கிராம அலுவலர் பிரிவு மட்டுமே இருந்தது. பின்னர் நிர்வாகத்தினை இலகுபடுத்துவதற்காக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக எமது கிராமமக்கள் பெரும்பாலானோர் பிற மாவட்டங்களுக்கும் பிறநாடுகளுக்கும் சென்றுவிட்டார்கள்.

எமது கிராம மக்கள் பொதுவாக நல்ல ஊக்கமுடையவர்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்று நினைத்து வாழ்பவர்கள். உழைப்பினால் உயர்ந்தவர்கள். ஆரம்பகாலத்தில் எமது கிராமத்தில் உள்ள மக்கள் அநேகமானோர் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக்கொண்டிருந்தார்கள். அத்துடன் எமது மக்கள் குடிசைக்கைத்தொழிலிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

பனைவளம் இங்கே போதியளவு காணப்பட்டமையால் பனையோலை மூலம் பெட்டி, பாய், குட்டான், நீற்றுப்பெட்டி போன்ற கைவினைப்பொருட்கள் பெண்களால் செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டது. இவற்றினை சந்தைப்படுத்தும் பிரதான சந்தையாக மாணான்டி சந்தை காணப்பட்டது. அன்று கல்வி கற்றவர்கள் குறைவாகவே காணப்பட்டபோதிலும் ஆங்கிலக்கல்வியறிவை நிறைவாகப் பெற்று அரச உத்தியோகத்திலும் இருந்திருக்கிறார்கள். சிங்கப்பூர் , மலேசியா போன்ற அந்நிய நாடுகளுக்கும் சென்றிருக்கிறார்கள். முதுமைக்காலத்தில் அவர்கள் சொந்த ஊருக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு சிங்கப்பூர் பென்சனியர் என்ற ஓர் தனிமதிப்பும் இருந்தது.

தற்போது எமது கிராமத்தைச் சேர்ந்தவர்கள் உயர்படிப்புக்காகவும் வேலைகளுக்காகவும் அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் போன்ற பல்வேறு நாடுகளுக்குச் செல்லுகிறார்கள்.

## போக்குவரத்து - வீதி அமைப்பு

எமது கிராமத்திற்கு அருகில் நெல்லியடி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை ஆகிய நகரங்கள் காணப்படுகின்றன. எமது கிராமத்தின் ஊடாகச் செல்லும் திக்கம் - நெல்லியடி வீதி ஆரம்பமாகும் இடமாகிய 'திக்கம் சந்தியில்' எமது கிராமத்துக்குரிய பிரதான பஸ்தரிப்பு நிலையம் காணப்படுகிறது. இதிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் பிறஇடங்களுக்குச் செல்லக்கூடிய பேரூந்து வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எமது கிராமமக்களின் போக்குவரத்தினை இலகுபடுத்தும் எமது கிராமத்தில் காணப்படும் வீதிகள்

1. திக்கம் நாச்சிமார் கோவில் வீதி
2. திக்கம் வட்டதெனி வீதி
3. திக்கம் குமாரியோடை வீதி
4. திக்கம் பள்ளம்தெண்ணி க. இராஜகோபால் வீதி
5. திக்கம் பணிக்கர் கோயில் யூரி மாணிக்கம் வீதி
6. திக்கம் பேச்சியம்மன் கோயில் கணேசமூர்த்தி வீதி
7. திக்கம் இளையகுட்டிபுல வீதி
8. திக்கம் பாடசாலை ஆ. பொன்னையா வீதி
9. திக்கம் பொலிகண்டி வீதி
10. திக்கம் கிளிவெட்டி வீதி
11. திக்கம் வடிசாலை வீதி
12. திக்கம் மாதா கோயில் வீதி
13. திக்கம் மைதான ஜெகதீஸ்வரன் சுற்று வட்ட வீதி
14. திக்கம் சேமன் சச்சிதானந்தம் வீதி
15. திக்கம் கல்லாண்டி வேலும் மயிலும் வீதி
16. நீர்வளைப் பிள்ளையார் திக்கம் செல்லையாப்பிள்ளை வீதி
17. திக்கம் நாவலடி வீதி

## வீடுகள் - கட்டுமான அமைப்பு

ஆரம்பகாலங்களில் எமது கிராமத்தில் சில பணக்காரர்களின் வீடுகளைத்தவிர ஏனையோரின் வீடுகள் ஓலைக்குடிசைகளாகவே காணப்பட்டன. தற்போது திரும்பும் திசையெங்கும் அழகிய வீடுகளைக் காணமுடிகிறது. 2004ம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினைத் தொடர்ந்து பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் பல புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 'டயகோணி' என்ற தென்னிந்திய திருச்சபை ஜெர்மன் நாட்டு நிறுவனத்தின் உதவியுடன் 'மெதடிஸ்த நகர்' எனும் வீட்டுத்திட்டத்தின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊறணி எனும் இடத்தில் வசித்து வந்த கரையோர மக்களுக்கு எமது கிராமத்தில் 35 வீடுகளை வழங்கியுள்ளது.

ஒரு சமுதாயத்தை மேம்படுத்த உதவுவது கல்வியறிவு ஆகும். அந்தவகையில் எமது கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்றினைத் திக்கம் மத்திய சனசமூக நிலையம் சிறந்தமுறையில் நடாத்தி

வருகின்றது. அத்துடன் எமது கிராமத்தில் ஒரு ஆரம்ப பாடசாலை காணப்படுகிறது. அப்பாடசாலையாகிய திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயமானது முன்பு மெதடிஸ்த மிஷன் பாடசாலை என அழைக்கப்பட்டது. ஆனால் 1968 - 06 - 15 அன்று மடத்துவாசல் பிள்ளையார் கோவிலுக்கு மேற்கே இயங்கிய சைவ பாடசாலையும் மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் ஒன்றாக இணைக்கப்பட்டு திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயமாக இயங்கத்தொடங்கியது.

**ஆன்மீகம் :**

எமது கிராமம் தெய்வீக மணங்கமழும் ஒரு கிராமம் ஆகும். எமது கிராமத்தின் பெரும்பான்மையினர் இந்துக்கள் ஆகும். கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறைவு. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற ஆன்றோர்களின் வாக்குக்கு ஏற்பவே நமது மூதாதையர்கள் ஆங்காங்கே கோயில்கள் அமைத்து வழிபட்டு வந்தார்கள். எமது கிராமத்தின் நான்கு பக்கங்களிலும் பெண்தெய்வங்கள் நின்று ஊரை காவல் புரிகின்றன. எமது கிராமத்தினை அலங்கரிக்கும் கோவில்களாவன :-

1. துந்தாவத்தை சித்திவிநாயகர் ஆலயம் (துளாயிற் பிள்ளையார் கோவில்)
2. நீர்வளைப்பிள்ளையார் கோவில்
3. மடத்துவாசல் பிள்ளையார் கோவில்
4. தேவரையாளி கண்ணகி அம்மன் கோவில்
5. சக்கோட்டை பிள்ளையார் கோவில்
6. பேச்சியம்மன் கோவில்
7. நாச்சியம்மன் கோவில்
8. காளிகா பரமேஸ்வரி கோவில்
9. முதலியம்மன் கோவில்
10. பணிக்கர் கோவில்
11. பள்ளந்தண்ணி வைரவர் கோவில்
12. குளமா வைரவர் கோவில்
13. துந்தாவத்தை வைரவர் கோவில்
14. கிளிவெட்டி வைரவர் கோவில்
15. சுறோம்படி வைரவர் கோவில்
16. மாதா கோவில்
17. பழைய வைரவர் கோவில்

எமது கிராம முன்னேற்றத்தில் பங்கெடுக்கின்ற பொது அமைப்புகள்

1) திக்கம் மத்திய சனசமூக நிலையம்

2) திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்

3) திக்கம் பாலர் பாடசாலை

4) திக்கம் கிராம அபிவிருத்திச் சங்கம்

5) திக்கம் இந்து கலாமன்றம்

6) திக்கம் இளைஞர் தமிழ் வளர்ச்சிக்கழகம்

7) திக்கம் சிறுவர் கழகம்

8) திக்கம் கமக்காரர் அமைப்பு

9) திக்கம் மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியனவாகும்.

இவற்றில் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வரலாறும் எமது கிராமத்தின் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தது.

நெசவுசாலை :- முற்காலத்தில் எமது கிராமத்தில் சுறோம்படி வைரவர் ஆலயத்துக்கு அருகில் நெசவுசாலை இயங்கிவந்தது. அதில் அநேக இளம்பெண்கள் நெசவுத்தொழில் பயின்று வந்தனர். காலப்போக்கில் அத்தொழில் கைவிடப்பட கட்டடம் அழியத்தொடங்கியது. அதில் சிறுகாலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்குமான கிளினிக் (ஆரம்ப சுகாதார நிலையம்)இயங்கி வந்தது. தற்போது அவ்விடத்தில் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

**வாழ்த்து**

கடல்வளம் புவி வளம் கற்பக தருவளம்
கொண்ட நம்மூரே நீ வாழி !
கல்விப் பெருவளம் ஆன்மீக நெறிவளம்
பெற்ற நம்மூரே நீ வாழி !
கிராமத்தின் இதயமாம் சனசமூக நிலையமே
நீடு புகழ் பெற்று நீ வாழி !
திக்கெட்டும் புகழ் பரப்பும் திக்கம் கிராமமே
என்றென்றும் புகழோடு நீ வாழி !

**திருமதி. கணேசலிங்கம் தவமணி தேவி**
(ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளர்)

# திக்கமும் அதன் தனித்துவப் பண்புகளும்

"ஆதிக்கம்" என்ற வரலாற்றுப் பெருமை கொண்ட திக்கம் கிராமம் வடக்கே பொன்னாலை பருத்தித்துறை வீதியையும் தெற்கே தேவரையாளி இந்துக்கல்லூரியையும் கிழக்கே J/400 கிராமசேவையாளர் பிரிவையும் மேற்கே J/394 கிராம சேவையாளர் பிரிவையும் எல்லையாகக்கொண்டது. ஏறக்குறைய 3.20$km^2$ பரப்பளவையும், 4000 மக்கள் சனத்தொகையையும் உள்ளடக்கிய எம் கிராமத்தில் கற்றோரும் நல்லோரும் மலிந்தே காணப்படுகின்றனர். J/396 அல்வாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு, J/397 அல்வாய் வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவு என இரு பிரிவுகளைக்கொண்ட இக்கிராமம் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பகுதியாகும்.

**பௌதீக தோற்றம் :**

**தரைத்தோற்றம்** -

திக்கத்தின் தரைத்தோற்றமானது தட்டையான அமைப்பினைக் கொண்டுள்ளது. எனினும் பூமாஞ்சோலை, கிளிவெட்டி பகுதிகளில் மண்மேடான தன்மையும் காணப்படுகின்றது.

**மண்வகை**

மணல்மண், கல்சிய செம்மஞ்சள் மண் (Redyellow Latasole) ஆகிய மண் வகைகள் காணப்படுகின்றன. சுண்ணாம்புக்கல் தரையமைப்பினைக் கொண்ட பகுதியாதலால் தரைக்கீழ் நீர்வளம் தாராளமாக காணப்படும் பிரதேசமாகவும் உள்ளது.

திக்கத்தின் மொத்த நிலப்பரப்பில் விவசாய நிலங்களாக காணப்பட, எஞ்சிய நிலப் பரப்பில் பொதுநோக்கு கட்டடங்கள், வாழ்விடங்கள், மைதானங்கள் என அமைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள திக்கம் கலாசார மண்டபம், திக்கம் மத்திய சனசமூக நிலையம், திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம், திக்கம் பாலர் பாடசாலை, திக்கம் உபதபால் நிலையம்

என்பன கிராமத்தின் பொலிவையும், பண்பாட்டு குறிகாட்டிகளின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் அம்சங்களாகும்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. ஏறத்தாழ 12 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் காணப்படுகின்றன. எம் மக்கள் சீர்மியம் மிக்கவர்களாக வாழ்வதற்கு ஆலய வழிபாடே காரணம் எனலாம். வடக்கே பள்ளத்தண்ணி வைரவர், நாச்சிமார், தெற்கே கிளிவெட்டி வைரவர், குளமா வைரவர், மேற்கே நீர்வளை விநாயகர், கிழக்கே துளாய் பிள்ளையார் என காவல் தெய்வங்களால் காவல் காக்கப்படுகின்ற பெருமையும் தனிச்சிறப்பும் கொண்டது எம் கிராமம். இதனால் தான் கடுந்துன்பங்கள் ஏதுமின்றி, காப்பாற்றப்பட்டு வருகின்றது.

வடமராட்சியின் வளம் பொருந்திய கிராமங்களில் ஒன்றாக விளங்கும், தொன்மைச் சிறப்புடைய பல தனித்துவமான பண்புகளையும், தனித்துவத்தையும் கொண்டதாக விளங்குகிறது. அவற்றை

1. சமூகம்
2. பொருளாதாரம்

என்ற அடிப்படையில் நோக்குதல் பொருத்தமுடையதாகும்.

சமூகம் என்பது அங்கு வாழும் மக்களைக் குறிக்கும். அவற்றுள் வீடமைப்பு, குடும்ப வாழ்க்கை, பிதிர்கடன்கள், உணவு முறை, கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற அம்சங்கள் நோக்கப் படுகின்றன.

பொருளாதாரம் என்பது அங்கு வசிக்கும் மக்களின் தொழிலை அடிப்படையாகக் கொண்டது. அவ்வகையில், விவசாயப் பயிர்ச்செய்கை, உப உணவு பயிர்ச்செய்கை, மிருக வளர்ப்பு - ஆடு, மாடு, கோழி , சிறு குடிசைக் கைத்தொழில், வீட்டுத்தோட்டங்கள், மீன்பிடிக் கைத்தொழில் போன்ற விடய ங்கள் நோக்கப்பட்டுள்ளன.

### 1.0 சமூகம்

### 1.1 வீடமைப்பு

இன்றைய திக்கம் கிராமமல்ல. கிராமமும் நகரமும் கலந்த ஒன்று என்று எண்ணுமளவிற்கு கல்வீடுகளும், மாடிவீடுகளும் நிறைந்து காணப்படும் இடமாக காட்சி அளிக்கின்றது. ஆனால் அன்று மண்வீடுகள், 'கூடமும் மாலும்' சமைப்பதற்கு அடுக்களையும் கொண்டதாக அமைந்திருந்தது. தலை வாசலுடன் கூடிய வீடமைப்பும் முக்கியம் பெறுகின்றது. இது எம் கிராம மக்களின் மனிதநேயப் பண்பினை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. வெயில், மழை போன்றவற்றிலிருந்து பாதுகாப் பளிப்பதாகவும் பாதசாரிகளின் களைப்பாறும் இடமாகவும் தலைவாசல் பயன்பட்டது. களைத்து வந்தோர் தாகம் தீர்ப்பதற்கான வசதிகளும் அக்காலத்தில் தலைவாசலில் காணப்பட்டது. இன்றும் சில வீடுகளில் தலைவாசல் காணப்படுகின்றமை தொன்மையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. மச்சம் சமைப்பதற்கென பிறிதொரு அடுக்களை காணப்பட்டது. வீடு புனிதமானது, லட்சுமி கடாட்சம் நிறைந்தது எனக் கருதிய நம்மவர்கள் வீட்டினுள் மச்சம் கொண்டு செல்வது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதில் தீவிரமாகவும் காணப்பட்டனர். இவை எம் கிராமத்தின் தனித்துவப் பண்பை எடுத்துக் காட்டுவதுடன், எம் கிராம மக்களின் ஆசாரத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இன்று இந்நிலை அருகி வந்தாலும் கூட இன்றும் சில வீடுகளில் இப்பழக்கம் கடைப்பிடிக்கப்படுவது கண்கூடு. விறகுகள் தாராளமாகக் கிடைத்தமையால் விறகுகள்தான் அன்று எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது. இன்று இந்நிலை மாறிவருவது எம் கிராமத்தின் நவீனப் போக்கை எடுத்துக்காட்டுகிறது.

### 1.2 குடும்பம்

தனித்துவமான உயரிய பண்புகள் கொண்டது எம் திக்கம் சமூகம். ஏறக்குறைய 60, 70 ஆண்டுகளுக்கு முன் "கூட்டுக்குடும்ப" வாழ்க்கையில் இன்பம் கண்டவர்கள் எம் கிராமத்தவர்கள். அன்பு, பாசம், பெரியோருக்கு மதிப்பளித்தல், உதவி செய்தல் போன்ற பல பண்புகள் வளர்வதற்கும் மனிதநேயம் மிக்கவர்களாக மிளிர்வதற்கும் கூட்டுக்குடும்ப வாழ்க்கை அடித்தளமாக அமைந்தது. வயது முதிர்ந்தவரே தலைவராக இருப்பார். அவரின் சொற்படியே அக்குடும்பம் அமைதியாக இயங்கிச்செல்லும். அமைதியும் சந்தோஷமும் நிறைந்திருக்கும்.

கோயில்களுடன் அதிக ஈடுபாடுடையவர்களாக இருப்பதால் ஆசூச நாட்களில் தூரவே நிற்கும் தன்மை எம்கிராமத்தின் ஆசாரத்தை எடுத்துக்காட்டும் பிறிதோர் குறிகாட்டியாகும்.

### 1.3 பிதிர்க்கடன்

கடவுள் நம்பிக்கை மிக்கவர்களாகக் காணப்பட்டதுடன் பிதிர்க்கடன்கள் செய்வதில் மிகவும் ஆர்வமும் அக்கறையும் காட்டி வந்தனர். பிதிர்களை மிகவும் மதித்தனர். அவர்கள் எம்மைக் காப்பாற்றுகிறார்கள் அவர்களுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையுடையவர்களாகக் காணப்பட்டனர் எம் கிராம மக்கள். பிதிர்களுக்கு படையல் வைத்து வழிபடுதலில் மிகுந்த விருப்பமும் ஈடுபாடும் உடையவர்கள் என்பதை அவர்களது செயற்பாடுகள் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டின. எடுத்துக்காட்டாக, 'பனம்பாத்தி' போடுவதற்கு முன் பனங்காய்க் குவியலுக்கு ஒரு படையல், கிழங்கு கிண்டிய பின் இன்னோர் படையல். அப்படையலில் மீன் பொரியல், கருக்கல், வறை, குழம்பு எனப் பலதரப்பட்ட சுவைகள் கலந்திருக்கும். உறவினர்களும் கலந்து கொள்வார்கள். உண்டு மகிழ்வார்கள். இக்கால இளந்தலைமுறையினருக்கு இது ஓர் அநாவசிய செயற்பாடாகவும், தேவையற்ற ஒன்றாகவும் தென்படும். ஆனால் திக்கத்தின் தனித்துவம் அதுதான். பிதிர்கள் மீது அவர்கள் வைத்திருந்த மரியாதைக்கும் நன்றி மறவாமைக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

பனங்கிழங்கு அவித்த பின், கிழங்குத்துவையல் முதலில் பிதிர்களுக்குப் படைத்த பின்னர் தான், "மற்றவர்கள்", என்பதில் மிகவும் இறுக்கமாகவும் இருந்தனர் எம் கிராம மக்கள்.

சோற்றுப் பானையை இரவில் கழுவிவைக்க மாட்டார்கள். சோற்றுப் பானைக்குள் நீர் ஊற்றி வைப்பார்கள். பிதிர்கள் இரவில் வந்து பசியாறிச் செல்வார்கள் என்ற நம்பிக்கை எம் கிராம மக்களிடம் நிறையவே காணப்பட்டது. பிதிர் விரதங்களில் உருளைக்கிழங்கு, முருங்கைக்காய் சேர்த்துக் கொள்ளாமை இன்னுமோர் தனித்துவமான பண்பாகும். இன்று பழையன கழிந்து புதியன எம் கிராமத்தில் புகுந்துவிட்டமை காலத்தின் கோலமாகும்.

### 1.4 உணவு

பழஞ்சோறும், ஒடியல் பிட்டும், பனாட்டும் எம் கிராம மக்களின் விருப்பமான உணவாகும். ஒடியல் மா, பனாட்டு எம் கிராமத்தில் தாராளமாக ஒவ்வொரு வீட்டிற்கும் கிடைக்கக்கூடிய ஒன்றாகக் காணப்பட்டமை சிறப்பான அம்சமாகும். ஏனைய கிராமங்களுக்கு இல்லாத சிறப்பு எம் கிராமத்தில் காணப்படும் கற்பகத்தருவான பனை ஆகும். ஆனால் இன்று இவை யாவும் அருமையான பொருட்களாகவும், இளந்தலைமுறையினரின் விருப்பமில்லா உணவாகவும் ஆகிவிட்டது. இன்றைய நெல்லரிசிச் சோற்றை விட தினை அரிசி தான் முக்கிய இடம் வகித்தது எம்மவர் வாழ்வில். நம்மவர்கள் தேகாரோக்கியத்துடனும், திடகாத்திரத்துடனும் காணப்பட்டார்கள் என்றால், அவர்களின் உணவுப்

பழக்கவழக்கமே காரணம் என்பதில் ஐயமில்லை. வீடுகளில் பசுவை வளர்த்தார்கள். அதன் பால், தயிர், மோர் என்பவற்றை உணவுடன் சேர்த்து ஆரோக்கியமானவர்களாக வாழ்ந்தார்கள் நம் மூதாதையர்கள்.

## 1.5 கல்வி

"நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற கல்வியில் பெருமை கொண்டது திக்கம்" என்பதில் ஐயமில்லை. எழுத வாசிக்கத் தெரிந்தோர் என்ற குறிகாட்டியின் அடிப்படையில் நோக்கின் ஏறத்தாழ 90% மானவர்கள் இத்தகுதியை உடையவர்களாக காணப்படுகின்றனர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். ஆரம்பகால மக்களின் கல்வியை வளர்த்த கலைக்கூடங்களாக, மெதடிஸ்த மிஷன் பாடசாலையும், சித்திவிநாயகர் வித்தியாலயமும் விளங்கின. கல்வியை வளர்ப்பதில் கோவில்களுக்கும் பெரும் பங்கிருந்தன என்பதும் மறப்பதற்கு இல்லை. ஆரம்பக் கல்வியான வகுப்பு 1 – வகுப்பு 8 வரை கற்றிருந்தோரிடம் ஆங்கிலப்புலமை காணப்பட்டமை அவர்களின் வித்துவச்சிறப்பைக் காட்டுகின்றது. விநாயகர் புராணம், கந்த புராணம் போன்ற பாடல்களுக்கு பயன்சொல்வோர் கிராம மக்களிடையே காணப்பட்டனர். அக்காலத்தில் இவற்றில் புலமை பெற்றோரே விற்பன்னர்களாகக் கருதப்பட்டனர்.

இன்று மேற்கூறிய இரு பாடசாலைகளும் இணைந்து திக்கம் சித்தி விநாயகர் வித்தியாசாலையாக எம் மக்களுக்கு அடிப்படைக் கல்வியை ஆணித்தரமான அத்திவாரமாக இட்டுக்கொண்டிருக்கிறது. இன்று ஏறக்குறைய 85% இற்கு மேற்பட்டவர்கள் அரசாங்கத் தொழில் பார்ப்பவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதுடன் 85% மானவர்கள் பட்டதாரிகளாகவோ, பட்டத்தின் பின் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களாகவோ காணப்படுகின்றனர் என்பது எம் கிராமத்தின் கல்வி வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் குறிகாட்டியாக உள்ளது என்பது மிகைப்படக் கூறுதலல்ல.

## 1.6 திருமணம்

60,70 ஆண்டுகளுக்கு முற்பட்ட எம்மக்கள் உறவுக்குள்ளேயே திருமணங்களை வைத்துக் கொண்டனர். உறவுகள் விட்டுப் போகக்கூடாது, உறவுகளைப் பலப்படுத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். உறவுகளின் திருமணத்தின்போது உறவுகள் யாவரும் ஒரு கிழமை, ஒரு மாதம் முன்பே ஒன்றாய்க்கூடி, ஆனந்தமாய் இருப்பர். பலகாரம் சுடுதல், கன்னிக்கால் நாட்டுதல், திருமணப் பந்தல் போடல் போன்ற வேலைகளை உறவுகளே செய்துமுடிப்பர். நாள் பார்த்தல், சம்பந்தம் கலத்தல், கொழுக்கட்டையை மாப்பிள்ளை வீட்டிற்கு முதலில் பெண்வீட்டார் கொண்டுசெல்லல் போன்றவையும் இடம்பெறும். எம் கிராம வழக்கப்படி "மூடுபெட்டி"யில்தான் சீர்வரிசைகள் கொண்டு செல்லப்படும். தற்காலத்தில் இத்தனித்துவம் மறைந்துவிட்டது. (எனினும் அயல் கிராமங்களில் உ+ம்: வல்வெட்டித்துறைப் பகுதியில் தற்போதும் இது நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்) திருமணங்களும் வெளிக் கிராமங்கள், வெளி இடங்களில் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. வெளி உறவுகளை இணைத்துக் கொண்ட பெருமையுடன், கிராமத்தையும் விசாலித்து உறவுகொண்ட பொலிவுடன் திக்கம் இன்று காணப்படுகின்றமை காலத்தின் போக்கை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

## 1.7 சமூக நிறுவனங்கள்

சமூகத்தில் ஒற்றுமையையும் சமூகப்பற்றையும் ஏற்படுத்துவதில் சமூக நிறுவனங்களுக்கு பெரும் பங்குண்டு. அவ்வகையில், திக்கம் வாசிகசாலை, கிராம அபிவிருத்தி சங்கங்கள் போன்ற ஆரம்ப கால சமூக நிறுவனங்கள் சமூக ஒற்றுமையைப் பலப்படுத்தின. ஆனால் இன்று பல சமூக நிறுவனங்கள் கிராம வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருகின்றன. அவ்வகையில், திக்கம் மத்திய சனசமூக நிலையம்,

திக்கம் கலாசார மண்டபம், கிராம அபிவிருத்தி சபை, மாதர் சங்கம், திக்கம் விவசாய அமைப்பு சம்மேளனம், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம், திக்கம் கிராம அபிவிருத்திச் சங்கம், திக்கம் கமக்காரர் அமைப்பு, திக்கம் இந்து கலா மன்றம், திக்கம் இளைஞர் தமிழ் வளர்ச்சிக் கழகம் போன்ற பல சமூக நிறுவனங்கள் சமூக வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 1.8 சுமைதாங்கிகள்

சுமைதாங்கிகள் பற்றி குறிப்பிடுதலும் எம் தனித்துவச் சிறப்பை எடுத்துக்காட்டும் சிறந்த குறிகாட்டியாக போக்குவரத்து சாதனங்கள் மிகவும் அரிதாக காணப்பட்ட அக்காலத்தில் விவசாயப்பொருட்களை தலையில் கால்நடையாகவே சுமந்து சென்றனர் நம்மூத்தோர். அவ்விதம் சுமந்த களைப்பை இறக்கி வைக்கும் தாங்கியாக சுமைதாங்கி காணப்பட்டமை தனித்துவமானதாகும். திக்கம் சந்தி, சுறோம்படி வைரவர் கோவில், மக்கி கிடங்கு (தற்போது கூட்டுறவு சாலை அமைந்துள்ள இடம்) கறுத்ததெணி ஆகிய இடங்களில் இவை அமைந்திருந்ததாக ஞாபகம். இன்று இருந்த இடமே தெரியாமல் அழிந்து விட்டது. பழமையின் சின்னம் அது.

## 2.1 பொருளாதாரம்

எம் கிராமம் தன்னிறைவுப் பொருளாதாரம் மிக்கதாகக் காணப்பட்டமை மிகச் சிறப்பானதாகும். விவசாயத்தையும் சிறு குடிசைக் கைத்தொழிலையும் அடிப்படையாகக் கொண்ட எம்கிராம மக்களின் பொருளாதாரத்தில் மிருக வளர்ப்பு (ஆடு, மாடு, கோழி வளர்ப்பு) போன்றனவும் கணிசமான அளவு பங்கு வகித்தன என்பதும் மறப்பதற்கில்லை. ஆண்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர். பெண்கள் அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். எம் கிராமத்தின் புவியியல் சூழலுக்கு ஏற்றவகையில் உப உணவுப்பயிர்ச் செய்கையையும் சிறுதானியச் செய்கையையுமே மேற்கொண்டனர். குரக்கன், தினை, வெங்காயம், மிளகாய், பூசனி, எள், புகையிலை போன்ற பயிர்கள் மூலம் பெரும் வருமானம் ஈட்டினர். வீட்டுத்தோட்டங்கள் மூலம் தமது அன்றாடத் தேவைக்கான மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொண்டனர். வீட்டுத்தோட்டங்களில் பயிற்றை, பாகல், புடோல், தக்காளி, வெண்டி, கீரை, கத்தரி போன்ற பயிர்களை பயிரிட்டதன் மூலம் அன்றாட தம் தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன் ஆரோக்கியத்தையும் பேணி வந்தனர் எனலாம்.

இவ்விடத்தில் விவசாயத்தில் 'கூட்டிறைப்பு' என்ற எம் கிராம மக்களின் தனித்துவமான பண்பையும் சுட்டிக்காட்டுதல் பொருத்தமுடையதாகும். கூட்டிறைப்பின் மூலம் மனித வளத்தின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றனர் நம்மவர். தம்மிடம் உள்ள விளைச்சலின் ஒரு சிறு பகுதியை மற்றவர்களுக்குக் கொடுத்துதவும் தனிச்சிறப்பும் கிராமத்திற்குரிய தனித்துவமாகும்.

## 2.2 குடிசைக் கைத்தொழில்

ஆண்கள் விவசாயத்தில் ஈடுபட பெண்கள் சிறு குடிசைக் கைத்தொழில் மூலம் குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர். பெட்டி, பாய் இழைத்தல் போன்ற சிறுகுடிசைக் கைத்தொழிலின் விற்பனை நிலையமாக 'மாணான்டிச் சந்தை' கிராமத்தின் மத்தியில் விளங்கியது. எம் கிராமக் குடிசைக் கைத்தொழில் பொருட்களுக்கு கேள்வி(Demand) நிறையவே காணப்பட்டது. பெண்களும் மிகவும் முயற்சியுடையவர்களாகவும் தம் குடும்பத்தின் மீது அக்கறை கொண்டவர்களாகவும் காணப்பட்டமை பாராட்டப்படவேண்டிய அம்சமாகும்.

### 2.3 மிருக வளர்ப்பு

மிருக வளர்ப்பின் மூலம் கணிசமான அளவு வருமானத்தைப் பெற்றுக்கொண்டாலும், குடும்பத்தினரின் ஆரோக்கியத்திற்காகவும் முட்டை, பால் என்பவற்றைப் பயன்படுத்தினர். ஆடு, மாடுகளை வளர்த்து பயன்பெற்றதுடன் அதனை ஒரு சிறந்த பொழுதுபோக்காகவும் கருதினர். "ஆட்டுக்கடா"வை பணிக்கர் வேள்விக்கென வளர்ப்பது எம் கிராமத்தின் தனித்துவமாகும். கோயிலுக்காக வளர்க்கும் 'கடாவை' கண்ணும் கருத்துமாக வளர்ப்பதுடன் தங்கள் கௌரவமும் அதில் அடங்கியுள்ளதாகக் கருதுவர். தங்களுடைய கடா தலைக் கடாவாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதில் பெரும் அக்கறை உள்ளவர்களாக இருப்பார்கள் எம்மவர். மாலை நேரங்களில் ஆடு, மாடுகளுக்கான தீனி சேகரிப்பதில் தம் பொழுதைக் கழிப்பர். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. மாலை நேரங்களில் தொடர் நாடகங்களில் பொழுதைக் கழிப்பது கலாசாரமாக மாறிவிட்டது.

### 2.4 மீன்பிடித் தொழில்

கடற்கரையைச் சார்ந்து வசிக்கும் மக்களின் பிரதான தொழில் இதுவாகும். சிறந்த பண்டமாற்று முறை அக்காலத்தில் இருந்தது. தங்களிடமுள்ள மீனைக் கொடுத்து திணை, மிளகாய், வெங்காயம், ஒடியல் போன்றவற்றை விவசாயிகளிடமிருந்து பெற்றனர். மீன்பிடித் தொழிலில் பழைய மீன்பிடி முறைகளையே (படகு, கட்டுமரம்) பாவிப்பதனால் பெரும் இலாபத்தைப் பெறமுடியாதவர்களாய் இருந்தனர். ஆனால் தற்காலத்தில் றோலர், இயந்திரப் படகு போன்ற நவீன மீன்பிடி முறைகளால் பெரும் இலாபம் பெற்றுவருவது பாராட்டப்பட வேண்டிய அம்சமாக இருப்பதுடன் காலத்தின் போக்கிற்கேற்ப அவர்களும் மாறி வருவதையும் எடுத்துக் காட்டுகின்றது. குளிர்சாதனம் பொருத்திய வாகனங்கள் மூலம் வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்து வருவதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**2.5** திக்கம் வடிசாலையைப் பற்றியும் குறிப்பிடுதல் முக்கியமானதாகும். திக்கத்தின் பொருளாதார வளர்ச்சியில் இந்நிலையத்திற்கும் பெரும் பங்குண்டு என்பது மறப்பதற்கில்லை.

### நிறைவுரை

சிறந்த ஆசாரம், மனித நேயம் மிக்கவராக்கும் கூட்டுக்குடும்ப வாழ்க்கை, விருந்தோம்பல், தவிப்போருக்கு தங்க இடமளிக்கும் வீடமைப்பு, பிதிர்க்கடன் ஓம்பி நன்றி கூறும் பண்பு, நல் உணவுப் பழக்க முறைகள், உறவுகளை அனுசரிக்கும் திருமணங்கள், தன்னிறைவுப் பொருளாதார முறை, சிறந்த பொழுதுபோக்கு, பாரம்பரிய விளையாட்டு போன்ற பல தனித்துவப் பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளதுடன், அமைதியும் அழகும், அறநெறி வளர்த்திடும் கோவில்கள், பாடசாலைகள், பல சமூக நிறுவனங்கள் என மனித வாழ்விற்கு உகந்த சூழல் கொண்டது எம் கிராமம் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. இச்சூழல் நிலையானதாக அமைவதும், தனித்துவம் பேணுவதும் எம் இளம் சமுதாயத்தினரின் கையில் உள்ளது. இவற்றைப் பேணி வளர்ப்பதுடன் மேலும் பல் துறைகளிலும் வளர்ச்சி கண்டு செழிக்க வேண்டும், செழிக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க திக்கம்

வளர்க இளைஞர்பணி

ஓங்குக ஒற்றுமை

**திருமதி. இந்திராணி ஸ்ரீரங்கன் MED**

ஓய்வு நிலை பிரதி அதிபர்

# திக்கம்

'திக்கம்' என்னும் மங்கை நல்லாள்
பவனி வருகின்றாள்
ஓ! பவனி வருகின்றாள்
சாகரமென்னும் ஆடையுடுத்தி
தோட்டமென்னும் அங்கியணிந்து
வளைந்து நெளிந்து ஓடுகின்ற தார் வீதிகளாம் நீண்ட கேசத்திலே
சிறுவர் பள்ளி, பூங்காவென்னும் அழகிய மலர் சூடி
கல்விச்சாலையொடு கலாசாரமண்டபமெனும்
அழகிய நெற்றிப் பட்டமணிந்து
கூட்டுறவுக்கடையென்னும்
குங்குமத் திலகமிட்டு
மத்திய சனசமூக நிலைய மென்னும்
மார் பதக்கம் தான் தரித்து
பதினாறு கோவில்களாம் இரத்தினம்
பதித்த அணிகலன் அணிந்து
கிராம அபிவிருத்திச் சங்க மென்னும்
ஒட்டியாணம் பூண்டு
உபதபாலகமெனும் மெட்டியணிந்து
நோய் நொடியின்றி வாழ்வதற்காக
சுகாதார மையமென்னும் பாதரட்சையணிந்து
அங்காடி என்னும் கைப்பை சுமந்து
பைந்தொடியாள் பவனிவரும் அழகினைத்தான்
பார்த்தீர்களா? மானிடரே! சொல்லுங்கள்!

**திருமதி.தவமணிதேவி கணேசலிங்கம்,**
திக்கம்.

# திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வரலாறு

பெயர் :- திக்கம் மத்திய சனசமூக நிலையம்

முகவரி :- திக்கம், அல்வாய்

அதிகாரப்பிரதேசம் :- அல்வாய் மேற்கு J/396, அல்வாய் வடமேற்கு J/397 கிராமசேவையாளர் பிரிவுகளில் பெரும்பகுதியும், அல்வாய் வடமத்தி J/400, அல்வாய் வடக்கு J/398 கிராமசேவையாளர் பிரிவுகளில் ஒரு பகுதியும் ஆகும்.

பிரதேச செயலர் பிரிவு :- வடமராட்சி வடக்கு

பிரதேச சபை :- பருத்தித்துறை பிரதேச சபை

மாவட்டம் :- யாழ்ப்பாண மாவட்டம்

எமது கிராமத்தின் மேம்பாட்டுக்காக 1957ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் நூல் நிலையம் பல இடங்களில் கொட்டில்களில் இயங்க ஆரம்பித்தது. இதனைக் காலஞ் சென்ற திரு. பெரியதம்பி இராசரத்தினம், திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கம் ஆகியோர் வழிநடாத்திவந்தார்கள்.

1957ம் ஆண்டில் கொட்டில்களாக இயங்கி வந்த நூல்நிலையங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து "திக்கம் மத்திய சனசமூக நிலையம்" என்ற பெயரில் மடத்துவாசற்பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் கொட்டில் அமைத்து செயற்பட ஆரம்பித்தது.

1960-1961 ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து நூல்நிலையம் கிராம அபிவிருத்திச் சங்கம், மடத்துவாசல் பிள்ளையார் கோயில் மடம் போன்றவற்றில் இயங்கியது. அப்போதைய காலத்தில் நிலையத்தலைவர் திரு. கதிர்காமத்தம்பி தங்கராசா அவர்களின் வழிநடத்தலில் இயங்கிவந்த சனசமூக நிலையம் மடத்துவாசல் பிள்ளையார் கோவில் திருவிழாக்காலக் கடையை நடாத்தி அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு கோயிலில் தெற்கு வீதியில் நூல்நிலையத்துக்கான நிரந்தரக்கட்டடம் அமைப்பதற்கான அத்திபாரம் போடப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக கட்டடவேலைகள் ஆரம்ப

நிலையிலேயே இருந்துவிட்டது. அக்காலப் பிற்பகுதியில் திரு.ஆறுமுகம் பரஞ்சோதி அவர்களும் நூல் நிலையத்தை சிறப்பாக வழிநடத்தினார்.

1976ம் ஆண்டு நிலைய அங்கத்தவர்கள், ஊர் பிரமுகர்கள் ஒன்றுகூடி நூல்நிலையத்துக்கான நிரந்தரக்கட்டடத்தை பிரதான வீதியில் "மக்கிக் கிடங்கில் அமைப்பதே" பொருத்தமானது என்று தேர்வுசெய்து கட்டட அமைப்புக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர் - திரு.க.வா.தங்கராசா

செயலாளர் - திரு.ஆ.பொன்னையா

பொருளாளர் - திரு.க.தங்கராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து திரு.கந்தையா கணபதிப்பிள்ளை அவர்களால் அன்பளிப்பாக வழங்கிய காணியில் 1976ஆம் ஆண்டு ஆனிமாதம் 24ஆம் திகதி திரு.வல்லிபுரம் கதிர்காமத்தம்பி அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது.

இதனைத்தொடர்ந்து கட்டட வேலைகள் இளைஞர்களின் உதவியுடன் மிகவேகமாக நிறை வேற்றப்பட்டது. கட்டடத்தைக் கட்டிமுடிப்பதற்கு ஊர்மக்களிடமிருந்து பணமாகவும் பொருளாகவும் உதவிகள் பெறப்பட்டது. இத்துடன் கிராம அபிவிருத்திச்சங்க உதவியுடன் பத்தாயிரம் ரூபா நன்கொ டையாகப் பெறப்பட்டு கட்டடவேலைகள் பூரணமாக செய்துமுடிக்கப்பட்டு தேவையான தளபாடங் களும் செய்து முடிக்கப்பட்டு 1977ம் ஆண்டு தமிழ்ப் புதுவருடத்தினத்தன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அக்காலகட்டங்களில் வெளியாகிக் கொண்டிருந்த வீரகேசரி, தினகரன், தினபதி, ஈழநாடு, மித்திரன், டெயிலி நியூஸ் என்பவற்றையும் பெரும்பாலான இலங்கை இந்தியா சஞ்சி கைகளும் நிலையத்தின் வாசகர்களால் எடுக்கப்பட்டு வந்தது. இவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நிலையத்திடம் நிதிவசதி இருக்கவில்லை. இவற்றினை ஊர்மக்களிடமிருந்து நன் கொடையாகவே பெற்றிருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

1977ம் ஆண்டு புதிதாக பல உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர் அப்போது ஐந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தார்கள். தற்போது 2014ம் ஆண்டு ஐந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களும் 119 பல ஆயுட்கால அங்கத்தவர்களும் உள்ளனர்.

1977ம் ஆண்டு நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக்கொண்ட உறுப்பினர்கள் நிலையத்தின் நிதிநிலைமையை உயர்த்துவதற்கு அதிஷ்டலாபச்சீட்டுஇழுப்பு முயற்சி ஒன்றை மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டனர். இச்சீட்டுஇழுப்பின் மூலம் பெறப்பட்ட நிதியின் ஒரு பகுதியை யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையானவைப்பில் இட்டார்கள். மீதிப்பணத்தில் இரவல் பகுதிக்குத் தேவையான புத்தகங்கள் வாங்கப்பட்டது. அக்காலகட்டத்தில் இரவல் பகுதிக்கு பல ஆயிரம் ரூபா பெறுமதியான தமிழ் நூல்களை திரு.க. பிறைசூடி அவர்களும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான ஆங் கில நூல்களை திரு.க.வல்லிபுரம் அவர்களும் அன்பளிப்பாக வழங்கி இரவல் பகுதிக்கு பேருதவி வழங்கினார்கள். எமது சேவைகளில் பெரும்பகுதி கல்வி , நூலக சேவை , பாலர் பாடசாலை, குடி தண்ணீர்,இறுதி ஊர்வல மைய வண்டிச்சேவை, வாடகைச்சேவை, தொலைத்தொடர்புசேவை என விரிந்துசெல்லும் சேவைகள் திக்கம் வாழ்மக்களுக்கு பெரிதும் உதவுகின்றது.

1990 ஆம் ஆண்டு முதல் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு அன்பளிப்பும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் 2007ஆம் ஆண்டு தொடக்கம் எமது கிராமத்தில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில்

சித்தியெய்தி வருகின்ற மாணவர்களைக் கௌரவித்து வருகின்றோம். அது இன்று வளர்ச்சி கண்டு 2000ம் ஆண்டு தொடக்கம் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களுக்கு வகுப்பு ரீதியாக பேச்சு , பண்ணிசை , கோலம் போடுதல் , மாலை கட்டுதல் , எழுத்துப்பரீட்சை போன்ற போட்டிகளையும் நடாத்தி வருகின்றோம். அத்தோடு எமது கிராமத்தில் க.பொ.த(சா/த)பரீட்சையில் 5A க்கு மேல் எடுத்த மாணவர்களையும் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி அடைந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களையும் கௌரவித்து வருகின்றோம். இவற்றினை வழங்கிக்கௌரவிப்பதற்காக ஆண்டு தோறும் பரிசளிப்பு விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடி வருகின்றோம்.

இத்துடன் 2006ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 1 முதல் தரம் 5 வரை இலவச மாலை நேர வகுப்புக்களையும் தரம் - 1 முதல் தரம் - 8 வரை இலவச ஆங்கில வகுப்புக்களையும் நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. இலவச ஆங்கில வகுப்புக்கான நிதி உதவியை திரு.க. யோகானந்தன் (சுவிஸ்) அவர்கள் வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது பாலர் பாடசாலையைப் பொறுத்தமட்டில் 1995ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சிறப்பாக இயக்கி வருகின்றோம். ஆரம்ப காலத்தில் தனியார் வீடுகளிலும் 2000ம் ஆண்டு தொடக்கம் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் ஒரு பகுதியிலும் இயங்கி வந்தது. பாலர் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கவேண்டும் என்று காலத்திற்கு காலம் எடுக்கப்பட்ட முயற்சி 2005ம் ஆண்டு வெற்றி பெற்றது. இதனை அமைப்பதற்கான காணியினை எமது கிராமத்தைச்சேர்ந்த திரு.க.தங்கராசா JP , திரு.க.தர்மராசா. திரு.வே.விநாயகமூர்த்தி ஆகியோர் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

பாலர் பாடசாலை அமைப்பதற்கான நிதியை அரச அதிபர் திரு.K.கணேஸ் அவர்களின் பரிந்துரைக்கு அமைய "கியூமெடிக்கா" நிறுவனம் நிதி ஒதுக்கியது. இதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் 27/04/2005 அன்று Father sam இராஜசூரியர் அவர்களால் நாட்டப்பெற்றது. கட்டட வேலைகள் விரைவாக செய்து முடிக்கப்பட்டு 26/12/2005 கட்டடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்ப டைக்கப்பட்டது. இதற்கான சிறுவர் பூங்காவும் 2007ஆம் ஆண்டு அரச அதிபர் திரு.K.கணேஸ் அவர்களின் சிபாரிசுக்கு அமைய சொலிடாஸ் நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் செய்து முடிக்கப்பட்டு 06/02/2007 அன்று பாலர் பாடசாலையை திருமதி.ஸ்ரீரங்கன், இந்திராணி (பிரதி அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) அவர்களாலும் சிறுவர் பூங்கா சொலிடாஸ் நிறுவனத்தின் வெளிக்கள இணைப்பாளர் திரு.கிறீஸ்யங் அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டது. 01.07.2006ம் ஆண்டு தொடக்கம் திரு.திருமதி.மா.உதயகுமார் - சுவிஸ் அவர்களின் நிதி உதவியுடன் நடைபெற்று வருகின்றது. தற்போது 2014ம் ஆண்டு பாலர் பாடசாலை மேற்பிரிவு , கீழ்ப்பிரிவு என இரண்டாகப் பிரிக்கப்பட்டு கீழ்ப்பிரிவு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இயங்கி வருகின்றது. கீழ் பிரிவுக்கான கட்டடத்தை திருமதி.மகேந்திரன் சாந்தகுமாரி அவர்களால் (தலைவர், மனிதவள முகாமைத்துவம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) 2014/03/23 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும் தற்போது பாலர் பாடசாலைக்குப் பணிப்பாளராக ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி.ஸ்ரீரங்கன் இந்திராணி அவர்கள் சேவையாற்றி வருகின்றார். அறுபதுக்கு மேற்பட்ட மாணவர்களுடனும் ஐந்து ஆசிரியர்களுடனும் சிறப்பாக இயங்கி வருகின்றது. தற்போது பாலர் பாடசாலைக்கு என தனியான வெள்ளை, பச்சை நிறத்தி லான கொடியும் தனியான இலட்சனையும், தனியான கீதமும் அமையப்பெற்றுள்ளது. இவற்றினை பணிப்பாளர் அவர்களால் உருவாக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எமது சனசமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட திக்கம் கலாசார மண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழா 27/04/2002ஆம் ஆண்டு திரு.திருமதி.வே.கணேசமூர்த்தி அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.M.K.சிவாஜிலிங்கம் அவர்களால் நாட்டப்பெற்றது. இதற்கான

நிதிஉதவியை புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது கிராமமக்கள் வழங்கியிருந்தார்கள். இதன் திறப்பு விழா 23/10/2004ஆம் ஆண்டு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஆ.சிவசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இம்மண்டபத்தில் திருமண வைபவங்கள். பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் பிற வைபவங்கள் நடைபெற்று வருகின்றன.

திக்கம் மக்களின் நீண்டநாள் குறையாக இருந்துவந்த கூட்டுறவுக்கடைக்கு 27/04/2002ஆம் ஆண்டு பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு.N.சிவஞானசுந்தரம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது. இதற்கான நிதி உதவியை திரு.க.யோகானந்தன் - சுவிஸ் அவர்கள் வழங்கியிருந்தார். வேலைகள் வேகமாக செய்து முடிக்கப்பட்டு 18/01/2003ஆம் ஆண்டு திரு.க.யோகானந்தனின் அன்புத்தாய் திருமதி.கனகசபை சின்னத்தங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இது இன்று நல்லமுறையில் செயற்பட்டு வருகின்றது.

வாசிகசாலை 1980ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வாசகர்களின் நன்மைகருதி எட்டு மணிவரை செயற்பட்டு வந்தது. நூலக இரவல்பகுதி சனி , ஞாயிறு , புதன் ஆகிய தினங்களில் நான்கு மணிதொடக்கம் மாலை ஆறுமணி வரை செயற்பட்டு வருகின்றது.

வாசகர்களின் நன்மை கருதி நூலகசேவை தற்போது பெரிதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அதாவது நாவல்களுக்கான இரவல்பகுதி எனவும் மாணவர்களுக்கான இரவல்பகுதி எனவும் செயற்பட்டு வருகின்றது. இம்மாணவர் இரவல்பகுதி 2000ஆம் ஆண்டு புதிதாக ஊர்மக்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. இவைகள் யாவும் நல்லமுறையில் செயற்பட்டு வருகின்றது.

திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தால் 1999ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட விளையாட்டு முற்றத்திற்கு "நிறுத்தாடுவளை" உபகரணத்தை அன்பளிப்பாக வழங்கியிருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. எமது சனசமூக நிலையத்துடன் இணைந்து செயற்படும் பொது ஸ்தாபனங்கள் வருமாறு :-

1. திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்
2. திக்கம் கிராம அபிவிருத்திச்சங்கம்
3. திக்கம் இந்து கலாமன்றம்
4. திக்கம் இளைஞர் தமிழ் வளர்ச்சிக் கழகம்
5. திக்கம் இளைஞர் சங்கம்
6. திக்கம் சிறுவர் கழகம்
7. திக்கம் கமக்காரர் அமைப்பு
8. திக்கம் மாதர் சங்கம் போன்றனவாகும்.

மேலும் எமது சனசமூக நிலையத்தால் வெளிநாடுகளில் ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் வருமாறு :-

1. திக்கம் நலன்புரிச்சங்கம் - கனடா
2. திக்கம் நலன்புரிச்சங்கம் - சுவிஸ்
3. இலண்டன்வாழ் திக்கம் மக்கள் - இலண்டன்
4. திக்கம் நலன்புரிச்சங்கம் - பிரான்ஸ் போன்றனவாகும்.

1997/1998ம் ஆண்டு காலப்பகுதியில் எமது ஊர்மக்களின் நிதிப்பங்களிப்புடன் இறுதி ஊர்வல

மைய வண்டி ஒன்று செய்யப்பட்டுள்ளது. இது சனசமூக நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இது எமது ஊர்மக்களுக்கு பெரிதும் உதவி வருகின்றது. இதனை எமது கிராமத்தைச் சேர்ந்த திரு.த.குலவீரசிங்கம், திரு.மு.இரத்தினம், திரு.க. கனகரத்தினம், திரு.க.செல்லையா போன் றோர் முன்னின்று இதனை உருவாக்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது அதாவது 2014ஆம் ஆண்டு நூல் நிலையத்தின் கிழக்குப்பக்கமாக நூல்நிலைய விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதாவது இறுதி ஊர்வல மைய வண்டி தரிப்பிடம், புதினப் பத்திரிகைப் பகுதி, விளையாட்டுக்கழக அலுவலகம், மலசலகூடம் போன்றனவாகும். இதற்கான நிதி உதவியை திரு.க.யோகானந்தன் அவர்கள் வழங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது கிராமம் நிலத்தடி நீரை உவர்நீராகக் கொண்ட கிராமம் என்பதை அனைவரும் அறிந் திருப்பீர்கள். ஆனால் எமது சனசமூக நிலைய வளாகத்தில் 1998ம் ஆண்டு குழாய்க்கிணறு அமைக்கப்பட்ட பொழுது அது தெய்வாதீனமாக நன்னீராக வந்தது. இதனால் எமது கிராமத்தில் குடிதண்ணீர் பிரச்சினை ஓரளவு தீர்ந்துவிட்டதாகவே கூறவேண்டும். மேலும் 2007ஆம் ஆண்டு தண்ணீர்த்தாங்கி அமைக்கப்பட்டு அதன்மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்பதைக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். தற்போது 2014ம் ஆண்டு குடிநீர் விநியோகம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு அதாவது சனசமூக நிலைய வெளிப்பகுதிக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் 1973ஆம் ஆண்டு திக்கம் சந்தியில் பயணிகள் தங்குமிடம் ஒன்று சனசமூக நிலை யத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

எமது சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் திக்கம் இளைஞர் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1971ஆம் ஆண்டிலும் 16/09/1972ஆம் ஆண்டிலும் திக்கம் மடத்துவாசற் பிள்ளையார் மேற்கு வீதியில் மிகக் கோலாகலமாக முத்தமிழ் விழா ஒன்றை நடத்தியது. அன்றையதினம் முத்தமிழ் விழா சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அத்தோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதை விழா சிறப்புமலர் மூலம் அறியமுடிகின்றது.

1987ம் ஆண்டு வைகாசி மாதம் இடம்பெற்ற "ஒப்பரேசன் லிபரேசன்" இராணுவ நடவடிக்கையின் பொழுது எமது ஊரில் 26 பேர் உயிர் நீத்தார்கள். அவர்களின் ஓராண்டு நினைவு தினத்தை அனுஷ்டித்த பொழுது "தியாக தீபங்கள்" எனும் நூல் வெளியிடப்பட்டது. இறந்தவர்களின் படங்கள் மேடையில் வைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு விளக்கேற்றி வைக்கப்பட்டது. இது மடத்து வாசல் பிள்ளையார் முன்வீதியில் நடைபெற்றது. மேலும் 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறந்த வர்களின் 90ம் நாள் நினைவுகூறும் வகையில் அஞ்சலிக் கூட்டமும் கலைநிகழ்வுகளும் மடத்துவாசல் பிள்ளையார் கோயில் மேற்கு வீதியில் நடைபெற்றது. இவற்றினை எல்லாம் திக்கம் மத்திய சனசமூக நிலையம் திக்கம் வாழ்மக்களின் நிதிப்பங்களிப்புடன் நடத்தியது எனலாம்.

எமது சனசமூக நிலையத்தின் ஒத்துழைப்புடனும் திக்கம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் முயற்சியின் பயனாக கிராம மின்சார விநியோகத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம் அவர்களால் 30/04/1983 ஆம் ஆண்டு திக்கம் கிராமத்துக்கான மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் திக்கம் உப - அஞ்சல் அலுவலகம் 13/12/1979 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது என்பதைக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது சனசமூக நிலையத்தினால் எமது கிராமத்துக்கும் அயல் கிராமங்களுக்குமென ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைத்துத் தருமாறு அரச அதிபர் திரு.K.கணேஸ் அவர்களிடம் கோரிக்கை விட்டதன் பயனாக அவரின் பணிப்பின் பேரில் போரூட் நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் திரு.திருமதி.

செல்வராசா புஸ்பமலர் அவர்களும் திரு.க.செ.சு.சபாரத்தினம் அவர்களும் அன்பளிப்பாக வழங்கிய காணியில் 03/07/2006ஆம் ஆண்டு Dr.ஆ.கேதீஸ்வரன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 20.01.2008ஆம் ஆண்டு Dr.ஆ.கேதீஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

எமது கிராம அபிவிருத்திச்சங்க பழைய கட்டடம் முற்றாக அகற்றப்பட்டு "நிகோட்" நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் சனசமூக நிலையத்தின் பங்களிப்புடனும் 2004/2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. இதற்கான ஒதுக்கீடாக எட்டு இலட்சம் ரூபா கிடைக்கப்பெற்றது. இதற்கான நிதி காணாத சந்தர்ப்பத்தில் சனசமூக நிதி ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாவைப் பயன்படுத்தி கட்டட வேலைகள் பூரணமாக்கப்பட்டது. 2007ம் ஆண்டு திரு.கு.கஜேந்திரகுமார் (பா.உ) அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் கட்டடம் விரிவாக்கம் செய்யப்பட்டு தற்போது கிராமிய செயலகம் போல் செயற்பட்டு வருகின்றது. இதில் செயற்படும் அமைப்புக்கள் பின்வருமாறு :-

1. கிராம உத்தியோகத்தர் அலுவலகம் J/396
2. உப அஞ்சல் அலுவலகம் - திக்கம்
3. திக்கம் பாலர் பாடசாலை - கீழ்ப்பிரிவு
4. சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம் J/396
5. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் J/396
6. பாற்சாலை போன்றனவாகும்.

எமது சனசமூக நிலையத்தின் முயற்சியின் பயனாக அரச அதிபர் திரு.K.கணேஸ் அவர்களின் வழிகாட்டலின் பேரில் 2007ஆம் ஆண்டு U.N.D.P யின் நிதி ஒதுக்கீட்டில் மரக்கறிச்சந்தையும் மீன் சந்தையும் அமைக்கப்பெற்றது. தற்போது அதாவது 2013ஆம் ஆண்டு "நெல்சிப்" திட்டத்தின் கீழ் சுமார் இரண்டரைக்கோடி ரூபா செலவில் கடைத்தொகுதி, புதிய மரக்கறிச்சந்தை, திருத்தியமைக்கப்பட்ட மீன்சந்தை திருத்தியமைக்கப்பட்ட இறைச்சிக்கடைகள் என்பன கட்டிமுடிக்கப்பட்டு நல்ல அழகிய சந்தையாகக் காட்சி அளிக்கின்றது.

எமது சனசமூக நிலையத்தின் ஒரு அங்கமான திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை நோக்குகையில், எமது கழகமானது 1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் தோற்றம்பெற்றது எனலாம். 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் விளையாட்டை சிறப்பாக விளையாடி அனைவரினதும் பாராட்டை பெற்றது எனலாம். 1975ஆம் ஆண்டு வைகாசி மாதம் இடம்பெற்ற துரதிஷ்டமான ஒரு நிகழ்வான திரு.ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் அவர்களின் அகாலமரணத்தைத் தொடர்ந்து பின்னடைவிற்கு உள்ளானது என்றே கூறவேண்டும். இதற்கு இன்னோர் காரணமும் உண்டு. எமது ஊரில் இருந்த விளையாட்டுத்திடல் 1977ஆம் ஆண்டு வடிசாலை அமைப்பதற்காக அப்போதைய பருத்தித்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம் அவர்களும் உடுப்பிட்டித்தொகுதி பாராளு மன்ற உறுப்பினர் திரு.த.இராசலிங்கம் அவர்களும் முயற்சிசெய்து அம்முயற்சியில் வெற்றியும் கண்டனர். பின் 1980களின் பின்னர்தான் விளையாட்டுக்களில் இளைஞர்கள் தமது முழுத்திறன் களையும் உள்ளக, வெளியக விளையாட்டுக்களிலும் காட்டத்தொடங்கினர். குறிப்பாக மென்பந்தாட்டம், உதை பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே, சதுரங்கம், பற்மின்ரன், கரம் போன்ற விளையாட்டுக்களில் யாழ் மாவட்டத்தில் முன்னணியில் திகழ்வதைக் காணமுடிகின்றது.

மேலும் எமது கழகமானது 1961ஆம் ஆண்டு தொடக்கம் கரப்பந்தாட்டப்போட்டியை நடாத்தி வருகி ன்றது. இதற்கு "ஸ்ரீகோபாலன்" வெற்றிக்கேடயமும், "குகதாஸ்" வெற்றிக்கேடயமும் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் 1991ம் ஆண்டு திக்கம் நலன்புரிச்சங்கம் - சுவிஸ் நிதி உதவியுடன் திக்கம்

வயல்வெளியில் நல்லதொரு விளையாட்டு மைதானமாகத் திகழ்வதோடு பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

1981ஆம் ஆண்டு சிங்கர் - சிதம்பரப்பிள்ளை அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் திக்கம் மயானம் அமைப்பதற்கான நிதி உதவியை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரின் நிதி ஒதுக் கீட்டில் மயானத்துக்கான மதில் , கிணறு , கடல் அரிப்பில் இருந்து பாதுகாப்பதற்கான அணைக்கட்டு போன்றன அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் 1985ம் ஆண்டு இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து சுற்றுமதில், கடலரிப்பு அணை, மடம் போன்றன அழிக்கப்பட்டன. பின்னர் 2002ம் ஆண்டு சனசமூக நிலையத்தால் இலண்டன் வாழ் திக்கம் மக்களின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது. 2004ஆம் ஆண்டு சுனாமி பேரலையால் அழிந்துபோய் கடலரிப்புக்கு உள்ளாகி வந்த நிலைமையை அடுத்து 2011ஆம் ஆண்டு சனசமூக நிலையத்தால் புனரமைப்புச்செய்யப்பட்டு இன்று நல்லதொரு மயானமாகத் திகழ்ந்து வருகின்றது.

தற்பொழுது 2014ஆம் ஆண்டு நூல் நிலையத்தை விஸ்தரிக்கும் நோக்கில் நூல்நிலையத்தில் கிழக்குப்பக்கமாக கட்டடம் அமைக்கப்பட்டு அதனுள் இறுதி ஊர்வல மைய வண்டி தரிப்பிடம் (தற்காலிக தரிப்பிடம்), புதினப்பத்திரிகைப்பகுதி , விளையாட்டுக்கழக அலுவலகம் போன்றன இயங்கி வருகின்றது. எமது சனசமூக நிலையம் எதிர்நோக்கிய இடர்பாடுகளை ஆராய்வோமானால் 1985ம் ஆண்டு புரட்டாதி 2ம் திகதி திக்கம் பொதுமயானத்தில் நடந்த பாரிய கண்ணி வெடித்தாக்குதலை அடுத்து பொது மயானம் அழிக்கப்பட்டதோடு, இதனையடுத்து இடம்பெற்ற கலவரத்தின்போது சனசமூக நிலைய உடைமைகள் யாவும் எரிக்கப்பட்டது. கட்டடத்திற்கு சிறிய சேதம் ஏற்பட்டது. ஆனால் பாதிப்பு இல்லாமல் தப்பியமை அதிஷ்டம் என்றுதான் கூறவேண்டும். பின்னர் 1987ஆம் ஆண்டு "ஒப்பரேசன் லிபரேசன்" இராணுவ நடவடிக்கையின்போது எமது சனசமூக நிலையம் விமானத்தாக்குதலுக்கு உள்ளாகி பாரிய சேதம் ஏற்பட்டது. இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டது. பின்னர் ஏற்பட்ட இடைவெளியில் சனசமூக நிலையம் மக்கள் பங்களிப்புடன் திருத்தி அமைக்கப்பட்டது. 1988ம் ஆண்டு இந்தியா இராணுவம் நிலைகொண்டிருந்த வேளையில் நூல்நிலையத்துக்குள் திடீரென வந்த இராணுவம் நூல்நிலையத்தைச் சோதனையிட முயன்றபோது இடம்பெற்ற குண்டுவெடிப்பினால் சனசமூகநிலையமே அழிந்துவிட்டது என்றே கூறவேண்டும். இதன்போது அன்றைய செயலாளர் திரு. கி.பிறேமதாஸ் படுகாயம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்பின்னர் 1995ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது எமது ஊரைவிட்டு மக்கள் வெளியேறியதையடுத்து சனசமூக நிலையம் உடைக்கப்பட்டு அதன் தளபாடங்களும் பொருட்களும் சூறையாடப்பட்டது. அதன் பின்னர் ஊர்மக்கள் மீண்டும் குடியமர்ந்தபோது சனசமூகநிலையம் மீளவும் தவழ ஆரம்பித்தது.

தனது ஐம்பத்து ஏழு வருடங்களில் சனசமூகநிலையம் எத்தனையோ சோதனை, வேதனை நடவடிக்கைகளுக்கு மத்தியில் இன்று சாதனை படைத்து வீறுநடை போட்டு கிராம அபிவிருத்திக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருவதை உங்கள் கண்முன்னே காணமுடியும்.

"ஓங்குக ஒற்றுமை

வளர்க சனசமூக நிலையம்"

நிர்வாகம்
திக்கம் மத்திய சனசமூக நிலையம்
திக்கம், அல்வாய்,2014

# திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் ஒருபார்வை

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் கடந்துவந்த பாதையினையும் அதன் வளர்ச்சிப் படிகளினையும், கழகத்தின் வளர்ச்சிக்கு உழைத்த எமது ஊரின் மைந்தர்களையும் சகலரும் அறியவேண்டும். குறிப்பாக தற்போதைய, எதிர்கால சந்ததியினர் கழகம் பற்றிய வரலாற்றை அறிவதன்மூலம் எமது கழகத்தை சமூகத் திற்குப் பொருத்தப்பாடுடையதும், அனைவரும் வழிகாட்டும் அமைப்பாகவும் நீண்டு நிலைத்திருக்கக்கூடியதுமான சேவையாற்றக்கூடிய அமைப்பாக வைத்திருக்கமுடியும். இக்கழகத்தின் வளர்ச்சியானது எமது கிராமத்தில் ஆளுமையுடைய, சகிப்புத்தன்மை யுடைய மகிழ்ச்சிகரமான வாழ்க்கையினை வாழ்வதற்குரிய இளைஞர்களை உருவாக் குவதற்கு தொடர்ந்து வழி செய்யவேண்டும் என்பதுடன் அக்குறிக்கோளினை நிறை வேற்ற அனைவரும் தொடர்ந்து பாடுபடவேண்டும் என்பதோடு கழகத்தில் தலை வராகவும் செயலாளராகவும் பங்காற்ற சந்தர்ப்பம் கிடைத்ததினால் அதில் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும், நீண்டதொருகாலம் கழகத்துடன் தொடர்பு இருப்ப தனால் என்னால் திரட்டப்பட்ட தகவல்களையும் கழக மூத்த உறுப்பினர்களுடன் கலந்து ரையாடியும் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பார்வை தொடர்கிறது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமானது திக்கம் மத்திய சனசமூக நிலை யத்தின் கீழ் இயங்கும் சட்டரீதியாகப் பதிவுசெய்யப்பட்ட அமைப்பாகும். ஊரின் பெயரைத் தேசமெங்கும் எடுத்துச்செல்லும் இக்கழகமானது 1950களில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது எனலாம். அக்காலப்பகுதிகளில் இளைஞர்கள் தாங்கள் குடியிருந்த இடங்களிலே "திக்கம் விளையாட்டுக்கழகம்" என்னும் பெயரில் விளையாட்டுக்களில் ஈடுபட்டு வந்தனர்.

மடத்துவாசல் பிள்ளையார் கோயிலைச் சுற்றியிருந்தவர்கள் ஒரு குழுவாகவும், துளாய் பிள்ளையாரைச் சேர்ந்தவர்கள் ஒரு குழுவாகவும், ஒரு குழுவாகவும்,

பணிக்கர் கோயிலடியைச் சேர்ந்தவர்கள் ஒரு குழுவாகவும், நீர்வளைப் பிள்ளையார் கோயிலைச் சுற்றியிருந்தவர்கள் ஒரு குழுவாகவும் விளையாட்டுக்களில் ஈடுபட்டு தங்கள் திறன்களை வளர்த்தும், திறமைகளை வெளிக்காட்டி வந்ததையும் அறியக்கூடியதாக இருந்தது.

எனினும் காலப்போக்கில் "திக்கம் விளையாட்டுக் கழகத்தினை" ஊருக்குப் பொதுவானதாகவும் எல்லோரும் சேர்ந்து இயங்கவேண்டும், ஒற்றுமை பேணப்படவேண்டும் எனும்நோக்கில் ஊரின் அக்காலத்து முன்னோடிகள் அனைவரையும் இணைத்து தற்போது காணப்படும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் எனும் கழகப் பெயரை அமைத்து அனைவரும் ஒரு குடையின் கீழ்க்கொண்டு வந்தனர்.

அதனைத் தொடர்ந்து எமது கழகமானது உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் (ஒவர் கேம்), தாச்சி போட்டிகளில் ஈடுபடத் தொடங்கியது.

1963, 1964 காலப்பகுதியில் மறைந்த திரு.க. தங்கராசா அவர்கள் கரப்பந்தாட்டப்போட்டிகளை ஒழுங்குபடுத்தி திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து சிறப்பானமுறையில் போட்டிகளினை நடாத்தியமை அறியக்கூடியதாக உள்ளது. இவர் சிறந்த கரப்பந்தாட்ட நடுவராகவும் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இக்காலப்பகுதியில் எமது கழகத்தின் உதைபந்தாட்டம் மிகவும் நல்ல நிலையில் காணப்பட்டதும் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களைக் கொண்டதாகவும் விளங்கியது. எமது கழக வீரர்கள் வடமராட்சியின் பிறகழகங்களினைப் பிரதிநிதிப்படுத்தியும் தங்கள் திறமைகளை வெளிக் காட்டியிருந்தனர்.

அக்காலப்பகுதிகளில் எமது கழகமானது "தாச்சி" போட்டியிலும் சிறந்த அணியாக மிளிர்ந்ததை அறியக்கூடியதாக இருந்தது.

1969, 1970 காலப்பகுதிகளில் எமது கழகமானது "சோளங்கன்" விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டம், உதைப்பந்தாட்ட போட்டிகளின் இறுதியாட்டங்களிலும், 1970களில் ஆத்தியடியில் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்டப் போட்டிகளில் இறுதியாட்டங்களில் கலந்துகொண்டமையினையும் குறிப்பிடமுடியும். அதேபோன்று "பொலிஸ்" நடாத்திய தாச்சிப் போட்டிகளில் தொடர்ச்சியாக முதலாம் இடத்தைப்பெற்றும் சாதனைபடைத்து வந்தது.

இக்காலப்பகுதிகளில் எமது கழகத்தை வளர்த்தெடுப்பதிலும், சிறந்த வீரர்களாகவும் திகழ்ந்த வர்களை நினைவுகூறுவது மிகவும் பொருத்தமானதாகும். அவ்வரிசையில் அமரர் க. தங்கராசா திரு. குலவீரசிங்கம், திரு.ந.நவரட்ணராஜா, திரு. சின்னத்தம்பி, அமரர் பரிபாலின, அமரர் ஜெகதீஸ் வரன், அமரர் பாலகிருஸ்ணன், திரு. தவராஜா, திரு.மு. இரட்ணம், அமரர் இராசதுரை, அமரர் அன்னலிங்கம், அமரர் மு. பாலசுந்தரம், அமரர் ஜெயச்சந்திரன், திரு. வர்ணகுலவீரசிங்கம், திரு. து. ஸ்ரீகந்தராசா, திரு.க.கதிர்காமத்தம்பி, அமரர் மாணிக்கவாசகர், அமரர். க. மயில்வாகனன், திரு. க. பிறைசூடி போன்றவர்களைக் குறிப்பிடமுடியும். (சிலரின் பெயர்கள் தவறவிடப்பட்டிருக்கலாம்)

பின் திரு.கி. அமிர்தலிங்கம், திரு. க.மகேஸ்வரன், திரு.ச. ஸ்ரீராமச்சந்திரன், திரு.ஆ.ஞான ரட்ணம், திரு.க. ஜெயக்குமார், திரு.வ.சபேஸ்குமார் போன்றவர்கள் கழகத்தில் விளையாட்டு செயற் பாடுகளில் முன்னோடிகளாகவும், சிறந்த வீரர்களாகவும் திகழ்ந்தனர்.

எமது கழகத்திற்கென மைதானம் திக்கம் மானாண்டி சந்தைக்கு அருகாமையில் தற்போதைய "திக்கம் வடிசாலை" அமைந்திருக்கும் இடத்தில் அமரர் சச்சிதானந்தன் அவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதில் கழக வீரர்கள் பயிற்சிகளினை பெற்றுவந்தனர். நாளடைவில் அவ் மைதானம் வடிசாலைக்கு வழங்கப்பட்டதை தொடர்ந்து மைதானம் ஒன்று இல்லாதநிலை காணப்பட்டது. 1970க்கு பிற்பட்ட காலப்பகுதியில் கழக வீரர் அமரர் ஜெகதீஸ்வரன் அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து விளையாட்டுச் செயற்பாடுகள் மந்தமடையத் தொடங்கியது.

எமது கழக வீரர்கள் உதைபந்தாட்டப் போட்டிகளைத் தவிர்த்து கரப்பந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுகளில் ஈடுபடத் தொடங்கினர். தங்களின் பொழுதுபோக்கிற்காகவும், மகிழ்வுக்குமாக விளையாட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

இக்காலப்பகுதிகளில் சினேகபூர்வ கிரிக்கெட் போட்டிகளிலும் சில சுற்றுப்போட்டிகளிலும் கழகம் பங்குபற்றி வந்தன. நாட்டின் அசாதாரண நிலையும் கழக செயற்பாடுகளை மட்டுப்படுத்தியதுடன், பலர் வெளிநாடுகளிற்குச் செல்லவும் பின்னடைவைச் சந்தித்தது.

இதனைத் தொடர்ந்து 1989ஆம் ஆண்டளவில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் மீளவும் புனரமைக்கப்பட்டது. இன்றைய திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் அபரிதமான வளர்ச்சிக்கு வித்திட்டதாகவே புனரமைப்பு காணப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் கழகமானது தன்னை ஓர் முற்றுமுழுதான அமைப்புக்குரிய சகல அம்சங்களையும் கொண்டதாகவும், வசதிகளை ஏற்படுத்தவும் உரிய வேலைத்திட்டங்களை மேற் கொண்டது. அதில் முதலாவது நிதிரீதியாகப் பலப்படுத்துவது, இரண்டாவது தரமான விளையாட்டு வீரர்களை உருவாக்குவது, எமக்கென விளையாட்டு மைதானம் அமைப்பது, சகல இளைஞர் களையும் உள்ளடக்கி சகல விளையாட்டுக்களிலும் பங்கெடுப்பது, எமது கிராம இளைஞர் யுவதி களின் திறன்களை வெளிக்கொணர்வது போன்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய வேலைத்திட்டங்களை மேற்கொண்டது.

நிதி ரீதியாக வலுவான நிலையை அடைவதற்கு திருவிழா கடை விளையாட்டுக் கழகத்திற்காக அமைக்கப்பட்டது. வெளிநாட்டு நிதிகள் பெறுவதற்குரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வசதிகள் உடனடியாகக் கிடைத்தவுடன் பயிற்சிகள் மூலம், கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப் பந்தாட்டம் (செற்றப்), எல்லே, எறிபந்து, வலைப்பந்து, மெய்வல்லுநர் அணிகள் உருவாக்கம்பெற்றது. கழகத்திற்கென புதிய யாப்பு உருவாக்கப்பட்டது. விளையாட்டுத் திணைக்களத்தில் தம்மை ஒரு சட்ட ரீதியான அமைப்பாக பதிவு செய்துகொண்டது. அதனைத் தொடர்ந்து உதைப்பந்தாட்ட, இலங்கை அமைச்சு மெய்வல்லுநர் சங்கம், கரப்பந்தாட்ட சங்கம், வலைப்பந்தாட்ட சங்கம் என்பவற்றுடன் தன்னை இணைத்து உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து சகலவிதமான போட்டிகளிலும் பங்குபற்றத் தொடங்கியது. பல திறமையான இளம் வீரர்கள் இனங்காணப்பட்டனர்.

கழகத்தின் துடுப்பாட்டம், எல்லே அணிகள் பலம் வாய்ந்தவையாக உருவாகின. வடமராட்சிப் பிரதேசத்தில் சிறந்த அணியாக மிளிர்ந்த துடுப்பாட்ட அணி பல போட்டிகளில் முதன்மை நிலையை அடைந்தது. பருத்தித்துறை பிரதேச செயலக போட்டிகளில் ஆண்கள், பெண்கள் கொண்ட மெய்வன்மை அணியும், ஏனைய விளையாட்டு அணிகளும் பங்குபற்றி பிரதேச செயலக

மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற கழகமாகத் தெரிவுசெய்யப்பட்டது. இந் நிகழ்வு எமது கிராமத்தின் விளையாட்டினை விருத்தி செய்வதற்கு மிகவும் உந்து சக்தியாக அமைந்தது எனலாம். போட்டிகளில் பங்குபற்றலுடன் நிற்காது 1991ஆம் ஆண்டளவில் வடமராட்சி ரீதியில் துடுப்பாட்டம், கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளினை கழகம் நடத்தியது. மைதானம் இன்மை காரணமாக அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தின் மைதானத்தில் துடுப்பாட்ட போட்டியினையும், மடத்துவாசல் பிள்ளையார் கோயில் வீதியில் கரப்பந்தாட்டப் போட்டியினையும் வெற்றிகரமாக நடத்தினர். எனினும் மைதானம் இல்லாத குறை சில விளைவுகளையும், தடைகளையும் கழக வளர்ச்சியில் ஏற்படுத்தியது. இந்நிகழ்வு எமக்கு உடனடி மைதான தேவையை வலியுறுத்தி நின்றது.

எமது கழக உறுப்பினர்களால் மைதானம் உருவாக்கும் இடம் தேர்வுசெய்யும் நடவடிக்கை களில் ஈடுபட்டனர். இறுதியில் தற்போது மைதானமாகத் திகழும் இடம் தெரிவுசெய்யப்பட்டு அதன் நிலஉரிமையாளரான திரு. சிவசாமிஐயர் அவர்களிடம் தொடர்பு கொண்டோம். ஊர்ப்பற்றாளரான ஐயா அவர்கள் எம்மிடம் பாசம் கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவராகவும் இருந்ததனால் உடனடியாக மகிழ்வுடன் மைதான காணியைத் தந்துதவினார். மைதானத்தை விஸ்தரிப்பதற்கான மற்றைய நிலசொந்தக்காரரான திரு. செல்வராஜா குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு எமது நிலைமையை கூறி அவரின் சம்மதத்துடன் இரவோடு இரவாக மைதானம் உருவாக்கும் வேலை ஆரம்பமாகியது.

இவ்விடம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தினை மறுசீரமைப்புக்கும். அசாத்திய வளர்ச்சிக்கு உதவியவர்களை நினைவுகூருவது மிகவும் பொருத்தமானதாகும். அந்தவகையில் திரு. இ. ராஜசீலன், திரு. ஆ. சுதர்சன், திரு.யோ. ராஜ்மோகன், திரு.கு. சுபாஸ், திரு.இ. முருகரூபன், திரு.க.சுதாஸ், திரு.கு.கிருபானந்தன், க. முகுந்தன், திரு.யோ.ராஜ்காந், திரு.சி. தயாபரன், திரு. வ. திருக்குமரன், திரு.சி. சிவகுமார், திரு.சி. முருகதாஸ், திரு.இ. சுதர்சன், திரு.சி.திருவாதரன் போன்றவர் களையும் அக்கால சிறுவர்களாக இருந்தும் எமக்கு உதவிய திரு.ச. சாந்தரூபன், திரு.பா. தணிகைவேல், திரு.ஆ.ரூபகாந்தன் போன்றவர்களைக் குறிப்பிடமுடியும். பெண்களைப் பொறுத்தவரையில் திருமதி க. அன்பரசி அவர்களின் ஒத்துழைப்பு முக்கியமானது. மேலும் மைதான விஸ்தரிப்புக்களான நிதியை முதன்முதல் தந்துதவிய சுவிஸ் நாட்டு திக்கம் வாழ்மக்கள் நன்றிக் குரியவர்களே. மைதான வேலை முடிவடைந்ததும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமானது பாரியளவான உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் சுற்றுப்போட்டிகளை ஒழுங்குசெய்து நடத்தியது. வடமராட்சி பிரதேச பல அணிகள் பங்குபற்றி தமது ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர். இச்சுற்றுப் போட்டிகள் தொடர்ச்சியாக 4 வருடங்கள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதிகளில் உதைப்பந்தாட்ட அணிக்கு சீருடை தேவை அவசியமாகியது. அப்பிரச்சி னையான காலப்பகுதியில் நாம் கொழும்பில் இருந்த எமது முன்னாள் சிறந்த உதைப்பந்தாட்ட வீரரும் திக்கம் கிராம பற்றாளருமான திரு.சி. நவரட்ணராஜா அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி தற்போது காணப்படும் எமது கழகத்தின் பச்சை + வெள்ளை சேர்ந்த சீருடை பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்வுடன் எமது கிராமத்தின் அடையாளம் பச்சை, வெள்ளையாக மாற்றமடைந்தது. தற்போது திக்கம் பாலர் பாடசாலை கொடி, மாணவர் கழுத்துப்பட்டி, திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர் கழுத்துப்பட்டி என அனைத்தும் உருவாகியது எமது உதைப்பந்தாட்ட சீருடையுடன் என்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

அக்காலப்பகுதியில் எமது ஒழுங்கமைப்பு வீரர்களின் ஒழுக்கம், நடத்தை பண்புகள் நல்ல நிலையில் இருந்ததனால் பல விளையாட்டுத்துறை அமைப்புக்கள் எம்மை நாடத் தொடங்கின. வடமராட்சி வலய பாடசாலை உதைபந்தாட்ட, துடுப்பாட்ட போட்டிகள், பிரதேச செயலக போட்டிகள், இளைஞர் சேவை மன்றப்போட்டிகள் மாவட்ட செயலக போட்டிகள், பருத்தித்துறை உதைப்பந்தாட்டப் போட்டிகள், யாழ். பல்கலைக்கழகம், மாவட்ட செயலகம் இணைந்து நடாத்திய மாவட்ட மட்ட ஹொக்கி போட்டிகள் போன்றவை தொடர்ச்சியாக நடந்தேறியமை மிகவும் குறிப்பிடத்தக்கது.

1996ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் கழக செயற்பாடுகள் மந்தமடையத் தொடங்கியது. எனினும் 1999ஆம் ஆண்டளவில் மீண்டும் செயற்பாடுகள் ஆரம்பமாகியது. கழகம் பல போட்டி களில் பங்குபற்றியது. அத்தோடு இருந்த தளமுகாம், சிரமமானவேலைகள் என சமூக செயற்பாடுக ளிலும் தீவிரமாகச் செயற்பட்டு வந்தது. 2000ஆம் ஆண்டு பிற்பகுதியில் கழக செயற்பாடுகள் சற்றுக் குறைவடைந்து ஒரு சில விளையாட்டுக்களில் கழகம் ஈடுபடத் தொடங்கி தற்போது உதைபந்தாட்டத் தில் மாத்திரம் ஈடுபடுவது சற்று கவலைக்குரியது.

எனினும் தற்போது உதைபந்தாட்ட அணி மிகவும் பலம் வாய்ந்ததாக மட்டுமன்றி வடமராட்சி, பிரதேசம் தவிர்ந்து மாவட்டம், மாகாணம் என போட்டிகளில் பங்குபற்றுவதுடன் பல வெற்றிக் கிண்ணங்களைச் சுவீகரிப்பதும், தினசரி பத்திரிகைகளில் கழகத்தின் பெயர் தினம்தினம் வெளிவருவது எமது கிராமத்தின் பெயரை உலகறியச் செய்து கொண்டிருக்கும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமானது தொடர்ச்சியாக வலுவுள்ளதாகவும், சமூகத்திற்கு முன்மாதிரியான அமைப்பாகவும் திகழவேண்டும் என வாழ்த்தி அதன் புகழ் தேசமெங்கும் பரவ இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

(நீண்ட வரலாற்றை மிகவும் சுருக்கமாக எழுதமுற்பட்டதால் பல சம்பவங்களும், வளர்ச்சிக்கு உழைத்த மைந்தர்கள் பெயர்களும் விடுபட்டிருக்கும். அவற்றை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்)

**திரு.இ. ராஜசீலன்**
முன்னாள் தலைவர்,
திக்கம் இ.வி.க.
ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி

# யா/ திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய வரலாறு

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கிலேய ஆட்சி நிலவிய காலமாகும். ஆங்கிலேயர் கல்வித்துறையை முன்னேற்றுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். இங்குவந்த மிசனரிமார்கள் (மதப் பிரசாரகர்) தம் சமயப் பிரசாரம், மத மாற்றம் ஆகிய முயற்சிகளோடு கல்விப் பணியிலும் இறங்கினர். கிறிஸ்தவ கல்வி மேம்பாட்டிற்காகவும் உழைத்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவம் அமெரிக்கன்மிஷன், மெதடிஸ்தமிஷன் ஆகியன பெரும்செல்வாக்கைச் செலுத்தின. வடமராட்சிப் பகுதியில் இம்மிஷன்களால் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு நிறுவப்பட்ட பாடசாலைகளில் ஒன்று திக்கம் மெதடிஸ்தமிஷன் பாடசாலையாகும். இப்பாடசாலை இக்கிராமத்தில் திக்கம் சந்தியிலிருந்து நெல்லியடி நோக்கிச் செல்லும் வீதியோரத்தில் வீதியின் கிழக்குப்பக்கமாக "கிரிச்சியால்" என்னும் காணியில் மெதடிஸ்தமிஷனால் நிறுவப்பட்டது. இப்பாடசாலை 1840ஆம் ஆண்டளவில் நிறுவப்பட்டதாக ஊகிக்கமுடிகின்றது. இப்பாடசாலை ஆரம்பகல்வி புகட்டும் பாடசாலையாகும். இத்திக்கம் மெதடிஸ்தமிஷன் பாடசாலையே இன்று யா/ திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பக் கல்வியை வழங்கும் பாடசாலையாக விளங்குகிறது. 170 வருடங்களுக்கு மேற்பட்டகாலப் பழைமைவாய்ந்த பாடசாலை என அறியக் கூடியதாகவுள்ளது.

இப்பாடசாலை வடமராட்சிவடக்குப் பிரதேச செயலர் பிரிவில் அல்வாய் மேற்கு, அல்வாய் வடமேற்கு கிராமசேவை அலுவலர்கள் உள்ளிட்ட கிராமப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறைக்குச் செல்லும் கடலோர PWD பாதையில் 3 மைல் தூரத்தில் உள்ள திக்கம் சந்தியிலிருந்து நெல்லியடிக்குச் செல்லும் PWD பாதையில் ஏறத்தாழ அரை மைல்தூரத்தில் மேற்படி பாதை ஓரத்தில் அமைந்துள்ளது.

திக்கம் மெதடிஸ்தமிஷன் பாடசாலை தொடங்கிய காலத்திலிருந்து 1955ஆம் ஆண்டுவரை இக்கிரா மத்துப் பிள்ளைகளுக்கும் அயற்கிராமத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியை வழங்கும் நிறுவனமாக விளங்கியது. பாடசாலையின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருப்பவர் அதிபரே. அப் பொழுது இங்கு அதிபர் தங்கியிருந்து பாடசாலை அபிவிருத்தியை மேற்கொள்ளக்கூடியதாக அதிபர் விடுதியும் பாடசாலைவளாகத்தினுள் அமைந்திருந்தது. கிறிஸ்தவ சமயத்தவரே அதிபர்களாகக் கடமையாற்றினர். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்றன. அக்காலத்தில் ஐந்தாம் தரம் கற்றுத்தேறிய மாணவர் பருத்தித்துறை நகர்ப்புறப் பாடசாலையாக விளங்கும் ஹாட்லிக் கல்லூ ரியிலும், மெதடிஸ்த பெண்கள் பாடசாலையிலும் கல்வியைத் தொடர்ந்து கற்றுள்ளனர். இப்பாட சாலை தொடங்கிய காலத்திலிருந்து 1961ஆம் ஆண்டுவரை கிறிஸ்தவ முகாமைத்துவத்தின் கீழ் இயங்கியது.1962ம் ஆண்டில் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு அதிபர் நிர்வாகக் கட்டமைப் பின்கீழ் கொண்டுவரப்பட்டு அரச பாடசாலையாக இயங்கத் தொடங்கியது.

திக்கம் மெதடிஸ்தமிஷன் பாடசாலை கிறிஸ்தவமிஷனினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாக ஒரு கிறிஸ்தவ பாடசாலையாக இருந்தமையால் இங்கு கல்விகற்ற மாணவர்களில் 95% வீதமானோர் சைவசமயத்தவராக இருந்தும் சைவசமயம் இங்கு கற்பிக்கப்படவில்லை. கிறிஸ்தவ சமயமும், கிறிஸ்தவ பழக்கவழக்கங்களுமே பின்பற்றப்பட்டன.

இத்தகைய நிலைமை எமது கிராமத்தில் மட்டுமல்ல குடாநாட்டின் பல இடங்களிலும் காணப் பட்டது. சைவமும் தமிழும் பொலிவிழந்து காணப்பட்ட காலமாகும். எனவே தமிழ்மொழிக்கும் சைவ சமயத்துக்கும் புத்துயிர் அளிக்க யாழ்ப்பாணக்குடாநாட்டில் ஆங்காங்கே பெரியோர்களால் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தவகையில் இக்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 1955ஆம் ஆண்டளவில் இக்கிராமத்தில் ஒரு சைவப் பாடசாலை அமைக்கவேண்டும் என்ற நோக்குடன் இக்கிராமத்துப் பெரியோர் செயற்பட்டனர். இவர்களின் முயற்சியால் 1956ஆம் ஆண்டு தை மாதம் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் என்ற பெயரில் திக்கம் மடத்துவாசல் பிள்ளையார் கோயிலின் மேற்கு வீதிக்கு மேற்காக இருக்கும் "அருந்தி யனார்" என்னும் காணியில் ஒரு சைவப் பாடசாலை அமைக்கப்பட்டது. இப்பாடசாலையினை அமைப் பதற்கு அயராது உழைத்த அமரர் இராமலிங்கம் துரைராசா, அமரர் பெரியதம்பி இராசரத்தினம் ஆகி யோர் நினைவுகூரத்தக்கவர்கள். பாடசாலைக் கட்டடவேலைகள் நடைபெற்றபொழுது இக்கிராம இளைஞர்கள் சிரமதானமுறையில் பல வேலைகளைச் செய்துள்ளனர். திரு. இராசரத்தினம் என்னும் பெரியாரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்து மகாசபையும் இப்பாடசாலையின் உருவாக்கத்திற்கு உதவியது.

இச்சைவப் பாடசாலை அமைக்கப்பட்டவுடன் இப்புதியபாடசாலைக்கு திக்கம் மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலிருந்து அதிகமான மாணவர் சென்று சேர்ந்தனர். இதனால் திக்கம் மெதடிஸ்தமிஷன் பாடசாலையின் மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இவ்விரு பாடசாலைகளும் இக்கிராம மக்களால் "புதுப்பள்ளிக்கூடம்" என்றும் "பழைய பள்ளிக்கூடம்" என்று அழைக்கப்பட்டு வந்தன.

புதிதாக நிறுவப்பட்ட சைவப் பாடசாலை முதலில் மண்ணினாலும் ஓலையினாலும் அமைக்கப் பட்ட கொட்டிலிலேயே இயங்கியது. இதில் இயங்கிக்கொண்டிருக்கும்பொழுதே பாடசாலைக்கான கற்கட்டடம் கட்டப்பட்டது. இருபெரியஅறைகளும் பெரியமேடையும் கொண்டதாகவும் ஐந்து வகுப்புக் களும் நடத்தக்கூடியதுமான விசாலமான இடத்தை அடக்கியதுமான பெரிய மண்டபமாக கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் திறப்புவிழா 1957ஆம் ஆண்டு நடைபெற்றது. திறப்புவிழாவின்பொழுது மாணவர் களது கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

இச்சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு இங்கு கற்கும் மாணவர் சைவ சமயத்தைப் பற்றிய அறிவைப் பெற்று சைவப் பழக்க வழக்கங்களையும், சைவப் பாரம்பரியங் களையும் பேணி வாழ்க்கையில் கடைப்பிடிக்கக்கூடிய சூழலைப்பெற்றனர். நாயன்மார் குருபூசை, நவராத்திரிவிழா ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்துவந்தனர். வெள்ளிக்கிழமைகளில் பாடசாலைக்கு முன்பாகவிருக்கும் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு ஆசிரியர், மாணவர் எல்லோரும் சென்று காலைப் பூசையில் பங்குபற்றி கூட்டுப்பிரார்த்தனை (சிவபுராணம் படித்தல் போன்றன) செய்து வந்தனர், நவராத்திரி காலத்தில் ஆசிரியரும் மாணவரும் வீடுவீடாகச் சென்று நவராத்திரிப் பாடல்கள்பாடி நிதிசேகரித்து நவராத்திரிப் பூசையை சிறப்பாகச் செய்து கலைநிகழ்வுகளையும் நடத்திவந்தனர். கொழும்பு விவேகானந்த சபையால் நடத்தப்பட்டுவந்த சைவசமயப் பரீட்சைக்கு மாணவர் தோற்றி சித்தியெய்தி சான்றிதழ்களும் பெற்றுள்ளனர். இப்பாடசாலையில் சைவமும் தமிழும் நன்கு வளர்க் கப்பட்டன. இப்பாடசாலையும் 1962ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு அரச பாடசாலையாயிற்று.

1956ஆம் ஆண்டிலிருந்து 1968ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதிவரை இவ்விரு பாடசாலைகளும் தனித்தனிப் பாடசாலைகளாக இயங்கின. இக்கிராமத்தில் இரு ஆரம்பப் பாடசாலைகள் இயங்கின. இப்பாடசாலைகள் தனித்தனியாக இயங்குவதில் சில இடர்பாடுகள் ஏற்படவே இரு பாடசாலைகளையும் இணைந்து நடத்தும் எண்ணம் அதிபர், ஆசிரியர், பெற்றோர், நலன்விரும்பிகள் மனதில் எழுந்தது. அமரர் இராமலிங்கம் துரைராசா தலைமையில் இதற்கான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இருபாடசாலைகளையும் இணைத்து நடத்துவது எனவும் இணைப்பின்பொழுது திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் என்ற பெயரையே இணைக்கப்பட்ட பாடசாலைக்கு வழங்குவதாகவும் முடிவுஎடுக்கப்பட்டது. இவ்விருபாடசாலைகளையும் இணைப்பதற்கான செயற்பாடுகளின் பயனாக கல்வித்திணைக்களத்தின் அனுமதியுடன் 1968ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதியன்று இரு பாடசாலைகளும் இணைக்கப்பட்டன. இணைப்பின் பின் இக்கிராமத்தில் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் என்ற நாமம் பூண்ட ஒரு பாடசாலையே இயங்கி வருகின்றது. 3ஆம் 4ஆம் 5ஆம் வகுப்புகள் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய கட்டடத்திலும் 1ஆம் 2ஆம் வகுப்புகள் திக்கம் மெதடிஸ்தமிஷன் பாடசாலைக் கட்டடத்திலும் நடைபெறும் என முடிவெடுக்கப்பட்டதன்படி வகுப்புகளும் அவ்வவ்விடங்களில் நடைபெற்றன. சில வருடங்களுக்குப் பின்பு இவ்விரு இடங்களிலும் வகுப்புகள் நடைபெற்றதால் ஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாக வகுப்புகள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் நடத்துவதென முடிவு எடுக்கப்பட்டு வகுப்புகள் ஒரே இடத்திற்கு மாற்றப்பட்டன. சித்திவிநாயகர் வித்தியாலயக் கட்டடம் புதிய கட்டடமாக இருந்தபொழுதிலும் போக்குவரத்து வசதியையும், இடத்தின் மையத்தையும் கருத்திற் கொண்டு வீதியோரத்தில் அமைந்திருந்த மெதடிஸ்தமிஷன் பாடசாலைக்

கட்டடத்திலே எல்லா வகுப்புகளும் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் என்ற பெயரில் நடைபெற்று வருவதாயிற்று. இன்று இப்பாடசாலை இக்கிராமத்தின் கலைக்கோயிலாகத் திகழ்கின்றது.

15.06.1968 முதல் இணைப்பின் பின் கடமையாற்றிய அதிபர் விபரம்

| | அதிபர் பெயர் | சேவைக்காலம் | | |
|---|---|---|---|---|
| | | இருந்து | | வரை |
| 1. | திரு.வ.கதிரித்தம்பி | 08.01.1968 | - | 28.02.1971 |
| 2. | திரு.மு.மயில்வாகனம் | 01.03.1971 | - | 31.12.1973 |
| 3. | ஸ்ரீதிரு.சி. வேலாயுதம் | 01.01.1974 | - | 31.01.1980 |
| 4. | திரு.க. பாலசிங்கம் | 01.02.1980 | - | 20.07.1983 |
| 5. | திரு.கே. இராஜகோபால் | 27.07.1983 | - | 07.05.1990 |
| 6. | திரு.க. சண்முகலிங்கம் | 29.05.1990 | - | 29.05.1994 |
| 7. | திரு.வீ. வடிவேல் | 02.06.1994 | - | 18.12.2002 |
| 8. | திருமதி ஸ்ரீ. சிவராஜா | 19.12.2002 | - | 07.08.2010 |
| 9. | திரு. க. ரவீந்திரன் | 15.06.2010 | - | இன்றுவரை |

இவ்விரு பாடசாலைகளும் இணைக்கப்படுவதற்கு முன்பு இருந்த அதிபர்களது விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இப்பாடசாலை அமைந்துள்ள கிராமம் ஒரு விவசாயக் கிராமம் ஆகும். இக்கிராமத்திலுள்ள மக்களில் அதிகமானோர் விவசாயிகளாக உள்ளனர். கடற்கரையோரத்தை அடுத்து கடற்றொழில் மக்கள் சிலர் வாழ்கின்றார்கள். சிலர் அரசசேவையிலும் ஈடுபட்டுள்ளனர். போரினால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளாலும், வெளிநாடுகளுக்குச் செல்வதனாலும் இப்பகுதி மக்கள்தொகை குறைவடைந்து செல்லும்பொழுது இங்கு கல்வி கற்கும் மாணவர்தொகையும் குறைவடைந்ததைக் காணக்கூடிய தாகவுள்ளது. மேற்கூறிய காரணங்களால் 1994ஆம் ஆண்டின் பின்பு மாணவர்தொகையில் குறைவு ஏற்பட்டது. மாணவர் தொகையில் குறைவு ஏற்பட்டாலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும், இணைப்பாடவிதான செயற்பாடுகளும், பௌதீக வளஅபிவிருத்தியும் நன்கு நடைபெற்று வந்தன. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்து சமாதானம் ஏற்பட்ட பின்பு 2010ஆம் ஆண்டிலிருந்து மாணவர் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. நாட்டில் பிரச்சனைகள் நிலவிய காலத்தில் இடம்பெயர்ந்து வந்து இக்கிராமத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மாணவர்களையும் நன்கு ஆதரித்து கல்வி புகட்டியுள்ளோம். இன்று இவ்வருடம் 134 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். அதிபருடன் 7 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். இவர்களுடன் பகுதிநேர ஆங்கில ஆசிரியர், கிறிஸ்தவ பாடம் கற்பிப்பதற்கான தொண்டு அடிப்படையிலான ஆசிரியர், ELRTC ஆங்கில வகுப்பினை நடத்தும் ஆசிரியர், கணனி ஆசிரியர் ஆகியோர் கடமையாற்றுகின்றார்கள்.

இங்கு கல்விபயிலும் மாணவர்களில் 75%மானோர் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்கள் என்றாலும் எமது பாடசாலையிலிருந்து இடைவிலகுவோர் இல்லை. மாணவர்களின் எழுத்தறிவு வீதம் 85% ஆகக் காணப்படுகின்றது. ஐந்தாம்தர புலமைப் பரிசில் சித்தி வீதம் 15% ற்கு மேல் காணப்படுகின்றது. எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்து வெளியேறுபவர்கள் பருத்தித்துறை, நெல்லியடி

ஆகிய நகர்ப்புறப் பாடசாலைகளில் 6ஆம் வகுப்புக்கான அனுமதியைப்பெற்று கற்கின்றார்கள். எமது பாடசாலையில் கல்வி கற்கும், கற்று வெளியேறும் மாணவர்களின் அடைவு மட்டத்தை 100% ஆக்கு தலே எமது குறிக்கோளாகும்.

பாடசாலையில் கல்வித் திணைக்கள சுற்றுநிரூபங்களுக்கமைய தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், திருக்குறள் போட்டி, கணிதப் போட்டி, சித்திரப்போட்டி ஆகியன ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. கால்கோள் விழா, இல்லமெய்வன்மைப் போட்டி, நவராத்திரி விழா, சிறுவர் தினவிழா, ஆசிரியர் தினவிழா, பரிசளிப்புவிழா ஆகியனவும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. மாணவர்மன்றங்களும் செயற்பட்டு வருகின்றன. நவராத்திரிவிழாக் காலத்தில் மாலைகட்டும் போட்டி, கோலப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பண்ணிசைப்போட்டி ஆகியன யாவும் ஒழுங்காக நடத்தப்பட்டு போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றன இப் போட்டிகள் மாணவர்களின் திறன்களை வளர்ப்பதுடன் அவர்களின் உள்ளங்களில் புத்துணர்ச்சியை வளர்த்து சரியான பாதையில் அவர்கள் செல்ல வழிப்படுத்துகின்றன. பாடசாலை மட்டப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் கோட்டமட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களும் பெற்றுள்ளனர்.

இணைப்பின் பின்பு வீதியோரத்தில் அமைந்திருந்த மெதடிஸ்தமிஷன் பாடசாலைக் கட்டடத்தில் எல்லா வகுப்புகளும் நடைபெறத் தொடங்கியபொழுது அக்கட்டடங்கள் பழைமை வாய்ந்த கட்டடங் களாக பழுதடைந்த கட்டடங்களாக இருந்தமையால் புதிய வகுப்பறைக் கட்டடத்தேவை அவசிய மாயிற்று. இதனால் 1972ஆம் ஆண்டின் பின்பு வகுப்பறைக் கட்டடங்கள் ஒவ்வொன்றாக கல்வித் திணைக்களத்தினால் கட்டப்பட்டன. 20'x60' மண்டபம், 20'x40' மண்டபம், 20'x40' மண்டபம் ஆகியன கட்டப்பட்டன. காலத்துக்குக் காலம் திணைக்களத்தின் உதவியினால் திருத்த வேலைகளும் நடைபெற்றன.

2000ஆம் ஆண்டளவில் இதுவரை காலமும் பயன்படாமலிருந்த பாடசாலைக்கு உரிய காணியில் பாடசாலைக்கும் பிரதானவீதிக்கும் மேற்குப்பக்கமாக இருக்கும் காணியில் பெற்றோரி னதும் நலன்விரும்பிகளினதும் உதவியுடன் காணி துப்பரவு செய்யப்பட்டு வேலி அடைத்து விளை யாட்டு உபகரணங்கள் அமைத்து விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. பிள்ளைகளின் மகிழ்ச்சி கரமான கற்றல் செயற்பாடுகளுக்காக இவ்விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு இப்பாடசாலையின் பழைய மாணவராகிய அமரர் முருகுப்பிள்ளை பாலசுந்தரம் அவர்கள் பாடசாலைக்கு மின்இணைப்பைப் பெற்று மின்சார வசதியைச் செய்து தந்தார். இவருக்கு நாம் என்றும் நன்றியுடையோம். 2005ஆம் ஆண்டு பிள்ளைநேயப் பாடசாலைத் திட்டத்தின்கீழ் யுனி செவ் நிறுவனத்தால் நீர்த்தாங்கி கட்டப்பட்டு குழாய் நீர் வசதி செய்யப்பட்டது. 2005ஆம் ஆண்டு யுனிசெவ் நிறுவனத்தால் உருக்குஅலுமாரி ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது. 2005ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்கள் ரூபா 50000/=ஐ தளபாடக் கொள்வனவிற்காகத் தந்திருந்தார். இந்நிதி ஒதுக்கீட்டில் நான்கு உருக்கு அலுமாரிகளும் கணினி மேசை ஒன்றும் கொள்வனவு செய்யப் பட்டன. அன்னாருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வலுமாரிகள் வகுப்ப றைத் தேவைகளுக்காக வகுப்பறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைவிட வலயக் கல்வி அலுவலகத்தினாலும் உருக்குஅலுமாரிகள் வழங்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டு இப்பாடசா

லையில் அதிபராகக் கடமையாற்றியவரும் இப்பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜா அவர்களால் பாடசாலையின் பெயர்வளைவு அமைக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தினால் வேலைக்கான உணவு வழங்கல் திட்டத்தின் கீழ் சமையலறை கட்டப்பட்டது. இதே ஆண்டு யுனிசெவ் நிறுவனத்தின் நிதிஉதவியினால் நவீனமுறையிலமைந்த சலகூடத் தொகுதி கட்டப்பட்டது. 2010ஆம் ஆண்டு பழைய மாணவர்களான அமரர் முருகுப்பிள்ளை பாலசுந்தரம், லண்டனில் வசிக்கும் தம்பையா ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி ஸ்ரீ வடிவாம்பிகை சிவராஜா, பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோரின் நிதிஉதவியினால் பாடசாலையின் தெற்குவேலிக்கு மதில் கட்டப்பட்டது. 2010ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் ரூபா 100,000/= சங்கீத உபகரணக் கொள்வனவிற்காகத் தந்துள்ளார். இதே ஆண்டில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுரேஸ் பிறேமச்சந்திரன் அவர்கள் ரூபா 100,000/= கட்டடத் திருத்த வேலைக்காகத் தந்துள்ளார். இதே ஆண்டில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாவை சேனாதிராசா அவர்கள் அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 75000/= தந்துள்ளார். இவர்களுக்கும் இவ்வுதவிகளைப்பெற உதவிபுரிந்த பழைய மாணவன் திரு.ச.சாந்தரூபன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நிதி உதவியினால் பாண்ட்வாத்திய உபகரணத் தொகுதியைப் பெற்றுள்ளோம். கட்டடத் திருத்த வேலைகளையும் மேற்கொண்டுள்ளோம். 2010ஆம் ஆண்டு பழையமாணவரான திரு.யோ. அரவிந்தன் பாடசாலைக்கான தொலைபேசித் தொடர்பினை ஏற்படுத்தித்தந்து பாவனைக் கட்டணத் தையும் செலுத்திவருகின்றார். 2011ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஒதுக்கீட்டில் ரூபா 50000/= கிடைக்கப்பெற்று ஒரு கணனி கொள்வனவு செய்யப்பட்டது. யாவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2012ஆம் ஆண்டு ஐயாயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டு ஐந்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுத் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. 1500 சதுர அடி வகுப்பறை நிலம் சீர்செய்யப்பட்டது
2. மலசலகூடம் (ஆசிரியருக்கானது) ஒன்று முற்றாகத் திருத்தப்பட்டது.
3. 40'x20' கட்டடம், அலுவலகம் வர்ணம் பூசப்பட்டது.
4. பாடசாலையின் கிழக்குப்பக்க வேலி நெற்கொண்டு அடைக்கப்பட்டது.
5. சிறுவர் பூங்கா முன்பக்கவேலி நெற்கொண்டு அடைக்கப்பட்டது.
6. கூரைகள் பழுதுபார்க்கப்பட்டு சீர்செய்யப்பட்டது.
7. முன்பக்க மதில் தூண்போட்டு பூச்சுவேலை செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டது.
8. களஞ்சிய அறை திருத்தம் செய்யப்பட்டது.

இவற்றிற்கான நிதிஒதுக்கிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கும் நிர்வகித்த வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்திற்கும் மேற்பார்வை செய்த வலயக்கல்வி அலுவலகத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இதே ஆண்டு வலயக்கல்வி அலுவல கத்தின் மூலமாக இரண்டு இலட்சத்து பத்தாயிரம் ரூபா செலவில் (PSDG ஒதுக்கீடு) கணனிமூலை உருவாக்கப்பட்டுள்ளது. வலயக்கல்வி அலுவலகத்தினால் நான்கு கணனிகளும் நான்கு கணனி மேசைகளும், நான்கு கணனிகதிரைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. வலயக்கல்வி அலுவலகத்திற்கு

எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதனால் எமது மாணவர் கணனிக் கல்வியைப் பெறக்கூடியதாயிற்று.

எமது அலுவலகத்தில் 2012ஆம் ஆண்டுவரை ஒரு நிழற்படப்பிரதி இயந்திரம் (Photo Copier) இல்லாமல் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வந்தோம். 2013ஆம் ஆண்டு மாசிமாதமளவில் இக்கஷ்டம் நீங்கியது. அவுஸ்திரேலியாவில் வசிக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களான Dr. சந்திரகௌரி ரவீந்திரன், கணக்காளர், திரு. கணபதிப்பிள்ளை, யோகானந்தன் ஆகிய இரு சகோதரர் களும் இணைந்து 126500/= ரூபா செலவில் நிழற்படப்பிரதி இயந்திரத்தைப் பெற்றுத் தந்துள்ளார்கள். இவர்களுக்கும் இவர்களுடன் தொடர்புகொண்டு இதனைப் பெறுவதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொண்ட முன்னாள் அதிபர் திருமதி ஸ்ரீ. சிவராஜா அவர்களுக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்ததாக பழைமையின் சின்னமாக பழுத டைந்த நிலையில் இருந்த திறந்தமேடையை முற்றுமுழுதாக இடித்து அகற்றி புதிய மேடையை அமைத்து 35' நீளமான கூரையும் அமைத்து மேடையின் கிழக்குப் பக்கமாக சுவாமிப்படம் வைக்கும் அலுமாரியும் அமைத்து பிரார்த்தனை மண்டபமாகவும், நிகழ்வுகளுக்கான மண்டபமாகவும் திகழும் வண்ணம் அரங்க மண்டபத்தினை பழைய மாணவர்களான கலாநிதி துரைராசா ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜா ஆகிய சகோதரர்கள் இணைந்து ரூபா 600000/= செலவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக அமைத்துத் தந்துள்ளார்கள். அவர்கள் இருவருக்கும் நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 2014ஆம் ஆண்டு ஆடிமாதமளவில் சுவிஸ் நாட்டின் திக்கம் நலன்புரிச் சங்கத்தின் இணைப்பாளர் திரு.பொ.க. ஆனந்தராசா அவர்கள் (பழைய மாணவர்) ரூபா 50000/= அபிவிருத்திப் பணிக்காகத் தந்துள்ளார். இந்நிதியைப் பயன்படுத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவரின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும், மாணவர் நலனோம்பல் செயற்பாடு களுக்கும், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் பழையமாணவரும், நலன் விரும்பிகளும், பெற்றோரும் உதவியுள்ளனர். எமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபொழுது அப்பாடங்களுக்காக தொண்டு அடிப்படையிலான ஆசிரியர்களை நியமித்து கற்பித்தற் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. திருமதி ஸ்ரீ. சிவராஜா அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் 2ஆம் வகுப்பினைக் கற்பித்த ஆசிரியருக்கும், ஆங்கில பாடத்தினைக் கற்பித்த ஆசிரியருக்கும் உரிய மாதாந்த வேதனத்தை அதிபர் அவர்களும், லண்டனில் வசிக்கும் பழைய மாணவரான திரு. தம்பையா ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் கொடுத்து வந்துள்ளனர். திரு.தம்பையா ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் மாணவர்களுக்கும் நிதி உதவி செய்துள்ளார். அதிபர் அவர்கள் ஓய்வுபெற்ற பின்பும் (07.08.2010 பின்) ஆங்கில ஆசிரியருக்கான மாதாந்த வேதனமாக ரூபா 3000/= 30.06.2014 வரை தந்துதவியுள்ளார். 2014 ஆடி மாதத்திலிருந்து வலயக்கல்வி அலுவலகத்தினால் பகுதிநேர ஆங்கிலஆசிரியர் நியமிக்கப்பட்டு ஆங்கிலபாடம் கற்பிக்கப்படுகின்றது. இங்கு கல்விபயிலும் கிறிஸ் தவ பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் இல்லாமையால் கிறிஸ்தவ சமயப் பிள்ளைகளின் பெற்றோரின் நிதியுதவியுடன் கிறிஸ்தவ பாடம் கற்பிக்கப்படுகின்றது. ELRTC ஆங்கில வகுப்பு ELRTC கற்கும் மாணவர்களின் பெற்றோரின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றது. கணினியைப் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர் வளம் இல்லாததால் பாடசாலைக்கு புறம்பான ஆசிரியர் ஒருவர் மூலம்

கணினி கற்பிக்கப்படுகிறது. கடந்த வருடம் (2013ஆம் ஆண்டு) இவ்வாசிரியருக்கான உதவு தொகையாக ரூபா 5000/= முன்னாள் அதிபர் திருமதி ஸ்ரீ. சிவராஜா தந்து உதவியுள்ளார். தற்பொழுது 2014ஆம் ஆண்டு கணனி ஆசிரியருக்கான வேதனத்தை பழைய மாணவர் சங்கம் கொடுத்து வருகின்றது. கடந்த வருடம் லண்டனில் வசிக்கும் பழைய மாணவியாகிய திருமதி சியாமள கௌரி ஆனந்தகுமார் பழைய மாணவர் சங்கத்திற்கு ரூபா 25000/= வழங்கியிருந்தார். அந்நிதி யிலிருந்து மாதாந்த வேதனமாக ரூபா 3000/= கொடுக்கப்படுகின்றது.

லண்டனில் வசித்துவரும் நலன்விரும்பியாகிய திரு.ந.விஜயசிங்கம் அவர்கள் 2003ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்களுக்கு நிதியுதவி செய்து வருகின்றார். அவர் ஒரு தவணைக்கு ரூபா 5000/= படி ஒவ்வொரு தவணையும் அனுப்பிவருகின்றார். வறுமைக்கோட்டின்கீழ் வாழும் கஷ்டப் படும் மாணவர் 25 பேருக்கு ஒரு தவணைக்கு 200/= ரூபாப்படி வழங்குமாறு ஏற்பாடு செய்துள்ளார். அவ்வாறே மாணவர்களுக்கு நிதி வழங்கப்படுகிறது. 2009ஆம் ஆண்டு பழையமாணவரான பொறியியலாளர் கதிர்காமத்தம்பி ஈசன் அவர்கள் ரூபா 20000/=ஐ ஐந்தாந்தர மாணவர்களுக்கு வழங்குமாறு தந்திருந்தார். அந்நிதி ஐந்தாந்தர மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

பழைய மாணவர்களான திரு. யோ. ராஜ்மோகன், திரு.க.திருவரங்கன் ஆகிய இருவரும் சேர்ந்து பாடசாலைச் சுத்திகரிப்பு தொழிலாளிக்கான நிதியுதவியினை 2010ஆம் ஆண்டு நடுப் பகுதியிலிருந்து வழங்கி வந்தனர். இவ்வுதவியினை மூன்றரை வருடங்களாக செய்துள்ளனர். தற்பொழுது 2014ஆம் ஆண்டு பெற்றோரான திரு.த.விஜயகுமார் அவர்கள் பாடசாலைச் சுத்திகரிப்புத் தொழிலாளிக்கான நிதியுதவியினைச் செய்துவருகின்றார். 2012ஆம் ஆண்டு தொடக்கம் பழைய மாணவராகிய திரு. யோ. குகானந்தன் மாணவர்களுக்கு குடிநீர் (நல்ல தண்ணீர்) விநியோகத்தினைச் செய்துதந்துள்ளார். தண்ணீர் தாங்கி ஒன்றில் பிரதேச சபை மூலம் நீர் நிரப்பிவித்து அதற்கான கட்டணத்தையும் செலுத்தி வருகின்றார். கடந்த வருடம் பெற்றோரான திரு.க.சுரேஸ் அவர்கள் Audio Box Set ஒன்றினை அன்ப ளிப்புச் செய்துள்ளார். மேலும் பெற்றோர் வெற்றிக்கிண்ணங்கள். பூச்சாடிகள், மேசைவிரிப்புக்கள், மின்விசிறிகள் ஆகிய பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். இவ்வாறு உதவிபுரிந்த, உதவி புரிகின்ற யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் வரலாற்றில் முதன்முதலாக பாடரீதியான பரிசில் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும் சேர்ந்த பரிசளிப்புவிழா 2005ஆம் ஆண்டு நடைபெற்றது. இவ்விழாவினை அப்பொழுது அதிபராகவிருந்த திருமதி ஸ்ரீ. சிவராஜா அவர்கள் தனது நிதியிலேயே நடத்தி வைத்தார். இவ்விழாவிற்குப் அப்பொழுது பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரியாக கடமையாற்றிய திரு.எஸ்.புஸ்பலிங்கம் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தார். இவ்விழாவை நடத்தியதோடு மட்டுமல்லாது இவ்விழாவை வருடா வருடம் நடத்துவதற்காக 2005ஆம் ஆண்டு லண்டனில் வசிக்கும் தனது சகோதரரான Dr. து.ஸ்ரீஸ்கந் தராசாவிடம் ரூபா 100000/= பெற்று அமரர் இராமலிங்கம் துரைராசா வயிராத்தைப்பிள்ளை ஞாப கார்த்த நிதியத்தினை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக தேசிய சேமிப்பு வங்கியில் நிரந்தர வைப்பிலிட்டு உருவாக்கியுள்ளார். வருடாவருடம் இந்நிதியத்தில் இருந்து வட்டிப்பணத்தையும் பெற்று தானும் நிதியை அன்பளிப்புச் செய்து ஓய்வுபெறும்வரை வருடாந்த பரிசளிப்பு விழாவை நடத்திவந்தார். அதிபர் 07.08.2010இல் ஓய்வுபெற்ற பின்பு இந்நிதியத்திற்கு சகோதரர் து. ஸ்ரீஸ்கந்தராசா, ச. ஸ்ரீபாலச் சந்திரன் ஆகியோரிடமிருந்து ரூபா 200000/=ஐயும் பெற்றுத்தந்து தானும் ரூபா 100000/=ஐயும்

தந்து அந்நிதியத்தின் தொகையை அதிகரிக்கச்செய்துள்ளார். இன்று இந்நிதியத்தில் ரூபா 400000/= நிலையான வைப்பில் உள்ளது. இதன் வட்டிக்காசினை எடுத்து வருடாவருடம் பரிசளிப்பு விழா வினை சிறப்பாக நடத்தி வருகின்றோம். வருடந்தோறும் நடைபெறும் இவ்விழாவில் சிறந்த அடை வினைப்பெறும் மாணவர்கள் பரிசில்களைப்பெற்று கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு கற்றலின் பால் மேலும் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு தூண்டுகோலாக இது அமைகின்றது. பரிசில்களைப் பெறாத மாணவர்களும் அடுத்த வருடம் இப்பரிசில்களை நாமும் பெறவேண்டும் என்ற சிந்தனையுடன் கற்றலில் தூண்டப்படுவார்கள்.

எமது பாடசாலையில் விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத காரணத்தினாலும் நிதிப்பற்றாக் குறையினாலும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பெரிய அளவில் ஒவ்வொரு வருடமும் நடைபெறுவதில்லை. குறிப்பிட்ட சில வருடங்களில் (1995ஆம், 1998ஆம், 2001ஆம், 2003ஆம் 2004ஆம் ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது) திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் பெரியளவில் இல்லமெய்வல்லுநர் போட்டி நடைபெற்றுவந்துள்ளது. 2005ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டுவரை பாடசாலை மட்டத்திலே பாடசாலை வளாகத்தினுள் மைதான விளையாட்டுக் களும், திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் சுவட்டு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டு வந்தன. 2013ஆம் ஆண்டு பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி மிகச் சிறப்பாக திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. 2013ஆம் ஆண்டு தை மாதம் இவ்விளையாட்டுப் போட்டியினை வருடந்தோறும் சிறப்பாகச் செய்யும் பொருட்டு அமரர் இராமலிங்கம் சச்சிதானந்தம் பார்வதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தினை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக ரூபா 200000/=ஐ தேசிய சேமிப்பு வங்கி யில் நிலையான வைப்பிலிட்டு உருவாக்கியுள்ளோம். இந்நிதியத்திற்கான நிதியினை முன்னாள் அதிபர் திருமதி ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜா திரு சச்சிதானந்தம் ஸ்ரீபாலச்சந்திரன் ஆகிய சகோதரர் இணைந்து வழங்கியுள்ளார்கள். இதன் வட்டிப்பணத்தை எடுத்து விளையாட்டுப் போட்டி நடத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கான நிதியுதவியினை (ரூபா 50000/=) அவர்களே வழங்கியுள்ளார்கள். மேலும் இவ்வருடம் (2014) அந்நிதியத்தின் வட்டிப் பணமாக ரூபா 25000/=யும் பெற்று மேலதிகச் செலவினத்திற்காக அவர்கள் தந்த ரூபா 30000/=யும் பெற்று இல்லமெய் வன்மைப்போட்டியைச் சிறப்பாக நடத்தியுள்ளோம். இவ்வாண்டு இப்போட்டிக்கு வடமராட்சி கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். நந்தகுமார் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து போட்டியைச் சிறப்பித்தார்.

அடுத்ததாக நெல்லியடியைச் சேர்ந்த தொழிலதிபர் த. பாஸ்கரன் அவர்கள் வடமராட்சியில் உள்ள பாடசாலைகளில் சிலவற்றிற்கு நிதியுதவி புரிந்து வருகின்றார். அந்தவகையில் அவரது உதவி எமது பாடசாலைக்கும் கிடைத்துள்ளது. ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிலதிபர் ந.பாஸ்கரன் அவர்களால் ரூபா 50000/= நிரந்தரவைப்பில் இடப்பட்டு அதன் வட்டியை பகிர்ந்தளிக்கும்விதமாக இந்திராணி பாஸ்கரன் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஒன்றை 2013ஆம் ஆண்டு ஆரம்பித்துள்ளோம். மேலும் இப்பாடசாலையில் கல்விபயிலும் பதின்மூன்று வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் 100/= ரூபா வீதம் அவர்களது பெயரில் வங்கியில் வைப்பிலிடப்படுகின்றது. இவ்விரண்டு உதவிகளையும் வழங்கிக்கொண்டிருக்கும் தொழிலதிபர் ந.பாஸ்கரன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2006ஆம் ஆண்டிலிருந்து மாணவர்களுக்கான உணவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடை பெற்று வருகின்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் உலக உணவுத் திட்டம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இத்திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவிபுரியும் "ஒரு பானை" நிறுவனத்திற்கும் இந்நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்தித்தந்த பழையமாணவன் திரு.இ.இராஜசீலன் அவர்க ளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் பரிசளிப்பு விழாவில் எமது பாடசாலையில் ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு அந்நிலையம் பரிசில்களை வழங்கி கௌரவிக்கின்றது. மேலும் நவராத்திரி காலத்தில் எமது பாடசாலை மாணவர்களுக்கு நவராத்திரி தினப்போட்டிகள் நடத்தி பரிசில்கள் வழங்கிவருகின்றார்கள். எமது பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி மைதானத்தில் நடைபெறும் பொழுது திக்கம் மத்திய சனசமூக நிலைய உறுப்பினர்களும், திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் மைதான உதவி புரிந்து வருகின்றார்கள். இவர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசாங்க சுற்றுநிருபத்திற்கமைய பெற்றோராலும் ஆசிரியர்களாலும் பாடசாலை அபிவிருத் திக்கென பாடசாலை அபிவிருத்திச்சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கம் பௌதீக வளஅபிவிருத்திக்கு திணைக்களம், நிறுவனங்கள், தனியார் தரும் நிதிகளைப் பெற்று அவ்வேலைகளைக் குறிப்பிட்ட காலத்தில் செய்துமுடித்துள்ளது. இச்சங்கத்தின் செயலாளராக பணிபுரியும் திரு.சி.சிவநேசன் அவர்கள் தனது பணிகளைச் சிறப்பாகச் செய்து பாடசாலைக்கு உறுதுணையாக உள்ளார். இவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலை வரலாற்றில் 2009ஆம் ஆண்டுதான் பழைய மாணவர்சங்கம் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டது. அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைவராக திருமதி தவமணிதேவி கணேசலிங்கம் (ஓய்வு நிலை வங்கி முகாமையாளர்) அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். அவர் தனது பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். செயலாளராக திரு.ந.செந்தூரனும் பொருளாளராக திருமதி எஸ். சாரதாதேவியும் தெரிவுசெய்யப்பட்டனர். இதற்கான யாப்பும் உருவாக்கப்பட்டு ஹற்றன் தேசிய வங்கியில் சேமிப்புக்கணக்கும் ஆரம்பிக்கப்பட்டது. கல்வித் திணைக்கள சுற்று நிருபத்திற்கமைய தற்பொழுது அதிபரே அதன் தலைவராகக் கடமையாற்றுகின்றார். பழைய மாணவர்சங்கம் உருவாக்கப்பட்டபொழுதும் அதன் நிதிவளம், செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடையவில்லை. சிறிதளவு நிதியினையே வங்கிக் கணக்கில் வைத்திருக்கின்றது. வருடாவருடம் நடைபெறும் பரிசளிப்புவிழாவில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஊக்குவிப்பு நிதியாக தலா 1000/= ரூபாவ வழங்கி வருகின்றார்கள்.

பாடசாலையின் முன்னேற்றத்தில் பெற்றோர்களும் பழையமாணவர்களும் ஈடுபட்டு அதன் வளர்ச்சியிலே அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், பழைய மாணவர்களும் ஒன்றினைந்து செயற்படும்பொழுது பாடசாலை நல்லமுன்னேற்றப்பாதையில் செல்லும் அத்துடன் சமூகமும் நல்ல பெறு பேறுகளைப் பெறமுடியும். கல்வி அமைச்சினாலும் கல்விப்பகுதியினராலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கும் வழங்கப்படுகின்ற அங்கீகாரமும் முதன்மையும் இவ்வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைகின்றன. எமது பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்தில்

பழைய மாணவர் இணைந்து செயற்படும் ஈடுபாடுகள், செயற்பாடுகள் குறைவாகக் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் அச்சங்கத்தின் செயற்பாடுகளுடன் பாடசாலை அபிவிருத்தி அடையும் என எதிர்பார்க்கின்றோம்.

தற்பொழுது பாடசாலை அபிவிருத்திக்காக பாடசாலை அபிவிருத்திக்குழு (SDC) அமைக்கப் பட்டுள்ளது. இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர் மூவர், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் நால்வர், பழைய மாணவர் சங்க உறுப்பினர் இருவர், வலயக்கல்வி அலுவலக உறுப்பினர் ஒருவர் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். இவ் அபிவிருத்திக்குழுவே பாடசாலையின் சகல நிதி நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றது.

தற்பொழுது எமது பாடசாலை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை இடப்பிரச்சினையாகும். வகுப் பறைக் கட்டடங்கள் அமைப்பதற்கும் காலைநேர உடற்பயிற்சி செய்வதற்கும் போதிய இடமில்லாமல் இருக்கின்றது. எதிர்காலத்தில் எமது மாணவர்தொகை அதிகரிக்கும்பொழுது இடப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். தற்பொழுதும் எமது மாணவர் உடற்பயிற்சி செய்வதற்கேற்ற முறையில் பாடசாலை வளாகத்தினுள் இடம் இல்லாமையால் பாடசாலைக்கு கிழக்குப் பக்கமாக உள்ள காணியை காணி உரிமைக்காரரான திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் அவர்களிடம் அனுமதி பெற்று காணியைச் சுத்தம்செய்து மாணவர் உடற்பயிற்சி செய்வதற்காகப் பயன்படுத்துகின்றோம். எமது பாடசாலையின் கிழக்குப் பக்கத்திலும், வடக்குப் பக்கத்திலும் காணிகள் இருக்கின்றன. அவற்றில் ஏதாவது ஒரு காணியை கொள்வனவுசெய்து பாடசாலையுடன் இணைத்தால் பாடசாலையின் வசதி வாய்ப்புகள் பெருகி பாடசாலை சிறப்பாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கின்றோம். இதற்கு பெற்றோர்களினதும் குறிப்பாக பழைய மாணவர்களினதும் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம். மேலும் மடத்துவாசல் கோவிலின் மேற்கு வீதிக்கு மேற்குப் பக்கமாகவுள்ள இடத்தில் நிறுவப்பட்ட பாடசாலை இன்று அழிவடைந்துவிட்டது. ஆனால் அப்பாடசாலையிருந்த காணியினை திருத்திச் சீர்ப்படுத்துவதன்மூலம் அந்த நிலத்தையும் நாம் இழக்காமல் எதிர்காலத்தில் எமது பாடசாலைத் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என எண்ணுகின்றோம்.

“கல்வியழகே அழகு” என்னும் மகுட வாசகத்தைக் கொண்டியங்கும் எமது பாடசாலை எமக்குக் கிடைக்கின்ற வளங்களை உச்சளவில் பயன்படுத்துவதன்மூலம் ஆரம்ப அடிப்படைக் கல்வியைச் சிறந்த முறையில் வழங்கி வருகின்றது. இதன் காரணமாக எமது மாணவச் செல்வங்கள் சிறந்த தேர்ச்சி மட்டத்தை அடைவதுடன் பல்துறை ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்கின்றனர். தற்கால நவீன உலகின் சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய வகையில் மாணவ சமுதாயத்தை நற்பிர ஜைகளாக உருவாக்குவதற்கேற்ற அடித்தளத்தை எமது பாடசாலை மேற்கொள்கின்றது. பாடசா லையில் இனங்காணப்பட்ட வளப்பற்றாக்குறைகள், பிரச்சினைகள் என்பவற்றிற்கு ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்வித்திணைக்களத்தினர் ஆகியோர்களுடன் இணைந்து தீர்வுகளை மேற்கொள்வதன் மூலம் சமூகத்திற்கு ஏற்புடைய நற்பிரஜைகளை உருவாக் குகின்றோம். எமது பாடசாலை நன்கு வளர்ச்சியடைந்து இக்கிராமத்தின் கலைக்கோயிலாக விளங்கி சிறந்த சேவையாற்றவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு.கந்தசாமி ரவீந்திரன்,**
அதிபர்.

# திக்கம் பாலர் பாடசாலையின் வளர்ச்சியும் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் பங்களிப்பும்

**தோற்றம்**

நிலவளமும், நீர்வளமும், நிறைந்த விவசாயத்தை பின்னணியாகக் கொண்ட கிராமமே எம் திக்கம். எம் கிராமம் வரலாற்றுப் பெருமைமிக்கது என்பது பரம்பரையாக வாய்மொழி மூலம் கேட்கப்பட்ட கதைகளே சான்றுபகரும். கல்வியை வளர்ப்பதிலும், கல்வி அறிவுடையவர்களாக, பிள்ளைகளைத் திகழ வைப்பதிலும் பெற்றோர்களும், கிராமத்தில் அமைந்துள்ள பொதுநிறுவனங்களும் அக்கறையுடன் செயற்படுகின்றனர் என்பது வெளிப்படை. கற்றோர் மலிந்து விளங்கும் எம் கிராமத்தின் அடிப்படைக்கல்வியை ஊட்டுவதில் பாலர் பாடசாலைக்கு முக்கியபங்கு உண்டு என்பது மறப்பதற்கில்லை. பாலர் பாடசாலையின் தோற்றமானது இன்று நேற்று தொடங்கிய ஒன்றன்று. அரசாங்கம் எப்போது முன்பள்ளிக் கல்வியில் அக்கறை கொள்ளத்தொடங்கியதோ, அன்றிலிருந்து எம்கிராமத்திலும் முன்பள்ளியானது வேர்விடத்தொடங்கியது. ஆரம்ப காலங்களில் தனியார் வீடுகளிலும், கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டடத்திலும், யா/சித்தி விநாயகர் வித்தியாசாலையின் ஒரு பகுதியிலும் இயங்கிவந்தது. தனக்கென ஓர் நிரந்தர கட்டடம் இல்லாதநிலையில் மிகவும் நெருக்கடிகளைச் சந்தித்தது. எனினும் கல்வியை மாணவர்களுக்குப் புகட்டுவதில் சாதனைகளை நிலைநாட்டியே வந்துள்ளது.

மேற்கூறிய நெருக்கடிகளை மனதில்கொண்டு திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினர் பாலர் பாடசாலையை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தினைத் தேர்ந்தெடுத்தனர். இக்கிராமத்தினைச் சேர்ந்த திரு.க.தங்கராசா J.P (தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்) திரு.வே.விநாயகமூர்த்தி (அதிபர், சக்கோட்டை R.C.T.M.S) திரு.க.தர்மராசா ஆகியோரால் அன்பளிப்பு செய்யப்பட்ட காணியில் 2004இல் இப் பாலர் பாடசாலைக்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. மாணவர் பாவனைக்கென 2005. 04.27 இல் திருமதி.இ.சிறீரங்கன்(பிரதி அதிபர் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதன்பின்னர் இன்று

தனக்கென ஓர் கட்டடத்தையும் 60 மாணவர்களையும் 05 ஆசிரியர்களையும் பணிப்பாளரையும் உடைய முன்பள்ளியாக வளர்ச்சியடைந்துள்ளது பெருமைக்குரியதொன்றாகும்.

3வயது-5வயது வரையான முன்பள்ளிப்பருவத்தில் மாணவர்கள் அடையவேண்டுமென எதிர்பார்க்கப்படும் எண்ணக்கரு விருத்தி, மொழிவிருத்தி, நுண்ணறிவு விருத்தி, உடலியக்கத்திறன்கள் யாவும் இப்பாலர் பாடசாலை மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றமை கல்விப்புலம் சார்ந்தவர்களாலும் சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

"அறிவு சிறக்க ஆளுமை வளர்க" என்ற மகுடவாசகத்தைக் கொண்ட எம்பள்ளி, ஆளுமைமிக்க தோர் உன்னதமான நற்பிரசைகளை உருவாக்கும் கலைக்கூடமாக விளங்குகின்றது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இதன் அடிப்படையில்தான் இப்பள்ளியானது தன் நோக்கக்கூற்றி னையும், பணிக்கூற்றினையும் அமைத்துள்ளது. இவ்விடத்தில் அவற்றை நோக்குதல் சிறப்பானதாகும்.

### நோக்கக்கூற்று (Vision)

கற்றல் அனுபவங்களை வலுவூட்டி ஆளுமைமிக்கதோர் உன்னதமான நற்பிரசைகளை உருவாக்கல்.

### பணிக்கூற்று (Mission)

விளையாட்டின் மூலம் எண்ணக்கரு உருவாக்கம், நுண்ணறிவு விருத்தி,மொழிவிருத்தி, உடலியக்கத்திறன்கள் கொண்ட மாணவர்களாக ஆரம்பக் கல்வி நிலைக்குத் தயார்ப்படுத்தல்.

பள்ளியானது சமய ஒழுக்கலாறுகளை வளர்த்து மேம்படுத்தும் நிலையமாகவும் விளங்குகின்றது என்பதற்கு, பள்ளியின் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அழகிய திருவுருவ சிலையே சான்றுபகரும். எம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி தியாகராசா தங்கச்சியம்மா என்பவர் இச்சிலையை அமைத்து அன்பளிப்புச் செய்ததுடன் சமூகத்திற்கும் பாடசாலைக்கும் உள்ள இடைவினைத் தொடர்பினை வலு வூட்டினார்.

முன்பள்ளியானது சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடும் குழவிகள் பூங்காவாக அமைய வேண்டும் என்பது குழந்தை உளவியலாளர் மொண்டசூரி அம்மையாரின் கருத்தாகும். அவ் வகையில் மாணவர்களுக்கான விளையாட்டு முற்றம், ஒன்றினை சொலிடாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு, பிள்ளைகளின் பாவனைக்கென சொலிடாஸ் நிறுவனப் பணிப் பாளர் திரு.கிறிஸ்பர் என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. எமது கிராம இளைஞர்களின் வெளி உலகி னூடாக ஆளுமை மிக்கதோர் தொடர்பாடலுக்கு இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### 1.1 செயற்பாடுகளும் சாதனைகளும்

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரின் அனுசரணையுடன்தான் இப்பாடசாலையின் செயற்பாடுகள் யாவும் முன்னெடுக்கப்படுகின்றன. இப்பள்ளியை நிர்வகிப்பதும் திக்கம் மத்திய சனசமூக நிலையமே என்றுகூறுதல் பொருத்தப்பாடுடையதாகும். பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்கல், மாணவர்களுக்கான சீருடை, புத்தகப்பை, கழுத்துப்பட்டி, குடிநீர் போத்தல், சாப்பாட்டுப் பெட்டி, கற்றல் உபகரணங்கள் யாவும் எம் கிராமத்தைச்சேர்ந்த வெளிநாட்டில் வசிக்கும் திரு.திருமதி. மா.உதயகுமார் என்பவரின் அனுசரணையுடன், திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரால் வழங்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த ஒன்றாகும்.

மாணவர்களின் சேமிப்புப்பழக்கத்தை வளம்படுத்தும் வகையில் சேமிப்பு உண்டியல் ஒன்றும் இந்நிலையத்தினரால் வழங்கப்பட்டு அதில் சேரும் பணம் கொமர்ஷியல் வங்கியில் வைப்பிலிடுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை எம் இளைஞர்களின் சமூகப் பற்றையும் சேவை மனப்பான்மையையும் எடுத்துக்காட்டுகின்றன.

மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வதில் பாலர் பாடசாலையின் வருடாந்த நிகழ்வுகளான கால்கோள் விழா, விளையாட்டுப்போட்டி, கண்காட்சி, வாணிவிழா, பெற்றோர் தினவிழா, ஆங்கிலமொழித்தினம், தமிழ்த்தினம், பரிசளிப்புவிழா, ஒளிவிழா போன்ற நிகழ்வுகள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதும் மறப்பதற்கில்லை. இந்நிகழ்வுகள் யாவும் வருட ஆரம்பத்திலேயே திட்டமிடப்பட்டு திக்கம், மத்திய சனசமூக நிலையத்தினரின் அனுசரணையுடன் வெகுவிமரிசையாக கொண்டாடப்படுவது கண்கூடு.

விளையாட்டுப்போட்டி நடைபெறும் விளையாட்டு மைதானத்தைச் செப்பனிடுவதிலும், விளையாட்டுப்போட்டிக்குத் தேவையான சகல செயற்பாடுகளிலும், திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரின் பெரும் ஆர்வமும் ஆதரவும் எப்போதும் உண்டென்பது பெருமைக்குரிய விடயமாகும். அத்துடன் பான்ட் வாத்தியக் குழுவினர் சிறப்பாக வழிநடத்தப்படுவதுடன் Band வாத்தியக் கருவிகள் கொள்வனவு, அதன் திருத்தம் போன்ற நடவடிக்கைகளிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

பாடசாலை மாணவர்களின் உடல்நலம். போசாக்கு போன்ற விடயங்களிலும் கூடிய கவனம் செலுத்தும் முகமாக மேற்படி நிலையத்தினரால் பால் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றமை சிறப்பான அம்சமாகும்.

இப்பாலர் பாடசாலையின் வளர்ச்சியையும் செயற்பாடுகளையும் வளப்படுத்தும் நோக்கில் பெற்றோர் ஒருவரை செயலாளராகக்கொண்ட பாடசாலை அபிவிருத்திக் குழுவும், திக்கம் மத்திய சன சமூக உறுப்பினர்களை செயலாளர், பொருளாளராகக்கொண்ட முகாமைத்துவக்குழுவும் சிறப்பாக இயங்கி, பாடசாலையின் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றமை பாராட்டப்பட வேண்டியவைகளாகும். இக்குழுக்களின் செயற்பாடுகள், சேவைகள் மகத்தானவை.

### 1.2 சாதனைகள்

விளையாட்டுக்களிலும் மொழித்திறன் போட்டிகளிலும் சித்திரப்போட்டிகளிலும் எம்பள்ளியானது சாதனை படைத்துள்ளமை போற்றப்படவேண்டிய விடயங்களாகும்.

சாதனைகள் பின்வருமாறு :
2009இல் பிரதேச மட்ட 10 விளையாட்டுக்களில் எமக்குத் தரப்பட்ட
6 விளையாட்டுக்களில்

| | | |
|---|---|---|
| | 4 விளையாட்டுக்களில் | 1ம் இடம் |
| | 1 விளையாட்டில் | 2ம் இடம் |
| | 1 விளையாட்டில் | 3ம் இடம் |
| 2011இல் கோபுரம் அமைத்தல் | வலய மட்டம் | 1ம் இடம் |
| பழம் வைத்து எடுத்து | வலய மட்டம் | 1ம் இடம் |
| 2012இல் கோபுரம் அமைத்தல் | மாகாண மட்டம் | 1ம் இடம் |
| 2013இல் கோபுரம் அமைத்தல் | வலய மட்டம் | 1ம் இடம் |
| | மாகாண மட்டம் | நடைபெறவில்லை |
| 2013இல் நுங்குவண்டி சவாரி | வலய மட்டம் | 1ம் இடம் |
| | மாகாண மட்டம் | நடைபெறவில்லை |

**மொழித்திறனும் கலை நிகழ்வும்**

| | | | |
|---|---|---|---|
| 2008 | கலைநிகழ்வு | கொத்தணி | 1ம் இடம் |
| | | பிரதேசம் | 1ம் இடம |
| 2013 | மொழித்திறன் | கொத்தணி | 1ம் இடம் |
| 4 வயது பிரிவு | ஆத்திசூடி மனனம் | | |
| 5 வயது பிரிவு | ஆத்திசூடி மனனம் | கொத்தணி | 2ம் இடம் |
| 2013 | திருக்குறள் மனனம் | கொத்தணி | 1ம் இடம் |
| 2013 | தேவாரம் | கொத்தணி | 3ம் இடம் |

**சித்திரம், கண்காட்சி**

| | | | |
|---|---|---|---|
| 2008 | கண்காட்சி | வலயம் | 1ம் இடம் |
| | மாகாணமட்டத்திலும் | தெரிவு | |
| 2012 | கண்காட்சி | மாகாணம் | தெரிவு |
| 2010 | சித்திரம் | வலயம் | தெரிவு |
| 2012 | சித்திரம் | பிரதேசமட்டம் | தெரிவு |

**எதிர்காலத்திட்டம்**

மாணவர்களின் ஆங்கில உச்சரிப்பு, ஆங்கில மொழிவிருத்தியிலும் கூடிய கவனம் எடுக்க வேண்டிய தேவை எமக்குண்டு. எனவே ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமிக்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 2014ஆம் ஆண்டு மே மாதம் அளவில் இக்குறையும் நிவர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

தற்கால உலக மாற்றத்திற்கு ஏற்ப தற்கால கணனி உலக சக்கரத்தில் சுழலக்கூடிய மாணவர் களையும் உருவாக்க வேண்டியவர்களாகவும் உள்ளோம். எனவே கணனி வகுப்புக்களை வெகு விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினர் மேற் கொண்டு வருகின்றனர். இந்நோக்கமும் வெகுவிரைவில் நிறைவேற்றப்படும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

மாணவர்கள் அறிவில் சிறந்து ஆளுமைமிக்கவர்களாக வளரவேண்டும் என்பதே எம் சமூகத் தினரின் பேரவாவாகும். இவை அனைத்தும் நிறைவேற இறைவன் அருள்பாலிப்பாராக.

**திருமதி.ஸ்ரீரங்கன் இந்திராணி**
பணிப்பாளர்,
திக்கம் பாலர் பாடசாலை.

# திக்கம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வரலாறு

பெயர்: திக்கம் கிராம அபிவிருத்திச்சங்கம்

முகவரி: திக்கம், அல்வாய்

அதிகார பிரதேசம்: அல்வாய் மேற்கு J/396, அல்வாய் வடமேற்கு J/397 கிராம சேவை யாளர் பிரிவு

பிரதேச செயலகம் : வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

ஒரு நாடு சகல துறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டுமாயின் கிராமங்கள் நகரங்கள் அபிவிருத்தியடைய வேண்டும். இதன் காரணமாக அரசாங்கம் கிராமங்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு சங்கங்களை அமைக்க வேண்டும் என்றும் இதனைப் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்ய வேண்டும் என்றும் வருடாவருடம் பொதுக் கூட்டங்கள் நடைபெற வேண்டுமென்றும் அறிவித்தது. ஜனநாயக முறையில் கூட்டங்கள் நடைபெறுவதால் மக்கள் ஜனநாயக பண்பினை அறிய வாய்ப்பும் ஏற்படுகின்றது. இதன் காரணமாக உருவானதே எமது கிராம அபிவிருத்திச் சங்கம்.

ஆரம்பகாலங்களில் கிராமசபை யாவும் பின் கிராம முன்னேற்றச் சங்கமென்றும் பிற்பட்ட காலங்களில் கிராம அபிவிருத்திச் சங்கம் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலத்தில் கட்டைவேலி - நெல்லியடி கிராமசபையின் வருகைக்கு உட்பட்ட எமது கிராமம் பொருளாதார வளர்ச்சியில் மேம்பாடு அடையாத நிலையில் நெல்லியடி பட்டின சபையாக உயர்வுபெற்று பிரிந்தபோது எமது கிராமம் கட்டைவேலி கிராம சபையின் அருகியிலேயே இருந்துவந்தது. தற்போது பருத்தித்துறை பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட கிராமமாக இருந்து வருகின்றது.

எமது கிராம அபிவிருத்திச் சங்கம் பல வருடங்களாக இயங்கி வந்த போதிலும் 1970இன் பின்பு திரு.வாரித்தம்பி- தங்கராசா, கதிர்காமத்தம்பி - தங்கராசா ஆகியோர்

தலைவராக இருந்த காலம் பொன் எழுத்துக்களால் பொறிக்கவேண்டிய காலம். அக்காலப்பகுதியில் மின்சார வசதி, உலக தரிசன நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம், கிருமிநாசினி தெளிகருவி, சுழற்சி முறையிலான கடன் வழங்கல், நகை அடைவு என்பன மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது.

ஆரம்பகாலத்தில் கைத்தறி நெசவாலையை தனது சங்கக் கட்டடமாகக் கொண்டு இயங்கி எமது கிராம அபிவிருத்திச் சங்கம் பின்பு அதனை தனது சொந்த இடமாக மாற்றிக்கொண்டது. அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு பொறுபேற்றுக் கொண்ட நிர்வாகம் தனது கடுமையான முயற்சியின் பயனாக "நிக்கொட்" நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் பழைய கட்டடம் முழுமையாக அகற்றப்பட்டு புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. இதற்குப்பொருளாகவும் பணமாகவும் திக்கம் மத்திய சனசமூக நிலையம் வழங்கிய உதவி குறிப்பிடத்தக்கது.

இவை கிராமியச் செயலகம் போல் செயற்பட்டு கிராம மக்களுக்கு பெரிதும் உதவி வருகின்றது. அதன் கட்டடத்தில் செயற்படும் அமைப்புக்கள்

1. கிராம சேவையாளர் அலுவலகம் J/396
2. திக்கம் அஞ்சல் அலுவலகம்
3. திக்கம் பாலர் பாடசாலை - கீழ்ப்பிரிவு
4. சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம்
5. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம்
6. திக்கம் பாற்சாலை போன்றனவாகும்.

மேலும் பாற்சாலைக்கான கட்டடம் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் அமைக்கப்பெற்றது. அத்துடன் கட்ட விரிவாக்கம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கு.கஜேந்திரகுமார் அவர்களினால் நிதி ஒதுக்கீட்டிலும் மின்சார வழி, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கி. சிவநேசன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டிலும் செய்யப்பட்டது. அதன் நிர்வாகம் தொடர்ந்து பல வருடங்கள் செயற்பட்டாலும் கிராம வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றது.

**நிர்வாகம்**
2000-2014

# அல்வாய்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்

அல்வாய்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் 1982ம் ஆண்டு எமது கிராமத்தில் வாழும் பெண்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது. தற்பொழுது அல்வாய் மேற்கு, அல்வாய் வடமேற்கு என உள்ள இரு கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி ஒரு கிராமசேவகர் பிரிவாக அல்வாய் மேற்கு என்ற பெயரில் ஒரு கிராமசேவகரின்கீழ் ஒரு கிராமமாக இருந்தபொழுது 1982ம் ஆண்டு இச்சங்கம் உருவாக்கப்பட்டது.

1982ம் ஆண்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய செல்வி. கந்தையாவின் தலைமையின்கீழ் அல்வாய் மேற்கு மாதர், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் நடைபெற்றது. இச்சங்கத்தின் தலைவராக திருமதி.ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜாவும் செயலாளராக திருமதி.இந்திராதேவி.நடராஜசிங்கமும் பொருளாளராக திருமதி.தங்கமணி செல்வரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டார்கள். நிர்வாகசபை உறுப்பினர்களாக ஏழு உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டனர். இந்நிர்வாகக் குழுவினர் ஒன்று சேர்ந்து சங்கத்தின் நோக்கம் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடி தீர்மானித்துக்கொண்டனர். சங்கமும் பதிவு செய்யப்பட்டது. மக்கள் வங்கியில் கணக்கும் திறக்கப்பட்டது.

சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பகாலத்தில் தையல்வகுப்பினை ஆரம்பித்து நடத்தினார்கள். எமது கிராமத்திலுள்ள பெண்பிள்ளைகள் ஆர்வமுடன் தையல் கலையைக் கற்றுக்கொண்டனர். 1984ம் ஆண்டு பயிற்சிமுடிவில் தையல் பொருட் கண்காட்சியும் ஒழுங்குபடுத்தப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் அப்பொழுது பருத்தித்துறை பிரதேச செயலராகக் கடமையாற்றிய திரு.வேலும்மயிலும் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். பொருட்காட்சியின் முடிவில், காட்சிப்படுத்தப்பட்ட சட்டைகள் , தலையணை உறைகள் போன்ற தைத்த உடைகள்

விற்கப்பட்டன. பார்வையாளராக வந்த எமது கிராமமக்கள் அவற்றை வாங்கிக்கொண்டனர். இதனால் தையலைக் கற்ற பிள்ளைகள் பெரும் பயனடைந்தனர். தையல்வகுப்பு தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டிருந்தது. இதனால் எமது சங்கத்திற்கென ஒரு தையல்இயந்திரம் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.கந்தையா அவர்களால் தரப்பட்டது. இத்தையல்இயந்திரத்துடன் வேறு தனியாரின் தையல் இயந்திரங்களையும் பயன்படுத்தி தையல் வகுப்பினை நடத்திவந்தார்கள். தையல்வகுப்பின் முடிவில் தையல் பொருட்கண்காட்சியும் நடத்திவந்தார்கள். இந்நிகழ்விற்கு அப்பொழுது பருத்தித்துறை பிரதேச செயலராகக் கடமையாற்றிய திரு.ஆ.சிவசுவாமி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இச்சங்கம் தையல்வகுப்புகளை நடாத்திவந்த அதேநேரத்தில் பெண் பிள்ளைகளுக்கான சங்கீத, நடன வகுப்புக்களையும் ஒழுங்குபடுத்தி நடத்திவந்துள்ளது. மாணவர் வட இலங்கை சங்கீதசபைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியும் அடைந்துள்ளனர். ஆனால் நாட்டில் நிலவிய அசாதாரணநிலை காரணமாக அதாவது நாட்டுப் பிரச்சனை காரணமாக வகுப்புக்களை தொடர்ந்து நடத்தமுடியாமற் போய்விட்டது.

எமது சங்கம் ஒப்பந்த வேலைகளையும் பொறுப்பெடுத்துச் செய்திருந்தது. திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட குழாய்க்கிணறு அமைக்கும் வேலைத்திட்டத்திற்கு எமது சங்கமும் நிதிப்பங்களிப்புச் செய்துள்ளது. அத்துடன் 2007ம் ஆண்டு திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்ற கிராமசேவையாளர் சேவைநலன் பாராட்டு கௌரவிப்பு நிகழ்விற்கும் எமது சங்கம் நிதி அன்பளிப்புச் செய்துள்ளது.

2003ம் ஆண்டளவில் எமது பிரதேசத்தின் பிரதேச செயலராகவிருந்த திரு.A.சிவசுவாமி அவர்களால் வடமராட்சியில் சிறப்பாக இயங்கும் மாதர் சங்கம் என்ற அடிப்படையில் எமது சங்கம் தெரிவுசெய்யப்பட்டு சிபார்சு செய்யப்பட்டு சேவாலங்கா மன்றத்தின் பெண்கள் சக்திப்படுத்தல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. சேவாலங்கா மன்றத்தின் திட்டப்பணிப்பாளராகவிருந்த திரு.ஆனந்த ராஜா அவர்களின் பொறுப்பில் எமது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக பெண்கள் சக்திப் படுத்தல்திட்டத்தினை சேவாலங்கா மன்றம் நடைமுறைப்படுத்தியது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இத்திட்டத்தினை இம்மன்றம் சிறப்பாக நடைமுறைப்படுத்தியது. இதன் நோக்கம் பெண்களை சுயமாக இயங்க வைத்தல், பெண்களை வலுப்படுத்தல் ஆகும். இத்திட்டத்தில் எமது கிராமப் பெண்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி, சேமிப்பும் கடனும், தொழில்திறன் பயிற்சி, உணவு பதனிடுதல் பயிற்சி, கணக்குவைத்தலும் கணக்குப்பதிதலும், திறன் விருத்திப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டன. 2005ம் ஆண்டு தை மாதம் எமது சங்கத்தின் ஊடாக அங்கத்தவர்களுக்கு சுய தொழில் செய்ய சேவாலங்கா மன்றத்தினால் ரூபா 770000/= சுழற்சிமுறைக் கடனுக்காக வழங்கப் பட்டது. 268 உறுப்பினர் பயனாளிகளாக உள்ளனர். சிறு குழுக்கள் அமைத்து சேமிப்பு முறை உருவாக் கப்பட்டது. இத்திட்டத்தினால் நாம் மிகவும் பயனடைந்து வருகின்றோம். சேவாலங்கா மன்றத்திற்கு எமது சங்கம் என்றும் நன்றி உடையதாக இருக்கும்.

எமது சங்கம் 26.12.2004ம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது சங்க உறுப்பினர்களுக்கு சேவாலங்கா மன்றத்திடமிருந்து நிவாரணஉதவி பெற்று வழங்கியது.

2007ம் ஆண்டு கிராம சேவகர் பிரிவிற்கும் தனித்தனியாக ஒவ்வொரு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் செயற்படவேண்டும் என்ற பிரதேசசெயலரின் பணிப்பின்படி அல்வாய் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திலிருந்து அல்வாய் வடமேற்கு கிராமசேவகர் பிரிவிலிருக்கும் உறுப்பினர் பிரிந்து அல்வாய் வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டது. இதனால் எமது சங்க உறுப்பினர் தொகையில் குறைவு ஏற்பட்டது.

2008ம் ஆண்டு தை மாதம் நெக்டெப் (NECCDEP) நிறுவனத்தின் மூலம் எமது சங்கத்திற்கு பெரும்உதவி கிடைத்துள்ளது. பதினெட்டு இலட்சம் (ரூபா1800000/=) ரூபாவை வாழ்வாதாரக்கடன் வழங்குவதற்காக எமது சங்கத்திற்கு தந்துதவியுள்ளது. எமது சங்க உறுப்பினர்களுக்கு சுயதொழில் செய்வதற்காக இவ்வுதவி கிடைத்த காலம் தொடக்கம் இன்றுவரை சுழற்சிமுறை கடனாக எமது சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இக்கடனுக்காக சிறிதளவு வட்டிப்பணமும் அறவிடப் படுகின்றது. 251 உறுப்பினர் பயனாளிகளாக உள்ளனர்.

மேலும் எமது சங்கத்திற்கு பலநோக்கு மண்டபம் கட்டுவதற்கான நிதியுதவியையும் நெக்டெப் நிறுவனம் வழங்கியுள்ளது. இம்மண்டபத்தைக் கட்டுவதற்காக திருமதி.நாகபிள்ளை கணபதிப்பிள்ளை, திருமதி.நாகேஸ்வரி கனகரத்தினம், திருமதி.நந்தகுமாரி அமிர்தலிங்கம் ஆகிய எமது கிராம அன்பர்கள் எமது சங்கத்திற்குக் காணி அன்பளிப்புச் செய்துள்ளனர். அவர்களுக்கும் நெக்டெப் நிறுவனத்திற்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். பலநோக்கு மண்டபம் கட்டும் வேலையை ஒப்பந்தஅடிப்படையில் செய்து தருவதற்கு சேவாலங்காமன்றம் பொறுப்பெடுத்தது. பொறுப்பெடுத்த இவ்வேலையை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடித்துத்தந்தது. இம்மண்டபத் திறப்புவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. இம்மண்டபம் பல தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இன்று எமது சங்கத்தின் தலைவராக செல்வி.ஸ்ரீகௌரி சிவலிங்கமும், செயலாளராக திருமதி. சிவஞானம்மா வசந்தனும், பொருளாளராக திருமதி.கௌரி குணரத்தினமும் கடமையாற்றுகின் றார்கள். தமது கடமைகளைச் சிறப்பாகச்செய்து வருகின்றார்கள்.

**செல்வி.ஸ்ரீகௌரி சிவலிங்கம்,**<br>
தலைவர்,<br>
அல்வாய்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்.

# மகளிர் சங்கம் ஒரு நோக்கு– J/397

ஆழிக்கடலலையின் அலை தவழும் முகப்பினை முன்னிலைப்படுத்தி சோலைக் கீற்றின் துவண்ட தென்னஞ் சோலைதனை வாயிலில் நிறுத்தி "திக்கம்" எனும் செழுமை பெறும் பெயர் பெற்று விளங்குவது எமது கிராமம்.

எமது கிராமத்தின் மத்தியினை ஊடறுத்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நீண்ட சாலை ஒன்று கிராமத்தை இரண்டாகப் பிரிக்கிறது. இதில் வீதியின் கிழக்குப்புறமாக அமைந்திருக்கும் கிராமசேவையாளர் பிரிவு J/397 இலக்கத்தினைக் கொண்ட அல்வாய் வடமேற்குப்பிரிவாகும். இயற்கை வளங்களும், இந்துகோவில்களும், விவசாய விளைநிலங்களும், பனைமரச்சோலைகளும் நிரம்பிய ஓர் நிலப் பரப்பாகும். இதில் வாழும் மக்களின் தொழில் முயற்சியை மேம்படுத்தவும், மகளிர் எதிர்காலத்தை வளம் படுத்தவும் பிரதேச செயலரின் வேண்டுகோளிற்கு இணங்க கிராம சேவையாளர், எமது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் 2007ம் ஆண்டு யூன் மாதம் ஓர் மகளிர் அபிவிருத்திச்சங்கம் உருவாக்கப்பட்டது.

இம் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தில் கிராமத்தில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் எவரும் அங்கத்துவம் வகிக்க உரித்துடையவராவர். இவ்வமைப்பில் தலைவர், செயலாளர், பொருளாளர், அங்கத்துவக்குழுக்கள், சிறு குழுக்கள், மேற்பார் வையாளர், காப்பாளர் எனப் பல பொறுப்புகள் தாங்கி சங்கம் ஒன்றிணைந்து அமையப் பெற்றது. இவை யாவற்றையும் மேற்பார்வை செய்ய கிராம சேவையாளர் காப்பாளராக செயற்பட்டார்.

ஆரம்பத்தில் இம் மகளிர் அமைப்பினை வளம்படுத்த தொண்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் என்பன பலவகையிலும் நிதியுதவியை நல்கியமையால் கிராமத்தின் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கு மகளிருக்கான சிறுகைத்தொழில்

முயற்சிகள், கைப்பணித்தொழிலுக்கான முதலீடுகள், கரையோர மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் நோக்குடன் கருவாடு பதனிடுதல் போன்ற தொழில் களுக்கும், கோழிவளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு, தையற்தொழிலுக்கான, உபஉணவுகள் பதனிடல் போன்ற சிறுகைத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் அங்கத்தவர்களை சிறு குழுக்களாக 10 பேர் கொண்டதாக அமைத்து அவர்கட்கு தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதியுதவியை தவணைமுறைக் கட்டணமாக செலுத்த கடனுதவிகள் வழங்கப்பட்டது. மீண்டும் வழங்கப்பட்ட கடனுதவிகள் மீளளிப்பின் மூலம் பெறப்பட்டு மீண்டும் மீண்டும் அங்கத்தவரிடையே மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனால் கிராமத்தின் மகளிர் சிறுகைத்தொழில் மூலம் தனிப்பட்ட வருமானத்தை ஊக்குவிப்பதுடன் மட்டுமல்ல வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த வாய்ப்பு அளிக்கப்பட்டது.

எமது சங்க உறுப்பினர்கள் செயற்பாட்டிற்கென நிரந்தர ஓர் இடம் இன்மையால் சில சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய நிலையில் கிராமத்தின் நன்கொடையாளர் ஒருவரினால் 2 பரப்பு நிலம் எமக்கு நன்கொடையாக வழங்கப்பட்டு அதில் ஓர் பொது நோக்கு மண்டபமும் நெக்டெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு சங்கத்தின் செயற்பாடுகள், பிற தேவைக்கான கிராமத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் மையமாகவும் பொதுநோக்கு மண்டபம் அமைந்தமை சங்கத்திற்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

இதனைத்தவிர பொதுநோக்கு மண்டபம் அமைந்திருக்கும் நிலப்பரப்பின் வலதுபுறமாக கிராமத்தின் மிகப்பெரிய வெள்ளம் ஊடறுத்துச் செல்லும் பெரிய வாய்க்கால் அமைந்திருந்தமையால் அதன் இருமருங்கிலும் இருக்கும் குடியிருப்பாளர்கள் மிகுந்த அசௌகரியங்களை அனுபவிக்கும் நிலைக்குட்பட்டிருந்தது. இதனைப் போக்கும் நோக்கில் இதன் ஒருபுறமாக ஓர் பெரிய வீதியை நிர்மாணிக்கும்முகமாக கிராமத்தின் மூத்த தலைவர்களை விடாமுயற்சியினால் இதில் குறிப்பாக பொதுமக்களிடம் இதன் நிலைப்பாட்டினை விளக்கம் கொடுத்து அவர்கள் உதவியையும் பெற்று வீதியை அமைக்கும் பணியிலும் முன்னாள் மன்னார் அரசாங்க அதிபர் அவர்களின் விடாமுயற்சியும் ஆக்கத்திறனான ஊக்கமும் மகளிர் சங்கத்தினைத் தூண்டுதல் பெறச்செய்து நெக்டெப் நிறுவனத்தின் நிதியுதவியினைப் பெற்று வீதியை முழுமையாக அமைத்தமையால் பொதுமக்கள் மிகவும் பயன் பெறக்கூடியதாக இன்றும் இருக்கின்றது.

மேலும் இளைய தலைமுறையின் முழுமையான ஒன்றுகூடலின் மூலம் இவ்அமைப்பினை மேலும் மேலும் மிகவும் வளர்ச்சியடையச்செய்வதுடன் தமது பங்களிப்பினை முழுமையாக நல்கினால் வளமுடன் வளர்ந்து பெருவிருட்சமாக நிழல்பரப்பும் என்பதனை வளர்ந்துவரும் இளைய பெண் சமுதாயத்திற்கு ஓர் தலையாய கடமையாகும். வளர்ச்சியும் முதிர்ச்சியும் சங்கத்தை வழி நடத்தும் இளம்சமுதாயத்தின் கைகள்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

**திருமதி யோகாம்பிகை ஸ்ரீஸ்கந்தராஜா**

தலைவர்.

# விவசாய அமைப்பு அல்வாய் மேற்கு திக்கம்

சுந்தரத்தமிழ் கமழும் வடமராட்சியை அலங்கரிக்கும் சிற்றூர்களில் திக்கமெனும் கிராமம் பேரூராகும்.

"ஏர்முனைக்கு நேர்இங்கே எதுவுமே இல்லை

என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமேயில்லை"

என்ற கவிமணியின் கூற்றுக்கமைய எமது விவசாய மக்களின் நலன்கருதி நாட்டின் சூழ்நிலைக்கேற்ப புலோலி கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தினரதும் அல்வாய் மேற்கு கிராமசேவையாளரின் அனுசரணையோடு 1991ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 18ஆம் நாள் கிராமசேவையாளர் காரியாலயத்தில் அல்வாய் மேற்கு விவசாயப்பெருமக்கள் அனைவரும் ஒன்றுகூடி தற்காலிக தலைவர் திரு. வே.செந்திவேல் தலைமையில் அல்வாய் மேற்கு விவசாய அமைப்பு என்ற தலைப்பில் அனைவரும் ஒன்றுசேர்ந்து அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தலைவர் தமது சிறப்புரையை ஆற்றியபின் புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக திருவாளர் இ.கனகலிங்கம் அவர்களும் செயலாளராக திரு.க.குணச்சந்திரன் அவர்களும் பொருளாளராக திரு.க.பரிபாலனா அவர்களும் 11 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து மேற்படி அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இவ்வமைப்பானது 18.08.1991 தொடக்கம் 2014 இன்றுவரை அல்வாய் மேற்கு விவசாயிகளுக்கு அரச திணைக்களத் தனியார் நிறுவனங்களால் கிடைக்கக்கூடிய பங்களிப்பினைப் பெற்று விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது.

அதிவிசேடமாக 26.12.2004ஆம் ஆண்டு நடைபெற்ற சுனாமி அனர்த்தத்தில் எமது பகுதி விவசாயிகளுக்கேற்பட்ட நஷ்டத்தை ஓரளவு தன்னிறைவுகாணும்

வகையில் பல நிறுவனங்கள் எங்களைத் தேடிவந்தும், அமைப்பு பல நிறுவனங்களோடு தொடர்பு கொண்டும், எமது விவசாயப் பெருமக்களுக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலம் பண்படுத்தல், இலவச வெங்காய விநியோகம், உர விநியோகம், உள்ளீட்டுப் பொருட்கள், உபகரணங்கள், கிருமி நாசினி வகை, எரிபொருள் உதவிகள், விவசாயக் கிணறு திருத்தியமைத்தல், வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெண்களுக்கு கால்நடை, கோழி வளர்ப்பு போன்ற இன்னோரன்ன உதவிகளை மேற்படி அமைப்பின் நிர்வாகம் விவசாய மக்களுக்கு செய்து கொடுத்தது.

இதிலும் அதிவிசேடமாக சேவாலங்கா நிறுவனத்துடன் பணத்தை அன்பளிப்பாகப் பெற்று இவ் விவசாய அமைப்பு பெரும்போக, சிறுபோக காலங்களில் சுழற்சி முறையில் கடன் வழங்கி விவசாயி களுக்கு பேருதவி செய்து வருகின்றது. வருடாவருடம் எந்தெந்த வகையிலே உதவி கிடைக்கக்கூடிய வாய்ப்பிருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களிடமிருந்து பெறக்கூடிய உதவிகளைப் பெற்று விவசாயிகளுக்குக் கொடுக்கின்றது.

இவ்வமைப்பானது அல்வாய் மேற்கு விவசாயிகளின் முதுகெலும்பாக விளங்குகின்றது. மேன்மேலும் சீரும் சிறப்புடன் வளர்ந்து நல்லாசிகளைப்பெற்று வளர அனைத்து மக்களும் ஒத்து ழைக்க எல்லாம் வல்ல இறைவன் அருளாசி கிடைக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல, விக்கின ங்களைத்தீர்க்கும் விநாயகனை வேண்டுகின்றேன்.

திக்கம்
30.05.2014

இவ்வண்ணம்
**வே.செந்திவேல்**
செயலாளர்

# அல்வாய் வடமேற்கு கமக்காரர் அமைப்பு

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"

இது பொய்யாமொழிப் புலவன் வள்ளுவப் பெருந்தகையின் கூற்று.

இதைவிட விவசாயத்தின் பெருமையைச் சொல்ல வேறு வார்த்தைகள் இல்லை யெனலாம். வடமராட்சியின் அழகிய கிராமம் அல்வாய் கிராமம். அல்வாய் என்பது மிகப் பெரிய கிராமம். வடக்கே கடலும் அதனை அண்டி நேர்வகிடெடுத்து வல்வெட்டித் துறையிலிருந்து பருத்தித்துறை நோக்கிச்செல்லும் வீதி. இருமருங்கும் கடல்சார் தொழில்வல்லுனர்களின் இல்லங்கள். அவற்றுக்குத் தெற்காக விவசாய நிலங்கள். பச்சைப்பசேலெனக் கம்பளம் விரித்ததுபோலக் காட்சிதரும் வெங்காயத் தோட்டங்கள். அவற்றைப் பார்க்க ஆயிரங் கண்கள் வேண்டும். குறிப்பிட்ட காலங்களில் (சிறுபோகம், பெரும்போகம்) கமக்காரர்களின் சுறுசுறுப்பான நடவடிக்கைகளும் பருவத்தே பயிர் செய்யும் பக்குவமும் பார்க்கப் பெருமைகொள்ளும்.

முன்பு எமது மூதாதையர்கள் சிறுசிறு அடைப்புக்களாக வரையறை செய்தேனும் சாமி, தினை, குரக்கன், மரவள்ளி, எள்ளு, கத்தரி, மிளகாய் எனப் பல பயிர்களையும் சுழற்சிப்பயிர்களாக நாட்டி உரிய பலாபலன்களைப்பெற்றனர். உறுதியான உண வைப்பெற்று திடகாத்திரர்களாக மிளிர்ந்தனர். இப்போது அறுக்கையாக்கிச் செய்வ தற்கான பொறுமையோ, ஒற்றுமையோ மக்களிடம் அருகி வருவதாலும் காசுப் பயிரான வெங்காயம், புகையிலை போன்றவற்றில் குறுகியகால முயற்சியில் பெருகிய வருமானத்தை ஈட்டிக்கொள்வதில் குறியாக இருப்பதனாலும் ஏனைய உணவுப் பயிர்களைச் சந்தையில் வாங்கிச் சமைக்கலாம் என்ற மனோநிலைக்குட்பட்டு அவற்றின் உற்பத்தியில் நாட்டங்கொள்ளாது விடுகின்றனர். நாம் சேதனப்பசளைகளை உபயோ

கிப்பதாலும் இயற்கை நாசினிகளை உபயோகிப்பதாலும் மனமறிந்த மரக்கறி வகைகளை உண்டு ஆரோக்கியமாக வாழமுற்படாது, கொடிய பின்விளைவுகளைத் தரக்கூடிய கிருமிநாசினிகளைப் பிரயோகித்த மரக்கறிகளை வாங்கியுண்டு வருத்தங்களைத் தேடிக்கொள்கின்றோம்.

எமது சங்கத்திற்குட்பட்ட அல்வாய் வடமேற்குப் பிரதேசம் சற்கோட்டைப்பிள்ளையார் ஆலயத்தின் மேற்குப்புற வேலியிலிருந்து ஆரம்பித்து திக்கம் சந்தி வதிரி றோட் வரையும் நீண்டு திக்கம் நாச்சிமார் ஆலயத்தை தென்மேற்குப்பகுதி எல்லையாக வரையறுத்து நிற்கிறது.

எமக்குரிய காரியாலயம் திக்கம் பணிக்கர் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ளது. அதற்குரிய காணியினைப் பெருமனதோடு சிறந்த கமக்காரரான திரு.ச.குணபாலசிங்கம் அவர்கள் தனது மகன் நவநீதன் பெயரில் 2006ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வழங்கியுதவினார்கள். இந்த இடத்திலே திக்கம் வாழ்மக்களின் வள்ளல் தன்மையை நான் நிச்சயமாகக் குறிப்பிட்டேயாக வேண்டும். இங்கே மக்களுக்குச் சேவையாற்றவென பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கெல்லாம் தனித்தனியே கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கென பல தர்மவான்கள் காணிகளை அன்பளிப்புச்செய்துள்ளனர். பல பெரியோர்களும் புலம்பெயர் உறவுகளும் மனமுவந்து கட்டடங்கள் அமைவதற்கும் புனருத்தாரணம் செய்வதற்கும் உதவி செய்துள்ளனர். அந்தவகையில் திருமதி. சிவசுந்தரம்மா கந்தவனம் (சின்னப்பிள்ளை) அவர்களின் ஞாபகார்த்தமாக கொழும்பில் சிறந்த வியாபாரியாகவும் கட்டட ஒப்பந்தகாரராகவும் பிரகாசித்து விளங்குகின்ற திக்கத்தைச்சேர்ந்த கனவான் திரு.சின்னத்துரை கனகரத்தினம் அவர்கள் தமது குடும்பம்சார்பாக கொழும்பு, யாழ்ப்பாணம் தொடர்பற்ற ஒரு போர்ச்சூழலிலும் தனது உறவினன் திரு.க.சிவசோதி அவர்களுக்கூடாக விசாலமான மண்டபத்தோடு இரண்டு காரியாலயங்களை இயக்கக்கூடியவாறான கட்டடத்தினை மிகுந்த வள்ளல் தன்மையுடன் வழங்கியிருக்கிறார்கள். அக்கட்ட வேலையினை மேற்பார்வை செய்யவென திருவாளர்கள் செ.தேவராசா (தற்போதைய உபதலைவர்), க.ஜெயக்குமார்(முன்னாள் செயலாளர்), பா.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் மேற்பார்வையாளர்களாகச் செயற்பட்டனர். அவற்றை மேலும் அழகாக வைத்திருப்பதற்கென கொழும்பிலிருந்து சில மரங்களைக் கொண்டுவந்து தந்திருக்கின்றார். அவை உரிய பராமரிப்பின்மையாலும் கிராமசேவையாளரின் அலுவலகத்திற்கும் எம்மால் வழங்கப்படுகின்ற நன்னீர் வழங்கும் சேவையைப் பெறுவதற்குமென வருகின்ற மக்களால் அந்தப்பகுதியைப் பாதுகாக்க முடியாத நிலைகாரணமாக அவை அழிந்துவிட்டன.

ஆரம்பத்திலே எமது மூதாதையர் அந்தக் காலத்தில் எமது கிராம அதிகாரிகளினூடாக ஒற்றுமை யாக விவசாய முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். வெள்ள அழிவுகளுக்கும் உற்பத்தி மேம்பா ட்டுக்குமான உபகரணங்களை வழங்குவதிலும் D.R.O போன்ற அதிகாரிகளுக்கூடாக கிராம அதிகாரிகள் (விதானைமார்) பெற்றுக்கொடுத்தனர். பின்னர் C.O விவசாய உத்தியோகத்தர்களின் மூலம் பெற்றனர். எமது அமைப்பும் முன்னர் அல்வாய் மேற்கு அமைப்பாகவே இருந்தது. பின்னர் கிராம சேவையாளர் பிரிவு அல்வாய் மேற்கு J/396, அல்வாய் வடமேற்கு J/397, எனப் பிரிக்கப்பட்டமையினால் தனித்து இயங்கி வருகின்றது. இந்த அமைப்பு மெதுமெதுவாக வளர்ச்சி பெற்று அந்தந்த நேரங்களில் அதிகாரிகளுக்கூடாக சேவைகள் பெற்று மக்களைச் சென்றடைய ஒரு ஊடகமாகத் திகழ்கின்றது. இந்தப் பிரிவிலுள்ள சேவைமனப்பான்மை கொண்ட பலரைக் காலத்திற்குக் காலம் மக்கள் தெரிவு செய்து நற்சேவைகளைப் பெற்றுவருகின்றனர். அந்த வகையில் விவசாய உபகரணங்களை மாடு, ஆடு, கோழிக்கூடு, பழவகை மரங்களை, தென்னை மரங்களை, வீட்டுத்தோட்டத்திற்கான

விதைகளை அவ்வப்போது நிறுவனங்களுக்கூடாகவும், விவசாயப்போதனாசிரியருக்கூடாகவும் பிரதேசசெயலர் பிரிவுக்கூடாகவும் கிராமசேவையாளர் மூலமும் பெற்று மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

அவ்வப்போது திண்ணைவேலியிலுள்ள யாழ் மாவட்டத்திற்கான தலைமை அலுவலகத்திற்கு விவசாயிகளை அழைத்து காலத்திற்கேற்ப வேண்டிய பயிற்சிகளை வழங்கி வருவதனால் எமது அமைப்பிலுள்ள விவசாயிகளும் வேண்டிய அறிவினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

I.O.M நிறுவனம் ஒரு சிறு உழவு இயந்திரத்தினை (Landmaster) வழங்கியுதவியிருக்கின்றது. இதனை 2008ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இருந்த நிர்வாகத்தினர் (தலைவர் கு.வேலும்மயிலும், செயலாளர் க.நேசராசா) குறிப்பிட்ட நிறுவத்தினருடனும் பிரதேசசெயலருடனும் தொடர்புகொண்டு இதனைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. அதன்மூலம் எமது மக்களுக்கு தனியாரை விட குறைவான விலையில் உழவுசெய்தும் (கடன் அடிப்படையிலும்) வந்துள்ளனர். அதன் வளர்ச்சி காரணமாக எமது அமைப்பு ஒரு பிளவு கலப்பையையும் எமது நிர்வாக காலத்தில் கொள்வனவு செய்திருக்கின்றது. தற்போது நாட்கூலிகள் எல்லாத் தொழிலிலும் கூடியிருப்பதனால் நாம் ஒரு சாரதியினை ஒழுங்குசெய்வதில் மிகவும் சிரமமாகவே உள்ளது. அதனால் அந்த வருவாய் குறைந்து விட்டது. ஆயினும் நாம் எமது மக்களுக்கு நன்னீர்ச் சேவையினை வழங்குவதற்காக பைப் லைனிங் செய்து கட்டடம் தந்த திருவாளர் சி.கனகரத்தினம் அவர்கள் வழங்கிய 1000l நீர் கொள்கலனை நிறுத்த வென மலசலகூடத்திற்கு மேல் தளம் அமைத்து நீர்வழங்கி வருகின்றோம்.

இதைவிட இலங்கை வங்கியில் சேமிப்புக்கணக்கிலிருந்து ரூபா ஒரு இலட்சத்தினைப் பெற்று அதனை நிலையான வைப்பிலிட்டு அதன் வட்டிப்பணம் சேமிப்புக் கணக்கிற்கு வருவதற்கான ஏற்பாடு செய்துள்ளோம்.

முன்னர் ஊற்று நிறுவனத்திடமிருந்து விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது. இப்போது ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி போன்ற வங்கிகளிடமிருந்து விவசாயக்கடன்கள் பெற்றுக் கொடுக்க நிர்வாகம் சிபாரிசு செய்து உதவுகின்றது. விவசாயிகளும் உரியகாலத்தில் கடன் களைச் செலுத்தி வங்கிகளுக்கும், நிர்வாகத்தினருக்கும் நற்பெயரைத் தேடித்தருகின்றனர். உச்சக் கடனாக ரூபா இரண்டு இலட்சத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அவ்வப்போது விவசாய நடவடிக்கைகளின்போது சுவரொட்டிகளின் மூலம் கால்நடை வளர்ப் போருக்கான அறிவித்தல்களை வழங்கி பயிர்ப்பாதுகாப்பைச் செய்கின்றனர். கூடுதலான கால்நடை வளர்ப்போர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். கட்டாக்காலி மாடுகள் கட்டப்பட்டு உரியகாலத்தின் பின்னர் உரிய அறிவித்தல்களை அயற்கிராமங்களின் அதிகாரிகளுக்கூடாக (கிராமசேவையாளர்) அறிவித்து, பின்னர் பத்திரிகை மூலமாகவும் ஏலத்திற்கான அறிவித்தல் செய்து கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராமசேவையாளர் முன்னிலையில் ஏலம் விடப்பட்டிருக்கிறது.

கட்டாக்காலிகளின் தொல்லைகளிலிருந்து ஓரளவேனும் விடுபடவென திணைக்களத்திலிருந்து முள்ளுக்கம்பிகள் பெற்றிருக்கிறோம். அவை குறுகிய பிரதேசத்தைத்தான் பாதுகாக்க உதவும்.

எமது அமைப்பிற்கு அருகால் செல்லும் வெள்ள வாய்க்கால் கடற்கரை மதகுக்கூடாகச் செல்கின்றது. இதனை அண்மையில் ஆழப்படுத்தியிருந்தோம். மதகை அண்டிய பகுதியில் ஒரு பழைமை வாய்ந்த துரிசுக் கட்டடம் உண்டு. அதனுடைய துரிசு நிச்சயமாகப் பழுதுபார்க்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் கடல்மட்டம் ஏறினால் இதன் வழியாக உள்ளூருக்குள் உவர்நீர் நுழைய வாய்ப்புண்டு. நன்னீர் உவராக மாறும் வாய்ப்புண்டு. மழை நீரைத் கடலுக்குச் சேர விடாமல் ஓரளவேனும் தேக்கி வைப்பதன் மூலம் தோட்டக் கிணறுகளின் நீர் நன்னீராகப் பேணப்படும் இல்லையேல் நன்னீர் உவராக மாறும் வாய்ப்பு வரும். இதனைப் பிரதேச செயலரின் ஒன்றுகூடலின்போது வலியுறுத்தியிருந்தோம். அன்று சமூகமளித்த பொறியியலாளரும் அதனைச் செய்யத்தான் வேண்டும் எனவும் தாம் அதனைப் பார்வையிடுவோம் என்றார். ஆயினும் இதுவரை எதுவித நடவடிக்கையும் இடம் பெறவில்லை. பிரதேசசபையினருக்கும் கமநலச்சேவை நிலையத்திற்கூடாக அறிவித்துள்ளோம்.

எமது விவசாய நிலங்களை ஊடறுத்துச்செல்லும் வீதி (நாச்சிமார் ஆலயத்தின் அருகால் சென்று சக்கோட்டைப்பிள்ளையார் வரையானது) உற்பத்திப் பொருட்களை எடுத்து செல்வதற்கோ நீர் இறைக்கும் இயந்திரத்தை இழுத்துச்செல்வதற்கோ உகந்ததாக இல்லை. இதுபற்றி பிரதேச சபையினர்க்கு கடிதம்மூலமாக அறிவித்துள்ளோம். அத்தோடு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் சார்பாகவும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரை கருத்தில் எடுக்கப்படவில்லை. அபிவிருத்தி நிதி போதாமை காரணமாக இருக்கலாம். ஆயினும் விரைவில் உரியவர்கள் கண்களில் இது படவேண்டுமென ஆதங்கப்படுகிறோம்.

எமது அமைப்பிற்கு மக்கள் கொடுத்துவரும் ஆதரவும் அதிகாரிகள் வழங்கும் சலுகைகளும் இன்னும் விரிவடைந்து வருமானால் எமது நிர்வாகம் மேலும் பல செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல ஏதுவாக இருக்கும்.

அறிந்த வகையில் தரவுகள் கொண்டு
நிர்வாகசபையின் அங்கீகாரத்துடன்
**சு.மகேஸ்வரன்**
தற்போதைய தலைவர்

# திக்கம் மானாண்டிச் சந்தை

"சந்தை" என்றவுடன் நாம் எமது கிராமத்தில் அல்லது நகரத்தில் உள்ள சந்தை என்பதனையே நினைக்கின்றோம். நாம் எமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொழுது அருகிலுள்ள சிறிய சந்தையைப் பற்றியே கருதுவோம். ஆனால் நவீன உலகில் சந்தை எனக் கூறும்பொழுது அதன் எல்லை சர்வதேச எல்லையாகவே காட்சியளிக்கின்றது.

"சந்தை" என்றால் என்ன? இதன் முக்கிய அம்சம் யாதெனப் பார்க்கும்பொழுது பொருளை விற்பனை செய்வோரும் வாங்குவோரும் கூடி, விலைபேசி என்ன விலைக்கு ஒரு பொருளைப் பரிமாறுவது எனத் தீர்மானித்தலையே குறிக்கும். இத்தகைய அம்சத்தைக் கொண்ட சந்தை ஒன்று எமது கிராமத்தில் ஏறத்தாழ நூறு வருடங்களுக்கு முன்பே உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டேயிருக்கின்றது. நில வளம், கடல்வளம், கற்பகதரு வளம் ஆகிய வளங்கள் நிறைந்த எமது கிராமத்தில் இவ்வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அதாவது விவசாய உற்பத்திப் பொருட்களையும், குடிசைக் கைத்தொழில் பொருட்களையும், கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்படும் மீன்வகைகளையும் விற்பனை செய்யும் நோக்குடன் இச்சந்தை உருவாக்கப்பட்டது. இச்சந்தை திக்கம் சந்தியிலிருந்து நெல்லியடி நோக்கிச்செல்லும் வீதியில் எமது கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இன்று இச்சந்தை இயங்கிக்கொண்டிருக்கும் இடத்தில் ஆரம்பத்தில் நடைபெறவில்லை. (சந்தை கூடவில்லை) ஆரம்பத்தில் மேற்குறிப்பிட்ட வீதியோரத்தில் அமைந்திருந்த "மானாண்டி" என அழைக்கப்படும் இடத்திலேயே (காணியிலேயே) மக்கள் கூடி சந்தை செயற்பட்டது. பின்பு தற்பொழுது இயங்கும் இடமாகிய முடிக்குரிய ஆதனமாக இருந்த இடத்தில் கட்டைவேலிக் கிராமசபையால் சந்தைக்குரிய கட்டடம் கட்டப்பட்டு சந்தை இயங்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் சந்தை இயங்கிய இடத்தின் பெயராகிய

"மானாண்டி" என்ற பெயரிலேயே இன்றும் திக்கம் சந்தை "திக்கம் மானாண்டி சந்தை" என்ற பெயரா லேயே அழைக்கப்பட்டு வருகின்றது. இச்சந்தையைச் சிலர் "கல்லாண்டி சந்தை" எனவும் அழைப்பர். கட்டைவேலிக் கிராமசபையின் கீழ் இயங்கிய சந்தையாகும்.

இச்சந்தை நூறு வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையும் சிறப்பும் கொண்ட சந்தையாகும். வடமராட்சிப் பிரதேசத்திலே உள்ள நகரங்களிலுள்ள சந்தைகளைவிட கிராமங்களில் உருவாக்கப்பட்ட சந்தைகளில் இச்சந்தை சிறந்த, பிரபலம்பெற்ற சந்தையாக விளங்கியது.

சந்தைக்குரிய கட்டடங்கள் முடிக்குரிய ஆதனக் காணியின் நடுப்பகுதியிலேயே கட்டப்பட்டிருந்தன. சந்தை மூன்று பிரிவாக இயங்கியது. விவசாயப் பொருட்களை விற்கும் காய்கறிச் சந்தை, மீன்சந்தை, பெட்டி, பாய் சந்தை என மூன்று பிரிவாக இயங்கியது. காய்கறிச் சந்தைக்குரிய கட்டடத்தில் காய்கறி விற்பனையும் மீன் சந்தைக்குரிய கட்டடத்தில் மீன் விற்பனையும் நடைபெற்றன. இவ்விரு சந்தைகளும் பகலிலும் மாலையிலும் கூடி இயங்கின. ஆனால் பெட்டி, பாய் சந்தை மாலையில் மட்டுமே நடைபெற்றது. இச்சந்தைக்கென கட்டடம் இருக்கவில்லை. வீதியோரத்தை அடுத்து பெரிய விருட்சமாக நின்ற ஆலமரத்தின் கீழேயே வாங்குவோரும் விற்போரும் கூடினர். இம் மூன்று பிரிவான சந்தைகளிலும் எமது கிராமத்து மக்கள், உற்பத்தி செய்த பொருட்களுடன் அயற் கிராமங்களான வதிரி, பொலிகண்டி, கொற்றாவத்தை ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களின் உற்பத்திப் பொருட்களும் விற்பனைக்கு வந்தன. அத்துடன் சில வியாபாரிகள் கொடிகாமம், நீர்வேலி ஆகிய இடங்களி லிருந்தும் விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்து வந்து இச்சந்தையில் விற்று இலாபம் அடைந்தனர். இச்சந்தையில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக நெல்லியடி, வதிரி, அல்வாய், பொலிகண்டி, கொற்றாவத்தை, சக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்து மக்கள் வந்தனர். மாலை நேரத்தில் நடைபெற்ற பெட்டி, பாய்சந்தையில் பெட்டி, பாய்களைக் கொள்வனவு செய்து நாட்டின் ஏனைய இடங்களுக்கு அனுப்புவதற்காக மொத்த வியாபாரிகளும் வருகை தந்திருந்தனர். மொத்த வியாபாரிகள் பெட்டி, பாய்களை நாளாந்தம் கொள்வனவு செய்து கடை அறைகளில் சேர்த்து வைத்து அப்பொருட்களை வாகனங்கள் மூலம் நாட்டின் ஏனைய இடங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்தனர். பெட்டி, பாய்களைக் கொள்வனவு செய்வதற்காக வடமராட்சியின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்தனர். பெட்டி, பாய் விற்பனையில் இச்சந்தை சிறந்து விளங்கியது. அத்துடன் புகையிலை, பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல் ஆகிய பொருட்களையும் அதிக அளவில் கொள்வனவு செய்து ஏனைய இடங்களுக்கு அனுப்பினர்.

சந்தைக் கட்டடக் காணியின் எல்லைகளில் உள்ள தனியார் காணிகளில் தனியார் பலசரக்குப் பொருட்களையும் ஏனைய பொருட்களையும் விற்பதற்காகக் கடைக் கட்டடங்களைக் கட்டியிருந்தனர். சந்தையின் இடப்பக்கமாகவும் தெற்குப் பக்கமாகவும், கிழக்குப் பக்கமாகவும் பல கடைகள் தனியாரால் நடத்தப்பட்டன. சந்தைக்குவரும் நுகர்வோர் காய்கறி, மீன்களுடன் தமக்குத் தேவையான ஏனைய பொருட்களையும் இக்கடைகளில் வாங்கிச் சென்றனர்.

சந்தைக் கட்டடத்திற்கு மேற்காக வடக்குத் தெற்காகச் செல்லும் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாகவும் பெரிய கடைக்கட்டடங்கள் இருந்தன. இக்கட்டடங்களில் தெற்குப் பக்கமாக இருந்த கட்டடத்தின் ஒரு அறையில் நுகர்வோர் சங்கக்கடை இயங்கியது. இந்நுகர்வோர் (நுகர்ச்சி) சங்கக்கடை

பின்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடையாக வளர்ச்சியடைந்து. இந்தக் கட்டடத்தின் அடுத்த அறையில் "யானை மார்க்" (Elephant House) சோடா விற்பனை நடைபெற்றது. இக்கட்டடத்தின் வடக்குப்பக்கமாக இருந்த விசாலமான அறையில் மருந்தகம் (Dispensary) ஒன்று இயங்கியது. செவ்வாய்க்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் அரச மருத்துவர் ஒருவர் வருகைதந்து நோயாளர்களைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கி சிகிச்சை அளித்தார்.இதனால் எமது கிராம மக்களும் அயற் கிராமமக்களும் நன்மையடைந்தனர். வீதியின் மேற்குப் பக்கமாகவிருந்த அடுத்த பெரிய கட்டட அறைகளில் படப்பிடிப்பு (Studio), சிகையலங்காரம், தையல் வேலை, சிறிய வாகனங்கள் திருத்துதல் ஆகிய செயற்பாடுகள் நடைபெற்றன. அடுத்த கட்டடம் உணவகம் ஆகச் செயற்பட்டது. இவ்வாறு எமது அன்றாடத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் நிறைவுசெய்த சந்தையாக மானாண்டிச்சந்தை திகழ்ந்தது.

இச்சந்தை கட்டைவேலிக் கிராமசபையினர் பொறுப்பில் அதற்கு வருமானம் ஈட்டித்தரும் சந்தையாகவும் இருந்தது. வருடாவருடம் சந்தைக் குத்தகையை (வாடகையைப்) பெறுவதற்காக ஏலம் நடைபெறும். ஏலத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர் விற்பனையாளரிடம் குத்தகைப் பணத்தைப்பெறுவர். சந்தைக்கென நீர்வசதி செய்வதற்காக ஒரு கிணறும் கட்டைவேலிக் கிராம சபையால் அமைக்கப்பட்டது. ஆனால் அக்கிணற்றில் நீர் குறைவாக ஊறியமையால் கிணற்றை உபயோகிக்கமுடியாமலிருந்தது. சந்தைக்குவரும் மக்களின் குடிநீர் தேவைக்காக கட்டைவேலிக் கிராமசபை ஒரு தொழிலாளிமூலம் ஒவ்வொருநாளும் நீர்த்தாங்கியில் நீர் நிரப்பிவித்து குடிநீரை வழங்கியது. அத்தொழிலாளிக்கு மாதாந்தம் சம்பளம் வழங்கியது. சுத்திகரிப்புத் தொழிலாளி மூலம் சந்தையின் சுத்தம் பேணப்பட்டது.

நீண்டகாலமாக இருந்த பழைய சந்தைக் கட்டடம் புனரமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டமையால் 1982ஆம் ஆண்டளவில் கட்டைவேலி கிராமசபையால் புதிய சந்தைக் கட்டடம் கட்டப்பட்டது.

1983ஆம் ஆண்டின் பின்பு நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழலால் சந்தை பெரிதும் பாதிக்கப்பட்டது. விற்பனைப் பொருட்களும் வியாபாரமும் குறைவடைந்து செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் 1987ஆம் ஆண்டு வடமராட்சியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்பொழுது பிரதான வீதியின் மேற்குப் பக்கமாகவிருந்த கடைக் கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டன. இக்காலத்துடன் மக்களின் இடப்பெயர்வு காரணமாகவும் சந்தை பழைய நிலையை இழந்தது. சந்தையின் தெற்குப் பக்கமாகவிருந்த தனியாரின் கடைகளும் இயங்கமுடியாதநிலை ஏற்பட்டது. சந்தை பழைய நிலையை இழந்தாலும் தொடர்ந்து இயங்கிக்கொண்டேயிருந்தது. சந்தைக்குவரும் விற்பனையாளரும் நுகர்வோரும் குறைவடைந்தனர்.

அரசாங்கம் உள்ளூராட்சிச் சபைகளின் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியமையால் கட்டைவேலிக் கிராமசபையின் கீழ் இயங்கிய இச்சந்தை 1987ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேசசபையின் கீழ் 1988ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்டது.

2002ஆம் ஆண்டின் பின்பு ஓரளவு சமாதான காலமான பின்பு சந்தை பழைய நிலைக்கு ஓரளவு திரும்பத்தொடங்கியது. சந்தைக்குரிய கட்டடங்கள் பற்றாக்குறையாக இருந்தமையால்

2007ஆம் ஆண்டு UNDPயின் நிதி ஒதுக்கீட்டில் சந்தையின் வடகிழக்குப் பக்கமாக மரக்கறிச் சந்தை ஒன்று கட்டப்பட்டது. சந்தைக் கட்டடங்களும் கடைக் கட்டடங்களும் கட்டப்பட்டு இச்சந்தை சிறப்பாக இயங்கவேண்டும், மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டும், என்ற நோக்கத்துடன் எமது கிராம திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினர் அரச அதிபருடனும் பருத்தித்துறை பிரதேச சபையினருடனும் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்ததன் பயனாக 2013ஆம் ஆண்டு ஏறத்தாழ மூன்று கோடி ரூபா செலவில் NELSIP நிதி ஒதுக்கீட்டில் பருத்தித்துறை பிரதேசசபையால் புதிய சந்தைக் கட்டடங்களும் கடைக்கட்டடங்களும் கட்டும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. பழைய சந்தைக்கட்டடங்கள் உடைக்கப்பட்டு அகற்றப்பட்டன. சந்தையில் நின்ற பெரிய ஆலமரமும் தறிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட இவ்வேலைத் திட்டத்தினால் ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்துமூன்று இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரம் ரூபா செலவில் புதிய சந்தை கட்டிமுடிக்கப்பட்டது. இச்சந்தைக்கு சுற்றுமதில் கட்டுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் கட்டடம் கட்டும் ஆரம்பவேலை தொடங்கும்பொழுது பத்து இலட்சம் ரூபா மதிப்புள்ள வேலை மக்களின் பங்களிப்பாக இருக்கவேண்டும் என NELSIP தீர்மானித்தபடி அவ்வேலையை திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரும், பூமகள் சனசமூக நிலையத்தினரும், இளம்பிறை சனசமூக நிலையத்தினரும் செய்துமுடித்தனர். 2007ஆம் ஆண்டு UNDPயின் நிதிஒதுக்கீட்டில் கட்டப்பட்ட மரக்கறிச் சந்தை மீன் சந்தையாக இயங்கும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்புதிய சந்தைக்கான திறப்புவிழா விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கின்றோம்.

இச்சந்தை சிறப்பாக இயங்கும்பொழுது எமது கிராமமக்களும் அயற் கிராம மக்களும் பெரும் நன்மையடைவார்கள் என்பதில் ஐயமில்லை. இதனைச் சிறந்தமுறையில் பாதுகாத்து வளர்ச்சியடையச்செய்வது எமது கடமைகளில் ஒன்றாகும்.

**திருமதி ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜா**
ஓய்வுநிலை அதிபர்

# இலங்கையின் கல்வியில் புதிய போக்குகள்
# New Educational Trend in Srilanka

இலங்கையின் கல்வி வரலாறு வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிடையே ஒப்பு நோக்குகையில் ஓர் சமூக நீதிப் பண்புடையதாகும். உலகளாவிய ரீதியில் ஓங்கி ஒலித்து வரும் "அனைவருக்கும் கல்வி" என்னும் கொள்கை வழி நாட்டிலுள்ள அனைத்துச் சிறார்களுக்கும் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கல்வியை இலவசமாக வழங்குவதற்கான முன்னெடுப்புகள் 1930 களிலேயே இலங்கையில் முகிழ்த்தெழுந்த கல்வி பற்றிய கரிசனைகளால் வளம்பெற்று வளர்ச்சி கண்டு இன்று வரை நிலைத்து நிற்கின்ற ஓர் சமூக நீதியாக இலங்கையில் வேரூன்றியுள்ளது. மனித குலத்தின் அடிப்படைத் தேவைகளான கல்வியும் சுகாதாரமும் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்ற ஒரு நாடு என்ற பெருமை பல விமர்சனங்களையும் தாண்டி இலங்கைக்குரியதாக இன்றும் இருந்து வருகின்றது. இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் சேவைகளை இலவசமாக வழங்கும் கொள்கை யானது நாட்டின் அரசியலோடும் இறுகப் பிணைக்கப்பட்டதொன்றாகிவிட்டது. இலங் கையில் கல்வியை இலவசமாக வழங்குவது பற்றிய பல வாதப்பிரதிவாதங்கள் களநிலையில் அறிவுபூர்வமாகக் காலத்துக்குக்காலம் முன்வைக்கப்படுகின்ற போதிலும் கல்வியை இலவசமாக வழங்குவதென்பது இலங்கையின் அரசியலோடு கலந்த தொன்றாகிவிட்டமையால் இலங்கையில் இலவசக்கல்வியின் ஆயுள் இன்னமும் நீடித்த தொன்றாகவே காணப்படுகின்றது. எவ்வாறெனினும் நடைமுறையில் கல்வியை வழங்குவதிலும் கல்வியைப் பெறுவதிலும் பிரித்தானியக் காலத்துக் கல்வி முறையின் இருமைத் தன்மையும் தரவேறுபாடுகளும் இலங்கையின் கல்வித்துறையில் மீண்டும் முனைப்படைந்துள்ளமை இன்று நிதர்சனமாகியுள்ளது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் பிரித்தானியர்காலக் கல்விமுறையானது ஆரம்பத்தில் கல்வியில் இருமைத் தன்மையைத் தோற்றுவித்ததுடன் பொருளாதார நிலையிலும் வாழ்க்கைப்பாணியிலும் வெவ்வேறு நிலைமைகளைக் கொண்ட இரு சமூக வர்க்கம் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தது. வேலைவாய்ப்பினை நோக்காகக் கொண்ட ஆங்கில மொழிமூலமான கல்வியை சமூகத்தில் வசதி படைத்த ஒரு சாராரும் அடிப்படைத் தேவைகளுக்குப் போதுமான சுயமொழிக் கல்வியினை(தமிழ்/சிங்களம்) குடித்தொகையில் ஒரு பெரும் பகுதியினராகிய மற்றொரு சாராரும் பெற்றுவந்தனர். குடித்தொகையில் மேலும் ஒரு பெரும்பகுதியினர் பாடசாலைக்கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றிருக்காமை அக்காலத்தின் விசேட அம்சமாகும்.

1960ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ இந்நிலை நீடித்ததெனினும் 1940 களில் இலங்கையின் கல்வி வரலாற்றில் முதற்கட்டப் புரட்சியெனக் கொள்ளப்படும் அனைவருக்கும் கல்வியை இலவசமாக வழங்குவதற்கான கல்வி முன்மொழிவுகளின் செயற்பாடுகளை முன்னெடுத்தமையால் கல்வியில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையானது வெகுவாக அதிகரித்ததுடன் கல்வியின் தரத்தை அதிகரிப்பதற்கான முதற்கட்ட செயற்பாடுகளும் இலங்கையின் கல்வித்துறையில் புரட்சிகரமாக முன்னெடுக்கப்பட்டன. கல்வியில் உபகரண மயப்படுத்தலும் (Instrumentalization) செயன்முறை கற்பித்தல் (Practical Teaching) முறைகளும் புகுத்தப்பட்டன. கிராமத்து மாணவர்களும் செயற்பாடு சார்ந்த உற்பத்திக்கு பங்களிக்கக்கூடிய வேலைவாய்ப்புக்குரிய தரமான கல்வியினைப் பெறவேண்டும் என்னும் நோக்கில் சகல வசதிகளுடனும் நாடு முழுவதற்குமாக பரவலாக ஸ்தாபிக்கப்பட்ட 54 மத்திய மகா வித்தியாலயங்களின் தோற்றம் இதற்கு வலுவான ஒரு அடித்தளமாக அமைந்தது எனலாம். இதனால் அதுவரை நிலவி வந்த கல்வியிலான இருமைத்தன்மையினால் பாதிக்கப்பட்டிருந்த கிராமப் புற ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் நன்மை அடைந்ததுடன் கல்வியின் இருமைத் தன்மையை சமன் செய்து சம சந்தர்ப்பம் (Equality) காணும் திசை நோக்கி இலங்கையின் கல்வி அமைப்பு (பாடசாலைக்கட்டமைப்பு) நகரத்தொடங்கியது.

கிராமப்புறத்து கெட்டித்தனம்மிக்க மாணவர்கள் பலர் நகரப் புறங்களிலும் நாட்டின் முக்கியமான அரச பதவிகளிலும் அமரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதுடன் நாட்டின் பொருளாதார விருத்தியிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். நகரப்புற பிரசித்தி மிக்க பாடசாலைகளுக்கு ஈடாக கிராமப்புறங்களில் ஸ்தாபிக்கப்பட்ட மத்திய கல்லூரிகளிலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், விளையாட்டு முதலான இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இதற்கான அடிப்படையினை நல்கின. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மாணவர் விடுதிகளில் தங்கியிருந்து பூரணத்துவமுடைய ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. இருப்பினும் நகரப்புறத்து வசதி படைத்த பாடசாலைகள் தொடர்ந்தும் வலுவான சமூக ஈர்ப்பு சக்தியுடன் தொழிற்பட்டன.

உலகில் ஏற்பட்ட ஜனநாயக ரீதியான மாற்றங்கள், விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகள் காரணமாக கல்வியானது சமூகமயமாக்கற் பண்புடன் சகல நாடுகளிலும் ஏற்படுத்திய தாக்கத்தினால் இலங்கையிலும் சுதந்திரமான பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. "அனைவருக்கும் கல்வி" என்னும் கொள்கை வழி கல்வியும் அதற்கான அடிப்படை வசதிகளும் இலவசமாக வழங்கப் பட்டமையால் இலங்கையில் கல்வியறிவுள்ளோர் வீதமானது உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்

கீடாக உயர்வடைந்துள்ளமையானது ஒரு வெற்றியடைவாகக் கொள்ளப்படுகின்ற போதிலும் கோளமயமாதல் (Globalization) நடைமுறையால் குறுகி அடர்ந்துள்ள இன்றைய உலகின் தேவைக ளுக்குப் போதுமான தரத்தினை இலங்கையின் கல்வியானது கொண்டிருக்கவில்லை என்னும் குறைபாடு உணரப்பட்டு இன்று அதனைப் போக்குவதற்கான முயற்சிகள் பல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**கல்வி தொடர்பான நவீன எண்ணக்கருக்கள்:-**

கல்வி என்பது மனிதனின் பிறப்புரிமையாகக் கொள்ளப்பட்டு, நடத்தை மாற்றம், சூழலில் பொருந்தி வாழ்தல், மனித வாழ்க்கைக்கான கலாச்சார ஊடகம், வாழ்க்கையில் மகிழ்ச்சிகளையும் அதிஷ்டத்தினையும் அடைதல், மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தினை வெளிக்கொணர்தல் முதலான கொள்கைகளைத் தாண்டி வளர்ச்சி கண்ட கல்வியானது இடைக்காலத்தில் வாழ்வதற்கான அதன் நீண்டகால நோக்கத்தில் தேக்க நிலை கொண்ட தன்மையினை வெளிப்படுத்தியமை ஆய்வுமூலமாகவும் அனுபவத்திலும் வெளிப்பட்டன. இதனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் பின்வரும் கல்வியின் புதிய எண்ணக்கருக்கள் நோக்கிப் பயணிக்க வேண்டிய தேவையேற்பட்டது.

**1.தனியாள் விருத்திக்கான கல்வி.**

சமூகத்தின் மிகச்சிறிய அலகு ஒரு தனியாளாகும் என்பதன் அடிப்படையில் தனியொருவரை அவரது அறிவு, திறன், தேவைகள், இயலுமைகள், ஆற்றல்களை இனங்கண்டு மேம்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த சமூகத்தினையும் அபிவிருத்தி செய்யலாம் என்னும் அடிப்படையில் கல்வி முன்னெடுக்கப்படுவதனை இந்த எண்ணக்கருவானது தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கையின் இன்றைய கல்விச்சீர்திருத்தங்களும் செயற்பாடுகளும் இவ்வெண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**2.பொருளாதார அபிவிருத்திக்கான கல்வி.**

மனித குலத்தின் மகிழ்ச்சிக்கும் விருத்திக்கும் அடிப்படையை வழங்கக்கூடியது பொருளாதார விருத்தியாகும் என்பது இன்றைய உலகின் அனுபவ உண்மையாகும். கல்வியின் மூலம் உற்பத்தி அதிகரிப்பு, அதனால் தனிநபரின் வருமான அதிகரிப்பு அவரின் நடத்தை ஒழுங்கமைவு மேம்பாடு என்பவற்றினூடாக சமூக விருத்தி ஏற்படும் என்பது இவ்வெண்ணக்கருவின் தாற்பரியமாகும். கல்வி மீதான செலவீடு எதிர்கால சமூக அபிவிருத்திக்கான முதலீடாகக் கொள்ளப்படும். இதனோர் வெளிப்பாடே தொழிற்கல்வியாகும். இலங்கையிலும் கல்வியில் இவ்வெண்ணக்கருவை அடிப்ப டையாகக் கொண்டே கல்விச் சீர்திருத்தங்களும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**3.தேசிய ஒருங்கிணைப்புக்கான கல்வி.**

உலக நாடுகளில் சமூகங்களிடையே பல்லினத் தன்மையென்பது நிதர்சனமானதாயுள்ளது. இத்தன்மையானது இனம், மதம், மொழி, நிறம், சிந்தனை, மக்கள் வாழ்க்கைமுறை, மக்களது விருப்பங்கள், நம்பிக்கைகள் முதலானவற்றில் சமநிலைவேண்டி நிற்கின்றன. பல்லினத்தன்மை யென்பது யதார்த்தமும் அழகும் அபிவிருத்திப்பாங்கும் கொண்டதெனும் உண்மை கல்வியினூ

டாக முன்னெடுக்கப்படவேண்டிய தேவையுள்ளது. பல்லினச் சமூகங்களிடையே சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்குரிய திறன்களை மக்களிடம் கல்வி வளர்த்தெடுத்தல் வேண்டும் என்னும் கொள்கை இவ்வெண்ணக்கருவின் வழி உருவானதாகும். சமத்துவம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, பிறருக்கு மதிப்பளித்தல் முதலான மனிதநேயப் பண்புகள் கல்வி மூலம் வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்பது இந்த எண்ணக்கருவின் வழி எதிர்பார்க்கப்படுகின்றது.

**4.நிலைத்து நிற்கும்/தளராநிலை அபிவிருத்திக்கான கல்வி (Education for Sustainable Development)**

"நவீன உற்பத்திச் சமுதாயம் எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு முகங்கொடுத்து நிலைத்து நிற்கும் அபிவிருத்தியினைப் பெறவேண்டிய திறன்களை மக்களுக்கு கல்வி வழங்குதல் வேண்டும். வளங் களையும் உற்பத்திகளையும் எதிர்கால மக்கள் சமுதாயத்தினை பாதிக்காத வகையில் பயன்படுத்தவும் மேற்கொள்ளவும் கல்வி அடிப்படையாக அமைதல் வேண்டும்" என்னும் எண்ணக்கருவானது இன்றைய உலகின் உற்பத்திகள் மீதும் கல்விச்செயற்பாடுகளின் மீதும் பெரும் கட்டுப்பாடுகளையும் தாக்கங்களையும் பிரயோகிக்கின்றன. இதற்கான சட்டங்களும் விதிகளும் நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் முன்னெடுக்கப்படுவதிலிருந்து இவ்வெண்ணக்கருவின் முக்கியத்துவம் புலப்படுகின்றது.

**5. சமூக மயமாக்கலுக்கான கல்வி.**

உலகமயமாதலின் விளைவுகளையும் அதன் தாக்கங்களையும் எதிர்கொள்வதற்கான திறன் களை மக்களிடம் வளர்ப்பதாக நவீன கல்வி அமைதல் வேண்டும் எனும் உலகளாவிய எண்ணக் கருவானது இன்று இலங்கையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கல்விச் சீர்திருத்தங்களில் உள்வாங்கப்பட்டு நடைமுறைக்கிடப்பட்டுள்ளது. இவை தவிர திறந்த கல்வி, தகவல்தொடர்பாடற் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி, பாடசாலைக்கு வெளியே பெறும் கல்வி, கற்றல் மேம்பாட்டுக் கல்வி, திறந்த பாடசாலைக் கல்வி என நவீன கல்விச் செயற்பாடுகள் விரிந்து பரந்து முன்னெடுக்கப்படுகின்றன. இது இன்றைய மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாயுள்ளன.

21ஆம் நூற்றாண்டுக்கான கல்விக்காக இன்று பாரம்பரிய மற்றும் அண்மித்த கடந்த காலக் கல்வி அனுபவங்களிலிருந்து கல்வியியலாளர்களால் பல ஆலோசனைகள் முன்வைக் கப்படுகின்றன.

- மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள், திறன்கள், விருப்பங்களுக்கேற்ப அவர்கள் தனியாட் களாக சுயமாகக் கற்பதற்கான ஏராளமான தெரிவுகள் வழங்கப்படவேண்டும். அதாவது பல் வகைப் பாடநெறிகள் / பயிற்சிகள் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் வேண்டும்.
- கற்றற் செயற்பாடுகளுக்காக வளநிலையங்கள், நூல்நிலையங்கள், ஆய்வு நிலையங்கள், செயற்பாட்டறைகள், அரும்பொருட்காட்சியகங்கள் முதலியவற்றை நிறுவுதலும் பராமரித்தலும் கல்விச்செயற்பாடுகளில் முக்கியத்துவம் பெறுதல் வேண்டும்.

- பாடசாலைக் கல்வியிலுள்ள வயதெல்லை, வகுப்புக்கள், தரங்கள், நெகிழ்ச்சியற்ற கட்டாயப் பாட ஏற்பாடுகள் முதலியவற்றை நீக்கி நெகிழ்ச்சியுடைய, வரையறையற்ற கல்விக்கு வழிவகுத்தல் வேண்டும்.
- மனிதப்பண்பாட்டியல் மேம்பாட்டுக்கு அடிப்படையாக அமையும் அழகியற் செயற்பாடுகளுக்கு கல்வியில் அதிகூடிய முக்கியத்துவமளித்தல் வேண்டும்.
- பாடசாலைக்கல்வி பொதுக்கலைத்திட்டத்தோடு உள்ளூர் பண்பாட்டு அம்சங்களுக்கும் கட்டாய இடமளித்தல் வேண்டும்.
- பாடசாலை - சமூகத்தொடர்புகளை உயிர்த்துடிப்புள்ள வகையில் நெருக்கமாக்குதல் வேண்டும்.
- பொதுக் கல்வியின் களநிலை அமைப்பான பாடசாலைத் தொகுதியினை வினைத்திறன் உடையதாக்குதல் வேண்டும்.

நிறைவாக நோக்குமிடத்து, இன்றைய கல்வி விளைவுகள் அறிவு வளர்ச்சி, வாழ்க்கைத்தேர்ச்சிகள், மானிடப்பண்புகள், தொழிற்பயிற்சி, சுய முகாமைத்துவம், கற்றலுக்காகக் கற்றல் வினைத்திறன் மிக்க தொடர்பாடல், சிக்கனமான உச்சப்பயன் நிறைந்த வளப்பாவனை, சுய கௌரவம், தேசப்பற்று, சமூக நோக்கு, மகிழ்ச்சிகரமான வாழ்வு அனைத்தையும் வழங்கக்கூடியதான திறன்களை வளர்ப்பதாக அமைதல் வேண்டும்.

உசாத்துணை :-


1. Davidoff,S. & Lazarus,S. ;2002; the Learning Schools.
2. Pretorius,F.;1998; Managing Change in an Outcomes based approach.
3. Steyn,G.M; The Changing Principle ships in South Africa Schools Educare;Pretoria Unisa.
4. கல்வியின் பண்புத்தரச் சுட்டிகள், தர உறுதிப்பாட்டலகு, கல்வியமைச்சு, இலங்கை - 2002



**திரு.சின்னையா சிவராஜா**

ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

திக்கம்

# ஸ்ரீலங்கா நிர்வாக சேவை
## Srilanka Administration Service(SLAS)

### 1.தோற்றம் :- (Emergence)

எல்லா நாடுகளிலும் நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் அந்தந்த நாடுகளின் அமைச்சுக்கள், திணைக்களங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களாக நியமிக் கப்படுவது வழமையாக உள்ளது. ஆட்சியாளர்களின் கொள்கைகளை நீதியாகவும், நேர்மையாகவும், பாரபட்சமின்றியும் வழிநடத்திச் செல்லும் பொறுப்பானவர்களாக செயற்படுவார்கள். அரசாங்கங்கள் மாறினாலும் நாட்டின் நிர்வாக நடைமுறைகளைத் தொடர்ச்சியாக நடாத்திச்செல்லும் பொறுப்புமிக்க உத்தியோகத்தர்களாகச் செயற் படுவார்கள்.

**1.1** இலங்கைத்தீவின் கரையோரப்பகுதி 1795ஆம் ஆண்டளவில் பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அக்காலத்தில் இலங்கை நிர்வாகத்தினை கிழக்கு இந்தியக் கம்பனி ஒன்று சென்னையில் இருந்து நிர்வகித்து வந்தது. இதன்பொருட்டு 1802ஆம் ஆண்டளவில் சிவில்சேவை உத்தியோகத்தர்கள் பிரித்தானிய தேசத்தால் நியமிக் கப்பட்டு அனுபப்பட்டார்கள். பிரித்தானியாவால் நியமிக்கப்பட்ட இவ்உத்தியோகத்தர் களது சேவை 1833ஆம் ஆண்டளவில் இலங்கை சிவில்சேவை என மாற்றம் பெற்றது. இச்சேவையானது 1963ஆம் ஆண்டளவில் இலங்கை நிர்வாகச் சேவையாக மாற்றப் பட்டது. இலங்கை நாடானது 1972ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டபோது இச்சேவை ஸ்ரீலங்கா நிருவாக சேவை எனப் பெயர்மாற்றம் செய்யப் பட்டது.

**1.2** இருநூற்றிப்பன்னிரண்டு (212) வருட வரலாற்றைக்கொண்ட நிர்வாக சேவை யானது ஒரு நாட்டின் முதுகெலும்பு போல் அமைந்த வலுமிக்க கட்டமைப்பாகும். இச் சேவையாளர்கள் காலத்துக்குக்காலம் பிரித்தானிய சிவில் சேவை (British Civil Service). இலங்கை சிவில் சேவை (Ceylon Civil Service), இலங்கை நிர்வாகச் சேவை(Ceylon Administration Service), சிறீலங்கா நிர்வாக சேவை (Sri Lanka Administrative Service) எனப் பெயர்மாற்றம் பெற்றுவந்துள்ளது. இச்சேவையாளர்கள் நாட்டை இலகுவாக

வழிநடத்திச் செல்லக்கூடிய கொள்கைகளை வகுத்தல், திட்டமிடல் திட்டங்களை அமுல் செய்தல், செலவுகளை செய்தல் என்பவற்றுடன் செலவுக்கான வருமானங்களைத் தேடுதல், திரட்டுதல், பகிர்தல், திட்டங்களை முன்னுரிமைப்படுத்தல் மூலமாக ஆட்சியாளருக்குப் பயனுள்ள ஆலோசகர்களாக இருந்து வருவார்கள்.

**1.3** தமது சேவைகள் போன்று ஏனைய பொறியியல், வைத்தியம், விஞ்ஞானம் ஆகிய சேவையாளர் களை நியமித்தலுக்கான நியமனமுறைகளை வகுத்தல் அதேபோன்ற ஏனைய சேவைகளை உருவாக்கல் நியமித்தல், வழிநடத்திச்செல்லல் போன்ற பொறுப்பான பணிகளையும் ஈட்டி ஆட்சியா ளர்களுக்கும் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கும் ஆலோசனை வழங்கி வருவார்கள்.

## 2. ஆட்சேர்ப்பு (Recruitment) :-

பொது ஆட்சியியலில் ஆட்சேர்ப்பு ஓர் உயிரோட்டமான நிகழ்வாகும். தகுதியான ஆட்சேர்ப்பின் மூலமே பொது நிர்வாகத்தின் சிறப்பையும் உந்துசக்தியையும் உணரமுடியும். பொது நிர்வா கத்தில் கடமைபுரியவென அமர்த்தப்படும். பணியாட்கள் சிறந்தமுறைகளைப் பின்பற்றியே தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கட்கு தகுந்த கல்வியும் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. ஆட்சேர்ப்புத் திட்டங்களை சில நாடுகள் தமது யாப்பு விதிகளில் உள்ளடக்கிவிடுவதும் உண்டு. திறமை வாய்ந்த ஆட்சேர்ப்பு கொள்கையே ஆளணி நிர்வாகத்திற்கு ஆணிவேராகும். சீனா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் திறமை அடிப்படையிலேயே பொதுநிர்வாகத் துறையினருக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்று வருகின்றது. காலனித்துவ காலத்தில் பிரித்தானியாவின் கீழ் இருந்து வந்த இலங்கை யிலும் திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பே நடைபெற்று வந்தது. இலங் கையில் பொதுச்சேவை ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டு அதன்மூலமே தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இலங்கையின் நிர்வாக சேவைக்கான ஆட்சேர்ப்பு இரண்டு வழிகளில் இடம்பெறுகிறது.

1. சேவை அனுபவ பதவி உயர்வு (Promotion on Seniority Basis)
2. பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்தல் ( Recruitment on Combetitive Exam Basis)

### 2.1. சேவை அனுபவ மூலமான பதவி உயர்வு (Promotion on Seniority)

எழுதுவினைஞர் சேவை முகாமைத்துவசேவை அல்லது அதற்குச் சமமான சேவைகளில் அதி விசேடதரங்களைப் பெற்றவர்களில் முதுமை அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றனர். வெற்றிடத்தின் 20% அவர்களுக்காக ஒதுக்கப்படுகின்றது.

### 2.2 பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்தல் ( Recruitment on Competitive Exam)

இப்பரீட்சைகள் இரண்டுவிதமாக நடாத்தப்படுகிறது. முதலாவது வகையானது ஏலவே திருப்தி கரமான 10 வருடசேவைக் காலத்தைப் பூர்த்திசெய்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு (Limited Competitive Exam) தோற்றமுடியும். இவர்கள்

1. பொது விவேகம்.
2. கட்டுரை மற்றும் சுருக்கம்.
3. முகாமைத்துவத்திறன் ஆற்றல்.

என்ற பரீட்சைகளில் தோற்றி சிறந்த புள்ளிகளைப் பெறவேண்டும். இவர்களுக்காக 25% வெற்றிடங்கள் ஒதுக்கப்படுகிறது. இரண்டாவது வகையான போட்டிப்பரீட்சை திறந்தபோட்டிப்பரீட்சை (Open competitive Exam) ஆகும். இப்பரீட்சையில் 27 வயதுக்குக் குறைவான பட்டதாரிகள் தோற்ற

முடியும். இப்பரீட்சைக்கும் பின்வரும் பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன

1. பொதுவிவேகம்.
2. கட்டுரை மற்றும் சுருக்கம்.
3. பொதுஅறிவு
4. முகாமைத்துவத்திற்கான ஆற்றல்.

இப்பாடங்களில் தோற்றி திறமையின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். 55% வெற்றிடங்கள் இவர்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

### 3. நேர்முகப்பரீட்சை :- (Interviews)

சேவை அனுபவ மூலமாக தெரிவு செய்யப்படுவோரும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலமாகத் தெரிவு செய்யப்படுவோரும், தமது தெரிவுக்கு முன்பாக ஐந்து ஆற்றல்மிகு நிர்வாக சேவை உத்தியோகத்தர்களால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். இந்நேர்முகப்பரீட்சையின் தலைவராக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இருப்பர். ஏனைய அங்கத்தவர்களும் சில அமைச்சுகளின் செயலாளராக அல்லது திணைக்களத் தலைவர்களாக இருப்பார்கள். எழுத்துப்பரீட்சையின் மதிப்பீட்டுப் புள்ளியுடன் நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகளும் சேர்க்கப்படும். அதன் பின் சேவையின் மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவோர் 20%, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் 25%, மிகுதியான 55%, திறந்த போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

### 4. நிர்வாகசேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் (Training Programme for SLAS of Cadets)

பொதுநிர்வாக அமைச்சின் கீழ் இயங்கிவரும் ஸ்ரீலங்கா அபிவிருத்திக்கான பயிற்சி மையம் நிருவாகசேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியை வழங்கும். பயிற்சியின் பின்பு இவர்கள் எழுத்து மூலப்பரீட்சை ஒன்றிலும் சித்தியடைய வேண்டியிருக்கும்.பயிற்சிக்காலம் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளுக்கு அமைய வேறுபட்டிருக்கும்.

முதுமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு 3 மாதம் பயிற்சி வழங்கப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்திபெற்று தேர்வானவர்களுக்கு 6 மாதகாலப்பயிற்சி வழங்கப்படுகிறது. இவர்கள் ஏலவே பத்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியிருப்பதனால் இவர்களுடைய பயிற்சிக் காலம் 6 மாதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

திறந்த போட்டிப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவோர் ஒரு வருட பயிற்சியை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பயிற்சிக்காலத்தில் இவர்கள் பல அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங் களுக்கும் அழைத்துச் செல்லப்படுவார்கள். வருட இறுதியில் இப்பயிற்சியாளர்கள் பல மாவட்ட கச்சேரி களுக்கு இணைக்கப்படுவார்கள். அக்காலப்பகுதியில் அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் பிரதேச செயலகங்கள், கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகள், ஏனைய சமூகமட்டம் நிறுவனங்கள் போன்ற வற்றின் செயற்பாடுகள் பற்றி நேரடியான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

### 5. நியமனங்கள் (Appointment)/ இடமாற்றங்கள் (Transfer)

இவ் உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களின் அடிப்படையில் நாட்டின் எந்தப் பகுதிக்கும் தேவையினைக் கருதி பொதுச்சேவை ஆணைக்குழுவால் (Public Service Commission) நியமிக்கப் பட்டு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் இடமாற்றம் செய்யப்படுவார்கள். புதிய

அமைச்சுகள், திணைக்களங்களுக்கு நியமனக்கடிதங்கள் / இடமாற்றக் கடிதங்களுடன் செல்லும் உத்தியோகத்தர்கள் குறித்த அமைச்சின் செயலாளரால் / திணைக்களத் தலைவரால் ஒருவாரகால பயிற்சி வழங்கப்பட்டு புதிய உத்தியோகத்தருடைய பணிக்கான பொறுப்புகள் கையளிக்கப்படும்.

### 6. சேவைக்கான மதிப்பீடு (Evaluation of Service)

புதிய உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடும்போது 3 மாதங்களுக்கு ஒரு தடவை சேவை மதிப்பீடு செய்யப்படும். இம்மதிப்பீடு சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்கள தலைவரால் பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பப்படும். இம்மதிப்பீட்டினை ஆராயும் பொதுநிர்வாக அமைச்சு இவர்களுக்கு மீளவும் தேவையின் அடிப்படையில் சேவைக்காலப் பயிற்சியையும் வழங்கும். மேலும் சேவைக் காலத்திலும் வருடாவருடம் நடாத்தப்படும் புதிய பயிற்சிகளுக்கும் இவர்கள் அழைக்கப்படுவார்கள்.

### 7.பதவி உயர்வு (Promotion)

இவர்கள் சேவைக்காலத்தில் தாங்கள் சித்தியடைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட வினைத் திறமைக்காண் தடைப்பரீட்சைகள் இரண்டில் சித்தி எய்தவேண்டும். மேலும் இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்படும் பொது நிர்வாக சான்றிதழுக்கான 3 மாதப்பயிற்சியையும் மேற்கொள்ளவேண்டியிருக்கும். இவ்உத்தியோகத்தர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்படுவதற்கு இரண்டு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையுடன் இரண்டாவது மொழி ஒன்றிலும் சித்தி பெற்றி ருத்தல் வேண்டும்.

### 8. பதவி உயர்வுகள்

ஆரம்பத்தில் தரம் III இல் நியமிக்கப்படும் இவ் உத்தியோகத்தர்கள் தரம் II, தரம் I, விசேட தரம் என பதவி உயர்த்தப்படுவார்கள். விசேட தரத்தில் சேரும்போது இவர்கள் தங்களது பட்டப்படிப்பின் இரண்டாவது பட்டப்படிப்பை நிறைவு செய்திருக்கவேண்டும்.

### 9. சேவையில் இளைப்பாறுதல் (Retirement)

நிர்வாக சேவையில் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்து 58 வயதை அடையும் போது அவர்கள் சேவையில் இருந்து ஓய்வுபெறமுடியும். உத்தியோகத்தர் விரும்பினால் மேலும் இரண்டு வருடங்களுக்கு சேவைநீடிப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும்.60 வயதை அடையும்போது சேவையிலிருந்து ஓய்வு பெறுவார்கள். சில உத்தியோகத்தர்கள் தங்களது 60 வருட சேவையின் பின்பும் ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis) அமைச்சரவையின் அனுமதியுடன் ஒரு வருடத்திற்கு நியமிக்கப்படுவதும் உண்டு. இவ்ஒப்பந்தம் அமைச்சரவையின் அனுமதியுடன் மேலும் நீடிக்கப் படுவதும் உண்டு.

### 10. சேவைக்கு தமிழ் மொழி மூலமாக தெரிவு செய்யப்படுவோர் தொகை அருகிவருகிறது.

இதனால் வடகிழக்கு மாகாணத்துக்கென விசேட சோதனையும் நடைபெற்று வருகிறது. பட்டதா ரிகளும், அரச சேவையில் உள்ளவர்களும் விசேட கவனமெடுத்து இச்சேவையில் இணைந்து எம்மக்க ளுக்கு உதவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் சமூகத்திற்கு தாங்கள் செய்யும் உதவியாக அமையும்.

**வே.விசுவலிங்கம்**
(இளைப்பாறிய அரச அதிபர்)
மன்னார்.

# கிராம அபிவிருத்தியில் மனித வளத்தின் பங்களிப்பு

மனிதன் தனது அன்றாட வாழ்வைச் செவ்வனே நடாத்த பல பௌதீக வளங்கள் தேவைப்படுவதை நாம் அறிவோம். ஆனால் முகாமைத்துவம் தொடர்பான நூல்கள் மனிதனை ஒரு விலைமதிப்பில்லாத வளமாக விபரிக்கின்றன. உண்மையில் மனிதன் ஒரு வளமா என்று நாம் சிந்திப்போமானால் மனிதனின்றி எந்தவொரு மிகச்சிறந்த தொழில்நுட்பமுடைய சாதனமும் கண்டுபிடிக்கப்படவோ அன்றிப் பயன்படுத்தப்படவோ முடியாததாயிருக்கும் என்பது வெளிப்படையான உண்மை என்பது புலனாகும். நாடொன்றின் பல்வேறுபட்ட அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடுகள் மனிதனின் வாழ்கைத்தரத்தை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டவையாக இருக்கும். இவ்வடிப்படையிலேயே நாம் கிராம அபிவிருத்தி என்பதைப்பற்றிச் சிந்திக்க முடியும். கிராமம் எனப்படுவது ஓர் குறித்த புவியியல் பிரதேசத்தில் வாழக்கூடிய ஒட்டுமொத்த குடும்பங்களின் கூட்டமைப்பே ஆகும். இக்கட்டமைப்பு நகரங்களைவிட உட்கட்டுமான காரணிகளின் கிடைப்பனவுத் தன்மையில் குறைந்தவையாகக்காணப்படும். எனவே கிராம அபிவிருத்தி என்பது உட்கட்டுமான காரணிகளை பரந்துபட்டளவில் எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்வதுடன் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி நிலையான வருமானத்தை உழைக்கக்கூடியதான வகையில் அவர்களை தயார் படுத்துவதுடனும் தொடர்புபட்டதாயிருக்கும். இங்கு தயார்படுத்தல் என்பது கல்வி வசதி, தொழில் வழிகாட்டுதல் தொடர்பான நிகழ்ச்சி நிரல்கள், நிதி இடைநிலையாளர்கள், சந்தைப்படுத்தலில் ஈடுபடும் விநியோகஸ்தர்கள், மூலப்பொருள் வழங்குநர்கள் போன்ற இன்னோரன்ன தரப்பினருடன் ஏற்படுத்தப்படும் வலைப்பின்னல்களைக் குறிப்பிடு வதாயிருக்கும்.

தனிமனிதனின் உடல் உள சமூக மேம்பாடு அவன் வாழும் சூழலின் அபி விருத்தியில் தங்கியுள்ளதுடன் இவ்அபிவிருத்தி ஒவ்வொரு கிராமத்திலும் காணப்

படக்கூடிய வளங்களின் கிடைப்பனவுத் தன்மையிலும் அவற்றை வினைத்திறனாகப்பாவித்து உச்சப் பயனை அடைவதிலுமே தங்கியிருக்கும் எனக்கூறின் அது மிகையாகாது. வளங்கள் எனப் படுபவை இயற்கையின் கொடையாகவோ அன்றி மனிதனால் உருவாக்கப்பட்டதாகவோ இருக் கலாம். இயற்கையாக நாம் பெற்றுக்கொள்ளும் நிலம், நீர் மற்றும் ஏனைய வளங்கள் இதனுள் அடங்கும். மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களாக கட்டடங்கள், இயந்திரங்கள் இவை போன்ற அனைத்தும் இவ்வகை சார்ந்தவையே ஆகும். பொதுவாக எல்லாவகையான வளங்களும் அருமைத் தன்மையானவையாகும். அருமைத்தன்மை கொண்ட இவ் வளங்களை வினைத்திறனா கவும் விளைதிறனாகவும் பயன்படுத்தும்போதுதான் அவ்வளங்களின் உச்சபயன்பாடு பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் மிகச்சிறந்த வகையில் தீர்மானமெடுத்து சரியான வகையில் அடுத்து வரும் சந்ததியினருக்கும் பயன்படத்தக்க வகையில் நாம் பயன்படுத்துவது அவசியமானதாகும்.

சமுதாயத்தில் உள்ள எந்தவொரு ஆளுமைமிக்க மனிதனும் வளமாகக் கருதப்படுகின்றான். எனவே இம் மனிதவளம் கிராம அபிவிருத்தியில் எத்தகைய செல்வாக்கு செலுத்துகின்றது எனப் பார்ப்போம்.

ஒரு கிராமத்தின் அபிவிருத்தி என்பது அக்கிராமத்தில் காணப்படுகின்ற உட்கட்டுமான வசதிகளினாலும், சிறப்பான மனித வளத்தினாலும் நிச்சயிக்கப்படுகின்றது. முதலிலே உட்கட்டுமான வசதிகள் எனும்போது, ஒரு மனிதன் வாழ்வதற்கு தேவையான அடிப்படையான வசதிகளைக் குறிக்கும். அதாவது குடியிருப்பிற்கும் விவசாயம் செய்வதற்கும் ஏற்ற நிலம், குடிநீர், மாசற்ற காற்று, போசாக்கு மிக்க உணவு, உடை போன்ற அடிப்படை வசதிகளுடன், போக்குவரத்து, வங்கி, தொலை தொடர்பு வசதிகள், கல்வி, விளையாட்டு, சந்தை, சுகாதாரம் போன்ற ஏனைய வசதிகளும் உட் கட்டுமான வசதி என்ற பகுதியைச்சாரும்.

உட்கட்டுமானத்தில் ஏற்படக்கூடிய அபிவிருத்தி என்பது மனிதவளத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தியாகும். மறுபுறமாக இவ் உட்கட்டுமான வசதிகளில் ஏற்படுகின்ற அபிவிருத்தி மனித வளத்தின் ஆற்றலை அதிகரிக்கக்கூடியது என்பதுடன் இவ்வாறு அதிகரிக்கப்படும் தனிமனித ஆற்றல் கிராம அபிவிருத்திக்கு இட்டுச்செல்லும் என்பது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. .

மனித வாழ்விற்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளில் குடிநீர் மிகப்பிரதானமானது. இன்று எமது பிரதேசத்தில் காணப்படும் மிக முக்கிய பிரச்சனை குடிநீர். இக்குடிநீரை உரியமுறையில் மக்கள் நுகர்வதற்கு ஒவ்வொரு கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். வெறுமனே குடிநீர் மாத்திரமின்றி விவசாய நீரும் உரிய முறையில் பெறப்பட்டு பயன்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் மனிதன் நன்நீரை இல்லாதொழிக்கும் அல்லது மாசுபடுத்தும் எல்லா செயற்பாடுகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருப்பதுடன் நிலத்தடி நீர் அடுத்த சந்ததியினருக்கும் கிடைக்க வேண்டும் என்ற தூர நோக்கற்றவனாகவும் இருக்கின்றான். எமது கிராமத்தைப் பொறுத்தவரையில் நாம் எதிர்நோக்கவுள்ள மிகப்பெரிய சவாலாகவே இதனை எடுத்துக்கொண்டு தகுந்த தந்திரோபாயங்களை வகுப்பது அவசியமாகும். உணவு உற்பத்தியிலும் பாதுகாப்பான அணுகுமுறைகள் அவசியமானதாகும். அதாவது அதிக உரங்களோ, கிருமி நாசினிகளோ இடப் படாத இயற்கை உரமூட்டப்பட்டவையாக விவசாய உற்பத்திகள் இருத்தல் வேண்டும். விவசாய நடவடிக்கையில் அதிகளவான செயற்கை உர, மற்றும் கிருமி நாசினிகளது பாவனை பல்வேறுபட்ட

நோய்களுக்கு காரணமாவதுடன் நிலத்தடி நன்னீரையும் மாசுபடுத்துவதை அண்மைய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதனால் மக்களின் ஆயுட்காலம் குறைக்கப்பட்டு உண்மையான அபிவிருத்தி கேள்விக்குரியதாகின்றது.

அடுத்து கல்வியறிவு எனும்போது அடிப்படைக்கல்வி தொடக்கம் தொழில்சார் கல்வி வரை கல்வியில் கிடைப்பனவை உறுதிப்படுத்த வேண்டும். பாடசாலை செல்லாத மாணவர்களை இனங் கண்டு அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அவர்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்கவும் இளைஞர்கள் முன்னின்று செயற்படுவது அவசியமாகின்றது. மற்றும் தொழில்சார் கல்வி என்பது வேலைவாய்ப்பை பெற்றுத்தரக்கூடிய, தொழில்ரீதியான அறிவைப்புகட்டும் கல்வியாகும். இத்தொழில்சார் கல்வி பற்றிய விழிப்புணர்வு மாணவர்களிடையேயும், பெற்றோர்களிடையேயும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மாணவர்கள் தமது எதிர்கால தொழிலுக்கான பாதையை திட்டமிடுவராயின் ஒவ்வொரு கிராமமும் அபிவிருத்தி பாதையை நோக்கி முன்னோக்கிச் செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மாணவர்கள் கல்விப் பொதுத்தராதரத்திற்கான பாடத்தெரிவின்போதே தமது இலக்கைத் தெரிந்தவர்களாக இருப்பதற்குப் போதிய வழிகாட்டல்கள் வழங்கப்படுவது அவசியமாகும். பொது அமைப்புக்கள் இவற்றையும் தமக்குரிய பணிகளாகக் கொள்ளவேண்டும். மேலும் ஆளுமைமிக்க மனிதனாலேயே வெற்றிக்கான பாதை நிச்சயிக்கப்படுகின்றது. இது ஒவ்வொரு தனிமனிதனதும் அறிவு, திறன், ஆளுமை, தலைமைத்துவ பண்பு, விடாமுயற்சி, தன்நம்பிக்கை, நேரான மனப்பாங்கு என்பவற்றாலேயே சாத்தியமாகின்றது. ஆகவே பாடசாலை மட்டத்திலும் சமுதாய மட்டத்திலும் இளைஞர்களிடையே இவை வளர்க்கப்பட்டால் மட்டுமே சமூகத்திற்கும் நாட்டிற்கும் நல்ல தலைவர்களும் தொழில் முயற்சியாளர்களும் கிடைப்பர்.

அடுத்து போதுமான சுகாதார வசதிகளும் அவற்றை வளர்ப்பதற்கான திட்டங்களும் கிராமிய மட்டத்தில் முன்னெடுக்கப்படல் அவசியமானதாகும். இச்சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் அவசியமானதாகும். மேற்கூறிய அடிப்படை வசதிகளுடன் ஏனைய வசதிகளும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். சிறந்த போக்குவரத்து வசதி, சந்தை அமைப்புக்கள், பொழுதுபோக்கு மையங்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றனவும் மிக முக்கியமானவையாகும்.

இவ்வாறான ஒவ்வொரு வசதிகளையும் விருத்தியாக்குவதில் மனிதவளமே மிக முக்கிய பங்காற்றுகின்றது. ஒவ்வொரு செயற்பாடுகளையும் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, கட்டுப்படுத்தி சிறந்த வினைத்திறனான வெளியீடுகளாக பெற்றுக்கொள்வதற்கு மனிதவளத்தின் பங்களிப்பு மிகக்காத்தி ரமானதாகும். ஒரு கிராமத்தில் சிறந்த உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் மட்டும் போதுமானதல்ல. அவற்றினை உரியமுறையில் கையாள்வதற்கும், எதிர்கால நலனை கருத்திற் கொண்டு திட்டமிடுவதற்கும் சிறந்த மனிதவளம் இருத்தல் அவசியம்.


**சாந்தகுமாரி மகேந்திரன்**
துறைத்தலைவர்,
மனிதவள முகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# வேதாள வெங்காய உண்மை விதையுற்பத்தி
# Onion True Seed Production

எமது திக்கம் வாழ்மக்கள் பெருமளவில் விவசாய செய்கைகளில் ஈடுபடுவதுடன் விவசாய உற்பத்திகளில் சார்ந்து வாழ்வதனால் விவசாயம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அனுசரணை காட்டுவது மிகவும் அவசியம். விவசாயிகள் வெங்காய உற்பத்தியில் முன்நிற்பதனால் அது பற்றிய தகவல்கள், தொழில்நுட்பங்கள், செயற்பாடுகள், அறிவுரைகள், ஊக்கப்படுத்தல் என்பவை இன்றியமையாதது. அது பற்றிய எனது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியின் பணப்பயிர் வரிசையில் வெங்காயச் செய்கையானது முதலிடத்தை வகிக்கின்றது. தற்போது இதன் விஸ்தீரணம் கடந்த காலங்களைவிட அதிகரித்து வருவது புள்ளிவிபரங்களினூடாக அவதானிக்க முடிகின்றது. 2010ம் ஆண்டு 2610 ஹெக்ரெயர் விஸ்தீரணத்தில் 38,915 மெற்றிக்தொன் உற்பத்தி கிடைக்கப்பெற்றுள்ளது. இது இலங்கையின் உற்பத்தியில் 62% ஆக உள்ளது.

**கடந்த 10 வருடகால யாழ்மாவட்ட வெங்காயச் செய்கை விஸ்தீரணமும் உற்பத்தியும்**



| ஆண்டு | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விஸ்தீரணம் (கெக்ரெயர்) | 1426 | 1668 | 1825 | 1878 | 1792 | 1064 | 982 | 1653 | 2610 | 3273 |
| உற்பத்தி (மெற்றிக்தொன்) | 17112 | 20016 | 29775 | 30135 | 22116 | 14240 | 12301 | 21978 | 38915 | 49093 |

இவ்வாண்டு இவ்விஸ்தீரணத்தை மேலும் 15% அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

1990ம் ஆண்டுக்கு முன் செய்கை செய்த சில பிரதேசங்கள் மீளவும் செய்கை செய்ய அரசியல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையின் சகல பிரதேசங்களிற்கும் சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைவிட விதை வெங்காயமாகவும், தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப் படுகின்றது. இதனால் இவ்வுற்பத்திக்கு கூடுதலான கேள்வி ஏற்பட்டுள்ளது. எனவே வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கூடிய வருமானத்தைப் பெறுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தங்கள் பங்களிப்பைச் செலுத்துகின்றனர்.

சாதாரணமாக வெங்காயச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் விதை வெங்காயக் குமிழ்களை நடுகைப் பொருளாக பயன்படுத்துகின்றனர். இதன்போது கீழ்க்குறிப்பிடப்படும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்.

1. விதை வெங்காயக் குமிழ்களுக்காக மொத்த உற்பத்திச்செலவில் 60 வீதத்தை செலவிட வேண்டியுள்ளது.
2. தரமான விதைவெங்காயம் உரிய நேரத்தில் கிடைக்காமை.
3. விதைவெங்காயத்தின் விலை அதிகரித்துச் செல்லல்.
4. ஏக்கரிற்கு 800 - 1200kg விதை வெங்காயக்குமிழ் தேவை.
5. விதை வெங்காயக் குமிழ்களை அதன் உறங்குநிலை காலம் வரை சேமித்து வைப்பதற்கு இடவசதியின்மை (lack of storage).
6. விதை வெங்காயக் குமிழ்களை நடுகை செய்யும் பொருட்டு கொண்டு செல்வதில் ஏற்படும் செலவு.
7. விதை வெங்காயக் குமிழ்களை நீண்ட காலம் சேமித்து வைக்க முடியாமை.
8. கூடுதலான குமிழ் அழுகல் நோய்த்தாக்கம் ஏற்படல்.


இப்பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதன் பொருட்டு விவசாயத்திணைக்களமானது உண்மை விதையுற்பத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவி ரூபா 10 இலட்சத்திற்கூடாக 8 பிரதேச செயலர் பிரிவில் 15 விவசாயிகள் ஊடாக தலா 500$m^2$ விஸ்தீரணத்தில் உண்மை விதை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பயனாளிகளின் விபரம் வருமாறு


| | | | |
|---|---|---|---|
| சங்கானை | தொல்புரம் | ரி.கிருபாகரன் | அராலி மத்தி |
| | | ஜி.செல்வசேகரம் | அராலி மத்தி |
| தென்மராட்சி | கைதடி | வி.சிவநேசன் | கைதடி வடக்கு |
| கைதடி | | எஸ்.இராசகுமார் | கைதடி வடக்கு |

| | | | |
|---|---|---|---|
| கரவெட்டி | கரவெட்டி | வி.பாஸ்கர மூர்த்தி | கரணவாய் தெற்கு |
| | | எஸ்.சுதாகர் | உடுப்பிட்டி மத்தி |
| பருத்தித்துறை | புலோலி | ஆர். சிவசுப்பிரமணியம் | கெருடாவில் தெற்கு |
| | | கே.ராஜ்குமார் | புலோலி மேற்கு |
| சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் | ஆர்.கிருஸ்ணகுமார் | மாதகல் சகாயபுரம் |
| | | எஸ் தவராசா | மாதகல் |
| தெல்லிப்பளை | தெல்லிப்பளை | ஆர்.ராசகுமார் | வசாவிளான் மேற்கு |
| | | எ.ஜெயரூபன் | வசாவிளான் மேற்கு |
| வேலணை | வேலணை | எம்ஜெயக்குமார் | சரவணை மேற்கு |
| | | பி.சீவரெட்ணம் | வேலணை வடக்கு |
| மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி | | | |

மேற்குறிப்பிட்ட பயனாளி ஒருவருக்கு விவசாயத்திணைக்களத்தினால் 500$m^2$ விஸ்தீரணத்திற்கு தேவையான விதைவெங்காயம் (150kg), இயற்கைப்பசளை, இரசாயனப் பசளை, களைநாசினி, பூச்சி நாசினி மற்றும் ஆரம்ப பண்படுத்தல் செலவு, 500சதுர மீற்றர் 2" வலை, 5 அலுமினிய தட்டுக்கள் என்பன வழங்கப்பட்டது.

**உண்மை விதை (true seeds) என்றால் என்ன?**





வேதாளவெங்காயம் காலபோகத்தில் உற்பத்தி செய்யும்போது பூக்கும் இயல்பு கொண்டது. இப்பூக்களை நாம் உணவுக்காகப் பயன்படுத்துகிறோம். இப்பூக்களை முறிக்காது விட்டால் இவை மலர்ந்து முதிரும் போது அவற்றுள் கறுப்பு நிறமான சிறிய விதைகள் உருவாகும். இதனால் விதை வெங்காயத்திற்கு ஏற்படும் பெருமளவு செலவைக் குறைக்க முடியும். அத்துடன் குமிழ் மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்துவதுடன் கையாளலும் சுலபமானது.

**உண்மைவிதைகளை எவ்வாறு உற்பத்தி செய்யலாம்?**

**1. நடுகை விதைவெங்காயக்குமிழ் தெரிவு**

உண்மை விதை உற்பத்திக்குச் சேதனப்பசளையிட்டு உற்பத்தி செய்யப்பட்ட 2 - 3 cm விட்டமுள்ள நோய்த்தாக்கமற்ற பெரிய குமிழ்களைத் தெரிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட குமிழ்கள் அறுவடை செய்து 6 வாரங்களைக் கடந்ததாக இருக்க வேண்டும்.

**2. வசந்த கால நிலைப்படுத்தல் (Vernalisation)**

தெரிவு செய்யப்பட்ட விதை குமிழ்களில் சீரான பூத்தலைத் தூண்டுவதற்காக "வசந்தகால நிலைப்படுத்தல்" மேற்கொள்ள வேண்டும். வசந்த கால நிலைப்படுத்தல் என்பது 8 - 13°c வெப்ப நிலையில் 14 – 21 நாட்கள் விதை வெங்காயக்குமிழ்களைச் சேமித்து வைத்தலாகும். அதாவது 8 - 10°C வெப்பநிலையாயின் 21நாட்களிற்கும் குளிர் நிலையில் சேமித்தல் போதுமானது.

**3. நடுகை**

நடுகைக்குத் தெரிவுசெய்யப்பட்ட தரையானது 500 – 100 மீற்றர் தனியாக்கல் இடைவெளியைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஏனைய பூக்கும் வெங்காய வர்க்கத்திலிருந்து) தரையை நன்கு பண்படுத்திக் கூட்டெரு இட்டுக் களைகள் முளைக்காதவாறு பண்படுத்தப்படல் வேண்டும். இறுதிப் பண் படுத்தலின் போது அடிக்கட்டுப்பசளையாக 500 $m^2$ இற்கு 3.5kg யூரியா, 5 kg ரி.எஸ்.பி, 2.5 kg எம்.ஓ.பி இடல் வேண்டும். இதனால் பசளை மண்ணுடன் நன்கு கலக்கப்படும். இதன் பின் தொற்று நீக்கப்பட்ட விதைவெங்காயக் குமிழ்களை 10 cm இடைவெளியில் நடுகை செய்தல் வேண்டும். தொற்று நீக்குவதற்கு 54 கிராம் கோமா என்பதை 30 லீற்றர் நீரில் கலந்த கலவையில் 150kg விதை வெங்காயத்தை 10 - 15 நிமிடம் ஊறவிட்டுப் பின் நிழலான இடத்தில் 1/2 மணித்தியாலம் வரை உலரவிட்டு நடுகையை மேற்கொள்ளலாம். இதனால் குமிழிலிருந்து வரும் நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.

**4. களை நாசினிப் பிரயோகம்**

இரசாயன களைகொல்லிகளைப் பாவித்துக் களைக்கட்டுப்பாடு மேற்கொள்ளும்போது 25 -30 நாட்கள் வரை களை முளைக்காது பார்த்துக்கொள்ள முடியும். இதற்குக் கோல-2E 200 மில்லி லீற்றர் ஏக்கரிற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நடுகை செய்த மறுநாள் தரை நன்கு ஈரமாக இருக்கும் போது விசிற வேண்டும்.

**5. வலையிடல்**

பூந்துணர் முறியாது பாதுகாப்பதற்காக நடுகை செய்து 21 நாட்களில் 2" வலையை நிலத்திலிருந்து 9" உயரத்தில் இழுத்து கட்டுதல் வேண்டும்.

**6. மேற்கட்டுப்பசளையிடல்**

நடுகை செய்து 3ம் வாரத்தில் 500$m^2$ இற்கு 3.5 kg யூரியாவும், 6ம் வாரத்தில் 3.25 கிலோ யூரியாவும், 1.5 kg எம்.ஓ.பி யும் இடவேண்டும். குளோரோதலொனில் 500g/SC 24மி.லீற்றரை 16 லீற்றர் நீரில் கலந்து விசிறல்

**7.மகரந்தச் சேர்க்கையும் பூத்தலும்**

வெங்காயப் பூக்கள் அயன் மகரந்தச்சேர்க்கை மூலம் விதைகளை உருவாக்குகின்றது. எனவே அயன் மகரந்தச் சேர்க்கையைத் தூண்டும்முகமாகத் தேனீ வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும். மற்றும் பூச்சிநாசினிகளை விசிற வேண்டிய தேவையேற்படின் காலை 7 மணிக்கு முன்பும் மாலை 5 மணிக்கு பின்பும் விசிறவேண்டும்.

நடுகை செய்து 21 - 25 நாட்களில் பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும். 40 - 45 நாளில் பூந்துணர் விரியும். (பூக்கள் முறிந்து விழாமல் தடுப்பதற்கு 2 அங்குல வலைகளைப் பாவித்தல்). பூந்துணர் விரிந்து

இரு வாரங்களுக்கு துணியினால் ஆன கையுறை அணிந்து கையினால் காலை 9 மணி முதல் 11மணி வரை பூக்கள் மேல்தடவுதல் மூலம் செயற்கை முறையில் மகரந்தச் சேர்க்கையைத் தூண்டலாம். இப்பூந்துணர்கள் விரிந்து 30 நாட்களில் கறுப்பு நிறமான முதிர் விதைகளை உருவாக்கும்.

**8.நோய் பீடை முகாமைத்துவம்**

- ஊதாப்புள்ளி நோய்
- குமிழ் அழுகல்
- நுனிகருகல்

பூச்சித்தாக்கங்கள்

- வெங்காயத்தாள் கோதிப்புழு
- பனிப்பூச்சி
- விலாங்குப்புழு

**ஊதாப்புள்ளி நோய் (ஓல்டனேறியா போறி பங்கசு இனம்)**

**அறிகுறிகள்:**

இலையின் மேற்பகுதியில் கபில நிற நடுப்பகுதியும் ஊதா நிறமான விளிம்பையும் கொண்ட ஒழுங்கற்ற வடிவிலான புள்ளிகள் தோன்றும். அப்புள்ளிகள் மீது வட்ட வடிவான கறுப்பு நிறமான பூஞ்சண வித்திகள் காணப்படும். இலைகள் வாடிப்போகும்.

**கட்டுப்பாடு:**

நோய் அறிகுறிகள் தென்பட்டதும் சிபாரிசு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளில் ஒன்றை விசிறவும். புறொபினெப் 70% WP 32g ஐ 16 லீற்றர் நீரில் கலந்து விசிறல்.

இலைச்சுருள் நோய்/ அந்தரக்நோசு

**அறிகுறிகள்:**

- இலைகளின் மேற்பகுதியில் வெளிறிய மஞ்சள் நிறமான தாழ்ந்த புள்ளிகள் தோன்றும்.
- இலைகள் மஞ்சள் நிறமாகி , சுருண்டு செடியின் கழுத்துப்பகுதி முறிந்து விழும்.
- குமிழ்கள் சிறிதாகி அழுகும்.
- விதை உற்பத்தி வெங்காயப்பயிர்களில் பூக்காம்பின் மேற்பகுதியில் பூஞ்சண இழைகள் உருவாகி அவ்விடங்களில் பூக்காம்பு முறிந்து விழும்.
- பூவின் பூந்துணர்களிற்கு நோய் தொற்றியதும் அவை உலரும்.

**கட்டுப்பாடு**

- நோயினால் பாதிக்கப்பட்ட இடங்களில் 2 -3 வருடங்கள் வரை அவரைத் தானியங்களை பயன் படுத்தி பயிர்ச்சுழற்சியை மேற்கொள்ளவும்.

- முன்பு நோயினால் பாதிக்கப்பட்ட இடங்களில் திரும்பவும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் போது குமிழை நடுகை செய்து 14 நாட்கள் பங்கசு நாசினியொன்றை விசிறவும்.
- தயோபனேட் மீதைல் 70% WP 9.6 கிராமை 16 லீற்றர் நீரில் கலந்து விசிறல் வேண்டும்.
- குளோரோதலனில் 500g/ 1SC 48 மி.லீற்றரை நீரில் கலந்து விசிறல் வேண்டும்
- மங்கோசெப் 80% WP 32 கிராமை 16 லீற்றர் நீருடன் கலந்து விசிறல்.

**வெங்காயத்தாள் கோதிப்புழு (Spodoptera litura)**

குடம்பி : பச்சை நிறத்தை ஒட்டிய கறுப்பு நிறக்கோடுகள் காணப்படும்.

40 - 50 cmநீளமானது.

கூட்டுப்புழு : மண்ணில் இருக்கும்.

தாக்கம்: குடம்பிகள் வெங்காய இலைமடலின் உட்பகுதியில் பச்சைநிறப்பகுதிகளை உண்ணும், இதனால் தாள்கள் சிகரெட் சாம்பல் போல் சுருங்கி வெள்ளையாகக் காணப்படும்.

கட்டுப்பாடு:

- பூச்சிநாசினி விசிறல்.
- டயசினோன் 50EC 140 மி .லீற்றர் 1000 சதுர மீற்றருக்கு விசிறல்.
- எஸ்பென்வலரேட் 7.5 EC 12.5 மி .லீற்றர் 1000 சதுர மீற்றருக்கு விசிறல்.

**9. விதைகளின் அறுவடை**

15 - 20 வீதமான விதைகள் கறுப்பு நிறமாக மாறியதும் அறுவடை செய்யலாம்.

அறுவடைக்காலம் தாமதமானால் பூந்துணரிலிருந்து விதைகள் கொட்டும். மற்றும் அறுவடை செய்யும் போது விதைகள் கொட்டுவதைத் தவிர்ப்பதற்காக இரண்டு விரல்களிற்கிடையில் பூந்துணரை வைத்து 10cm நீளமான காம்புடன் அறுவடை செய்யப்படவேண்டும்.

**10.விளைவு**

செறிவான பராமரிப்பின் கீழ் உச்ச விளைவாக 500 சதுர மீற்றருக்கு 18kg உண்மை விதை களைப் பெறலாம்.

**11.விதைகளைப் பதப்படுத்தல்**

அறுவடை செய்யப்பட்ட பூக்களை 2 - 3 நாட்கள் நிழலான இடத்தில் உலர்த்தி உலர்ந்த பூக்களைக் கையால் கசக்கி விதைகளை வேறாக்கலாம். வேறாக்கிய விதைகளைப் பிடைத்து துப்பரவு செய்த பின் நீரில் 3 நிமிடங்கள் அமிழ்த்தி மிதக்கும் விதைகளை அப்புறப்படுத்திச் சுத்தப்படுத்தலாம். அமிழ்ந்த விதைகளை உடனடியாக மீண்டும் நிழலான இடத்தில் 3 - 4 நாட்களுக்கு உலர விடவேண்டும்.

**12.விதைகளைச்சேமித்தல்**

7 - 9% ஈரப்பதன் கொண்ட விதையை துணியினால் அல்லது கடதாசியினாலான பைகளில் சாதாரண நிலையில் ஒரு வருடம் முளைதிறன் கெடாது சேமிக்க முடியும். குளிர்சாதன வசதி இருக்குமாயின் 5 ஆண்டுகளுக்கு மேலாக முளைதிறன் கெடாமல் களஞ்சியப்படுத்தலாம்.

விவசாயத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் உண்மை விதையுற்பத்தி நடவடிக்கையானது அறுவடைக்கு தயாராகி வருகின்றது. 24.02.2012 அன்று கரவெட்டி விவசாயப்போதனாசிரியர் பிரிவில் வெங்காய உண்மை விதையுற்பத்தி பெறுபேற்று விழா நடைபெற்றது. இதில் விவசாயிகள், மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என்பவர்கள் கலந்து கொண்டு நன்மை பெற்றார்கள். இவ்வாறான பெறுபேற்று விழாக்கள் மேற்குறிப்பிட்ட பயனாளிகளின் தோட்டத்தில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டு இத்திட்டம் விரிவுபடுத்தி 25 ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படவுள்ளது. உண்மை விதை உற்பத்தியை மேற்கொண்டு அதனை நடுகைக்கு பயன்படுத்துவதன் மூலம் விதை வெங்காயத்திற்கான உற்பத்திச் செலவை குறைத்து நன்மை அடையலாம். இவ்வகையான உற்பத்தி முறைகளை எமது பிரதேசங்களில் மேற்கொண்டு விவசாயிகள் பல்வகை நன்மைகளையும் பெற்று பெருமையுடன் வாழ வாழ்த்துகிறோம்.

## Reference


1. விவசாய விரிவாக்க நிலையம், விவசாய திணைக்களம், திருநெல்வேலி, 2014
2. Seran, TH, S.Srikrishna and M.M.Z.Ahamed.2010 Effect of different levels of inorganic fertilizer and compost as basal application on the growth and yield of onion



**கலாநிதி.பொன் ஆழ்வாப்பிள்ளை**

தலைவர்,

விவசாய பொறியியற் துறை,

விவசாயபீடம்,

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.


20.06.2014

# பனை வளமும் அதன் நிகரிலாப் பயன்களும்

ஏடகம், கற்பகதரு, தாலம், தாளி, துருமேகம், பாரிபத்திரம், புற்பதி, போந்து, போந்தை எனப் பல பெயர்கள் தாங்கிய பனை எமது பண்பாட்டுச் சின்னமாகும். தமிழர்களாகிய எமது பண்பாட்டில் சிறப்பிடம் வகிக்கும் சிறந்த பொருளாதாரப் பயிராகும். தமிழ் இலக்கியங்களில் புலவர்களால் போற்றப்படும் பனை தமிழோடும் தமிழரோடும் பழகிய மரம். அது உணவுக்காகவும் உறைவிடத்துக்காகவும் பயன்பட்டு வந்தது. ஓடியல் வகையால் உயர்ந்த பனை ஓலை சார்ந்த குடிசைத் தொழிலைத் தூக்கிவிட்டது.

புலவர்களும் ஞானியர்களும் போற்றிய பனை பண்டைய தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்தது. பிறருதவியின்றி தன் முயற்சியால் வாழ்வதோடு பிறருக்கு பெருந்தன்மையோடு உபகரிப்பவனை பனைக்கு நிகரானவனெனக் கருதினர். எனவேதான் மங்கை நல்லாளுக்கு பனையின் ஓலையைத் தாலியாக்கி “என்றும் தழைத்து வாழ்வாயாக” என வாழ்த்திக் கழுத்தில் கட்டி வாழ்வில் பிணைத்துவிட்டனர். என்பர். பனை தன்னிகரில்லாத் தலைவனை நினைவூட்டுகின்றது. தாலியும் அதன் கொடியும் பொன்னால் செய்யப்பெறும் வழக்கம் பின்னால் வந்தபின் தாலியில் பனை, சூலம், அம்மன் முதலிய வடிவங்கள் குறியிடப்படும் வழக்கம் நிலவி வருகின்றது.

பனைமரம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, பர்மா, இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்னாம், மலேசியா மற்றும் ஆபிரிக்காக் கண்டத்தின் சில நாடுகளிலும் காணப்படுகின்றன. பனை மரத்தின் ஆதிப்பிறப்பிடம் ஆபிரிக்கா எனக்கருதப்படுகின்றது. பனையின் தாவரவியற் பெயர் ‘பொறாசுஸ் பிளபெலிபர் (Borassus Flabellifer) என்ப தாகும். இதனை சிங்களமொழியில் ‘தல்’ எனவும் ஆங்கிலத்தில் ‘பல்மெய்ரா’ (Palmyrah) எனவும் அழைக்கப்படுகிறது.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணையற்ற இயற்கைச் செல்வம் பனை வளமாகும், ஏனைய பொருளாதாரப் பயிர்களைப் போல நீர்ப்பாசனம், உரமிடல், கிருமிநாசினி விசிறல் போன்ற எந்த முயற்சியும் வேண்டாத பனைப்பயிர்

மணல்தறை, கடற்கரை, சுண்ணாம்புக் கற்பாறை, தேடுவாரற்ற தரை போன்ற எந்த இடத்திலும் நன்கு வளர்ந்து பயன்தரும் தாவரமாக விளங்குகின்றது. இத்தாவரம் யாழ்ப்பாணம், புத்தளம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பெருமளவு காணப்படுகிறது. எனினும் பனையின் பரம்பல் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க யாழ்ப்பாண மாவட்டத்தில் பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 42,000 ஏக்கர் நிலத்தில் இது காணப்படுகின்றது. இதன் வளப்பரப்பு யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 30% ஆகும்.

வரண்ட வலயப் பொருளாதாரத்தில் பனைவளம் உயர்ந்த வரப்பிரசாதமாய் கடவுட்கொடையா கவுள்ளது. மக்களுக்கு மிகக்கூடிய அளவு பயன்தரும் பொருட்களைத் தரும் மூலமாகவுள்ள இதற்கு இணையாக பொருளாதாரப் பயன் எங்கள் நாட்டில் இல்லையென்றே கூறலாம். இலங்கையின் விலை உயர்ந்த கொடையாகவுள்ள பனை வளத்தை எம்மவர் அக்கறையின்றி வெட்டி வீழ்த்தி விற்பனை செய்தும், வீடமைக்க இடம் தேடியும், தோட்டம் செய்ய புகுந்தும் போர்க்காலத்தில் பாதுகாப்பு அரண் அமைப்பதற்கும் பனைமரங்கள் வகை தொகையின்றி தறிக்கப்பட்டதாலும் இவ்வளத்தை மீள உரு வாக்குவதற்கு காத்திரமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படாமையாலும் இவ்வியற்கை வளத்தில் ஈடுசெய்யமுடியாத இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் வளிமண்டல நடவடிக்கைகளும் பாதிப்புக்குள்ளாகி பருவமழை பொழிவிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பனைகளிலே ஆண்பனை, பெண்பனை என இருவித பனைகள் காணப்படுகின்றன. பனம் விதையும் அதனோடு தொடர்புடைய பயன்களும் பெண் பனையிலிருந்தே கிடைக்கின்றன. பதநீர், கள் என்பவற்றை இருவகைப் பனைகளிலிருந்தும் பெறமுடியும். பனையின் நுனியிலுள்ள பாகங்களின் உச்சப் பயனை நாம் பெறவேண்டுமாயின் நுங்கு பருவத்தில் வெட்டிவிடுவதால் இழக்கவேண்டி வருகின்றது. ஆண்டுதோறும் 60,000 பனைகளிலிருந்து கள் இறக்கப்படுகின்றது. இதனைப் பருகிக் காலம் கழிப்பதில் எவ்வித பயனும் கிடையாது. இதைப் பதநீராக மாற்றும்போது பல்வேறு பயன் களையும் பெறமுடியும்.

பனை மரத்தின் வேரிலிருந்து குருத்தோலை வரையுள்ள பாகங்கள் யாவும் பற்பல விதமாகப் பயன்தர வல்லன. பனையில் எண்ணூறுக்கும் அதிகமான வகையில் பயன்கள் பெறமுடியுமென எம் முன்னோர் கூறியுள்ளனர். "எட்டு நூறு வகை நற்பல னீகின்ற இன்பப் பனை" என நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. பனையின் நுனிப் பாகத்தி லிருந்து நுங்கு, பனம்பழம் (பனங்காய்), பனம்விதை, பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், பூரான், ஊமல், ஓலை, ஈர்க்கு, அடைவியன், நார், மட்டை, பன்னாடை, கள், பதநீர் முதலிய பயன்கள் கிடைக் கின்றன.

பனைமரத்தின் பயன்களை ஐந்து வகைத் துறையுள் அடக்கலாம்.

1. உணவுப் பொருட்கள் தயாரித்தல்
2. பனையோலையிலான பன்னவேலைகள் செய்தல்
3. தும்பிலிருந்து தூரிகை முதலான பொருட்கள் செய்தல்
4. மருந்துப் பொருட்கள் தயாரித்தல்
5. அதனை அழித்து மரவேலை செய்தல்

## பதநீர்

ஆண் பனை, பெண் பனை ஆகிய இருவகைப் பனைகளிலும் பருவ காலத்தில் தோன்றும் பாளைகளைப் பக்குவமாக இடுக்கி நுனியில் சீவுவதால் வடியும் இனிப்புப் பானத்துக்குப் பதநீர் என்று பெயர். இதனைக் கருப்ப நீர் என்றும் அழைப்பர். பதநீரிலுள்ள சுண்ணாம்பை முறிக்கவே மாங்காய் அல்லது எலுமிச்சம்பழ இரசத்தை சேர்க்கின்றனர். பதநீர் உயிர்ச்சத்து நிறைந்த பானமாகும். பதநீரால் உடற் குளிர்மையும் முகப்பொலிவும் உண்டாவதோடு களைப்பு நீக்கும் நிவாரணியாகவும் செயற்படுகின்றது. ஆண்பனைப் பதநீர் சர்க்கரைச் சத்தும் வீரியமும் கொண்டது. பெண் பனை அதிகளவு பதநீரைச் சுரக்கும். ஆனால் ஒப்பீட்டு அளவில் சத்துக்குறைவானதாகும். ஆண் பனைப் பதநீரை சோமபானம் என்றும் பெண் பனைப் பதநீரை சுரபானம் என்றும் அழைப்பர்.

பதநீரை வற்றக் காய்ச்சினால் கூழ்ப்பதநீர் கிடைக்கிறது. இதைப் பனம்பாணி என அழைப்பர். அதிலிருந்து பனைவெல்லம், பனங் கற்கண்டு, பனஞ் சீனி என்பன தயாரிக்கப்படுகின்றன.

பனைவெல்லத்தை பனங்கட்டி எனவும் அழைப்பர். பதநீருக்கு இன்றியமையாத சுண்ணாம்பு பனங்கட்டிக்கு காரத்தன்மையையும் கருநிறத்தையும் கொடுத்தபோதிலும் சுவையைக் கெடுத்து விடுகின்றது. எனவேதான் பனங்கட்டித் தயாரிப்பின்போது சுண்ணாம்புத் தன்மையை அகற்றுவது அவசியமாகிறது. ஆகவேதான் பதநீர் கொதிக்கும்போது சுப்பர் பொஸ்பர் கலவை இடப்படுகிறது. பனங்கட்டி மருத்துவப் பயன்மிக்கதொன்றாகும். குன்ம நோய், மலச்சிக்கல் போன்றவற்றுக்கு கைகண்ட மருந்தாகும்.

பனஞ் சீனியும் மிகவும் பெறுமதி வாய்ந்த பதார்த்தமாகும். பனஞ் சீனியைவிட உயர்ந்த உத்தம சத்துள்ள சீனி வேறெதுவுமே இல்லை என்பர். நல்ல கண் பார்வைக்கு பனஞ் சீனி பேருதவி செய்கிறது. போசாக்குக் குறைபாட்டால் உண்டாகும் கண் வியாதிகளுக்கு பதநீர் மற்றும் பதநீரிலிருந்து பெறப்படும் பனஞ் சீனி, பனங்கட்டி என்பன சிறந்த பரிகாரமாகும்.

பொலிகண்டி, சண்டிலிப்பாய் முதலிய இடங்களில் பதநீரிலிருந்து பனஞ் சீனி தயாரிக்கும் பணி 1956ஆம் ஆண்டளவில் கிராமிய அபிவிருத்தி கைத்தொழில் திணைக்களத்தின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டது. பொலிகண்டியில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட பனஞ் சீனி உற்பத்தி பெரும் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து திருவடிநிலை, கருகம்பனை, மந்துவில், வராத்துப்பளை ஆகிய இடங்களிலும் பனஞ் சீனி உற்பத்தி செய்யத் திட்டமிட்டனர். ஆனால் தற்போது சீனி உற்பத்தி கைவிடப்பட்ட நிலையிலே உள்ளது.

பனையிலிருந்து பெறும் பயன்களில் கள் முக்கிய இடம் வகிக்கின்றது. பனை சீவுதல் என்றால் கள் இறக்குதல் அல்லது பதநீர் இறக்குதல் என்பதாகும். அது ஒரு தொழிலாயுள்ளபோதும் அது ஒரு நுட்பமான கலையுமாகும். பாளையை இடுக்கியும், வரிந்து கட்டியும், சீவியும், தட்டியும் சாறு எடுத்தல் என்பது ஒருவித கைத்திறனாகும். அனுபவமுள்ளவர்கள் அதிக சாறு எடுக்கக்கூடியவர்கள் என்பது அறிஞர்கள் கருத்தாகும். சீவல் தொழில் நுணுக்கத்தை எல்லோரும் இலகுவில் அறிந்துகொள்ளமுடியாது. எமது நாட்டில் இறக்கப்படும் பதநீரில் 80% கள்ளாகப் பருகப்படுகிறது. மேலும் கள்ளிலிருந்து சாராயமும் வினாகிரியும் தயாரிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் திக்கத்திலும் கைதடியிலும் சாராய வடிசாலை அமைக்கப்பட்டு சாராயம் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

## பனம்பழம்

பனையின் பெறுமதி வாய்ந்த பெரும்பயன்களில் பனம்பழமும் ஒன்று. பனம் பழத்தைப் பொதுவாக பனங்காய் என்றே அழைப்பர். முற்றிய குரும்பை, நுங்கு, சீக்காய் முதலிய பருவங்களைக் கடந்து கனிந்து முகிழ் விரிந்து விழும். பனம் பழத்தின் வெளியேயுள்ள கரிய தோலுக்குள் இருக்கும் குழைவு களி எனப்படும். அது மஞ்சள் அல்லது செம்மஞ்சள் நிறமுடையனவாய் இருக்கும்.

பனம்பழம் தித்திப்பானது. இதனை முன்னையோர் ஒருநேர உணவாக உட்கொண்டனர். பனம் பழத்தின் சுவையைக் கொண்டு முன்னோர் பல பெயர்களை வழங்கினர். தோரை, பருப்பை, செருக்கலி, காறலி, தேனி, பூமணத்தி என்பன அவைகளுள் சில. பூமணத்தி மலர் போல் வாசனையுடையது. தேனி தேன்போலும் இனிமை தரும். காறலி சிறிது காறற் சுவையுடையது. பனம்பழம் எச்சுவையுடையதாயினும் ஊட்டச்சத்து கொண்டது. பசு, யானை முதலிய மிருகங்கள் பனம் பழத்தைத்தேடிச் சென்று சுவைக்கும் வழக்கமுடையவை.

சென்ற நூற்றாண்டில் பஞ்ச காலத்தில் பனங்காய் பொறுக்குவதற்காக இரவிரவாகச் சூழ்வெளிச்சம் கொழுத்தி காவல் புரிந்து அது விழுந்தவுடனே விரைந்தோடிப் பொறுக்கும் வழக்கம் நிலவியது. பழம் பொறுக்கப் போனவிடத்து போட்டி காரணமாக பாரதூரமான கலகங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

பனம் பழத்தை பச்சையாகவும் நெருப்பில் வாட்டியும் உண்பதுண்டு. தோலை நீக்கிவிட்டு இரு கைகளாலும் அதனைப் பிசைந்து களியைக் கறந்து வாயினால் சூப்பி உண்பர். பனங்களியைச் சுத்தப்படுத்தி சம்பா அரிசிமா அல்லது தினையரிசி மாவுடன் கலந்து பிசைந்த வெல்லமும் தேங்காய் பாலும் பருப்பும் பிசைந்து உருட்டி நெய் அல்லது இலுப்பெண்ணையில் பொரித்து எடுப்பது பனங்காய் பணியாரமாகும். பல நாட்களுக்குப் பழுதடையாது இருப்பதால் முற்காலத்துப் பயணத்தின்போது பலர் இதனைக் கொண்டு சென்று உண்டு மகிழ்ந்தனர்.

## பனம்பனாட்டு

தற்காலத்தில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எதிர்காலத்தில் சூரிய சக்தியைக்கொண்டு பல கருமங்களைச் செய்யலாமென விஞ்ஞானிகள் முழுமூச்சாக முயற்சிசெய்து வருகிறார்கள். எத்தனையோ நூற்றாண்டு காலமாக எம்முன்னோர் பனங்களியை சூரியஒளி (வெயில்)யில் காயவிட்டு ஆதவன் சுட்ட பணியாரம் என உண்டு வந்தனர். அந்தப் பணியாரம்தான் பனாட்டு.

மண், புழுதி பரவாத ஓரிடத்தில் அரையளவு உயரத்தில் பந்தலிட்டு அதன் மேல்பாய் விரித்து பாயின் மேல் பனங்களியைத் தினந்தோறும் ஊற்றிப் பரவிக் காயவிட்டு இராப்பொழுதில் பாயுடன் உள்ளே எடுத்து வைத்து மறுநாள் பகலில் காயவிடுவர். ஏழு எட்டு நாள் பரவிய களி நன்றாகக் காய்ந்த பின் நீளப் பக்கத்திலும் அகலப் பக்கத்திலும் ஒரு சாண் அளவில் கீறி புல்லுச் சத்தகத்தால் அல்லது தட்டகப்பையால் மெதுவாகக் கிளப்பி எடுத்து மீளவும் காயவிட்டு மடித்துக் கூடையிலடுக்கி பரணில் வைத்து வேண்டியபொழுது உண்பர். பனாட்டை நேரமறிந்து உண்பதால் கரப்பான், கிரந்தி, தேமல், நீர்க்கடுப்பு, தலைக்கனம், பித்த வாயு, குடற் சிக்கல், மலச்சிக்கல் யாவும் நீங்கும்.

பனாட்டை நீண்ட காலம் கெடாமல் வைத்து உண்பதற்கு நம்மவர் கையாண்ட முறைகளுள் ஒன்று பாணிப் பனாட்டு முறையாகும். மிளகும் சீரகமும் சேர்த்துக் காய்ச்சிய பனம் பாணியில் பனாட்டைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு மண் பானையிலிட்டு வைத்தலாகும். பாணிப் பனாட்டு சிறந்த சுவையுடையது என்பதுடன் நீண்ட நாட்களுக்குப் பழுதுபடாது வைத்திருக்கக்கூடியதுமாகும்.

களி நீக்கிய பின் காய்ந்துலர்ந்த விதைகளை மண் கும்பிகளில் அடுக்கிவிட்டால் அவை ஐந்து மாத காலத்தில் கிழங்கு தரும். பொதுவாக நம்மவர் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் பனம் பாத்தியிட்டு தை மாசி மாதங்களில் கிழங்கு பிடுங்குவர். பனங்கிழங்கு இடத்துக்கிடம் தும்புத் தன்மை, மாப்பிடிப்பு ஆகிய குணங்களாலும் திரட்சி, நீளம் ஆகிய அமைப்பாலும் வேறுபடுகிறது. மணற் பாங்கான பூமியில் விளையும் கிழங்கு உருண்டு திரண்டு இருக்கும். மன்னார் மாவட்டத்திலுள்ள தலைமன்னார். பேசாலை, எருக்கலம்பிட்டி ஆகிய இடங்களில் விளையும் கிழங்குகள் திரண்டு உருண்டு இருப்பதுடன் தும்பு குறைந்ததாகவும் இருக்கும்.

பனங் கிழங்கின் பயன் உடனுண்பதும், ஒடியலாக்கி வைத்து உணவு தயாரித்தலும், புழுக்கொடியலாக்கி தேவையானபோது உண்பதுமாகும். பனங்கிழங்கில் தனிப்பட்ட மருத்துவ குணங்கள் உண்டு. பித்தமேகம் முதலான நோய்களை அகற்றும், குளிர்ச்சியையும் வனப்பையும் உண்டாக்கும். மலத்தை இலகுவாகக் கழியச்செய்யும் மற்றும் வயிற்றிலுள்ள பூச்சிகளையும் அழிக்கவல்லன.

**ஒடியல்**

பனங்கிழங்கை இரண்டாகப் பிளந்து கிழித்தெடுத்து வெயிலில் காயவிடுவர். இவ்வாறு காய்ந்து வரண்ட கிழங்கே ஒடியலாகும். இந்த ஒடியலைப் பக்குவமாக உமலிலிட்டு சேமித்து வைப்பர்.

காய்ந்த ஒடியலைத் துண்டுகளாக முறித்து உரலிலிட்டு இடித்து மாவாக்கி, குந்துகள் தும்புகள் போக்கி, நன்கு அரித்தெடுத்து, தண்ணீர் விட்டுத் தெளித்து அடையவிட்டு அடைந்த மாவை துணியி லிட்டுப் பிழிந்து எடுப்பர். பின் உப்பு நீர் தெளித்து உருட்டிப் பிட்டாக நீற்றுப் பெட்டியிலிட்டு அவித்துக் கொள்ளும்போது கீரை முதலியவற்றைச் சேர்த்துக் கொள்வர். ஒடியற்பிட்டு நல்ல உணவு, பசி போக்கும் உணவு, வன்மை தரும் உணவு.

**ஒடியற்கூழ்**

உடம்பில் வாய்வு, உளைவு, பிடிப்பு, மலச்சிக்கல் முதலியன வருத்தும் வேளையில் நம்மவர் கைக்கொண்ட கைகண்ட மருந்தும் உணவும் ஒடியற்கூழாகும். ஒடியற் கூழ் சுகம்தரும் உணவு மாத்திரமன்றி அது சமூக உணவுமாகும். அயலவர், நண்பர், உறவினர் கூடியிருந்து பருகும் உணவு அது பானையில் நீரேற்றி கொதிக்கவிட்டு காய்கறிகள், கிழங்கு வகைகள் சிறப்பாக மரவள்ளிக் கிழங்கு முதலியவற்றுடன் அளவாக உப்பையுமிட்டு நன்றாக வெந்து அவிந்துவரும்வேளையில் சுத்தமாக்கி எடுத்த ஒடியல் மாவுடன் ஓரளவு புளி, அரைத்த மிளகாய் ஆகியவற்றை நீர்விட்டுக் கரைத்து உலையில் ஊற்றி நன்கு துழாவி இறக்கி தாளிதஞ் செய்து சுடச்சுடக் குடிப்பதில் சுகம்தரும் உணவு இது. கூழுக்குச் சுவையூட்டுவதற்கு வறுத்த புளியங்கொட்டை, கஜூக்கொட்டை முதலியவற்றையும் சேர்ப்பர். கடித்துக் குடிப்பதற்கு தேங்காய் சொட்டும் இடுவர். மாமிசம் உண்ண விரும்புபவர்கள் இறால் மற்றும் குஞ்சு மீன்களையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்வர். ஒடியற் கூழை "தாலமூல கீலசூரண தைலம்" என வேடிக்கையாகக் கூறுவர்.

**பூரான்**

பனம் பாத்தியில் அடுக்கப்பட்ட பனம் விதைகளில் சில முழுக்கிழங்கு ஆவதில்லை. இவை முளை கொண்ட வண்ணமோ முளை கொள்ளாமலோ கிடப்பதுண்டு. அவ்வாறான விதைகளை இரண்டாகப் பிளந்தால் உள்ளே பொன் போல் மிருதுவான பூரான் திரண்டிருக்கும். பூரான் மிகுந்த சுவையும் ஊட்டச் சத்துக்களும் கொண்ட இயற்கை உணவாகும்.

**ஊமல்**

பனங்கிழங்கு உண்டான பின்பும் பனம்விதை உருக்குலையாமல் இருக்கும். உலர்ந்து கிடக்கும் இவற்றை ஊமல் என்பர். இதை ஒன்று சேர்த்து எரிபொருளாகப் பயன்படுத்துவர். சிலர் இதை நெருப்பி லிட்டு எரித்துக் கரி செய்வர். பொன் வேலை செய்வோர் இரும்பு வேலை செய்வோர் தங்கள் தொழி ற்பட்டறையில் ஊமல் கரியை எரிபொருளாகப் பயன்படுத்துவர். சிரட்டைக்கரி, நிலக்கரி போல ஊமற் கரியும் சிறந்த எரிபொருளாகும். வடமராட்சிப் பகுதியில் ஊமல் கரி செய்யும் வழக்கம் நிலவி வந்தது.

**பனையோலை**

பனைதரும் பயன்களில் அதன் ஓலையும் முக்கியமானதாகும். குருத்தோலை முதல் காவோலை எனப்படும். குருத்தோலையில் இருந்து காய்ந்த ஓலைவரை பல்வேறு பயன்கள் கிடைக்கின்றன. குருத்தோலை முற்றுநிலை அடையுமுன் வெண்ணிறமாக இருக்கும். பனங்குருத்து மருத்துவப் பயன்மிக்கது. சிறுவர் குடலில் குடிகொண்டு வருத்தும் கிருமிகளைக் கொன்று வெளியேற்றும் சக்தி பனங்குருத்துக்கு உண்டு. "சாற்றும் பனையின் குருத்தினை முற்றமுன் தானெடுத்து வெட்டியுண்பவர்க்குப் போற்றும் குடரினிற் குத்தும் கிருமிகள் போயகலுமென்பர் ஞானப்பெண்ணே" என்பது பனைமரக் கும்மி.

முன்னையோர் குருத்தோலை கொண்டு பன்னவேலை எனச் சொல்லப்படும் கடகம், நீற்றுப் பெட்டி, அடுக்குப் பெட்டி, தட்டுப்பெட்டி, கொட்டைப்பெட்டி, வல்லுவம், சிம்பை, பறி, குட்டான், கூடு முதலியன செய்தார்கள். மேலும் சிறுவர்களுக்கான கிலுகிலுப்பை, காற்றாடி, தம்பட்டம், மாலை முதலியனவும் செய்தார்கள்.

பருத்தித்துறை, நெடுந்தீவு, புங்குடுதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் உற்பத்தியாகும். கடகங்கள் நீண்ட காலம் நின்று பயன்தரவல்லன. அவற்றின் இழைப்பு உறுதியானவையெனப் புகழ்பெற்றவை. பன்னவேலை என்பது பெரும்பாலும் வீட்டில் இருக்கும் பெண்களின் குடிசைக் கைத் தொழிலாகும்.

பனையின் முற்றிய ஓலையிலும் பார்க்க குருத்தோலையே அதிகமாகப் பயன்படுகின்றது. குருத் தோலையை வெட்டி விரித்து உலர்த்திப் பதப்படுத்தி வார்ந்து பல்வேறு பன்னவேலைகளுக்குப் பயன் படுத்தப்படுகிறது. முற்றிய ஓலையிலும் பார்க்க குருத்தோலையே நீண்ட காலம் கெடாமல் இருக்கும். இன்றும் பருத்தித்துறை பகுதியிலமைந்துள்ள திக்கம் கிராமத்தில் செய்யப்படும் பனையோலைப் பெட்டிகளுக்கும், தேவரையாளி, கொற்றாவத்தை ஆகிய இடங்களில் செய்யப்படும் பனையோலைப் பாய் வகைகளுக்கும் மிகுந்த கிராக்கி இருக்கிறது.

வைதீக முறைப்படி வித்தியாரம்பம் செய்யும்போது ஏடு தொடக்குதல் முதல் சம்பிரதாயம். ஐயாண்ட ளவில் குழந்தையின் கையில் கொடுக்கும் நீட்டோலையில் அகரவரிசை எழுத்தாணியால் எழுதப்பட்டு இருக்கும். ஏடுகள் எழுதுவதற்குப் பயன்படுவது குருத்தோலைக்கு அடுத்த இடையோலையாகும். இடையோலை உறுதிமிக்கது.

கல்வியுலகில் எடுத்தடி வைக்கத்தூண்டும் பனையோலை ஏடு இலக்கண இலக்கிய புராண இதிகாசங்களையும் எழுதிக் காத்து வந்தது. அக்காலத்து ஏடுகள் இல்லையேல் எமக்குப் பழைய நூல்கள் எதுவும் கிடைத்திருக்கமாட்டாது. இன்றும் பனையோலையின் எழுதப்பெற்ற திருமுறைகள், புராணங்கள் கோயில் பூசையில் எழுந்தருளப்பெற்றுள்ளன.

### பால் சுரக்கச்செய்யும் பனையோலை

ஓரளவு முற்றிய பனையோலை பசுமை நிறமுடையதாக இருக்கும். இது கால்நடைகளுக்கு பால் சுரக்கும் தீனியாகவும், வீடு மற்றும் குடில் வேய்வதற்கும், வேலி அடைப்பதற்கும் அதிகமாகப் பயன் பட்டது. பசிய நிறம் கொண்ட பனையோலை பால் சுரக்கச்செய்யும் எனக்கண்ட பழைய தலைமுறை யினரின் பகுத்தறிவை இக்கால விஞ்ஞான உலகம் போற்றுகிறது.

### பனம்ஈர்க்கு

பனையோலையின் பயன்மிக்க பாகங்களில் ஈர்க்கும் குறிப்பிடத்தக்க அளவில் மதிப்புப் பெற்றது. ஓலையின் முதுகுப் புறத்தில் நரம்பு போலத் தடித்து நீண்டிருப்பது ஈர்க்காகும். குருத்தோலையில் இருந்து கிடைக்கும் ஈர்க்குகள் அதிக பயனுள்ளவை. இதைப் பயன்படுத்தி சுளகுகள், தட்டுக்கள், சும்மாடுகள், துடைப்பங்கள், உறிகள், திருகணை, துலாக்கொடிகள் முதலானவை செய்யப்படுகின்றன.

### பனம் மட்டை

சாதாரண இலையின் காம்புபோல பனையோலையிலுள்ள தண்டு மட்டை எனப்படும். இதைக் கருக்கு மட்டை எனவும் அழைப்பர். மட்டையின் பயன்கள் பல. வேலி வரிதல், வரிச்சுப் பிடித்தல், விறகாகப் பயன்படுத்தல் என்பன அவற்றுள் சில. எனினும் மட்டையின் பிரதான பயன் அதன் நார் ஆகும். பனை மட்டையில் மூன்று விதமான நார்கள் உண்டு. மட்டையின் உட்புறத்திலுள்ள நார் அகநார் எனவும் பின்பக்கத்திலுள்ள நார் புறநார் எனவும் இருவித நார்கள் உரித்த பின்னர் உள்ள டங்கியிருக்கும் நார் சோற்றிநார் எனவும் அழைக்கப்படும். மூவித நார்களும் உபயோகமாயினும் அகநாரே அதிக உபயோகமுள்ளதாகும். மிகுந்த பலமுள்ள அகநார் கடகங்கள் பெட்டிகளுக்கு விளிம்பு அமைத்து வலிமைப்படுத்தவும், கூடைகள் செய்யவும், கயிறுகள் வடங்கள் திரிப்பதற்கும் பயன்படுகிறது.

### பனம் தும்பு

பனம் பொருள்களில் உலகப் புகழ்பெற்ற உற்பத்திப் பொருள் பனம் தும்பு என்பர். பனையிலிருந்து ஐந்து வகையான தும்புகள் பெறப்படுகின்றபோதும் அடிமட்டையான கங்கு மட்டையின் தும்பே சிறந்தது. பொதுவாக கங்கு மட்டையின் அகலம் ஆறு அங்குலம் கொண்டதாகவும் அடர்த்தியான தும்பு உடையனவாகவும் இருக்கும். கங்கு மட்டையைக் கத்தரித்து இரண்டு மூன்று நாட்கள் நீரில்

ஊறவைத்து கொட்டனால் அடித்து தும்பினை நீக்கி எடுப்பர். வாரி எடுத்த தும்புகளை மீளவும் நீரில் ஊறவிட்டு உலர்த்தி எடுத்துக் கொள்வர்.

ஐரோப்பிய நாடுகளில் பனம் தும்புக்கு நல்ல மதிப்பும் கிராக்கியும் உள்ளது. துடைப்பங்கள், தூரிகைகள் செய்வதற்கு பனம் தும்பு முதல் தரமானதாகக் கருதப்படுகிறது.

**பொது**

பனை மரத்தை அழிக்காமல் அதன் பயனைப் பெறுதல் விவேகமானதும் விரும்பத்தக்கதுமாகும். தவிர்க்கமுடியாத நிலையில் அத்தியாவசிய தேவைக்காக பனை தறிப்போர் அதற்கீடாக ஒன்றுக்குப் பத்து பனம்விதைகளை நட்டு உண்டாக்குதல் நன்று.

பனை மரத்துக்கு இவ்வளவு பெறுமதியான பயன்பாடுகள் இருந்தபோதும் பனம் பொருள் சார்ந்த உற்பத்திகளுக்கு தற்போது குறிப்பாக 1980ஆம் ஆண்டுக்குப் பிந்தைய காலப்பகுதியில் முக்கியத்துவம் குறைந்தே காணப்படுகிறது. பனங்கட்டி, புழுக்கொடியல், பன்னவேலைப் பொருட்களுக்கு தற்போதும் கிராக்கி இருக்கின்ற போதிலும் உற்பத்தி தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாகவில்லை. இவற்றுக்குப் பல காரணங்கள் உள்ளபோதும் அவற்றுள் சில முக்கிய காரணிகளைப் பார்ப்போம்.

1. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலவிய யுத்தம் காரணமாக காப்பரண் அமைப்பதற்காக பெருந்தொகையான பனைகள் அழிக்கப்பட்டுவிட்டன. மேலும் அழிந்த வீடுகளை மீளமைப்பதற்கும் குறிப்பிடத்தக்க பனைவளம் அழிக்கப்பட்டுவிட்டது.
2. சந்தை வாய்ப்பு இல்லாதிருந்த காரணியும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. 1980இற்கு முற்பட்ட காலப்பகுதியில் வடமராட்சியிலுள்ள திக்கம் கிராமத்தில் அமைந்திருந்த சந்தை பனை உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தக்கூடிய முக்கிய இடமாக இருந்தது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் தமக்கு வேண்டிய பனை உற்பத்தி பொருட்களை இச்சந்தையில் பெற்றுக்கொண்டார்கள். குறிப்பாகப் பெட்டி, பாய் மற்றும் ஓலைசார் பொருட்கள், பனங்கட்டி, புழுக்கொடியல் போன்ற பொருட்களை மாலைவேளையில் கூடும் இச்சந்தையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. மேலும் வர்த்தகர்கள் சந்தைக்கு வருகை தந்து இப்பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாகக் கொள்வனவு செய்து இலங்கையின் தென்பகுதிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வந்தார்கள். போர் காரணமாக தரைவழிப் பாதை அடைக்கப்பட்டு போக்குவரத்து தடைப்பட்டுப்போனது. இதனால் அப்பொருட்களைக் கொள்வனவு செய்வோர் அற்ற நிலையில் அத்துறை சார்ந்த தொழிலும் முடங்கிப்போனது.
3. முன்பு பன்னவேலை மற்றும் பனை உற்பத்திப் பொருட்கள் அது சார்ந்த குடும்பத்தினரின் ஜீவனோ பாயத் தொழிலாக இருந்து வந்தது. போர்ச்சூழல் காரணமாக பெருமளவானோர் புலம்பெயர்ந்த பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். அவ்வாறு புலம்பெயர்ந்து தஞ்சம் புகுந்தவர்களால் தமது குடும்பத்தினருக்கு, உறவினருக்கு உதவுமுகமாக பணம் அனுப்பி வைக்கத்தொடங்கினர். இது ஒருவித புதிய கலாசாரத்துக்கு வித்திட்டது. ஒன்று தொழில் ஏதாவது செய்யாவிட்டாலும் வெளிநாட்டிலிருந்து பணம்வரும் என்ற நம்பிக்கை. மற்றது தாம் இதுவரை செய்து வந்த குடிசைக் கைத்தொழில் மட்டரகமானது என்ற கருத்துருவாக்கம். இக்கருத்துருவாக்கத்தின் விளைவாக அத்தொழிலில் அக்கறை செலுத்தாதுவிட்டனர். மேலும் அவர்களின் பிள்ளைகள் அத்தொழிலைச் செய்யவோ பயிலவோ முன்வரத் தயங்கினர்.

4. பன்னவேலைப் பொருட்களுக்கு மாற்றீடாகப் பல்வேறு பிளாஸ்டிக் பொருட்கள் சந்தைக்கு வரத் தொடங்கியது. பிளாஸ்டிக் பொருட்கள் விலை மலிவாக இருப்பதாலும், நீரில் கழுவிப் பாவிக்கக் கூடியதாக இருப்பதாலும் மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன.

5. பனங்கட்டி தயாரிப்பதற்கு மூலப்பொருளான பதநீர் மற்றும் சாராயம், வினாகிரி உற்பத்திக்குரிய கள் என்பன பனை ஏறியே பெறவேண்டும். தற்போது பனை ஏறக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தே காணப்படுகிறது.

பனை வளர்ப்பை ஊக்குவிக்கவும். பனம்பொருள் உற்பத்தியை அதிகரிக்கவும் இலங்கை அரசால் உருவாக்கப்பெற்ற பனை அபிவிருத்திச் சபை பல முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது.

1. பனைமரம் தறித்தலைக் கட்டுப்படுத்துவது

2. பனை மீள் நடுகையை ஊக்குவிப்பது 2016ஆம் ஆண்டளவில் பனையின் எண்ணிக்கையை 16,000,000 ஆக அதிகரிப்பது

3. பனங்களி உற்பத்தியை அதிகரிப்பது பனங்களி ஏற்கனவே அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. உற்பத்தியை அதிகரிப்பதனூடாக மேலதிக சந்தைவாய்ப்பைப் பெறல், களியை பிழிந்தெடுப்பதற்கு இயந்திரத்தை அறிமுகப்படுத்தல்

4. பனை உற்பத்திப் பொருட்களை உள்ளூரில் சந்தைப்படுத்தும் முகமாக கற்பகம் விற்பனை நிலைய ங்கள் திறத்தல். ஏற்கனவே 13 விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன. மேலும் 3 விற்பனை நிலையங்கள் கொழும்பு, கண்டி, புத்தளம் ஆகிய இடங்களில் திறக்கப்படவுள்ளன.

5. பனங் கைவினைப் பொருட்கள் செய்வது தொடர்பான பயிற்சிகள் வழங்கல்

பனைசார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைவாய்ப்பை அதிகரித்தல், மனிதவளம் குறைவடையக்கூடிய நிலையிருப்பதால் பொருத்தமான உற்பத்தித்துறைகளுக்கு எந்திர சாதனங்களை அறிமுகம் செய்தல், உற்பத்தியின் தரத்தை அதிகரித்தல், அதற்கு பொருத்தமான தொழில்நுட்பங்களை வழங்குதல், தொழிலின் கவர்ச்சித் தன்மையை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

**மு.செ. சரவணபவ**
(சமாதான நீதவான்
ஓய்வு நிலை ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநாகர சபை)
திக்கம்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# இலங்கையில் கடற்றொழிலும் எமது பிரதேசமும்

இலங்கை கடலால் சூழப்பட்ட தீவு என்ற வகையில் இலங்கையின் இயற்கை வளங்களில் கடற்றொழில் வளங்கள் முக்கியஇடத்தை வகிக்கின்றன. கடற்றொழில் கைத்தொழிலை விருத்திசெய்வதற்கு உசிதமான புவியியல் பின்னணியை இலங்கை தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டைச் சூழவுள்ள 1730 கிலோமீற்றர் நீளமான கரை யோரத்துடன் இணைந்தாற்போல 21756 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட கண்டத் தடாகமும் அமைந்துள்ளது. மேலும் இலங்கைக்குச் சொந்தமான அந்நிய பொருளாதார வலயத்தில் கடற்றொழில் வளங்களைப் பயன்படுத்தும் உரிமையும் இலங்கைக்கு உண்டு. அத்துடன் 1420 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட ஆறுகள், வாவிகள், நீர்த்தடாகம் போன்ற உள்ளக நீர்நிலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ் அனைத்துப் பிரதேசங்களிலும் கடற்றொழில் கைத்தொழிலை விரிவுபடுத்தக்கூடிய வாய்ப்புண்டு.

கடற்றொழில் கைத்தொழில் விரிவடையும்போது அது சார்ந்த பல்வேறு வகை யான கைத்தொழில் மற்றும் சேவை வழங்கலின் மூலம் தொழில்வாய்ப்புக்கள் உருவா கின்றன. மீன்பிடிக்கலம் நிர்மாணித்தல், மீன்பிடி உபகரணங்களைத் தயாரித்தல், திருத்தல் வேலை, கருவாடு. மாசி உற்பத்தி, மீன்களை தகரத்திலடைத்தல், குளிரூட்டல் வசதிகொண்ட குளிரூட்டி வாகனங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் மூலம் வருமான வழிகள் திறந்துவிட்டிருப்பதனை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இலங்கையில் 34 தொழிற்சாலைகள் ஐரோப்பிய ஒன்றிய தரச்சான்றிதழ்களுக்கு அமைவாக மீனைப் பதப்படுத்தி ஏற்றுமதித் தொழிலில் ஈடுபடுகின்றன. இவ்வகையில் இலங்கையின் ஏற்றுமதி நாடுகளாக ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பியா ஒன்றியம்

போன்றன காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் 29 கடற்றொழில் துறைமுகங்களும் இலங்கைத்துறைமுக கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன.

இலங்கையில் தற்போது வருடாந்தம் 5000 மெற்றிக்தொன் மீன் உற்பத்தி இடம்பெறுகின்றது. 5.39960 பேர் இதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில்வாய்ப்பைப் பெறுகின்றனர். மீனின் மூலம் மனிதனின் 70%மான புரத தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது. வருடாந்தம் இரு நூறு மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கடலுணவுகளான இறால், சிங்கிஇறால், சுறாச்செட்டை, சூரை மற்றும் அலங்கார மீன்கள் மூலம் கிடைக்கின்றது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 2-3% மான பங்களிப்பை கடற்றொழிற்றுறையே வழங்கி வருகின்றது.

இலங்கையின் கடற்றொழில் துறையானது பிரதானமாக 3 பிரிவுகளைக் கொண்டது ஆகும்.

1. கண்டமேடைப் பிரதேசம் எனும் கரையோர கடற்றொழில்
2. ஆழ்கடல் மற்றும் கண்டமேடைக்கு அப்பால் மேற்கொள்ளப்படும் கடற்றொழில்
3. உள்ளக கடற்றொழில்
    - நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில்
    - உவர்நீர் மீன்பிடிக் கைத்தொழில்

இதில் முதலாவதும் இரண்டாவதுமான கடல்நீர் கடற்றொழிலின் மூலம் 88% மான மீன்கள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் 53590 மீன்பிடி கலங்கள் தற்போது பாவனையில் உள்ளன. இதில் 25380 மீன்பிடி கலங்கள் பாரம்பரிய கலங்களாக (இயந்திரமயப்படுத்தப்படாதது) காணப் படுகின்றன. இயந்திர மயப்படுத்தப்பட்ட கலங்களில் 4430 பலநாட் கலங்களாகவும் ஏனையவை ஒருநாள் கலங்களாகவும் காணப்படுகின்றன.

இலங்கையில் மீன்பிடி மாவட்டங்கள் 15 ஆக காணப்படுகின்றன. இதில் வடகிழக்கில் 7 மாவட்டங்கள் உள்ளடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு கடற்றொழில் மாவட்டங்களும் கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் 14 கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் 703 படகுகளை நிறுத்தும் இடங்களில் 427 இடங்கள் வடக்கு கிழக்கில் காணப்படுகின்றன. 1155km நீளத்தை தன்னகத்தே கொண்டுள்ள வடக்குகிழக்கு பிரதேச கடற்கரை மொத்த கடற்கரையில் 65%மானதாக காணப் படுகின்றது.

1983ஆம் ஆண்டு இனக்கலவரங்கள் ஆரம்பிப்பதற்கு முன் வடகிழக்கு மாகாணமானது மொத்த மீன்பிடி உற்பத்தியில் 50%மான பங்களிப்பை வழங்கியுள்ளது. இதில் வடக்கு மாகாணமானது 40%ஆன பங்களிப்பை வழங்கியுள்ளது. யுத்த காலப்பகுதியில் மீனவர்களின் 60%ஆன படகுகள் அழிவடைந்தன. இக்காலப்பகுதிகளில் இந்திய மீனவர்கள் எமது கடற்பிரதேசத்தில் ஊடுருவி எம் நாட்டு வளங்களைச் சுரண்டிச் சென்றனர். இன்றும் இந்நிலை தொடர்ந்தவண்ணமுள்ளது. யாழ். மாவட்ட த்தின் ஒரேயொரு மீன்பிடித்துறைமுகமான மயிலிட்டியும் இன்று பாவிக்கமுடியாத நிலையில் உள்ளது.

எமது கிராம கடற்கரையின் நீளம் 2.5kmஆகும். எமது கிராமத்தில் (அல்வாய் மேற்கு, வடமேற்கு J/396,397) 400 மீனவ குடும்பங்கள் வசிக்கின்றனர். இவர்களில் வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் 120 படகுகளைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். வடமராட்சிவடக்கு கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலக தலைமையகம் எமது கிராமத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன தலைவராக எமது கிராமத்தைச் சேர்ந்த திரு.அ. எமிலியாம்பிள்ளை என்பவரே கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

திக்கத்தில் அமைந்துள்ள மாணான்டி மீன் சந்தையானது வடமராட்சியில் பிரசித்திபெற்ற ஒரு சந்தையாகும். அயல் கிராம மக்களும் இங்கு வந்து மீனைக்கொள்வனவு செய்கின்றனர். தற்போதைய புதிய சந்தைக் கட்டட அமைவு சந்தைப்படுத்தலை மேலும் விருத்தியடையச் செய்துள்ளது.

எமது கிராம மீனவர்கள் படகுகளைப் பயன்படுத்தி கரையோர மீன்பிடியிலேயே ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு பலநாட் கலங்களை பயன்படுத்த வழிவகை செய்வதன்மூலம் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுத்தி மீன் உற்பத்தியை அதிகரித்து அதுசார்ந்த கைத்தொழில்களை விரிவுபடுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தலாம்.

**திரு.ஜெயராஜசிங்கம் சுதாகரன் (BSc)**
உதவிப் பணிப்பாளர்,
கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம்,
முல்லைத்தீவு.

# எமது திக்கம் கிராமத்தின் பொருளாதார மேம்பாட்டில் வங்கிகளின் பங்கு என்ன?

எமது கிராமம் கடல்வளம், புவிவளம், கற்பகதருவளம் ஆகிய இயற்கை வளங் களைக் கொண்டதோர் கிராமமாகும்.

இவ்வளங்களோடு கல்விவளத்தில் மேம்பாடு காணும் மாணவர் சமுதாயம், புதிய உத்திகளைக் கையாண்டு கற்பித்தலை மேம்படுத்தும் ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர் குழாம் என்று சிறந்த அறிவாளிகளையும் கொண்டு விளங்குகிறது நம் கிராமம்.

இத்தகைய வளங்களை இன்னும் நன்கு மேம்படுத்துவதற்கு நிதி அவசியமானது. இந்நிதியைப் பெற்றுக்கொள்ளும் இடமாக வங்கிகள் விளங்குகின்றன. தற்போது பல வங்கிகளும் பல்வகைப்பட்ட நிதிநிறுவனங்களும் கிராம மட்டத்தில் ஊடுருவிச் செயலாற்றி வருகின்றன.

இவற்றுள் அரசவங்கியான மக்கள்வங்கியானது கடற்றொழிலாளர்களுக்கும், கைத்தொழில் வினைஞர்களுக்கும், விவசாயிகளுக்கும், ஆசிரியர்கள், வைத்தியசேவை புரிவோருக்கும் பலதரப்பட்ட கடன்களை கூட்டாகவும் தனிப்பட்டமுறையிலும் வழங்கி வருகின்றன.

அத்துடன் மனைசார்ந்த பயிர்ச்செய்கைக்கான கடன் திட்டத்தின் (திவிநெகும) மூலம் மக்களுக்கு உதவிபுரிகின்றது. வாழ்க்கைத்துணை அல்லது குடும்பஉறவினர் ஒருவரின் பிணையுடன் இக்கடன் வழங்கப்படுகிறது. வீட்டிலே காய்கறிப் பயிர்ச்செய்கை, பழங்கள் பயிரிடல், விலங்கு வேளாண்மை, நிரந்தரப் பயிர்களைப் பயிரிடல், மனைக் கைத்தொழில், உள்நாட்டுக் கைத்தறி ஆடைக் கைத்தொழில், கடற்றொழில் போன்ற நடவடிக்கைகளுக்கு வங்கிகடன் வழங்குகின்றது.

எமது கிராமத்தில் பல வருடங்களுக்கு முன்னர் நெசவுசாலை ஒன்றிருந்து செயற் பட்டதை நாம் அறிவோம். ஆகவே, மக்கள் வங்கியின் (திவிநெகும) கடன்திட்டத்தின் மூலம் அத்தொழிலை மீண்டும் ஆரம்பிக்கமுடியும். இதன்மூலம், இளம் யுவதிகள் கணிசமான வருமானத்தைப் பெறமுடியும்.

கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோருக்கும் இக்கடன்திட்ட உதவி கிடைப்பதால் அதனையும் கவனத்தில் கொள்ளலாம்.

நமது கிராமத்தில் சிறு அளவில் வியாபாரத்தில் ஈடுபடுவோர் தொகையும் கணிசமான அளவு அதிகரித்து வருவதால் அதனை மேம்படுத்தும் பொருட்டு ரூபா 50000/= வரை மக்கள் வங்கி கடன் வழங்குகிறது. ஒரு வருடத்தில் மீளச்செலுத்தல் வேண்டும். தனிநபர் பிணைகள் இரண்டுடன் இலகுவாக இக்கடனைப்பெற்று வியாபாரத்தினை மேம்படுத்தலாம்.

வியாபாரத்தில் ஈடுபடும் நமது கிராம மக்கள் தங்கள் உற்பத்திப்பொருட்கள் தவிர ஏனையவற்றை நெல்லியடி மத்திய சந்தையிலிருந்து கொள்வனவு செய்து வந்தே விற்கிறார்கள்.

அதில் அவர்களுக்கு அதிக சிரமம் ஏற்படுகிறது. ஆகவே வங்கியின் பங்களிப்பு இவ்விடத்தில் மிக அவசியமாகிறது.

ஊரிலே தனிப்பட்டவர்களிடமிருந்து அதிக வட்டிக்குப் பணம் எடுத்து வியாபாரம் செய்வதிலும் பார்க்க வங்கியில் குறைந்த வட்டியில் கடன் பெற்று மாதாந்தம் செலுத்துவது கிராம மக்களுக்கு உசிதமானதாகும்.

அத்தமாறு (கைமாற்று) கடன்திட்டம்மூலம் ரூபா 50000/= வரை பெற்று வர்த்தகத்தினை மேம் படுத்தலாம்.

மேலும் எமது கிராமத்தில் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தில் விவசாயநிலம் பாதிக்கப்பட்டது உண்மைதான். இருப்பினும் 50% மக்கள் இன்னும் தமது தோட்ட நிலத்தை பண்படுத்தி விவசாயத்தில் ஈடுபடுத்தி வருகின்றனர். ஆனால் சிலரோ இடம்பெயர்ந்தோருக்கு வீடுகட்டுவதற்கு இடமளித்துள்ளனர்.

இதனால் விவசாயம் செய்யப்பட்ட நிலம் சற்றுக்குறைவாக இருந்தாலும் மக்கள் விவசாயம் செய்வதில் ஊக்கம் காட்டுவதால் வங்கியின் உதவியை நாடுவது மிகவும் நன்று.

அடுத்து சேமிப்பின் அவசியத்தை உணர்த்துவதற்காகப் பாடசாலைதோறும் வங்கி ஊழியர்கள் சென்று "சிசு உதான" என்ற மாணவர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். இத்திட்டம் மாணவர்களின் எதிர்காலத்திற்குப் பெரிதும் உதவுகிறது எனலாம்.

மாணவர்கள் இயன்றளவு பணத்தைச் சேமிக்கும்போது சிறுதுளி பெருவெள்ளமாவது போல் பிற்காலத்தில் மேற்படிப்பு மற்றும் வைத்தியச் செலவுகளுக்குப் பெரிதும் உதவுகிறது.

அதுமட்டுமல்ல, 'வனிதா வாசனா' கணக்குமூலம் பெண்களிடம் சேமிப்புப் பழக்கத்தை வங்கி ஊக்குவிக்கிறது. அதிக பணம் சேமிப்போருக்குப் பரிசுகளையும் வழங்குகிறது. இதுவும் நமது கிராமத்தின் பொருளாதாரம் மேம்பாடடைய ஒரு சிறந்த வழிமுறையாகிறது. மங்கையருக்கு இது ஒரு பெரும் முதலீடாகவும் அமைகிறது.

கற்பகதருவளத்தைப் பயன்படுத்துவதில் தற்போது நாட்டம் குறைந்துள்ளது. இருப்பினும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கைவினைப்பொருட்கள் ஏதாவது செய்வதற்கு முயன்றால் வங்கிகளும் உதவிபுரியும். சந்தைப்படுத்தலுக்கும் நிதியுதவி கிடைக்கும்.

**திருமதி.தவமணிதேவி கணேசலிங்கம்,**
திக்கம்.
09.06.2014

# நீதிமன்ற வழக்குகள்

இலங்கை நீதிமன்றங்களில் பல பிரிவுகள் காணப்படுவதுடன் வழக்குகளும் பல விதமான பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றன. இவை பற்றி சாதாரண பொது மக்களிடம் சரியான விளக்கங்கள் காணப்படாமையால் பலரும் அதிக ஏமாற்றங்கள் அடைந்து வருகின்றனர்.

ஆரம்ப நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம், தொழில் நீதி மன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்று பலவகையான நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. சில பகுதிகளில் குறித்த ஒரு நீதிமன்றமே ஏனைய நீதிமன்றங்களின் பணிகளை ஆற்றி வருகின்றது. கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனியான நீதிமன்றங்கள் உள்ளன.

எனினும் நீதிமன்றங்கள் இருபெரும் பிரிவுகளில் உள்ளடக்கப்படலாம். குற்ற வியல் நீதிமன்றம், குடியியல் நீதிமன்றம் என்பவை முக்கிய பிரிவுகளாகும். குற்ற வியல் நீதிமன்றங்கள் (Magistrate Courts) அப்பகுதியில் நிகழ்ந்த குற்றவியல் சம்ப வங்கள் தொடர்பில் முதனிலை நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளன. குற்றவியல் நீதிமன்றங்களில் அரச சார்பில் / சட்டமா அதிபர் சார்பில் பொலிஸ் உத்தியோகத்தரால் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. ஏனெனில் செய்யப்படும் குற்றங்கள் யாவும் அரசுக்கு எதிரானதாக அல்லது சமுதாயத்திற்கு எதிரானதாக கருத்திற்கொள்ளப்படும். இதனாலேயே வழக்கைத் தொடுப்பது அரசாங்கமாகவும், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் மற்றும் சம்பவத்தைக் கண்ணால் கண்டவர் சாட்சியாகவும் பெயர் குறிப்பிடப்படுகின் றார்கள். எனினும் சிலவகையான குற்றங்களின்போது சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் தனது சட்டத்தரணி மூலம் தனிப்பட்ட வழக்காகவும் தாக்கல்செய்ய சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

பாரிய குற்றச்சம்பவங்கள் தொடர்பில் நீதவான் நீதிமன்றங்கள் முதனிலை (பூர்வாங்க) விசாரணைகளை மட்டுமே நடாத்தி அச்சம்பவம் தொடர்பில் மேல் விசார

ணைக்காக மேல் நீதிமன்றத்துக்கு (High Courts)வழக்கைப் பாரப்படுத்த வேண்டும். பாரிய குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடாத்தித் தீர்ப்புவழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றத்துக்கு கிடையாது.

குடியியல் வழக்குகள் என்று சொல்லப்படுகின்ற சிவில் வழக்குகள் தனிப்பட்ட இருதரப்பினருக்கு இடையேயான பிணக்குகளாக உள்ளன. உதாரணமாக காணிப்பிணக்குகள், கடன் கொடுக்கல் வாங்கல் பிணக்குகள், மணநீக்கம், மகவேற்பு, மரணச்சொத்துக்கள் நிர்வாகம், தர்மச்சொத்துக்கள் போன்ற விடயங்கள் யாவும் குடியியல் வழக்குகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றது. குடியியல் வழக்குகள் யாவும் வழக்காளிகளால் மாவட்ட நீதிமன்றங்களில் (District Courts) தாக்கல் செய்யப்படவேண்டும்.

மாவட்ட நீதிமன்றங்களில் தனிப்பட்ட ஒருவரே தனது வழக்கைத் தாக்கல் செய்யலாம். என்றாலும் கூட சட்ட விளைவுகள் கருதி, சட்டத்தரணி மூலமே தாக்கல்செய்வது நடைமுறையும், பாதுகாப்புமாகும். அதேபோல வழக்கின் எதிராளிகளும் வழக்கில் தங்களுக்குத் தாங்களே எதிர்த்து வாதாட முடியும் என்றபோதும் சட்டத்தரணிகள் மூலமே வழக்கில் ஈடுபடுகிறார்கள்.

சில பகுதிகளில் ஒரேயொரு நீதிமன்றமும், அதில் ஒரு நீதவானும் மட்டுமே பணியில் இருப்பார். அவரே குற்றவியல் வழக்குகளையும், குடியியல் வழக்குகளையும் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவார். இதனால் இரண்டு வழக்குமே ஒன்றுதான் என்று பொதுமக்கள் எண்ணி விடுகின்றனர். இது தவறான கருத்தாகும். குற்றவியல் வழக்குகளை விளக்கும்போது அது நீதவான் நீதிமன்றமாகச் செயற்படுவதுடன் அவரும் நீதவான் (Magistrate) என்ற அதிகாரத் தத்துவத்துடன் செயற்படுவார். குடியியல் வழக்குகளின்போது அது மாவட்ட நீதிமன்றமாக செயற்படுவதுடன் அவரும், மாவட்ட நீதிபதி (District judge) என்ற அதிகாரத் தத்துவத்துடன் செயற்படுவார். நீதவான் நீதிமன்றத்துக்கு உள்ள அதிகாரங்களும், தத்துவங்களும் வேறானவை. அதேபோல மாவட்ட நீதிமன்றத்துக்குள்ள அதிகாரங்களும், தத்துவங்களும் வேறானவையாகும். ஒன்றில் ஒன்று குறுக்கிடாது என்றாலும் அதிகார வரம்பு அடிப்படையில் மாவட்ட நீதிமன்றம் உயர்ந்த அதிகாரமுடையதாகக் காணப்படுகின்றது.

குடியியல் நீதிமன்றங்களில் (District Courts) வழக்கைத் தாக்கல் செய்யும் வழக்காளி பிராது (Plaint) மூலம் பிணக்குக்குரிய தனது வழக்கு விடயம் பற்றிய கூற்றுக்களைப் பந்தி பந்தியாக இலக்கமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பிராதுடன், தனக்கான சட்டத்தரணி நியமனக்கடிதம், (Proxy) வழக்குத் தொடர்பான ஆவணங்கள், ஒப்படைப்பு அட்டை, முத்திரை ஒட்டிய கடித உறை, போன்றவற்றை தனது சட்டத்தரணி மூலம் கோவைப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் முத்திரை வரிக்கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

இவற்றை வழக்குப் பதிவேட்டில் பதிவுசெய்து ஒப்படைத்தல் வேண்டும். குறித்த வழக்கானது குடியியல் நடைமுறைச் சட்டக்கோவைக்கு அமைவாக இருப்பின் அந்த வழக்கை நீதிமன்றம் ஏற்று குறித்த வழக்கின் எதிராளிக்குப் பிராதின் பிரதியுடன் சேர்த்து அழைப்பாணையைத் திகதியிட்டு அனுப்பிவைக்கும். சாதாரணமாக இவை எதிராளியின் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். எதிராளிக்கு அழைப்பாணை முறையாகச் சேர்ப்பிக்கப்படும் வரை வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது. பதிவஞ்சல் மூலம் அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட முடியாதவிடத்து பதில் சேவகம் மூலம் அழைப்பாணை சேர்ப்பிக்கப்படல் வேண்டும். பதில் சேவகம் என்பது நீதிமன்றப் பிஸ்கால் மூலம் சேர்ப்பிப்பது அல்லது எதிராளி கடைசியாக வசித்த வீட்டில் ஒட்டுவது, அல்லது பத்திரிகை மூலம் பகிரங்கமாக அறிவித்தல் பிரசுரிப்பது என்பவையாகும்.

அழைப்பாணை மற்றும் பிராதின் பிரதி என்பவற்றைப் பெற்றுக்கொண்ட எதிராளி குறித்த தினத்துக்கு மன்றுக்கு சமூகமளித்து (விரும்பின்) தனக்கென ஒரு சட்டத்தரணியை நியமித்து

வழக்கு நடவடிக்கைகளில் மறுமொழி அணைத்து தொடர்ந்து பங்குபற்றலாம். எதிராளியின் மறு மொழியில் எதிர்க்கோரிக்கைகள் இருப்பின் வழக்காளி மாற்று மறுமொழி (எதிர் மறுமொழி- Replication) அணைக்க உரித்துடையவர். எதிராளி வழக்குத் தவணை தினத்தில் நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்கத்தவறினால் நீதிமன்றம் குறித்த வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு எடுத்து (எக்ஸ் பாட்டி ரயல்) வழக்காளி சார்பில் தீர்ப்பை வழாங்கமுடியும்.

குற்றவியல் வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பினால் பாதிக்கப்படும் ஒருவர். உரிய சட்ட முறைகளைப் பின்பற்றி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்ய உரித்துடையவர். அதே போல குடியியல் வழக்கின் தீர்ப்பில் திருப்திப்படாதவர், மாகாண குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ய உரித்துடையவர். இவை நீதிமன்றம் பற்றிய ஒரு ஆரம்ப அறிமுகமாக இருக்கு மென்ற நம்பிக்கையில் இவற்றைத் தொகுத்துத் தருகின்றேன்.

குற்றவியல் வழக்குகள் யாவும் குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவைக்கு அமையவே தாக்கல் செய்யப்பட வேண்டும். வழக்கின் விசாரணைகள் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் நடைபெறும். வழக்கின் தீர்ப்புகள் தண்டனைச் சட்டக்கோவை அடிப்படையில் வழங்கப்படும். இது ஒரு பொதுவான ஏற்பாடாகும். எனினும் சிலவகையான குற்றங்கள் அதுக்கே உரித்தான சட்ட ஏற்பாட்டுக்கு அமைய நடாத்தப்படலாம். குற்றவியல் வழக்கில் குற்றவாளி என எண்பிக்கப்பட்ட ஒருவருக்கு குற்றப்பணமோ, சிறைத்தண்டனையோ அல்லது இரண்டும் சேர்த்தோ வழங்கப்படும். சிறைத்தண்டனையிலும் கூட சாதாரண சிறைத்தண்டனை, கடூழிய சிறைத்தண்டனை, ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை எனப் பலவகையான தண்டனைகள் உள்ளன.

குற்றவியல் வழக்கொன்றில் குற்றம் சாட்டப்பட்டவர் அக்குற்றத்தைப் புரிந்தார் என்பதனை எவ்வித சந்தேகத்துக்கும் அப்பால்பட்ட முறையில் எண்பித்தால் மட்டுமே அவர் குற்றப்பொறுப்புக்கு ஆளாவார். குற்றவியல் வழக்கொன்றில் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என எண்பிக்கும் வரை சந்தேக நபராகவே கருதப்படுவார்.

குடியியல் வழக்கைப் பொறுத்தவரை குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைக்கு அமையவே வழக்குகளின் விளக்கம் நடைபெறும். வழக்கின் முடிவில் வழக்காளி சார்பாக தீர்ப்பு வழங்கப்படலாம். அல்லது வழக்காளியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம். குடியியல் வழக்கு களிலே தண்டனை என்ற விடயம் உள்ளடங்காது. ஆனால் வழக்குச் செலவு செலுத்துமாறு கட்டளை யிடப்படலாம். குடியியல் வழக்குக்கு எதிராளி சமூகமளிக்கத் தவறினால் வழக்கு எதிராளி இன்றியே "ஒருமுகமாக" விளங்கப்பட்டு வழக்காளி சார்பாகத் தீர்ப்பு வழங்கப்படும். ஆனால் குற்றவியல் வழக்கில் எதிரி மன்றுக்குச் சமூகமளிக்கத் தவறினால் அவருக்கு எதிராகப் பிடியாணை (Warrant) பிறப்பிக் கப்பட்டு, அவர் கைது செய்யப்படுவார். சில சந்தர்ப்பங்களில் எதிரி விளக்கமறியலிலும் (Remand) வைக்கப்படலாம். இவை பற்றி பின்னர் விளக்கமாக எழுத முயற்சிக்கிறேன்.

**"தேசமானிய" சபா ரவீந்திரன் ஜே.பி.யூ.எம்**
"Deshamanya" Saba Raveeindiran J.P.U.M
Attorney-At-Law, Notary Public Chairman, Urban Council, Point Petro

# சலரோகம் (வெல்ல நீரிழிவு) பற்றிய குறிப்புகள்

**1.சலரோகம் என்பது என்ன?**

ஒருவர் சுகதேகியாகவிருக்க பல தொழிற்பாடுகள் உதவுகின்றன. அவற்றில் ஒன்று குருதி குளுக்கோசின் அளவை சமநிலையில் வைத்திருத்தல். வயிற்றுப் பகுதியிலுள்ள சதையி எனும் சுரப்பி இன்சுலின் எனும் பதார்த்தத்தை சுரக்கின்றது. இது குருதிக் குளுக்கோசு மட்டத்தைப் பேணும். நாம் உணவு உண்ணும்போது குளுக்கோசு மட்டம் அதிகரிக்கும். இதன் போது சதையி இன்சுலினைச் சுரந்து குளுக்கோசின் அளவைக் குறைக்கும். குருதியில் குளுக்கோசின் மட்டத்தை அதிகரிக்க பல ஓமோன்கள் உள்ள போதும், குருதியில் குளுக்கோசு மட்டத்தைக் குறைக்கும் ஒரேயொரு ஓமோன் இன்சுலின் ஆகும். குருதியில் குளுக்கோசின் மட்டம் கட்டுப்படுத்த முடியாதவாறு அதிகரிப்பதே சலரோகம் ஆகும்.

**2.நீங்கள் சலரோகத்தை பெற்றது எப்படி?**

சலரோகத்தை பிரதானமாக இரண்டு வகைப்படுத்தலாம்.

வகை I ஆனது சிறுவர்களை பாதிக்கக்கூடியதாகும். இது சில சிறுவர்களின் உடலில் இன்சுலினைச் சுரக்கும் சதையக்கலங்களை அழிவடையச்செய்யும் பிற பொருளெதிரிகள் காரணமாக வருவதாகும். இவ்வழிவுச் செயன்முறையை கட்டுப் படுத்தும் மருந்துவகைகள்/ செயன் முறைகள் கண்டறியப்படவில்லை. ஆனால் இன் சுலினை கொடுப்பதன் மூலம் குருதியில் குளுக்கோசு மட்டத்தை பேண முடியும்.

வகை II ஆனது வயதுவந்தவர்களை பாதிக்கும்(பெரும்பாலும் 40 வயதிற்கு மேல்) இது குறைவாக இன்சுலின் சுரத்தல், இன்சுலின் தொழிற்பாடு குறைதல், குளுக்

கோகன் (குருதி குளுக்கோசை அதிகரிக்கும் சுரப்பு) அதிகரித்தல் என்பவற்றின் கூட்டு விளைவாக பெறப்படுகிறது.

**3.சலரோகத்தின் குணங்குறிகள் எவை?**

- பெரும்பாலான சலரோக நோயாளிகள் குணங்குறிகளற்று காணப்படுகின்றனர். வேறு தேவைகளுக்காக பரிசோதனைகள் செய்யும்போது கண்டறியப்படலாம்.
- வழமையாக சலரோக நோயாளிகள் அதிகரித்த சிறுநீர்ப்போக்கு, அதிகரித்த பசி, அதிக தாகம், நிறைக்குறைவு, மங்கல் பார்வை, கால்களில் விறைப்புத்தன்மை ஆகிய குணங்குறிகளை கொண்டிருக்கலாம்.

**4.எவ்வாறு சலரோகம் இருப்பதை உறுதிப்படுத்தலாம்?**

- உணவின்றிய நிலையில் குருதி குளுக்கோசு செறிவு(FBS) 126mg/dl (70mmol/l) இற்கு அதிகமாக விருப்பின்
- சாதாரண குருதி குளுக்கோசு செறிவு (RBS) 200mg/dl (11.1mmol/l) இற்கு அதிகமாகவிருப்பின்
- ஈமோகுளோபின் (HbA1c) 6.5% இற்கு அதிகமாகவிருப்பின்

**5.குருதி குளுக்கோசு மட்டத்தை பரிசோதனை செய்ய வேண்டியவர்கள் யாவர்?**

- 135/80mmHg இற்கு அதிகமாக நீண்ட காலமாக குருதியமுக்கம் உடையவர்கள்
- சலரோகத்தை தூண்டக்கூடிய காரணிகள் கொண்டவர்கள்
- அதிக நிறை
- குடும்பத்தில் யாருக்காவது சலரோகம் இருப்பவர்கள்.
- HDL<35mg/dl / TG>250mg/dl உடையவர்கள்.
- 45 வயதிற்கு மேற்பட்ட யாவரும்.

**6.ஏன் நாங்கள் சலரோகத்தை கட்டுப்படுத்த வேண்டும்?**

- கண்பார்வை இழப்பு, சிறுநீரக செயலிழப்பு, விறைப்பு என்பவை ஏற்படாது தடுப்பதற்கு.
- மாரடைப்பு, பக்கவாதம் ஏற்படாது தடுக்க.
- நீண்ட நாட்பட்ட புண்களினால் அங்க இழப்பை தடுக்க.

**7.சலரோகத்திற்கு எவ்வாறு படிப்படியாக சிகிச்சையளிக்கப்படும்?**

- ஒவ்வொருவருக்கும் ஏற்றவகையில் தனியான குளுக்கோசினை குறைக்கும் முறைகள் ஆலோசிக்கப்படும்.
- உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி, சலரோகம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.
- பக்கவிளைவுகள் இல்லாதவிடத்து metformin முதலாவதாக கொடுக்கப்படும்.
- அதன்பின் மேலதிக மாத்திரைகள் / ஊசிகள் வழங்கப்படும்.
- பின் இன்சுலின் தனியாகவோ ஏனைய மருந்துகளுடனோ வழங்கப்படும்.

* இச்சிகிச்சை முறைகள் நோயாளியின் விருப்பங்கள், தேவைக்கேற்றவாறு மாற்றியமைக்கப்படும்.
* இதயம் சம்பந்தமான நோய்களை தடுப்பது பற்றி கவனம் செலுத்தப்படும்.

**8. சலரோகம் தொடர்பான சிக்கல் தன்மையை எவ்வாறு தடுக்கலாம்?**

- மாதாந்தம் FBS பரிசோதனை/ HbA1c பரிசோதனை 3-6 மாதங்களுக்கு ஒருமுறை செய்தல்
- வருடாந்தம் கண்பரிசோதனை செய்தல்.
- வருடாந்தம் அல்புமின் அளவை பரிசோதித்தல்.
- ஒவ்வொரு வருகையின்போதும் பாதங்களை பரிசோதித்தல் (மாதாந்தம்)
- LDL அளவை குறைக்க statin பாவித்தல் (மருத்துவரின் ஆலோசனைப்படி).

**9. சலரோகம் வராது எவ்வாறு எம்மை பாதுகாக்கலாம்?**

- ஆரோக்கியமான வாழ்க்கை முறையை முன்னெடுத்தல்(ஒழுங்கான உடற்பயிற்சி, ஆரோக்கிய மான உணவு, சரியான உடல் எடை).
- BMI = $\frac{\text{நிறை (kg)}}{\text{உயரம் } 2(m^2)}$ $23kgm^{-2}$ இலும் அதிகமாகவுள்ளவர்கள் நிறையை குறைக்க முயற்சி செய்தல்.
- தொப்புள் ஊடான வயிற்றுச் சுற்றளவை பேணுதல் (ஆண்கள் <85cm, பெண்கள் <80cm).
- புகையிலை பாவனையை கைவிடுதல்.
- உயர் குருதியமுக்கம் இருப்பின் அதற்கான மாத்திரைகளை எடுத்து கட்டுப்பாட்டினுள் வைத் திருத்தல்.
- மனவழுத்தத்தினை குறைக்க முயற்சி செய்தல்.

**10. சலரோகம் உள்ளவர்களின் உணவு முறை எவ்வாறு சீரமைக்கப்பட வேண்டும்?**

சலரோகம் உள்ளவர்கள் காபோவைதரேற் கொண்ட உணவுகளை தவிர்க்க வேண்டு மென்பது பிழையான கருத்தாகும். எனினும் உட்கொள்ளும் உணவின் அளவு (கலோரி அளவு) குறைக்கப்பட வேண்டியதும் உணவு முறைகள் சீரமைக்க வேண்டியதும் அவசியமாகும்.

**1.காபோவைதரேற்**

- மொத்த உள்ளெடுக்கும் உணவின் கலோரியளவில் / சக்தியில் 45-60% உள்ளெடுக்கப் படவேண்டும்.
- நேரடியான இனிப்புப் பதார்த்தங்கள்(சீனி சேர்க்கப்பட்ட) இயன்றளவு தவிர்க்கப்படவேண்டும்.
- கோது நீக்காத தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள் உள்ளெடுக்கலாம்.
- நொறுக்குத்தீனி, பதனிடப்பட்ட உணவுப் பதார்த்தங்கள் இயன்றளவு தவிர்க்கப்படவேண்டும்.
- விரும்பும்பட்சத்தில் சீனிச்சத்தற்ற இனிப்புவகைகளை உள்ளெடுக்கலாம்.

**2. கொழுப்பு**

- மொத்த உள்ளெடுக்கும் சக்தியளவில் 30% இற்கு குறைவாக இருக்கவேண்டும் (1g கொழுப்பு காபோவைதரேற்றின் 1g இன் இருமடங்கு சக்தியைத்தரும்).
- நிறைந்த கொழுப்பு(விலங்கு கொழுப்பு, தேங்காய் எண்ணெய், மாஜரின்) பாவனையை குறைக்க வேண்டும்.
- ஒழுங்காக மீன் உட்கொள்ள வேண்டும் ( குறைந்தது வாரத்திற்கு இரு தடவை).
- ஒரு நாளைக்கு 300mg கொலஸ்திரோலிலும் பார்க்க குறைவாக உட்கொள்ள வேண்டும் (சரா சரியாக ஒரு முட்டையிலுள்ள கொலஸ்திரோல் அளவு)

**3. புரதம்**

- மொத்த சக்தி தேவையின் 10-20% புரதத்தினூடாக பெறப்பட வேண்டும்.
- மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என்பன தவிர்க்கப்படவேண்டும்.
- கோழிஇறைச்சி, மீன், தானிய புரதம் (சோயா, பருப்பு வகைகள்) உட்கொள்ளலாம்.
- சிறுநீரக பிரச்சனை உள்ளவர்கள் புரத உணவின் அளவை மேலும் குறைப்பது நல்லது.
- நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உள்ளெடுக்கலாம் (ஒரு நாளைக்கு 40g இற்கு அதிகமாக).
- உப்பு ஒரு நாளைக்கு 6g இலும் குறைவாக உள்ளெடுக்க வேண்டும் (குருதியமுக்கம் உடைய வர்கள் மேலும் குறைவாக உள்ளெடுக்கவேண்டும்).

**11.சலரோகம் உள்ளவர்கள் எவ்வாறு உடற்பயிற்சி முறைகளை திட்டமிடலாம்?**

- ஒழுங்கான உடற்பயிற்சி அவசியமாகும்.
- அன்றாட வாழ்வில் இலகுவான முறையில் உடற்பயிற்சி செய்ய பழகுதல் (வீட்டு வேலைகள்).
- உடற்பயிற்சியானது வாரத்திற்கு 5 நாட்களாவது மேற்கொள்ளவேண்டும். ஒரு நாளைக்கு 30-45 நிமிடம் உடற்பயிற்சி செய்யலாம். தொடர்ச்சியாக இரு நாட்களுக்கு உடற்பயிற்சி செய்யாது இருக்கக்கூடாது. (மெதுவான ஓட்டம் போன்ற இலகுவான உடற்பயிற்சிகள் போதுமானது)
- சலரோகத்தைக் கட்டுப்படுத்துவதுடன் தமது உடல் நிறையை குறைக்க விரும்புபவர்கள் நாளொ ன்றிற்கு ஆகக் குறைந்தது ஒரு மணிநேர சாதாரண உடற்பயிற்சியோ அல்லது அரை மணி நேர கடின உடற்பயிற்சியோ செய்யலாம்.
- உடல்நிறையின் 5-10% இனை ஆறு மாத காலப்பகுதியினுள் குறைத்தல் ஆரோக்கியமானதாகும். (குறுகிய காலத்தில் நிறையை குறைக்கும் முயற்சிகள் பக்கவிளைவினை ஏற்படுத்தலாம்).

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

**ச. விதுரன்**
4ம் வருட யாழ் மருத்துவ பீடம்
(திக்கம் மத்தியசனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்)

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

**அறிமுகம் :-**

தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. செம்மொழியாக இன்று நிமிர்ந்து நிற்கின்றது. இரண்டாயிரம் ஆண்டிற்கு மேற்பட்ட பழைமை வாய்ந்தது. தமிழில் மிகத் தொன்மையான இலக்கியங்கள் சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்களை பதினெண் மேற்கணக்கு நூல்கள் என அழைப்பர். சங்க இலக்கியம் அகம், புறம் எனும் இருபெரும் பகுப்புக்களைக் கொண்டது. பண்டைத் தமிழரின் காதல், வீரம் என்னும் பேருணர்வுகளின் அடிப்படையில் இப்பாகுபாடு அமைந்துள்ளது. இவற்றுள் காதல் அல்லாத மற்ற உணர்வுகள் புறம் எனப்பட்டன.

"புறப் பொருளாவது மறஞ் செய்தலும் அறஞ் செய்தலும் ஆதலான் அவற்றான் ஆன பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம்" என்பர் என்று தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் குறித்துள்ளார். புறத்தில் போரும் போருக்கு அடிப்படையான வீரமும் சிறப்புப் பெற்றாலும் புறம் என்பது வெறும் போரை மட்டும் குறிப்பது மட்டுமல்ல. அறம், பொருள், இன்பம் என்று வகுக்கப்பட்ட மூன்றில் அறத்தையும் பொருளையும் விரிவாகத் தன்னுள் ஆட்படுத்திக் கொண்டிருப்பது புறமேயாகும்.

புறம் என்ற சொல், தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் பல இடங் களிலே பயின்று வருகின்றது. அகராதி குறிக்குமாறு இச்சொல், வெளியிடம், அந்நியம், பக்கம், முதுகு, அலர்மொழி, காலம் ஆகிய வெவ்வேறு பொருளைக் குறிக்கும் வகையில் இடம்பெற்றுள்ளது. (Tamil lexican.vol iv.part 1, University Of Madras p.2809)

**புறநானூறு :-**

பதினெண் மேற்கணக்கு நூல்களுள் ஒன்று எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புலவர்கள் பலரால் பாடப்பெற்ற புறப்பொருள் பற்றிய 400 பாடல்களால்

அமைந்துள்ளதால் இது புறநானூறு எனும் பெயரினைப்பெற்றது. இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னா ரென்று அறியுமாறில்லை. இது புறப்பாட்டெனவும் புறமெனவும் புறம்பு நானூறு எனவும் வழங்கும். 4 முதல் 40 அடி வரையிலான பாடல்களைக் கொண்ட புறநானூற்றின் காலத்தை கி.மு 1000 இலிருந்து கி.பி 300 வரை என்று டாக்டர் மா.இராசமாணிக்கம் கணித்துள்ளார். (தமிழ் இலக்கண, இலக்கிய கால ஆராய்ச்சி. ப.18)

புறநானூறு, கடவுள் வாழ்த்துச் செய்யுளோடு 400 அகவற்பாக்களைக் கொண்டது. இவற்றுள் 267, 268 ஆகிய இரண்டு பாட்டுக்களின் மூலமும் உரையும் கிடைக்கவில்லை. புறநானூற்றுப் பாடல்களை 157 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்கள் 386 பாட்டுக்களைப் பாடியுள்ளனர். 12 பாட்டுக்களைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. இவர்களில் 15 பேர் பெண்பாற் புலவர்கள். பழந்தமிழரின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் மிகத் தொன்மையான நூல் இதுவாகும். இந்நூலிலுள்ள ஒரு பாடலின் தொடரே (யாதும் ஊரே யாவரும் கேளிர்)

**யாதும் ஊரே யாவரும் கேளிர் :-**

புலவர் ஒருவர் ஓர் ஊரின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். வழி நடந்த களைப்பினால் அவருக்குப் பசி மயக்கம். நாவறண்டது. ஒரு குடிசையின் அருகில் மயங்கி விழுந்தார். நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்ட வீட்டில் உள்ளோர் திரண்டு வந்தனர். அவரைத் தூக்கிச் சென்றனர். கட்டிலில் படுக்கவைத்தனர். விசிறி கொண்டு மெல்ல விசிறினர். தண்ணீர் கொடுத்தனர். அவர் உணர்வு பெற்றார். அவர் பலநாள் உண்ணவில்லை என்பதை அறிந்து தினைமாவும் தேனையும் அளித்தனர். அவருடைய கண்களில் தெளிவு ஏற்பட்டது. "நீங்கள் எந்த ஊர்? உங்கள் உறவினர் யார்?" என்று அவர்கள் கேட்டனர். "என் பசிக்கு உணவிட்ட இந்த ஊரும் என்னூரே, நீங்கள் எல்லோரும் என் கேளிரே-உறவினரே" என நன்றியுணர்வோடு கூறிக்கொண்டே நடந்தார். தமிழர்கள் அன்று எவ்வாறு பிறருக்கு உதவினர் என்பதற்கும் அவர்களின் அரிய சிந்தனைக்கும் இத்தொடர் அரிய சான்றல்லவா?

கொஞ்சத்தூரம் சென்றார். அடர்ந்த காடு. வழிப்பறிக் கொள்ளையர்கள் கொடுவாளுடன் காத்து நின்றனர். "கையில் என்ன மூட்டை கொடு" என்று மிரட்டினர். மூட்டையிலிருந்த ஓடுகளைத் தாறுமாறாகக் கிழித்தனர். புலவர் உள்ளம் வருந்தியது. அந்தநேரத்தில் வீரக்கழல் அணிந்த ஒருவன் வந்தான். அவன் மன்னனைப் போன்ற பெருமிதத்துடன் இருந்தான். திருடர்கள் அஞ்சி ஒளிந்தனர். வந்தவன் புலவரின் ஓலைச்சுவடிகளைப் பொறுக்கினான். சில பாடல்களைப் படித்தான் சுவைத்தான் மகிழ்ந்தான் பாராட்டினான். அவருடைய பசியை அறிந்து "கொஞ்சம் இருங்கள்" என்றான். உணவினைக் கொடுத்து உண்பித்தான். அவரைத் தன்நாட்டிற்கு வரும்படி வேண்டினான். புலவர் மறுத்தார். அவனை வாழ்த்தினார். தன்வழியே சென்றார். அவருடைய வாயோ, "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்றது.

கொஞ்சத்தூரம் நடந்தார். வறண்ட பாலைநிலம். மழையில்லாமையால் அந்தக் காட்டுப்பகுதி வறண்டுவிட்டது. அந்த ஊரில் இருப்பவர்கள் நீர் இல்லாமல் தவித்தனர். இந்த நாட்டைக் கொடுங்கோல் மன்னன் ஆள்கிறானோ? அதனால் மழை பொய்த்ததோ? என்று வருந்தினார். "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் மழை பெய்யுமாமே" நல்ல உள்ளத்தினராகிய புலவர்

சென்றதால் போலும் மழை நன்றாகப் பெய்தது. வெள்ளம் திரண்டது. மக்கள் மகிழ்ந்தனர். "நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" என்று புலவரின் வாய் பாடியது.

மீண்டும் நடந்தார். ஒரு வீட்டில் நெய்தற் பண் துன்பத்தின் அறிகுறியாக ஒலித்தது. வீட்டில் பிணக்கோலம். அனைவரும் அழுதனர். அடுத்த தெருவில் முழவு ஒலி, இனிய ஒலி திருமணம் நடப்பதைக் காட்டும் மங்கல ஒலி. மகிழ்ச்சி வெள்ளம். புலவர் இக்காட்சியைப் பார்த்தார். இப்படி இருவேறு உலகத்து இயற்கையைப் படைத்தவன் கடவுளா என்று நினைத்தார். அவரது வாயோ,

"சாதலும் புதுவதுன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே" என்று பாடியது.

இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும்போதே மின்னல் மின்னியது. இடிஇடித்தது. மழை பொழிந்தது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது. கற்களை உருட்டிக் கொண்டே சென்றது. கரை உடைந்து விடுமோ என்ற அச்சம். அந்த வெள்ளத்தில் ஒரு தெப்பம் - மிதவை அடித்துக் கொண்டு செல்கிறது. அதற்குத் துணை இல்லை. புலவரின் மனதில் அரிய கருத்து உருவானது. காட்டு வெள்ளம் அலைத்துக் கொண்டு போவதுபோல் விதியும் அனைவரையும் அலைத்துக் கொண்டு செல்கிறது. அரிய உயிர், விதியின் வழியே ஒழுகுகிறது. இதுவே இயற்கையின் நியதி.

"வானம் தண்டுளி தலை இயானது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் தெளிந்தனம்" என்று பாடினார்.

அவர் அந்நாள் வரை தன்னை வியந்துகொண்டிருந்தார். தன் பாடலைச் சுவைக்காதவரை- பாராட்டாதவரைச் சிறியவராக நினைத்துக் கொண்டிருந்தார். இப்போது அவர் மனம் தெளிந்தது. சமநிலையுற்றது.

"பெரியோரே வியத்தலுமிலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று பாடினார்.

புறநானூற்றில் இப்பாடலைப் பாடியவர் கணியன் பூங்குன்றனார். இவர் கணிப்பில்-சோதிடத்தில் வல்லவராதலால் கணியன் என்று சிறப்பிக்கப்படுகின்றார் என்பர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மகிபாலன் பட்டியென இப்பொழுது வழங்கும் ஊரே அன்று "பூங்குன்றம்" என்று வழங்கப்பட்டது. இதனால் இவருக்கு பூங்குன்றனார் எனும் நாமம் உண்டாயிற்று எனக் கருதமுடியும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - என்று பாடி உலகப் புகழ் பெற்றார். பொதுவுடைமை உள்ளத்தில் அடிநாதமாய் நின்றிருக்கிறது. உலகின் படைப்பை உணர்ந்து, ஒன்றிலிருந்து ஒன்று வந்ததை அறிந்து யாதும் ஊரே என்றார். உலகின் எல்லா உயிர்களையும் உணர்ந்து யாவரும் கேளிர் என்றார். இந்த

ஒரு வார்த்தை சொல்ல, எவ்வளவு சிந்தனை, ஒரு மனித நேயம் வேண்டும். உண்மையில் இதுவே 'Globalization' பற்றிய முதற்சிந்தனையாக இருக்க வேண்டும். அதனால் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் 'லுமும்பா' பல்கலைக்கழகத்தின் தலைவாயிலில் இந்த வரி பொறிக்கப்பட்டுள்ளது. தமிழன் இந்த ஒரு வரியினால் நிமிர்ந்து நிற்கிறான்.

இந்த வரியினை மட்டுமே பலர் அறிந்துள்ளனர். பாடல் முழுவதையும் நோக்குவோம். திணை - பொதுவியல், துறை - பொருண்மொழிக்காஞ்சி

" யாது மூரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலவே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலை இயானது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புனைபோ லாருயிர்
முறைவழிப் படூஉம் மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்த மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே" (புறம்:192)

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் தமிழன் தெளிந்த சிந்தனையோடு வாழ்ந்தமையை இப்பாடல் நன்கு புலப்படுத்துகின்றது. இப்பாடலை இதன் பொருளை நன்கு உணர்ந்து வாழ்ந்திட்டால் வாழ்வில் துன்பமில்லை. வாழ்வின் சாரத்தைக் கூறும் இப்பாடல் சாதாரண பாடலன்று. கேளிர் - எனும் தொடரைப் பொருளறியாது பலரும் கேளீர் என்று எழுதுவதும் உச்சரிப்பதும் வருந்தத்தக்கது. கேளிர் - உறவினர் - சுற்றத்தவர். தாய்மொழியை நேசிப்போம் சிந்திப்போம் செயற்படுவோம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திருப்போம்.

**சி.வே.ஞானசம்பந்தன், ஆசிரியர்.**
(B.A(HONS), Dip.in.Edu,
Dip.in.S.M, M.A)

# எமது பாரம்பரியக் கலைகள்

ஆயகலைகளறுபத்து நான்கினையு
மேயவுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு போல்வாளென்னுள்ளத்தினுள்ளே
யிருப்பளிங்கு வாராதிடர்

என்று பாடினார். கவிச்சக்கரவர்த்தி கம்பர். அறுபத்து நான்கு கலைகள் உளதாகப் பாடியுள்ளார். கலைகள், இசைக்கலை, நாடகக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, சோதிடக்கலை, பாரம்பரியக்கலை என விரிந்துகொண்டே செல்லும். கலைகள் உள்ளத்திற்கு இன்பம் அளிப்பவை. அழகுணர்ச்சியுடன் கூடியவை.

கிராமங்களிலே மக்களால் மரபுரீதியாகக் கைக்கொள்ளப்பட்டு வந்த கலைகளையே பாரம்பரியக் கலைகள் என்கின்றோம். இக்கலைகள் ஆதிகாலம் தொட்டு இன்றுவரையில் யாவராலும் உணரக்கூடிய சமய, சமூக பழக்கவழக்கங்கள், பேச்சு வழக்கு அனைத்தையும் அனுசரித்த கலையாக, கலைகளாக மக்களிடையே பெருமதிப்பை பெற்றிருந்தன. பாரம்பரியக் கலைகளை நோக்கும்போது பாரம்பரிய நாடகக் கலையாக நாட்டுக்கூத்துகள் விளங்குகின்றன.

கூத்து என்பது ஆடலும் இசையும் சேர்ந்தது. ஆடலும் பாடலும் நிறைந்து கேட்போருக்கும், பார்ப்போர்க்கும் இன்பம் ஊட்டவல்லன. சிந்தனைக்கு நல்ல உபதேசங்களையும் அளிக்கின்றன. பெரும்பாலும் புராண இதிகாசக்கதைகளே நாட்டுக்கூத்தாக நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. அவை மக்கள் மனதில் நல்ல கருத்துக்களை பதியச் செய்யக்கூடியனவாக இருந்தன.

எமது நாட்டில் தமிழர் தமது பிரதேசங்களில் வடமோடி, தென்மோடி என இரு வகைப்பட்ட (இருநிலைப்பட்ட) கூத்துக்களை ஆடிவந்துள்ளனர். எமது பிரதேசத்தில் தென்மோடிக்குரிய அம்சங்களுடனான கூத்துக்களே ஆடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சிலர் வடமோடி, தென்மோடி ஆகிய இருவகைக் கூத்துக்களின் அம்சங்களும் கலந்ததாக ஆடப் பட்டதாகவும் கூறுகின்றனர்.

கூத்துப் பழக்கும் ஆசிரியர் "அண்ணாவியார்" என அழைக்கப்படுகின்றார். இவரே மத்தளம் அடித்துக் கூத்துப்பழக்குவார். முறையான மத்தள இசையே கூத்தின் ஆட்டத்திற்கு உயிர் கொடுக்கும் "அண்ணாவியார்" கூத்தொன்றைப் பழக (பயில) விரும்பும் மக்களுக்கு தக்கதோர் கூத்தைத் தெரிந்து எடுத்துக் கொடுத்து, அவர்களின் குரல்வளம், இசைஞானம், நடிப்புத்திறன், உடல்வாகு என்பவற்றைப் பார்த்து அதற்குரிய பாத்திரங்களைத் தெரிந்தெடுத்துக் கொடுப்பார். பாத்திரங்களுக்குரிய நாடகப் பகுதியை எழுதிக்கொடுப்பார். பக்கப்பாட்டுக்காரர்களையும் (பின்னணிப் பாடகர்) தெரிந்தெடுப்பார். கூத்துப் பழக்கும் இடத்தில் பல நாட்களுக்கு கூத்தைப் பழக்குவார். நன்கு ஆடிப்பழகிய பின்பு நடிகர்கள் (கூத்தர்கள்) முறைப்படி கோலம் பூண்டு பரந்த பொது இடம் ஒன்றிலே கூத்தை அரங்கேற்றம் செய்வார்கள். அரங்கேற்றத்திற்கான மேடை பெரும்பாலும் கோயில் வீதிகளிலே அமைக்கப்படுவது வழக்கம். தெரு, மாளிகை, நந்தவனம், காடு போன்ற ஓவியங்கள் வரையப்பட்ட ஏற்றியிறக்கும் திரை அமைப்புக்கள், பக்கத்தட்டிகள், வர்ணவிளக்குகள் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் மேடை யாக மேடை விளங்கும் மேடையில் ஹார்மோனியம், மத்தளம் சல்லரி (கைத்தாளம்) முதலான இசைக்கருவிகளுடன் அவற்றை இசைக்கும் கலைஞர்களும் காணப்படுவர். பிற்காலத்தில்தான் இத்தகைய மேடைகளில் கூத்து நடைபெற்றது. ஆரம்பகாலத்தில் திறந்த களரியிலே கூத்து நடை பெற்றதாக அறிகிறோம்.

இரவு நேரத்திலேயே கூத்து ஆடப்பட்டு வந்தது கூத்துத் தொடங்கும் பொழுது "கட்டியக்காரன்" முதலில் தோன்றுவது பொதுவான வழக்கம். அவன் வந்து தன் வரவையும் பின்னால் வரப்போகும் அரசனுடைய சிறப்பு முதலியவற்றையும் சொல்லி சபையோரை அமைதியாக இருந்து பார்க்கும் படியும் கூறிச்செல்வான். அதன் பின்பு கதைப்போக்குப்படி நடிகர் (கூத்தர்) முறையே தோன்றி நடிப்பர். நடிகர்களது முதல் தோற்றத்தின் பொழுது வரவுப்பாட்டுக்களும் ஆட்டங்களும் இடம்பெறும். தாள அறுதி பிசகாது மத்தளம் அடிப்பவரது திறமையால் இந்த நேரத்தில் மேடை அதிர்ந்து விளங்கும். வரவின் பொழுது வேறுவேறான தாளங்கள் மத்தளத்தில் ஒலிக்கும். தாளக்கட்டுக்கள் நடிகர்களில் வேறுவேறான இயல்புடையவர்களின் தரத்துக்கும் தகைமைக்கும் ஏற்ப வேறுபடும். கூத்தில் கூத்துப் பாத்திரங்களின் உணர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப ஆட்டங்களும் இவ்வாட்டங்களுக்கு உணர்ச்சி வெளிப்பாட்டுடன் பாடல்களும் பாடப்படும். பாடிவிட்டு வசனங்களிலும் நீட்டி உரைக்கப்படும்.

இத்தகைய முறையில் எமது கிராமத்தில் நாட்டுக்கூத்துக்கள் எம் முன்னோரால் ஆடப்பட்டுவந்ததை அறிகின்றோம். ஆடியும், பாடியும் மகிழ்வடைந்துள்ளனர். சத்தியவான் சாவித்திரி கூத்து மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளது. எமது கிராம மக்களில் ஆடல், பாடலில் திறமையுள்ளோர் அண்ணாவியார் சதாசிவம் மூலம் சத்தியவான் சாவித்திரி கூத்தினைப் பழகி நீர்வளைப்பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் மேடை அமைத்து அரங்கேற்றினார்கள் என்பதனை அதனைப் பார்த்து ரசித்த எனது தாயார் கூறக்கேட்டேன். இக்கூத்து பலதடவைகள் மேடையேற்றப்பட்டதாகவும் கூறினார். அத்துடன் இக்கூத்தில் யமனின் வரவுப்பாட்டில் சந்த ஓசை பார்ப்பவர்களைப் பின்னிப் பிணைத்து விடும் எனவும் கூறினார். கூத்தில் தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்திற்கு ஏற்றவாறு ஆடல், பாடல், நடிப்பு ஆகிய முக்கிய அம்சங்களில் திறமை முழுவதையும் வெளிப்படுத்திய நடிகர்கள் கூத்துப்

பாத்திரத்தின் பெயராலேயே பின்னர் அழைக்கப்பட்டுள்ளனர். சத்தியவான் சாவித்திரி கூத்தில் சத்தியவானின் பாத்திரமேற்று நடித்த அமரர். ஆறுமுகம் முருகுப்பிள்ளை (வவுணிலில் வசித்தவர்) என்பவர் சத்தியவான் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டார்.

1950ம் ஆண்டின் பின்பு நீர்வளைப் பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி தினத்தன்று இரவு நாட்டுக் கூத்து நடைபெறுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. எமது கிராமத்தவரின் கூத்துக்களைவிட வேறு இடத்திலுள்ள கூத்துக்காரரின் கூத்துக்களும் இங்கு நடை பெற்று வந்துள்ளன. காத்தவராயர், பவளக்கொடி, வள்ளி திருமணம், கோவலன் கண்ணகி ஆகிய கூத்துக்கள் நடைபெற்றுள்ளன. எமது கிராமத்தைச் சேர்ந்த அமரர் பெரியதம்பி சிதம்பரம்பிள்ளை யாரின் நேர்த்திக்காக சிவராத்திரி தினத்தன்று பிள்ளையாருக்கு சிவராத்திரி பூசை செய்வித்து நித்திரை விழிப்பிற்காக இரவு பிள்ளையாரின் முன்றலில் பக்திக் கூத்துக்களை ஆட்டுவித்து வந்த அடியவர் ஆவார். இவரது செயற்பாடு பாராட்டப்பட வேண்டிய செயற்பாடாகும்.

1957 இன் பின்னர் கூத்தாடும் கலைஞர்கள் அரிச்சந்திரன் கூத்தினை அண்ணாவியார் சதாசிவம் மூலம் பழகி அரங்கேற்றியுள்ளார்கள். இக்கூத்தும் நீர்வளைப் பிள்ளையார் கோயில் முன்றலில் அரங்கேற்றப்பட்டது. மாலைப் பொழுது தொடங்கி வைகறைப் பொழுது வரை இரவு நேரத்தில் இக்கூத்து நடைபெற்றது. இக்கூத்தும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டது. இக்கூத்தில் அரிச்சந்திரன் பாத்திரத்தை ஒருவர் ஏற்று முழு நேரமும் நடிப்பது கடினமென்றபடியால் அரிச்சந்திரனது பாத்திரத்திற்கு இருவர் நடித்தனர். அதே போல் சந்திரமதியின் பாத்திரத்திற்கும் இருவர் நடித்தனர். முன் அரிச்சந்திரன் எனவும் பின் அரிச்சந்திரன் எனவும் இருவர் நடித்தனர். அதே போல முன் சந்திரமதி எனவும் பின் சந்திரமதி எனவும் இருவர் நடித்தனர். முன் அரிச்சந்திரனாக அமரர் ஏரம்பு வல்லிபுரமும் பின் அரிச்சந்திரனாக அமரர் சந்தணர் கதிர்காமத்தம்பியும் முன் சந்திரமதியாக அமரர் ஆறுமுகம் கதிர்காமத்தம்பியும் பின் சந்திரமதியாக அமரர் கந்தையா கணபதிப்பிள்ளையும் சத்தியகீர்த்தியாக திரு. முருகுப்பிள்ளை மருதபிரானும் நாரதராக அமரர் கந்தையா பொன்னையாவும் லோகிதாசனாக திரு.மாணிக்கம் குலவீரசிங்கமும் நடித்துள்ளனர்.

இக்கூத்தில் மயான காண்டத்தில் தர்ப்பைக்காடு தொடக்கம் கூத்து முடியும் வரை பாடல்களே முதன்மை பெறுகின்றன. அரிச்சந்திரன் சுடலையிலே (மயானத்திலே) சுடுகோல் ஏந்தியவாறு தனது துயரநிலையைப் பாடல்களினூடாக வெளிப்படுத்துவான். மகனை இழந்த சந்திரமதி பாடல்களினூ டாகப் புலம்புவாள் பாடல்களினூடாக உணர்வுகளை வெளிப்படுத்தும்போது பார்ப்பவர்கள் பாத்திரங் களுடன் ஒன்றிவிடுகின்றனர். அவர்களும் சோகத்தால் அழுது விடுகின்றனர். சோகம் நிறைந்த மயான காண்டத்தை என்றும் மறக்க முடியாது.

ஆலயங்கள் பாரம்பரியக் கலைகளை வளர்க்கும் இடமாக விளங்கி பாரம்பரியக் கலைகளுக்கு உயர்வு தந்தன. நாட்டுக் கூத்துகள் பெரும்பாலும் ஆலய முன்றலில் நடைபெற்றது போலவே பாரம்பரிய ஆட்டங்களான கரகாட்டமும் காவடியாட்டமும் ஆலயச் சந்நிதிகளிலே நடைபெற்றன. ஆலயங்கள் உடுக்கையும் பறையும் ஓங்கி ஒலிக்கும் களமாக விளங்கின. பாரம்பரியக் கலைகளில் பக்தி சிரத்தை யோடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் கரகாட்டமும் காவடியாட்டமும் சிறந்து விளங்குகின்றன.

எமது கிராமத்தில் கரகாட்டமும் காவடியாட்டமும் சிறந்து விளங்கின எனக் கூறலாம். கரகம் என்றால் கமண்டலம் என்றும் பூக்குடம் என்றும் பொருள் கூறுகின்றார்கள். சைவ சமயத்தவர்களது சடங்குகளில் பயன்படும் "கும்பம்" தான் கரகமாக உருப்பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. தலையில் கரகம் வைத்து ஆடும் ஆட்டமே கரகாட்டமாகும். பல வகையில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலையில் வைத்தபடி சமநிலை பேணி இது ஆடப்படுகின்றது. தலையில் உள்ள கரகம் ஆடும் பொழுது விழுந்து விடாமல் ஒரு கையால் கரகத்தைப் பிடித்தும், மறுகையில் வேப்பிலைகளை வைத்திருந்தபடியும் ஆடப்படுகின்றது. கரகாட்டத்தினை பெண்களும் ஆடுவர். ஆண்களும் ஆடுவர். ஆண்கள் பாவாடை, இரவிக்கை போன்ற பெண்களுக்குரிய ஆடைகளை அணிந்து ஆடுவர். நேர்த்திக்காகவும் ஆனந்தத்திற்காகவும் கரகாட்டம் ஆடப்பட்டு வருகின்றது. பெரும்பாலும் கரகாட்டம் பெண் தெய்வ ஆலயங்களில் ஆடப்பட்டு வருகின்றது. குறிப்பாக முத்துமாரியம்மனுக்கு நேர்த்தி வைத்து ஆடப்படுவதைக் காண்கின்றோம்.கரகாட்டத்தின் பொழுது பறை, உடுக்கை ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆட்டத்தின் பொழுது பறை, உடுக்கு இரண்டும் மாறி மாறிப் பயன்படுத்தப்படும். அதற்கேற்ப கரகாட்டம் நடைபெறும். இவ் இசைக்கருவிகளுடன் இசைப் பாடல்களும் முக்கியம் பெறுகின்றன.

எமது கிராமத்தில் கரகாட்டம் சிறந்த முறையில் ஆடப்பட்டு வந்துள்ளது. கரகாட்டம் ஆட விரும்புவோர் கரகாட்டம் தெரிந்த கலைஞரிடம் பழகுவார்கள். தாள நுணுக்கங்களுக்கு ஏற்றவாறு உடுக்கை அடித்துப் பாடும்பொழுது ஆட்டக்காரர் அதற்கேற்றவாறு ஆடிப் பழகிய பின்பு எமது கிராம குலதெய்வ ஆலயங்களிலும் (சிறிய ஆலயங்களிலும்), அம்மன் ஆலயங்களிலும் பிள்ளையார் ஆலயங்களிலும் ஆடியுள்ளனர். எமது ஆலயங்களில் ஆண்களே அழகான கரகங்களைக் கட்டி பெண்களுக்குரிய ஆடைகளை அணிந்து ஆடியுள்ளனர். எமது கிராமத்தில் அமரர் கதிர்காமர் சின்னத் தம்பி, அமரர் ஏரம்பு வல்லிபுரம் ஆகியோர் உடுக்கை அடிப்பதிலும் கரகாட்டம் பழக்குவதிலும் சிறந்து விளங்கினர். கதிர்காமர் சின்னத்தம்பி குடும்பத்தினர் கரகாட்டத்தை நன்கு பயின்று, கரகங்களை அழகாகக் கட்டி பயபக்தியுடன் ஆலயங்களில் ஆடியுள்ளனர். இக்குடும்பத்தினர் ஒவ்வொரு வருடமும் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவன்று எமது கிராமத்து ஆலயங்களிலெல்லாம் கரகமாடிய பின்பு முத்துமாரி அம்மன் ஆலயத்தை நோக்கிச் செல்லும் பொழுது எதிர்ப்படும் ஒவ்வொரு ஆலயத்திலும் கரகமாடிச் சென்று அவ்வாலயச் சந்நிதியிலும் ஆடிப் பின்னர் கரகத்தை இறக்குவர். கரகாட்டக்காரர் கரகாட்டம் ஆடும் பாடல்களில் ஒன்று பின்வருமாறு

வேவிலந்தை வீற்றிருக்கும் தாயே மாரி அம்மா - முத்துமாரி
வேவிலந்தை ஆட்சி செய்தாய் மாரிதேவி
வாவென்றால் வாவேனம்மா தாயே மாரி - அம்மா முத்துமாரி
வந்துவரம் தாவேனம்மா மாரிதேவி
வேப்பிலையும் தானெடுத்து தாயே மாரி - அம்மா முத்துமாரி
வேப்பிலையாள் வாவேனம்மா மாரிதேவி
கும்பத்தழகியம்மா தாயே மாரி அம்மா - முத்துமாரி
கோபாலன் தங்கையம்மா மாரிதேவி
சந்தணப்பலகையிலே தாயே மாரி அம்மா - முத்துமாரி
சாய்ந்து விளையாடி வாறா மாரிதேவி

குங்குமப் பலகையிலே தாயே மாரிஅம்மா - முத்துமாரி
குனிந்து விளையாடி வாறா மாரிதேவி
பத்தினியாள் போறஇடம் தாயே மாரி - அம்மா முத்துமாரி
கதவடைத்தார் வாசலெல்லாம் தாயே மாரி - அம்மா முத்துமாரி
பாம்பாய் நுழைவேன் என்றா தாயே மாரி
பட்டமரம் பால் சொரியும் மாரிதேவி
கூப்பிட்டழைத்தவுடன் மாரிதேவி - அம்மா முத்துமாரி
அதிவிரைவாய் வாவேனம்மா மாரிதேவி
காலால் நடவாமலே தாயே மாரி அம்மா முத்துமாரி
காற்றாய் வாவேனம்மா மாரிதேவி அம்மா - முத்துமாரி
கரகத்தழகியம்மா தாயே மாரி அம்மா - முத்துமாரி
காரண சவுந்தரியாம் மாரிதேவி (வேவிலந்தை)

கரகாட்டப் பாரம்பரிய இசைக் கருவிகளுடனும் இசைப் பாடல்களுடனும் நடைபெற்று வருகின்றது. இதனை ஒரு தெய்வீகக் கலை எனலாம்.

பாரம்பரிய ஆட்டங்களில் பக்தி சிரத்தையோடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக சிறந்து விளங்குவது காவடியாட்டம் எனலாம். "காவுதடி" என்னும் சொல்லிலிருந்து காவடி என்ற சொல் தோன்றியுள்ளது. காவடியாட்டம் முருகப் பெருமானுக்கு மிகவும் விருப்பமான ஆட்டமாகக் கருதப்படுகின்றது. இக்காவடியாட்டம் பாற்காவடி, பன்னீர்க்காவடி, பூக்காவடி, அன்னக்காவடி, ஆட்டக் காவடி, செடிற் காவடி, தூக்குக்காவடி, துலாக் காவடி, பறவைக்காவடி எனப் பலவகைகளில் ஆடப்பட்டு வருகின்றது. பாற்காவடி, பன்னீர்க்காவடி, பூக்காவடி, அன்னக்காவடி என்பன சாதாரண காவடிக ளாகும். ஆட்டக் காவடி அண்ணாவிமாரால் காவடிக்குரிய ஆட்டங்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு தாள நுணுக்கங்களுடன் அமைந்ததாக பக்திக் கீர்த்தனைகளுடன் மிருதங்கம், தவில், நாதஸ்வரம் ஆகிய இசைகளோடு சேர்ந்து ஆடப்படுவதாகும். தூக்குக்காவடி, துலாக்காவடி, பறவைக் காவடி போன்றன மிகமிக மீளாத்துயரிலிருந்து மீண்டு வந்து தம் துன்பம் துடைத்த இறைவனுக்கு வேண்டு தலாக, நேர்த்திக் கடனாக அன்போடு செலுத்தும் காணிக்கையாக தம்மை அர்ப்பணித்து செய்யப்படுவ னவாகும். இக்காவடிகள் மிகக் குறைவாகவே எடுக்கப்படுகின்றன. அலகு சங்கிலிபோட்டு வேல் போன்ற அமைப்பினை உடைய செடில்களை உடம்பில் குற்றி முதுகிலும் செடில்களை குற்றி (முள்ளு குத்துதல்) செடில் கயிற்றை வேறொருவர் பிடித்து நெறிப்படுத்த ஆடப்படும் காவடியே செடில் காவ டியாகும்.

எம்மக்கள் பக்திசிரத்தையுடன் விரதமிருந்து மனதை ஒருநிலைப்படுத்தி உள்ளன்போடு காவடி களைச் சுமந்து இறைவனையும் மனதில் சுமந்து ஆட்டத்துடன் செல்லும் காட்சி எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கின்றது. இவ்வாறு செய்யப்படும் காவடி நிகழ்வுகள் மிக நீண்ட காலமாக காவடிச் சிந்துகள் என்னும் பாடல்களால் அணி செய்யப்பட்டு, தாளத்தோடு அமைந்த பக்திப் பாடல்களாகப் பாடி, உடுக்கை, பறை, மேளம் (தவில்) நாதஸ்வரம் ஆகிய இசைக்கருவிகளால் மெருகூட்டப்பட்டு நம்மக்களிடம் பக்திப்பரவசத்தை ஊட்டுகின்றன எனலாம்.

எமது கிராமத்தில் இத்தகைய காவடி நிகழ்வு நீண்ட காலமாக நடைபெற்று வந்துள்ளது. தற்பொழுதும் நடைபெற்று வருகின்றது. எமது கிராம மக்கள் எமது கிராமத்திலுள்ள ஒரு ஆலயத்திலிருந்து எமது கிராமத்திலுள்ள வேறொரு ஆலயத்திற்கு காவடி எடுப்பதும், செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திற்கும், கந்தவனக்கடவை முருகன் ஆலயத்திற்கும், அல்வாய் வேவிலந்தை முத்து மாரியம்மன் ஆலயத்திற்கும் காவடி எடுப்பதும் வழக்கமாக இருந்து வருகின்றது. சாதாரண காவடிகளை ஆனந்தக் காவடிகளாக ஆடிவருகின்றனர். ஆலயங்களின் மகோற்சவ காலங்களிலும் கும்பாபிஷேக மண்டலாபிஷேக காலங்களிலும் ஆடி வருகின்றனர். எமது கிராம ஆலயங்களிலும் மேலே குறிப்பிட்ட வேறு இடங்களிலுள்ள ஆலயங்களுக்கும் நேர்த்திக்கான காவடிகளை எடுத்து வருகின்றனர். எமது கிராமத்தில் நேர்த்திக்கு செடிற் காவடி (செடில் காவடி) எடுப்போரும் உள்ளனர். நேர்த்திக்கு சிறுவர்களும் ஆனந்தக் காவடி எடுத்து ஆடுவர். ஒரு ஆலயத்திலிருந்து நேர்த்தி வைக்கப்பட்ட ஆலயத்திற்கு வீதி வழியாக ஆடிச்செல்லும் பொழுது வழியில் எதிர்ப்படும் ஆலயங்களிலும் ஆடிச் செல்வர். வீதிகளில் காவடி ஆட்டத்தைப் பார்ப்பதற்கு மக்கள் கூடி நிற்பார்கள். காவடி ஆட்டக்காரர்களுக்கு வாளி தண்ணீரை தலைமேல் ஊற்றி தோய வைப்பார்கள். இதனால் காவடியாட்டக்காரர்களைப் படைதல் கட்டுப்படுத்தப்படுகின்றது.

எமது கிராமத்தில் காவடி ஆட்டத்திற்கு பெரும்பாலும் பறை இசைக்கருவியே பயன்படுத்தப் படுகின்றது. பறை இசையின் உன்னத அடிக்கு காவடி ஆட்டக்காரர் சிலர் உன்மத்தம் கொண்டு ஆடுவார்கள். உடுக்கை, மேளம் (தவில்), நாதஸ்வரம் ஆகிய இசைக்கருவிகளையும் பயன்படுத்துகின்றனர். செடில் காவடி ஆட்டத்தின் பொழுது செடில் காவடியில் செடில் கயிறு பிடித்து காவடி ஆடுபவரை ஒருவர் நெறிப்படுத்துவார். இவரும் தனக்கேற்றதான ஒரு ஆட்டத்தை ஆடுவார். சிலவேளைகளில் காவடி ஆடுவோருக்கு துணையாக ஆடிவரும் சிலருக்கு கலை வந்து ஆடுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஒவ்வொரு வருடமும் நீர்வளைப்பிள்ளையார் ஆலயம், மடத்துவாசல் பிள்ளையார் ஆலயம், துளாய் பிள்ளையார் ஆலயம் ஆகிய ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் அடியார்கள் காவடிகளை எடுத்தாடுவது வழக்கமாக உள்ளது. நீர்வளைப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக தினத்திலன்றும் நாச்சியம்மன் ஆலய கும்பாபிஷேக தினத்திலன்றும் காவடிகளை எடுத்தாடுகின்றனர். அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவன்று அவ்வாலயத்திற்கு நேர்த்தி வைத்தோர் காவடிகளை எடுத்தாடுவர்.

பாரம்பரியக் கலையில் இசையின் நாட்டார் நிலை பரிணமிப்புகளாக தாலாட்டுப் பாடல், ஒப்பாரிப் பாடல், தொழிற்பாடல், விளையாட்டுப் பாடல் ஆகியன விளங்குகின்றன. இன்று இப்பாடல்கள் நாட்டார் பாடல் என்று பொதுமக்களிடையிலும் அறிஞர் குழுவினுள்ளும் வழங்கி வருகின்றது. வாய்வழியாகப் பரவிவந்த வாய்மொழிப் பாடல்களையே நாட்டார் பாடல்கள் என்கின்றோம். நாட்டார் பாடலானது சாதாரண மக்களின் ஒரு பரம்பரைச் சொத்து. கல்வி அறிவு பெறாத கிராமவாசிகள் தமது வாழ்வில் தாமே பாடி தாமே கேட்டுச் செவி கருவியாய் மனதில் தாமே எழுதிப் பிரசுரம் செய்து இதை வளர்த்து வந்தனர். தங்களின் உணர்ச்சிகளைப் பாடல்கள் வாயிலாக இனிமையாகவும், சுவையாகவும் புலப்படுத்தியுள்ளனர். இப்பாடல்கள் பொதுமக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டு கருத்தைத் தெற்றென விளக்கும் எளிமையோடு கூடி நடப்பவையாக உள்ளன. இப்பாடல்களில்

வியக்கத்தக்க கற்பனை வளத்தையும் உவமைச் சிறப்பையும் காண முடிகின்றது. பாடல் கருத்துக்கள் இயற்கையிலிருந்தும் வாழ்க்கை நடைமுறைகளிலிருந்தும் எடுத்தாளப்பட்டிருப்பதைக் காணலாம். இப்பாடல்களில் ஓசையின்பம், தாளக்கட்டு, சொல்லழகு, தொடைச்சிறப்பு ஆகியன காணப்படுகின்றன.

எமது கிராமத்திலும் இத்தகைய தன்மை வாய்ந்த பாடல்களை எமது முன்னோரும் பாடி வந்து ள்ளனர். என்பதனை அறியக்கூடியதாகவுள்ளது. தாய்மாரும், குழந்தையின் மிகவும் நெருங்கிய பெண் உறவு முறையினரும் குழந்தைகளை கண்வளரச் செய்வதற்கான மெல்லிசையோடு பாடிய பாடல்களையே தாலாட்டுப் பாடல் என்கின்றோம். குழந்தை இவ் இசை இன்பத்தில் நித்திரையாகி நித்திரை கொள்ளும். தால் என்றால் நா(நாக்கு) ஆகும். நாவினை அசைத்துப் பாடி குழந்தைகளை நித்திரையாக்கும் நோக்குடன் பாடிய பாடல்களை தாலாட்டுப் பாடல் என பெயரிட்டுள்ளோம். இவை மகிழ்வுடன் பாடப்படுவதால் இன்ப உணர்வினைத் தருகின்றன. சில தாலாட்டுப் பாடல்களில் உண்மையான குழந்தையையும் அதில் தாலாட்டும் தாயையும் நம் கண் முன்னே கொண்டு வருகின்றார்கள்.

எமது கிராமத்தில் பாடப்பட்டு வந்த தாலாட்டுப் பாடல் சிலவற்றை நோக்குவோம். சில தாலாட்டுப் பாடல்களில் ஓசையின்பத்திற்காக

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ

என்ற சொற்றொடர் பாடலின் முதலில் இசைக்கப்படுவது வழக்கமாக இருந்துவந்துள்ளது.

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
அத்தை அடித்தாவோ
அமுதூட்டும் கையாலே
மாமன் அடித்தாரோ
மகிழ்ந்தெடுக்கும் கையாலே
ஆராரோ ஆரிவரோ

அண்ணன் அடித்தாரோ
அரவணைக்கும் கையாலே
பாட்டி அடித்தாவோ
பாலூட்டும் கையாலே
ஆராரோ ஆரிவரோ

ஆரடித்து நீ அழுதாய்
அழுத கண்ணில் நீர் ததும்ப
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்திடுவேன்
ஆராரோ ஆரிவரோ

நீண்ட காலமாக குழந்தைப்பேறு இல்லாத பெண் ஒருவர் இறைவனிடம் பல நோன்புகள் நோற்றதன் பயனாக தனக்கு குழந்தை கிடைத்ததும் அது இறைவனின் கொடை என நம்பி தாலாட்டுப்

பாடும் பொழுது அதைப்பற்றிக் கூறித் தாலாட்டுகின்றாள்.

கற்பகனார் வாசலிலே
மக்கள் இல்லையென்று
கையெடுத்து நிற்கையிலே
கற்பகனார் தந்தபொருளே - கண்ணுறங்கு

சிவனார் வாசலிலே
சிற்றடிகளில்லை என்று
சிந்தை கலங்கையிலே
சிவனார் தந்த செல்வமே - கண்ணுறங்கு

பெருமானார் வாசலிலே
மைந்தர் இல்லை என்று
பெருந்தவசு புரிகையிலே
பெருமானார் தந்த பெரும்பேறே - கண்ணுறங்கு

இன்னொரு தாய் ஊரார் தன்னை மலடியென ஏசாமல் வந்துதித்த தன் குழந்தையைத் தாலாட்டு கின்றாள்.

"மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்
மலடிக்கொரு குழந்தை மாயவனார் தந்த பிச்சை
இருளி இருளியென்று இருநிலத்தோரேசாமல்
இருளிக்கொரு குழந்தை ஈஸ்வரனார் தந்த பிச்சை........"

பெண்கள் தமது குழந்தைச் செல்வங்களை மடியில் கிடத்தித் தாலாட்டுவதும் ஆண்கள் தமது தோளிலே போட்டு முதுகில் தட்டி நித்திரையாக்குவதும் போன்ற பழக்கங்கள் எம்மிடையே நிலவின.

அத்தை மடி மேலும்
அம்மான்மார் தோள்மேலும்
வைத்து முத்தாடும்
மரகதமே கண்வளராய்.

(அம்மான்மார் - மாமன்மார்)

தாய்மார் தமது குழந்தைகளைப் பெறுமதிமிக்க உயர்ந்த பொருள்களாக உருவகித்துத் தாலாட்டுப் பாடியுள்ளார்கள்.

கண்ணே மணியே கண்மணியே கண்ணுறங்கு
முத்தே பவளமே மரகதமே கண்ணுறங்கு
மானே மயிலே மதியே கண்ணுறங்கு
பொன்னே பூவே கனியே கண்ணுறங்கு

கண்ணுறங்கு

குழந்தை உறங்குகின்ற தொட்டிலின் அமைப்பையும் சிறப்பையும் பற்றித் தாலாட்டில் பாடுகின்றாள்.

பச்சை இலுப்பை வெட்டி
பால்வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலின் கால் பொன்னாலே
தொடு கயிறோ முத்தாலே.

கட்டிப்பசும் பொன்னே - கண்ணே நீ
சித்திரப்பூந் தொட்டிலிலே
சிரித்தாடம்மா - கண்ணே நீ
சித்திரப் பூந் தொட்டிலிலே

சோலைப் பசுங் கிளியே - கண்ணே நீ
சிங்காரத் தொட்டிலிலே
சித்திரமாயாடம்மா - கண்ணே நீ
சிங்காரத் தொட்டிலிலே

குழந்தை உறங்குவதற்காகவும், விளையாட்டுக் காட்டவும் தொட்டிலைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

முத்தாரத் தொட்டில் கட்டி
எங்கள் ஐயாவை
முத்துச் சிங்காசனத்தில் வைத்தாட்டி
வித்தாரத் தொட்டில் கட்டி
எங்கள் ஐயாவை
விட்டு விளையாட்டி வைப்போமே
எனத் தாலாட்டுகின்றாள்

முத்தாரம், வித்தாரம் ஆகிய சொற்களின் அழகையும் கருத்தாழத்தையும் வியக்கின்றோம்.

குழந்தையின் தாயின் ஆண் சகோதரர்களை "அம்மான்" என அழைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அவர்கள் குழந்தையுடன் நெருக்கமாகப் பழகுபவர்கள். அவர்கள் குழந்தைக்கு அன்பாகக் கொடுக்கும் பொருள்களைப் பற்றியும் தாலாட்டில் பாடுகின்றாள்.

எங்கள் ஐயாவுக்கு மூத்தம்மான் என்ன தந்தார்
முத்து வண்ண மாலைதான் தந்தாரோ
எங்கள் ஐயாவுக்கு பால்அம்மான் என்ன தந்தார்
கறக்கக் கறவைகளும் கன்றணைக்கக் கால்கயிறும் தான் தந்தாரோ
எங்கள் ஐயாவுக்கு சின்னம்மான் என்ன தந்தார்
செப்பைத் திறந்து சிதறிவிட்டார் பாலகனே உங்கள் அம்மான்.

மேலும் குழந்தையின் தாய் தனது சகோதரன் தனது குழந்தைக்குச் செய்யும் உதவிகளையும் பற்றிப் பாடுகின்றாள்.

எங்கள் ஐயா விளையாடப் போகையிலே
எங்கள் ஐயாவுக்கு வெய்யில்படும் என்றுசொல்லி

நடையாறும் பூம்பந்தல்

போடுவித்தார் உங்கள் அம்மான்.

இப்பாடல்களில் தாய் தனது குழந்தையை ஐயா என கூறுகின்றாள்.

இவ்வாறு ஓசையின்பமும் கருத்தாழமும் நிறைந்த தாலாட்டுப் பாடல்கள் பாடப்பட்டு வந்துள்ளன.

இறந்தோரை நினைந்து நெஞ்சில் நிறைந்த துயரத்தை வெளிப்படுத்தும் முறையிலே இறப்பு நிகழ்ந்த வீட்டில் கிராமப் பெண்கள் கூட்டமாகச் சேர்ந்தும், தனித்தும் இறந்தவரின் உறவு முறையினரும் புலம்பும் ஒப்பாரியே ஒப்பாரிப் பாடல் என அழைக்கப்படுகின்றது. துன்பத்தை வெளிப்படுத்துவனவாகவும் மனதில் உள்ள துன்பத்தின் பாரத்தைக் குறைப்பனவாகவும் உள்ளன. இவை துன்பத்துடன் பாடப்படுவதனால் இவை துன்ப உணர்வினைத் தருகின்றன.

எமது கிராமத்தில் இறப்பு நிகழ்வின் பொழுது பெண்கள் புலம்பிய ஒப்பாரிகள் சிலவற்றை நோக்குவோம்.

கணவனை இழந்த மனைவி ஒருத்தியின் துன்பம் இவ்வாறு வெளிப்படுகின்றது.

என்னுயிரிழந்தேன் துணையிழந்தேன்
பூவிழந்தேன் பொட்டிழந்தேன் - ஐயா
கட்டியதாலியும் இழந்தேன்
பட்டிழந்தேன் பணிதியுமிழந்தேன் - ஐயா
என் பொக்கிசமிழந்தேன் என் பொலிவுமிழந்தேன் - ஐயா
மூலைக்கோ ஆளானேன்
முழுவிசளத்துக்கோ ஆகாதானேன் - ஐயா
பேதை நான் தனித்தேன்
பெருங்கவலை கொண்டேன் - ஐயா

(பணிதி - ஆபரணம்)

மனைவி தனது நிலையை வெளிப்படுத்துகின்றாள்.

கணவனை இழந்த வேறொருத்தி பின்வருமாறு தனது பிரிவுத்துன்பத்தை வெளிப்படுத்துகின்றாள்.

வீடிருண்டு கிடக்குதையா விடியல் வந்தும் வாராயோ
மாளிகையோ வெளிச்சுதையா வாழ்ந்த நீ இல்லையென்று
மக்கள் மயங்குகினமையா பெற்ற நீ இல்லையென்று
மாடு கன்று அழுகுதையா வளர்த்த நீ இல்லையென்று

கணவன் இல்லாமல் வீட்டிலுள்ள மற்றவர்படும் துன்பத்தையும் கூறுகின்றாள்.

மகனை இழந்த வயது முதிர்ந்த தாய் ஒருத்தியின் புலம்பல்

பட்டமரம் இங்கிருக்க பச்சை மரம்போனதென்ன
சேனை மனிதர் இருங்கிருக்க தனித்தோ போனதென்ன

சோலைவனம் இன்று பாலைவனமானதென்ன
சொர்க்கமோ இன்று நரகமானதென்ன.

அடுத்ததாக தாயை இழந்த ஒரு பெண் தாயை நினைத்துப் புலம்புகின்றாள்

பெற்றவளே பேணி வளர்த்தவளே
உற்றவளே உறவாடி நின்றவளே
உறுதுணையாய் நின்றீரம்மா
இன்று ஏன் எம்மைவிட்டுப் போனீரம்மா

உங்கள் கால்சத்தம் கேட்கவில்லையம்மா
உங்கள் வண்ணமுகம் தேடி அலைகிறோமம்மா
உங்கள் பணிவிடையில்லாமல் தவிக்கிறோமம்மா
இனி நாம் எப்பிறப்பில் காண்போமம்மா.

தந்தையை இழந்த மகள் ஒருத்தி தனது தந்தை எவ்வாறு கஷ்டப்பட்டு உழைத்தார் என்பதனை நினைத்து புலம்புகின்றாள்.

எங்களைப் பெத்த அப்பு எங்களை நினைத்து
கல்லிலே நாருரித்தார் கானலிலே பூப்பூத்தாள்
ஓயாமல் ஓடி உழைத்தாரல்லோ
இன்ற ஓய்ந்து போனதென்ன
கற்பதித்த கட்டிலிலே கண்ணுறக்கம் கொள்வதென்ன
எங்களை விட்டு தூரவழி போனதென்ன

இவ்வாறு கருத்தாழம் நிறைந்த ஒப்பாரிப்பாடல்களை காணக்கூடியதாக உள்ளது.

எமது கிராமத்திலே பாரம்பரிய விளையாட்டுக்களாக மாட்டுவண்டில் சவாரி, போர்த்தேங்காய், அடித்தல், கிட்டி அடித்தல், சடுகுடு, ஊஞ்சல் ஆடுதல், கெந்தியடித்தல், கிளித்தட்டு மறித்தல் ஆகியன விளையாடப்பட்டு வந்துள்ளன. ஆனால் இவ்விளையாட்டுக்களின்பொழுது பாடப்பட்ட பாடல்கள் பற்றி அறியமுடியாதுள்ளது. என்றாலும் ஒரு சில பாடல்களை அறியக்கூடியதாகவுள்ளது.

எமது கிராமத்திலே குறிப்பிட்ட சில வளவுகளில் (காணிகளில்) வேம்பு, புளி ஆகிய மரங்களில் ஊஞ்சல் கட்டி பெண் பிள்ளைகள் சேர்ந்து ஊஞ்சல் ஆடி வந்ததை அறியக்கூடியதாகவுள்ளது. அவ்வாறு ஊஞ்சல் கட்டி ஆடும்பொழுது பாடிய பாடல்

1. ஓடோடு புளியம்பழம்
உடைந்து உடைந்து விழுவானேன்
ஒரு கிண்ணி சந்தனம்
வேர்த்து வேர்த்து ஊத்துவானேன்.

சின்னக்கடையிலே

சந்தன மரம் பிளந்து

சிங்கார ஊஞ்சலைக் கட்டி

சரியான பலவகை

திட்டங்கள் தீட்டி

வள்ளியை மணம்புணர

வேணுமென்று மக்களுக்கு சொல்லி

மணத்த கருவாட்டில்

ஒரு ஆணமும் காய்ச்சி

பக்குவமாய் நடத்தி

வைத்தான் எங்களப்பன்.

2. ஆடாடம்மா ஆடாடு

ஆச்சியப்பன் பெண்டிலை பார்த்தாடு

சேந்தாடடி மகளே சேந்தாடு

பிள்ளை மயிலரே சேந்தாடு.

அடுத்ததாக சிறுவர் கூடியிருந்து நிலத்தில் கையை விரித்துவைத்து ஒவ்வொரு விரலாக மடித்து விளையாடும்பொழுது பாடிய பாடல்

கிள்ளுப் பினாட்டு நுள்ளுப் பினாட்டு

கொக்காவளையில் என்ன பூ? முருக்கம்பூ

முருக்கம்பூத் தின்றவரே மிளகுசாறு குடித்தவரே

பாலாக் கன்று கையில் ஒன்றை மடி

கொள்ளுப் பினாட்டு கொறாப்பினாட்டு

கொக்காவளையில் என்ன பூ? முருக்கம் பூ

முருக்கம்பூ தின்றவரே பிள்ளையின் பிலாப்பழத்தை

அடித்து உடைத்து தின்ற பாலபட்டம் தடியில் ஒன்றை மடக்கு

ஒவ்வொரு தொழிலையும் செய்வோர் தமது தொழில்களைச் செய்யும்பொழுது சோர்வு தோன்றா வகையில் பாடல்களைப் பாடிக் கொண்டு வேலை செய்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவ்வாறு தொழில் செய்யும்பொழுது பாடிய பாடல்களையே தொழிற்பாடல்கள் என்கின்றோம். எமது கிராமத்தில் பெரும்பான்மை மக்களின் தொழில் விவசாயமே. இவ்விவசாய நிலங்கள் தோட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. தோட்டத்துரவினிலே கிணறு, துலா, பட்டை ஆகியனவே நீர்ப்பாய்ச்சலுக்குப் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய தோட்டத்திலே வேலை செய்யும்பொழுது பாடிய ஓரிரு பாடல்கள்

கிடைத்துள்ளன.

1. தோட்டக் கிணற்றிலே ஐந்து மூலைப்பட்டை கட்டி
அம்மான் பட்டைக் கயிறு பிடிக்க
அப்பு தண்ணி மாற
அண்ணனும் தம்பியும் துலா மிதிப்போம்.

2. கோணான் கோணான் தோட்டத்திலே
நான் புதைச்சது வெள்ளரிக்காய்
அதை காசுக்கு இரண்டு விக்கச் சொல்லி
காகிதம் போட்டான் வெள்ளைக்காரன்

இதுவரை எமது கிராமத்தில் வழக்கிலிருந்துவந்து வளர்ந்த பாரம்பரியக் கலைகள் பற்றியே கூறியுள்ளேன். இவற்றைவிட கும்பி, கோலாட்டம், சிலம்பாட்டம், பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு முதலான பாரம்பரியக் கலைகள் ஏனைய இடங்களில் வழக்கிலிருந்து வருகின்றன.


பொதுவாக இன்று பாரம்பரியக் கலையம்சங்கள் முன்பு இருந்ததை விட அருகிக் கொண்டே வருவதனைக் காணமுடிகின்றது. இதற்கு ஏதுவான காரணங்கள் பல உள. இன்றைய இளைய தலை முறையினரின் நவீன கல்வி ஈடுபாட்டின் காரணமாகவும், நவீன சிந்தனைகள், கருத்துக்கள் போன்ற வற்றின் பெருக்கம் காரணமாகவும், சினிமாக்கலையின் வளர்ச்சி காரணமாகவும் தொலைக்காட்சி நிலையங்கள் நடாத்தும் நிகழ்ச்சிகள் காரணமாகவும் பாரம்பரிய கலையம்சங்கள் பாராமுகமாக விடப் படுகின்றன. அத்துடன் இளைஞரின் வெளிநாடு நோக்கிய பயணங்களும் பாரம்பரியக் கலைகள் அருகிச் செல்வதற்கு ஒரு காரணமாகவுள்ளது எனலாம்.

இப்பாரம்பரிய கலைகளை அழியவிடாது பேணி வளர்த்து பாதுகாப்பது கலையார்வங் கொண்ட வர்கள் அனைவரதும் கடமையாகும்.

**திருமதி ஸ்ரீ வடிவாம்பிகை சிவராஜா,**
ஓய்வு நிலை அதிபர்.



திக்கம் மத்திய சனசமூக நிலையம்



திக்கம் கலாசார மண்டபம்



திக்கம் சனசமூக நிலையத்தால் 2014இல் விரிவாக்கப்பட்ட கட்டடத் தொகுதி



திக்கம் கலாசார மண்டபத் திறப்பு விழாவின் போது திக்கம் மத்திய சனசமூக நிலைய தலைவர் திரு. க. சுதேஸ் தலைமையுரையினை ஆற்றியபோது



திக்கம் கலாசார மண்டபத்தை 23.10.2004 இல் மேலதிக அரச அதிபர் உயர்திரு.ஆ. சிவசுவாமி அவர்கள் திறந்து வைத்தபோது



திக்கம் கலாசார மண்டபத் திறப்பு விழாவில் நினைவுக்கல் பெயர் பலகையினை திருமதி - கணேசமூர்த்தி நாகரத்தினம் அவர்கள் திரை நீக்கம் செய்தபோது



திக்கம் பாலர்பாடசாலை விளையாட்டு முற்றம்



திக்கம் பாலர் பாடசாலை



திக்கம் பாலர் பாடசாலை அடிக்கல் நாட்டல் கியூ மெடிக்கா நிறுவன பிரதிநிதி 27.04.2005



திக்கம் பாலர் பாடசாலை அடிக்கல் நாட்டல் 27.04.2005 திரு.க.தர்மராசா அவர்களால்



திக்கம் சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்ட போது திரு.கிறீஸ்யவ்




பாலர் பாடசாலை பணிப்பாளருடன் ஆசிரியர்கள்



திக்கம் பாலர் பாடசாலை மாணவர்கள் கீழ்ப்பிரிவு



திக்கம் பாலர் பாடசாலை மாணவர்கள் மேற்பிரிவு



திக்கம் பாலர் பாடசாலை சரஸ்வதி சிலைக்கான அடிக்கல் நாட்டல் - 2011



திக்கம் பாலர் பாடசாலை கீழ்ப்பிரிவு கட்டடத் திறப்பு விழா 23.03.2014இல் திருமதி. மகேந்திரன் சாந்தகுமாரி (தலைவர், மனிதவள முகாமைத்துவத் துறை யாழ் பல்கலைக்கழகம்)அவர்கள்




திக்கம் கிராமிய செயலகம்



திக்கம் கிராமிய செயலகத்திற்கான அடிக்கல் நாட்டல்
27.04.2004 திரு. க. சுதேஸ் (தலைவர், திக்கம் ம ச.ச. நிலையம்) அவர்களால் நாட்டியபோது



திக்கம் ஆரம்ப சுகாதார நிலைய அடிக்கல் நாட்டலில்
Dr.ஆ. கேதீஸ்வரன் அவர்கள் 2006.07.03



திக்கம் ஆரம்ப சுகாதார நிலைய திறப்பு விழா
20.01.2008 திரு. Dr. ஆ. கேதீஸ்வரன் அவர்கள்



திக்கம் கிராமோதய சுகாதார நிலையம்



திக்கம் ஆரம்ப சுகாதார நிலைய நினைவுச்சின்னம்
திரை நீக்கம் திரு. சி.நாகேஸ்வரன் அவர்கள் 20.01.2008



திக்கம் கிராமோதய சுகாதார நிலையம் - 2007



திக்கம் ஆரம்ப சுகாதார நிலைய திறப்பு விழாவில்
விருந்தினர்களான் 20.01.2008



திக்கம் அல்வாய் மேற்கு மாதர் சங்கம்



புனரமைக்கப்பட்ட திக்கம் மானாண்டிச் சந்தை



சனசமூக நிலைய குடி தண்ணீர் திட்டத்தை சட்டத்தரணி சிவா- பாலேந்திரன் அவர்கள் ஆரம்பித்து வைத்தபோது 2002



இடம் பெயர்ந்தவர்களுக்கான நிதி உதவி 2009 அரச அதிபர் உயர்திரு. கணேஸ் அவர்களிடம் கையளிப்பு



அல்வாய் வடமேற்கு மாதர் சங்கம்



1982ல் திக்கம் கிராமத்தின் மின்சார திறப்புவிழா வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினத்துடன் அமரர் க. தங்கராசா அவர்கள் உரையாற்றும் நிகழ்வு



திக்கம் பொது மயான புனரமைப்பு - 2011




திக்கம் கூட்டுறவுச்சங்கம்



திக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் அடிக்கல் நாட்டல் நிகழ்வில்
திரு. திருமதி யோ. இராசமூர்த்தி அவர்கள் 2006.07.03



அல்வாய் வடமேற்கு கமக்காரர் அமைப்பு





திக்கம் நலன்புரிசங்க ஒன்றுகூடல் 2006 சுவிஸ்



கனடா திக்கம் நலன்புரிச்சங்க ஒன்றுகூடல் நிகழ்வு 2006
கௌரவிப்பு நிகழ்வு



கனடா திக்கம் நலன்புரிச்சங்க ஒன்றுகூடல் - 2008
கௌரவிப்பு நிகழ்வு



திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானம்



எமது இல்லம்





பலநோக்கு கூட்டுறவுச்சங்க திக்கம் கிளை பால் காச்சல் வைபவம் - 2003



திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்




திக்கம் பொது மயான புனரமைப்பு 2011



திக்கம் இளைஞர் வி.க.உதைபந்து. மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் 1988இல் பிரதம விருந்தினர் திரு.சி. சிவராசா (மேலதிக மாகாணக்கல்வி பணிப்பாளர்) அவர்கள் மங்கல விளக்கேற்றியபோது




சனசமூக நிலை ய மூத்த உறுப்பினர் திரு. கி. அமிர்த லிங்கம் அவர்கள் மத்திய சன சமூக நிலைய தலைவர் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது (திக்கம் நலன்புரிச் சங்கம் சார்பாக வழங்கப்பட்டபோது



திக்கம் தொலைத்தொடர்பு
கோபுரம்





திக்கம் பாலர் பாடசாலைக்கு நிதி
உதவி வழங்கிவரும் திரு.திருமதி. மா.
உதயகுமார் அவர்களுக்கு நன்றிகூறும்
பாராட்டு பத்திரம் திருமதி. மகேந்திரன்
சாந்தகுமாரி ஊடாக சனசமூக நிலைய
தலைவர் திரு.க.சுதேஸ் அவர்களினால்
வழங்கப்பெற்ற போது



திக்கம் கலாசார மண்டப அடிக்கல்
நாட்டலின் போது கௌரவ
பாராளுமன்ற உறுப்பினர்
M.K. சிவாஜிலிங்கம் அவர்கள்
27.04.2002



திக்கம் பலநோக்கு கூட்டுறவுச்
சங்கம் அடிக்கல் 27.04.2002இல்
பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்
தலைவர் திரு.ல சிவஞானசுந்தரம்
அவர்கள்



திக்கம் மத்திய நூலக கட்டட
விரிவாக்கத்துக்கான அடிக்கல் நாட்டல்
பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.
சிறிதரன் அவர்கள் 2012இல்



1957ம் ஆண்டு யா/திக்கம் சித்தி
விநாயகர் வித்தியாலய திறப்பு விழா
நிகழ்வின் போது

“திக்கம் நாதம்”

நூல் சிறப்புற

மனமுவந்து வாழ்த்துவோர்


சரவணா
ரெக்ஸ்
திருமண பட்டுப் புடவைகள்,
சல்வார்,சாறி
சேட்டிங், சூட்டிங்ஸ்,
சிறுவர்களுக்கான மற்றும்
ஆண்களுக்கான
றெடிமேட் ஆடைகள்
SARAVANA TEX
# 171, MAIN STREET, NELLIYADY , JAFFNA.
021 2262992, 0778448045


E.S.P
NAGARATNAM & CO.
Cycles, Cycle Parts & Electrical Goods
American Water
Distributor
அமெரிக்கன் தண்ணீர்
#52,54, KASTHURIYAR ROAD, JAFFNA.
021 222 3096, 021 221 7277

# HNB

இலங்கையின் மிகப்பெரிய வலையமைப்பினைக் கொண்ட தனியார் வங்கியாகிய
ஹட்டன் நஷனல் வங்கியின் நெல்லியடி கிளையினராகிய நாம் "திக்கம் நாதம்"
என்னும் மலர் வெளியீட்டினை முன்னிட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு. நவீன
வர்த்தக மற்றும் பணப்பரிமாற்ற வங்கிச் சேவைகளை அதிமிகு தொழில்நுட்பம் மற்றும்
இனிய சேவைக்கலாச்சாரம் மூலம் அனைத்து வாடிக்கையாளரும் அனுபவித்து
மகிழ ஒருமுறை எமது கிளைக்கு விஜயம் செய்யுமாறு அன்புடன் வரவேற்கின்றோம்.

**"E" வங்கியின் புரட்சிகர முன்னேற்றத்தினை அனுபவித்து மகிழுங்கள்**

ஹட்டன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

"ஹட்டன் நஷனல் வங்கி"
நெல்லியடி,
இல.30. பருத்தித்துறை வீதி.
நெல்லியடி.

தொ.பே: 021 226 4149/50
**email:nelliady@hnb.lk**
ஹட்டன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி



**5ம் ஆண்டு
புலமைப்பரிசில்
பரீட்சை
வெற்றியாளர்களுக்கு
பணப்பரிசில்கள்
சகிதம்
மிக உயர்ந்த வட்டி**

Arunalu
Children's Savings Account

COMMERCIAL BANK


ஆனந்
மணப்பந்தல்
முருகன் கோவில் வீதி, நெல்லியடி. T.p:0777290536


New
Star FURNITURE
நியூ ஸ்ரார் தளபாட விற்பனை நிலையம்
Dealer : Home and office furniture, Wardrobs, Dressing Tables,
Beds, Dining Tables, chairs, Computer tables,
fancy goods and plastic goods etc.
JAFFNA ROAD, NELLIADY.
T.P: 021 561 8081
யாழ்ப்பாண வீதி, நெல்லியடி.


அருள்நாயகி
ஹோட்டல்
சகல விதமான நிகழ்வுகளுக்கும் திருமண மற்றும் பூப்புனித நீராட்டு
விழா , இதர மங்கலகரமான வைபவத்திற்கும் பாடசாலை நிகழ்வுகள்
அனைத்திற்கும் வடை றோல் மற்றும் குளிர்பான வசதிகள் அனைத்தும்
உடன் செய்து கொடுக்கப்படும். ஓடருக்கு சாப்பாட்டு வசதிகளும் செய்து தரப்படும்.
மேலும் சகலவிதமான நிகழ்வுகளுக்கும் போக்குவரத்து வசதியுடனான
"டொல்பின்" வாகனசேவையும் வழங்கப்படும்.
T.P: 0779057749, 0770238124
பிரதான வீதி, நெல்லியடி



K.K.ரட்ணம்
K.K. RADNAM
T.P: 021 226 4084
இல.2, நவீன சந்தை, பருத்தித்துறை.


Orient Plastics
(pvt) Ltd
#.581, Negembo Road, Wattala 0112933522


SRI VIHAR VEG REST
011 2596597
Proprietor - T.Navaratanaraja
#.3, Havelock Road, Colombo - 05

Proprietor : **A.G. Nasroon**

# TOPAZ


NO 1 TOPAZ

***Jaffna No. 01 Shop***


**Specialist in Wedding Suits, Wedding Sarees, Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items**

**No.72, Grand Bazaar, Jaffna**
E-mail : topazagn@gmail.com


**021 2224743** **021 2227645**




பரந்தாமன்
சிற்றுண்டி தயாரிப்பாளர்கள்
T.P: 077 1584259, 077 1882241,
021 205 5020, 021 321 4730
பத்தினி அம்மன் கோவிலடி, கம்பர்மலை, வல்வெட்டி.


Jamuna Furniture
Authorized Distributors for Damro
and Piyestra Furnitures
Tel : 021 222 1092, Fax : 021 222 1578, Mob : 077 7574 776
#181, Navalar Road.Jaffna.


நியூ சிகா
தச்சுத்தொழிலகம்
நியூ சிகா மரக்காலை
Carpentry work shop
வீரபத்திரகோவிலடி, பொலிகண்டி தெற்கு, வல்வெட்டித்துறை.


BOC
ABHIMANA
Pension Scheme
For a dignified retirement...
BANK OF CEYLON
BOC
ලංකා බැංකුව இலங்கைவங்கி
Retire with a smile on your face and peace in your mind

# LNR
## CONSTRUCTIONS (PVT) LTD.

இல. 37, விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, நெல்லியடி.

Contact no: Office : 021 226 1000
Mobile : 0777286008, 0774320946
e-mail : lnrconstructions.com



ரூபா 5000,000 வரையில்
மீளப்பெறுங்கள்
(நிபந்தனைக்குட்பட்டது)



**Very Fast Construction at Low cost**

இதோ ! யாழ் மண்ணில்

மக்களின் பாதுகாப்பு, சேமிப்பு, மகிழ்ச்சிகரமான வாழ்வியலை

கட்டியெழுப்பும் ஒரே நோக்கோடு

வடமராட்சி, நெல்லியடி விக்கினேஸ்வராக் கல்லூரி வீதியில் தனது சேவை

**வரையறுக்கப்பட்ட டு்சே கட்டுமானக் கம்பனி**
**சிறப்பாக வழங்கி வருகின்றது**

**அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற வல்லுனர்களின் பங்களிப்புடன்**

**எமது நிறுவனம் வழங்கும் மக்கள் பணிகளாவன**



கட்டிடங்களை கட்டுதல்
பாலம் வீதி, நீர்ப்பாசன வேலைகள்
கட்டிடம் வடிவமைத்தல்
கட்டிட மாதிரி வரைபடங்கள்
உத்தேச செலவு மதிப்பீடு
நிலத்தை அளத்தல், மட்டப்படுத்தல்
வீட்டிற்கு வர்ணங்களை பூசுதல், பூந்தோட்டம் அமைத்தல்
மின்சார இணைப்பு, நீர்க்குழாய்கள் பொருத்துதல்
புதிய தொழில்நுட்பக் கருவிகளை அறிமுகப்படுத்தலும் உபயோகித்தலும்
ஆலோசனை வழங்கல்


செல்லமுத்துஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்
Sellamuthus Textiles
NELLIADY, KARAVEDDY. T.P: 021-2263238







திக்கம் நாதம் என்னும் வரலாற்று ஆவணம் வெளியிடுவதற்கு ரூபா பத்தாயிரத்து இருநூறு (10200.00) வழங்கி எமக்கு ஊக்கமளித்த திரு.தி.கேதீஸ் (லண்டன்) அவர்களை திக்கம் நாதம் மலர்க்குழுவினரும், திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரும், திக்கம் வாழ் மக்களும் ஒன்று சேர்ந்து மனதார நன்றி கலந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

திக்கம் நாதம் என்னும் வரலாற்று ஆவணம் வெளியிடுவதற்கு ரூபா ஐம்பதாயிரத்தினை (50000.00) வழங்கி எமக்கு ஊக்கமளித்த திரு. ப. தணிகாசலம் (ஜேர்மனி) அவர்களை திக்கம் நாதம் மலர்க்குழுவினரும், திக்கம் மத்திய சன சமூக நிலையத்தினரும், திக்கம் மக்களும் ஒன்று சேர்ந்து மனதார நன்றி கலந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ANDRA

PRINTERS



Awards Shields Medals Trophies

T Shirt Printing ID Card Printing Mug Printing








ANDRA Printers, Jaffna - 021-221 7279

356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7279 / 077 6622981